# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் – பிப்ரவரி 2026

www.tnpscthervupettagam.com




SHANKAR IAS ACADEMY™
SINCE 2004
Best Academy for Civil Services Exam Coaching

107/255, AL - Block, 4th Avenue,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்


TNPSC துளிகள் ........ 11

தமிழ்நாடு செய்திகள் ........ 25

தோழி விடுதிகள் மற்றும் கடலோரப் புனரமைப்பு ........ 25

தமிழ்நாட்டின் அறிவுசார் நகரத் திட்டம் ........ 25

மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு ........ 25

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சிலை ........ 27

2026 மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கான அறிவிப்புகள் ........ 27

தமிழ்நாட்டில் தொல்லியல் ஆய்வுகள் ........ 28

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி - 1976 ........ 31

நிதி நிலையறிக்கை 2026 - ஆதிச்சநல்லூர் தொல்லியல் தளம் ........ 31

பெண்ணையாறு நதிநீர்ப் பிரச்சினைக்கான தீர்ப்பாயம் ........ 32

தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு 2026 ........ 33

தமிழ்நாடு மற்றும் மத்திய பட்ஜெட் 2026 ........ 33

தமிழகத் திட்டங்கள் குறித்த பொருளாதார ஆய்வு ........ 35

தமிழகப் பொருளாதாரத்தின் சிறப்பம்சங்கள் ........ 36

துணைவேந்தர் நியமனங்கள் குறித்து உச்ச நீதிமன்ற தீர்ப்பு ........ 37

காவல் துறை ஆர்டர்லி முறை ஒழிப்பு ........ 38

தமிழ்நாட்டிலுள்ள பழங்கற்கால தளங்கள் ........ 38

தமிழ்நாடு நகர்ப்புறப் பசுமையாக்கல் கொள்கை 2026 ........ 38

தமிழ்நாட்டில் பெண் கல்வி ........ 39

தமிழ்நாடு மின்னணுவியல் மையம் ........ 39

எகிப்தில் தமிழ் பிராமி கல்வெட்டுகள் ........ 40

பொதுத் துறை புத்தாக்கக் கொள்கை ........ 40

முதலீடு மாற்ற மாநாடு 2026 ........ 40

தமிழ்நாட்டின் பொருளாதார மற்றும் மேம்பாட்டுச் செயல்திறன் ........ 41

மண் வளத்திற்கான உத்திசார் திட்ட வரைபடம் ........ 41

தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள் 2025–26 ........ 42

தமிழ்நாட்டில் அருங்காட்சியகங்கள் மற்றும் நினைவுத் திட்டங்கள் ........ 42

குழந்தைப் பராமரிப்பு பெட்டகம் திட்டம் ........ 43

வள்ளலார் பிறந்தநாள் விழா ........ 43

தமிழ்நாட்டில் பால் உற்பத்தி ........ 44

பாளையங்கோட்டை கடிகார கோபுரம் ........ 44

வெளியேற்ற உத்தரவு மீறல் – சென்னை ........ 45

தமிழ்நாட்டில் உறுப்பு தானங்கள் ........ 45

பொருளாதார ஆய்வறிக்கை 2025–26 ........ 46

மத்திய-மாநில உறவுகள் அறிக்கை ........ 46

தமிழ்நாடு பட்ஜெட் 2026 ....47
தமிழ்நாடு இரண்டாவது பொருளாதார ஆய்வறிக்கை சிறப்பம்சங்கள் ....48
தமிழ்நாடு இடைக்கால வேளாண் பட்ஜெட் 2026–27 சிறப்பம்சங்கள் ....50
தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 4.0 ....52
தமிழ்நாடு நலத்திட்டத் தகவல்கள் ....53
கால்நடை மருத்துவ மாநாடு 2026 ....55
தமிழ்நாட்டில் பெண்களின் நிலைமைகள் ....55
தமிழ்நாட்டின் நிதிசார் தரவுகள் 2026–27 ....56
ECI கட்சிகள் பதிவு ரத்து வழக்கு 2026 ....57
தமிழ்நாடு விளையாட்டுச் சாம்பியன்கள் விழா 2026 ....58
தமிழ்நாட்டில் புதிய தொழில்துறை முதலீடுகள் ....58
குமிட்டிபதி பாறைக் கலை ....59
தமிழ்நாடு கடன் வழங்கும் நிறுவனங்கள் சட்டம், 2025 – முதல் வழக்கு ....59
2026–2027 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகராட்சி பட்ஜெட் ....59
நீதிபதி குரியன் ஜோசப் குழு ....59
தமிழ்நாடு சிறைச்சாலைகள் (இடைவிடுப்பு) விதிகள், 2026 ....60
தமிழ்நாடு சட்டமன்றம் - காபி மேசை புத்தக வெளியீடு ....61
தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்த) மசோதா, 2025 ....61
தாமஸ் மன்றோவின் இருநூறாவது ஆண்டு விழா 2026 ....62
தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத்தொடர் 2026 ....62
மத்திய-மாநில உறவுகளுக்கான தமிழ்நாட்டுக் குழு ....63
தமிழ்நாடு வாக்காளர் பட்டியல் புதுப்பிப்பு ....63
மாநில அளவிலான வழிகாட்டுதல் குழு - HRH உத்தி ....63
இரட்டை நூற்றாண்டு சிறைத் தண்டனை ....64
தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் ....64
**தேசியச் செய்திகள் ....65**
இந்தியாவின் 77வது குடியரசு தின அணிவகுப்பு – முக்கிய அம்சங்கள் ....65
பொருளாதார ஆய்வு 2025/26 - முக்கிய அம்சங்கள் ....66
முக்கிய கனிம அந்தஸ்து – கற்கரி ....68
இந்தியாவின் இணையப் பயனர்கள் ....68
மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 – சாதிவாரி கணக்கெடுப்பு முறை ....69
இந்தியாவின் அரிய மண் தாதுப் பெருவழித்தடங்கள் ....70
மாதவிடாய் சுகாதாரம் - அடிப்படை உரிமை ....70
யுஜிசி சமத்துவ விதிமுறைகள் 2026 குறித்து உச்ச நீதிமன்றம் ....71
சுதேசி சூர்யாஸ்த்ரா ராக்கெட் அமைப்பு - 77வது குடியரசு தின அணிவகுப்பு ....71
அம்ருத் 2.0 பலன்கள் ....71
இந்திய ஒன்றிய அரசின் நிதிநிலையறிக்கை 2026 ....72
மகாத்மா காந்தி கிராம சுயராஜ்ய முன்முயற்சி ....74
ஒருங்கிணைந்த ஜவுளித் திட்டம் – ஒன்றிய நிதிநிலை அறிக்கை 2026/27 ....75
மாற்றுத்திறனாளிகள் நலத் திட்டங்கள் – 2026–27 ....75
மத்திய பட்ஜெட் 2026 சிறப்பம்சங்கள் ....76

**இந்தியாவில் நீதித்துறை இட ஒதுக்கீடு ....77**
**2025ல் 30 லட்சம் இணைய வழித் தாக்குதல் சம்பவங்கள் - இந்தியா ....78**
**இந்தியாவின் மருந்து மற்றும் மருத்துவச் சாதனங்கள் துறையில் மாற்றம் ....78**
**கவச் 4.0 ....79**
**சம்பூர்ணதா அபியான் 2.0 ....79**
**அதிவேக ரயில் பாதைகள் ....79**
**2026 மத்திய பட்ஜெட் புள்ளி விவரங்கள் ....80**
**வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கீடு ....81**
**உலக கடல் உணவு மாநாடு 2026 ....82**
**வடகிழக்கு இந்தியாவில் பௌத்த சுற்றுலா வழித்தடம் ....82**
**2026 டெல்லி பிரகடனம் ....83**
**உச்ச நீதிமன்றத்தில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த வழக்கு ....83**
**நுரையீரல் புற்றுநோய் பராமரிப்பு குறித்த வழிகாட்டுதல்கள் ....83**
**தேசிய குப்பை சேகரிப்பாளர்கள் தரவுத் தளம் ....84**
**உச்ச நீதிமன்ற மரண தண்டனை விவரம் ....84**
**நன்றியுரைத் தீர்மானம் 2026 ....85**
**தற்காலிக டிஜிபி நியமனம் குறித்த உச்ச நீதிமன்றம் ....86**
**அரசியலமைப்பு அங்கீகாரம் - சீர் மரபினர் ....87**
**யுவ சககர் மற்றும் சுயம்சக்தி சககர் திட்டங்கள் ....88**
**2026 UPSC குடிமைப் பணி தேர்வில் முக்கிய மாற்றங்கள் ....88**
**பாரத் டாக்ஸி கூட்டுறவு வாடகைக்கார் சேவை ....89**
**PLASTINDIA கண்காட்சி 2026 ....89**
**சபாசார் முன்முயற்சி ....89**
**பேரிடரில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கான SOP ....90**
**திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026 ....90**
**PAIMANA இணையதளம் ....91**
**திறன்மிகு மீன்பிடித் துறைமுகம் – மாயாபந்தர் ....91**
**இந்தியாவில் விவசாயக் குழுக்கள் ....92**
**இந்தியாவில் அடிப்படை தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனம் ....92**
**இந்தியாவின் கம்பளி உற்பத்தி 2026 ....93**
**என்.பி.எஸ் ஸ்வஸ்த்யா ஓய்வூதியத் திட்டம் ....93**
**பருப்பு வகைகளில் ஆத்மநிர்பர்தா இயக்கம் ....94**
**eSankhyiki தளம் ....94**
**புதிய கைலாஷ் யாத்திரை பாதை - ஷிப்கி லா கணவாய் ....94**
**சவல்கோட் நீர்மின் திட்டம் ....95**
**யானை ஊடுருவல் கண்டறிதல் அமைப்பு ....95**
**SATYA ஆய்வக தானியங்கமயமாக்கல் தளம் ....95**
**லடாக்கில் இரண்டு மெகா தொலைநோக்கிகள் ....96**
**கிம்பர்லி செயல்முறைக்கான சீர்திருத்தத் திட்டம் ....96**
**செயற்கை நுண்ணறிவு ஏற்பு மையம் ....96**
**இந்தியா–AI தாக்க உச்சி மாநாடு 2026 ....97**

மக்களவையில் பொருண்மை தீர்மானம் ....97
தேசிய பாடல் மற்றும் கீதம் வழிகாட்டுதல்கள் 2026....98
தகவல் தொழில்நுட்ப விதிகள் திருத்தம் 2026....98
தொழிலக உறவுகள் குறியீடு (திருத்தம்) மசோதா, 2026....98
சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் ....99
முன்னாள் படைவீரர் விதிகள் 2026 ....99
யானைக்கால் நோய் ஒழிப்பு பிரச்சாரம்....100
மாநில இணையவெளி குற்ற ஒருங்கிணைப்பு மையம் ....100
உறுப்பினரைத் திரும்பப் பெறும் உரிமை....100
சேவா தீர்த்தம் - புதிய பிரதமர் அலுவலக வளாகம்....101
PM RAHAT திட்டம் ....102
ஸ்டார்ட்அப் இந்தியா நிதியின் நிதி 2.0....102
இந்தியாவில் நீதிபதிகளுக்கு எதிரான புகார்கள் ....102
உலகின் இரண்டாவது பெரிய திறன்பேசி சந்தை - இந்தியா ....103
உலகின் மிகப்பெரிய தானியங்கள் சேமிப்புத் திட்டம்....103
அணுசக்தியில் தனியார் துறைகள்....103
லக்பதி தீதி திட்ட விரிவாக்கம் ....104
இந்தியாவில் புதிய புல்லட் ரயில் வழித்தடங்கள்....104
இந்தியாவின் பண்டைய நாகரிகம் ....104
ஆயுதப் படைகளில் உள்நாட்டு நாய்கள் ....105
CTF-154 இன் இந்தியாவின் முதல் தலைமைத்துவம்....105
வெண்மைப் புரட்சி 2.0 ....106
நகர்ப்புறச் சவால்கள் நிதி....106
AI ஆளுகை கட்டமைப்பு 2026....107
யுகே யுகீன் பாரத் தேசிய அருங்காட்சியகம் ....107
CBDC அடிப்படையிலான பொது விநியோக முறை....107
அணைகள் பாதுகாப்பு குறித்த சர்வதேச மாநாடு 2026 ....108
2025–26 நிதியாண்டில் மின் உற்பத்தித் திறன் ....108
உள்கட்டமைப்புத் திட்டம் - கிரேட் நிக்கோபார் தீவு....108
அரசியலமைப்பு சட்ட திருத்த மசோதா, 2026 - நீதித்துறை பன்முகத்தன்மை....109
MANAV – AI தொழில்நுட்ப இலக்கு....109
டெல்லி பிரகடனம் 2026 ....110
Bharat VISTAAR முன்முயற்சி....110
AI உச்சி மாநாடு பிரகடன முடிவுகள்....110
இந்தியப் பெருங்கடல் கடற்படை கருத்தரங்கு 2026....111
அரிய வகை புவிக் காந்த உற்பத்தி ....111
தேனீ வழித்தடங்கள் முன்முயற்சி ....112
SAHI & BODH முன்முயற்சிகள்....112
ராஷ்டிரபதி பவனில் ராஜாஜி சிலை....113
பயங்கரவாத எதிர்ப்புக் கொள்கை ‘PRAHAAR’....113
கேரளா பெயர் மாற்ற மசோதா, 2026 ....113

இந்தியாவின் ரஷ்ய எண்ணெய் இறக்குமதிகள் – ஜனவரி 2026 ........ 114
நடமாடும் நெடுஞ்சாலை சோதனை ஆய்வகங்கள் ........ 114
SUJVIKA - AI உயிரித்தொழில்நுட்ப தரவு தளம் ........ 114
சர்வதேசச் செய்திகள் ........ 115
15 வயதுக்குட்பட்டவர்களுக்கு சமூக ஊடகங்களுக்குத் தடை – பிரான்ஸ் ........ 115
4பி இயக்கம் - தென் கொரியா ........ 115
இந்தியா-அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் 2026 ........ 115
உலக அரசாங்கங்கள் உச்சி மாநாடு 2026 ........ 116
16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சமூக ஊடகத் தடை ........ 116
BRICS தொழில்துறைத் திறன் மையம் ........ 116
ஸ்டார்ட் ஒப்பந்தத்தின் முடிவு ........ 117
FORGE முன்முயற்சி ........ 118
2026 ஆம் ஆண்டுக்கான ஐ.நா. ‘கௌரவப் பட்டியலில்’ இந்தியா ........ 118
Project Vault திட்டம் ........ 118
NCPF கட்டமைப்பு ........ 119
உலகளாவிய LEED சான்றிதழ்கள் ........ 119
இந்தியா-சீஷெல்ஸ் மூலோபாய கூட்டாண்மை ........ 119
சீனாவின் பாண்டா ராஜதந்திரத்தில் மாற்றம் ........ 120
இந்தியா-இங்கிலாந்து சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தம் 2026 ........ 120
ஆர்க்டிக் சென்ட்ரி திட்டம் ........ 121
2025 ஆம் ஆண்டுக்கான நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்பு ஒப்பந்தம் ........ 121
வங்காளதேச பொதுத் தேர்தல்கள் 2026 ........ 121
இந்தியா-பிரான்ஸ் புத்தாக்க ஆண்டு ........ 122
UNEP FI தாக்க மையம் ........ 123
ஆப்பிரிக்க ஒன்றிய உச்சி மாநாடு 2026 ........ 123
வரிகள் மீதான அமெரிக்க உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ........ 123
இந்தியா மற்றும் பிரான்ஸ் - சிறப்பு உலகளாவிய மூலோபாய கூட்டாண்மை ........ 123
எல்-ஃபாஷர் நகரத்தின் இனப்படுகொலை விவகாரம் ........ 124
நைஜீரியா சுரங்க விபத்து 2026 ........ 124
இந்தியா-பிரேசில் மூலோபாய கூட்டாண்மை ........ 125
ஒட்டாவா ஒப்பந்தத்திலிருந்து போலந்து விலகல் ........ 125
டகேஷிமா - டோக்டோ தீவு தகராறு ........ 126
பொருளாதாரச் செய்திகள் ........ 126
இந்தியா–ஐரோப்பிய ஒன்றியம் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ........ 126
ரிசர்வ் வங்கியின் மாநில நிதிநிலை அறிக்கை - புதிய தகவல்கள் ........ 126
SBI சக்ரா முன்முயற்சி ........ 127
16வது நிதி ஆணைய அறிக்கை ........ 128
புதிய நுகர்வோர் விலைக் குறியீட்டுத் தொடர் ........ 129
நாடு தழுவிய புலம்பெயர்வு கணக்கெடுப்பு ........ 129
16வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் ........ 130
இந்திய தொழிலாளர் இடம்பெயர்வு ........ 133

வங்கி NPAகளில் வீழ்ச்சி....133
புதிய GDP, CPI மற்றும் IIP தொடர்கள்....133
புதிய CPI தொடரின் படி சில்லறை விலை பணவீக்கம்....133
வணிக வர்த்தக குறியீடுகளின் அடிப்படை ஆண்டு....134
இந்தியாவின் அந்நிய செலாவணி இருப்பு – பிப்ரவரி 2026....134
2025 நிதியாண்டுக்கான இந்திய மாநிலங்களின் GSDP தரவரிசை....135
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்....135
இறுதித் தீர்ப்பு நாள் நேரத் திருத்தம் 2026....135
SFDR ஏவுகணை தொழில்நுட்ப சோதனை....136
செயற்கை நுண்ணறிவு மாதிரி - எக்ஸோமைனர்++....136
செயற்கை நுண்ணறிவு கருவி - ஆல்பாஜெனோம்....136
சூரியக் கதிர்வீச்சுப் புயல்....136
MoM-z14 விண்மீன்....137
ஹெலிக்ஸ் நெபுலா....137
செவ்வாய்க் கிரகத்தில் AI வழிசெலுத்தல் சோதனை....137
சுற்றுப்பாதைக் கண்காணிப்பு - அஜிஸ்டா செயற்கைக்கோள்....138
மோன்ஸ் மவுட்டன் மலை....138
iLive Connect சுகாதார தளம்....138
ஹேவன்-1 தனியார் விண்வெளி நிலையம்....139
ஒற்றை-அலகு சூரிய ஆற்றல் சேமிப்பு தொழில்நுட்பம்....139
கோப்பர்நிக்கஸ் சென்டினல்-2 திட்டம்....139
சான்ஷா யோங்கிள் நீல துளை....140
கண்ட கவச அடுக்கு பூகம்பங்களின் உலகளாவிய வரைபடம்....140
உயிரித் தொழில்நுட்பத்திற்கான BIRAC–RDI நிதி....140
அண்டார்டிகாவில் முதல் தொலைக்கட்டுப்பாட்டு மீயொலி சோதனை....141
இந்தியாவின் இறையாண்மை AI மாதிரிகள்....141
AI உள்கட்டமைப்பு திட்டம்....141
உலகளாவிய AI for Energy திட்டம்....142
X8.3 சூரிய ஒளிக்கதிர்....142
ஈயம் இல்லாத ஒளியுணர்வி....142
விண்மீன்களிடை வால்நட்சத்திரத்தில் கரிம மூலக்கூறுகள்....143
ஃபோனான் வெப்பப் பரிமாற்றம்....143
வியாழன் கோளின் அளவு திருத்தம்....143
BioE3 கொள்கை புதுப்பிப்பு....144
சுற்றுச்சூழல் செய்திகள்....144
இந்தியாவில் மேலும் 2 ராம்சர் தளங்கள்....144
தெற்குநோக்கிய துருவ சுழற்காற்று....145
சுனபேடா வனவிலங்கு சரணாலயம் - மாவோயிஸ்ட் அற்ற நிலை....145
அமெரிக்காவும் பாரிஸ் பருவநிலை ஒப்பந்தமும்....145
சவூதி அரேபியாவில் அரிய பனிப்பொழிவு....146
மணாலியில் இந்திய மயில்....146

கரிம்புழா வனவிலங்கு சரணாலயத்தில் விலங்கின கணக்கெடுப்பு ....147
தமிழ்நாட்டில் கடற்பசுக்களின் எண்ணிக்கை ....147
கடல் ஆமைகள் பாதுகாப்பு மையம் ....148
ஜலாஜ் வாழ்வாதார மையங்கள் ....148
இந்தியாவின் இரண்டாவது விரிவான பறவைகள் அட்லஸ் ....148
லோனார் விண்கல் பள்ளத்தாக்கு ஏரி சூழலியல் அமைப்பு ....149
புதிய காளான் இனங்கள் ....149
பனிப்பாறைசார் அபாய முன்னறிவிப்பு ஆய்வு ....149
புதிய கடல் புழு இனங்கள் ....150
உலகின் மிக நீளமான பாம்பு - மலாயோபிதான் ரெட்டிகுலட்டஸ் ....150
துரும்பன் பூனை – ராஜஸ்தான் ....150
நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பு 2026 ....150
புதிய பூக்கும் தாவர இனம் - டிக்லிப்டெரா பகலிகா ....151
சதுப்புநில மட்டி இனப்பெருக்கம் ....151
த்வைட்ஸ் பனிப்பாறை ....151
புதிய தட்டாம்பூச்சி இனங்கள் - லிரியோதெமிஸ் கெரலென்சிஸ் ....152
நிலப்பரப்பு பறவைகள் கணக்கெடுப்பு 2026 ....152
கவைவால் கொண்டைக் கரிச்சான் ....152
சிங்க வால் குரங்கு வளங்காப்பு ....153
பாங்கோலின் மீதான வர்த்தகத் தடை ....153
சேற்று எரிமலை வெடிப்பு ....153
இந்திய சாம்பல் நிற இருவாச்சி - திருப்பத்தூரின் பறவை ....154
மலபார் கறுப்பு வெள்ளை இருவாச்சி ....154
முர்ஷிதாபாத் சதுப்பு நிலங்கள் ....154
சிறுத்தைகளின் எண்ணிக்கை ....155
பிலிப்பைன்ஸ் கழுகு ....155
'வன்ஜீவி தீதி' முன்முயற்சி ....155
கலபகோஸ் ராட்சத ஆமை ....156
ஆலிவ் ரிட்லிகள் கூடு அமைக்கும் உருப்படிமம் ....156
வான் தீவு மறுசீரமைப்பு ....157
வரிப்புற நீர்நாய் – உத்தரகாண்ட் ....157
புதிய டிப்ளூரா இனங்கள் - லெபிடோகாம்பா சிக்கிமென்சிஸ் ....157
**அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ....158**
உலக அணுசக்தி கண்ணோட்ட அறிக்கை 2026 ....158
நுகர்வோர் நம்பிக்கை குறியீடு ....158
நீர் திவால் அறிக்கை 2026 - ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம் (UNU-INWEH) அறிக்கை ....158
உலகளாவிய செயற்கை நுண்ணறிவு முதலீடுகள் ....159
உலகளாவிய மென்பலக் குறியீடு 2026 ....160
பஞ்சாயத்து முன்னேற்றக் குறியீடு 2.0 ....160
IOM உலகளாவிய வேண்டுகோள் 2026 அறிக்கை ....160
உலக வங்கியின் காற்று மாசுபாடு குறித்த அறிக்கை ....161

உலகளாவிய உயிரி எரிசக்தி உற்பத்தித் தரவரிசை 2026 ....161
உலகளாவியப் புத்தாக்கக் குறியீடு ....162
மின்சார அறிக்கை 2026 ....162
நெட்வொர்க் தயார்நிலை குறியீடு 2025 ....162
பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு குறியீடு 2025–26 ....163
ஊழல் கண்ணோட்டக் குறியீடு 2025 ....163
சுழிய உமிழ்வு குறித்த நிதி ஆயோக் அறிக்கை ....163
உலகளாவிய எரிசக்தி கண்காணிப்பு அறிக்கை ....164
காலாண்டு கால வர்த்தக கண்காணிப்பு அறிக்கை ....164
தொழிற்பழகுதல் குறித்த நிதி ஆயோக் அறிக்கை 2026 ....165
ஆசியா மற்றும் பசிபிக் பகுதி SDG முன்னேற்ற அறிக்கை 2026 ....165
மாநிலச் செய்திகள் ....166
GenAI மையம் - கர்நாடகா ....166
மேகாலயாவின் உள்ளூர் வேர்ப் பாலங்கள் ....166
இலவசக் கல்வி கொள்கை 2026 – கேரளா ....166
பௌத்த வைர முக்கோணம் ....167
கேரள மாணவர்களுக்கான மருத்துவக் காப்பீடு ....167
சித்தூர் கின்னஸ் சாதனைகள் ....167
பதிக் - ஆதார் ஒருங்கிணைப்பு ....168
Gig தொழிலாளர்கள் நல வாரியம் - கர்நாடகா ....168
இந்தியாவின் முதல் இணையவழி சொத்து வரி மாவட்டம் – தம்தாரி ....169
இந்தியாவின் முன்னணி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மாநிலம் - குஜராத் ....169
2026 -வேளாண்மை ஆண்டு - மத்தியப் பிரதேசம் ....169
Pilloo AI கணக்கியல் செயலி ....169
மாதாபாரி சுற்றுலா வழித்தடம் – திரிபுரா ....170
பண்டைய தெலுங்கு கல்வெட்டு ....170
மணிப்பூரின் புதிய முதலமைச்சர் - யும்னம் கேம்சாந்த் சிங் ....170
மகளிர் தொழிற்பூங்கா முயற்சி ....171
தூய்மை ஆற்றல் செயல் திட்டம் ....171
முதியோருக்கான நிதிநிலையறிக்கை 2027 நிதியாண்டு ....171
FNTA ஒப்பந்தம் ....171
உள்ளாட்சித் தேர்தல்களில் வாக்குச்சீட்டு முறை ....172
அமராவதி குவாண்டம் பள்ளத்தாக்குத் திட்டம் ....172
பிளாக் ஸ்வான் உச்சி மாநாடு 2026 ....172
கர்நாடகாவின் நிதிச் சீர்திருத்தம் ....173
முதலமைச்சர் கிராமோதயத் திட்டம் ....173
இந்தியாவின் ஆளில்லா விமான சோதனை வழித்தடம் ....173
முக்கிய மந்திரி எதி கோலி துதி பாத் திட்டம் ....174
AI அடிப்படையிலான கற்றல் தளம் - Padhai with AI ....174
உத்தரப் பிரதேச பொருளாதார ஆய்வறிக்கை 2025–26 ....174
மகாராஷ்டிராவில் கழுகு பாதுகாப்பு திட்டம் ....175

லக்பதி பிடியா யோஜனா ....175
ஓங்கில்கள் கணக்கெடுப்பு 2026 - ஒடிசா....175
உத்தரப் பிரதேச பட்ஜெட் 2026–27 ....176
ஸ்த்ரீ சுரக்சா திட்டம்....176
வடகிழக்கு இந்தியாவில் பிராந்திய இணைப்பு ....176
நகரமயமாக்கல் கொள்கை கட்டமைப்பு....177
AI-செயல்படுத்தப்பட்ட தொலைதூர மின்னணு வாக்களிப்பு அமைப்பு ....177
கடல் ஓத வெள்ளம் – மாநிலம் சார்ந்த பேரிடர் ....178
இந்தியாவின் முதல் கிராபீன் கொள்கை....178
AI அடிப்படையிலான CM ஸ்ரீ பள்ளி மாதிரி....178
அசாமின் சமீபத்திய முயற்சிகள்....179
மகாராஷ்டிராவில் முஸ்லிம் இடஒதுக்கீடு ....179
துல்புல் நீர்வழி தடுப்பணைத் திட்டம்....179
சாதியற்ற நிலை - சவுண்டலா ....180
மாண்டியா கல்வெட்டு ....180
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ....180
குடியரசு தின அணிவகுப்பு 2026....180
சமூக நீர் சாம்பியன்கள் - WaSH வீரர்கள்....181
தமிழ்நாடு மாநில திரைப்பட விருதுகள் – 2016/2022 ....181
சுனேத்ரா பவார் - துணை முதலமைச்சர் ....182
சிக்கிமிற்கு குடியரசுத் தலைவரின் காவல்துறை வண்ண விருது ....182
2026 ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகள் – தமிழ்நாடு ....183
சர் மார்க் டல்லி....183
கிராமி விருதுகள் 2026....183
வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது....184
பூம்புகார் மாநில விருதுகள் 2025-26....184
கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது....184
ஃபிரான்ஸ் எடெல்மேன் விருது 2026 ....185
விலே ஆராய்ச்சி ஹீரோஸ் பரிசு 2025....185
கிராஃபோர்டு பரிசு 2026....185
மும்பை மேயர் - ரிது தவ்டே....186
எர்த்ஷூட் பரிசு 2026 ....186
ஆர். நல்லகண்ணு (1925–2026) மறைவு....186
நாடாளுமன்ற நட்புறவு குழு....187
விளையாட்டுச் செய்திகள் ....188
ஆசிய ரைபிள்/பிஸ்டல் சாம்பியன்ஷிப் 2026....188
பிபிசி விருதுகள் 2025 ....188
முக்கிய தினங்கள் ....188
உலக தொழுநோய் தினம் 2026 - ஜனவரி 25....188
இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களின் சர்வதேச நினைவு தினம் 2026 – ஜனவரி 27....189
இந்தியக் கடலோரக் காவல்படை தினம் 2026 - பிப்ரவரி 01 ....189

உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் தினம் 2026 – ஜனவரி 30 ........ 189
உலக சதுப்பு நில தினம் 2026 - பிப்ரவரி 02 ........ 190
முடக்கு வாத விழிப்புணர்வு தினம் 2026 - பிப்ரவரி 02 ........ 190
இந்தியா எரிசக்தி வாரம் 2026 ........ 190
உலக புற்றுநோய் தினம் 2026 – பிப்ரவரி 04 ........ 190
சர்வதேச மனித சகோதரத்துவ தினம் 2026 – பிப்ரவரி 04 ........ 191
சர்வதேச பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்பு தினம் 2026 - பிப்ரவரி 06 ........ 191
சர்வதேச வலிப்பு தினம் 2026 - பிப்ரவரி 10 ........ 191
தேசிய குடற்புழு நீக்க தினம் 2026 - பிப்ரவரி 10 ........ 191
உலகப் பருப்பு வகைகள் தினம் 2026 - பிப்ரவரி 10 ........ 192
சர்வதேச அரேபியச் சிறுத்தை தினம் 2026 – பிப்ரவரி 10 ........ 192
உலக யுனானி தினம் 2026 – பிப்ரவரி 11 ........ 192
அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினம் 2026 - பிப்ரவரி 11 ........ 193
பயங்கரவாதத்திற்கு வழிவகுக்கும் வன்முறை தீவிரவாதத்தைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் 2026 - பிப்ரவரி 12 ........ 193
தேசிய மகளிர் தினம் 2026 - பிப்ரவரி 13 ........ 193
தேசிய உற்பத்தித்திறன் தினம் 2026 – பிப்ரவரி 12 ........ 194
சர்வதேச குழந்தைப் பருவப் புற்றுநோய் தினம் 2026 – பிப்ரவரி 15 ........ 194
மிசோரம் உருவாக்க தினம் 2026 ........ 194
அருணாச்சலப் பிரதேசம் உருவாக்க தினம் 2026 ........ 195
உலக சமூக நீதி தினம் 2026 - பிப்ரவரி 20 ........ 195
சர்வதேச தாய்மொழி தினம் 2026 - பிப்ரவரி 21 ........ 195
உலக எறும்புத்திண்ணி தினம் 2026 - பிப்ரவரி 21 ........ 195
100வது உலக சிந்தனை தினம் – பிப்ரவரி 22 ........ 196
மத்திய கலால் தினம் 2026 - பிப்ரவரி 24 ........ 196
தேசிய அறிவியல் தினம் 2026 - பிப்ரவரி 28 ........ 196
இதரச் செய்திகள் ........ 197
QS ஐரோப்பா தரவரிசை 2026 ........ 197
QS 2026 - சர்வதேச மாணவர்களுக்கு உகந்த நகரங்கள் ........ 197
பணி புரிய சிறந்த இடம் சான்றிதழ் - SAIL ........ 197
தேவ்னிமோரி புத்தர் நினைவுச் சின்னங்கள் ........ 197
கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம் – 50வது ஆண்டு தினம் ........ 198
பண்டைய எகிப்து கருவி ........ 198
இரும்புக் காலக் கோயில் - டென்மார்க் ........ 198
ஒல் சிக்கி எழுத்து - 100 ஆண்டு கொண்டாட்டம் ........ 199
ராயல் இந்தியக் கடற்படைக் கிளர்ச்சி 1946 ........ 199
சராக்ஸ் ஸ்பாசினோ நகரம் ........ 199
தகுதியான வெகுமதிக் கொள்கை ........ 200

# TNPSC துளிகள்

- ராணிப்பேட்டையைச் சேர்ந்த 9ம் வகுப்பு மாணவி ரோஷினி, கோவாவில் நடைபெற்ற 29வது அகில இந்தியத் தேசியப் பாரம்பரியத் தற்காப்புக் கலை சாம்பியன்ஷிப் போட்டி 2026 என்ற போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்.
- சென்னை பிராட்வேயில் குறளகத்துடன் இணைந்த ஒருங்கிணைந்த பன்முகப் போக்குவரத்து வசதி வளாகத்திற்கான (MMFC) அடிக்கல்லை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நாட்டினார்.
- உத்தரப் பிரதேச மாநிலமானது பிப்ரவரி 1, 2026 முதல் சொத்துப் பதிவுக்காக ஆதார் அடிப்படையிலான அங்கீகாரத்தைக் கட்டாயமாக்கியுள்ளது.
- விங்ஸ் இந்தியா 2026 நிகழ்வில் விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பை மேம்படுத்துவதற்கான சிறந்த மாநிலத்திற்கான தேசிய விருதை உத்தர காண்ட் வென்றுள்ளது.
- மாநில அரசு தமிழ்நாடு ஆனந்த் திருமணப் பதிவு விதிகள், 2026ஐ அறிவித்துள்ளது.
  - பொதுவாக ஆனந்த் கரஜ் என்று அழைக்கப்படும் ஆனந்த் திருமணங்கள், சீக்கிய திருமணச் சடங்குகளின்படி நடத்தப்படுகின்றன.
- சென்னையில் உள்ள திருவொற்றியூர் நெடுஞ்சாலை இனிமேல் 'வள்ளலார் நெடுஞ் சாலை' என்று அழைக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்து உள்ளார்.
- திமுக அரசு தஞ்சாவூரில் உள்ள சோழர் அருங்காட்சியகத்தில் சோழ மன்னர் ராஜ ராஜ சோழனின் 125 அடி உயர சிலையை நிறுவ திட்டமிட்டுள்ளது.
- கேப்டன் ஹன்சா சர்மா, இந்திய ராணுவத்தில் ஆயுதம் தாங்கிய ருத்ரா ஹெலிகாப்டரை ஓட்டத் தகுதி பெற்ற முதல் பெண் அதிகாரியாக மாறியுள்ளார்.
- இந்தியா தனது முதல் செயற்கை நுண்ணறிவுத் திறன் கொண்ட பல்கலைக்கழக முன்னோடித் திட்டத்தை உத்தரப் பிரதேசத்தின் மீரட்டில் உள்ள சௌத்ரி சரண் சிங் பல்கலைக்கழகத்தில் (CCSU) தொடங்கியுள்ளது.
- உலகம் முழுவதும் சர்வதேச வளர்ச்சிக்கு கனடாவின் பங்களிப்புகளை முன்னிலைப் படுத்தும் வகையில், 1991 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதத்தின் முதல் முழு வாரத்தில் (01-07) சர்வதேச மேம்பாட்டு வாரம் அனுசரிக்கப்படுகிறது.
- வரிக்குதிரைகளின் பாதுகாப்பு மற்றும் வாழ்விட இழப்பு, வேட்டையாடுதல், வண்ணிக்கை குறைதல் போன்ற அச்சுறுத்தல்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, ஜனவரி 31 அன்று சர்வதேச வரிக்குதிரை தினம் அனுசரிக்கப் படுகிறது.
- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாட்டின் மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகாரில் புதுப்பிக்கப்பட்ட பூம்புகார் சுற்றுலா வளாகத்தை திறந்து வைத்தார்.
- ஸ்பெயினைச் சேர்ந்த கார்லோஸ் அல்கராஸ், 2026 ஆஸ்திரேலிய ஓபன் ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் செர்பியாவின் நோவாக் ஜோகோவிச்சை தோற்கடித்து பட்டம் பெற்றார்.
  - ஓபன் வகைப் போட்டிகளில் ஆஸ்திரேலிய ஓபன் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய மிக வயதான வீரர் என்ற பெருமையை நோவாக் ஜோகோவிச் பெற்றார்.

- கஜகஸ்தானைச் சேர்ந்த எலினா ரைபாகினா, 2026 ஆஸ்திரேலிய ஓபன் மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் பெலாரஸைச் சேர்ந்த உலக நம்பர் 1 வீராங்கனையான அரினா சபலென்காவைத் தோற்கடித்து தனது இரண்டாவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்றார்.
- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், செங்கல்பட்டு மாவட்டம், சிறுசேரியில் உள்ள சிப்காட் (தமிழ்நாடு மாநிலத் தொழிலகங்கள் மேம்பாட்டுக் கழகம்) வளாகத்தில் உள்ள நாவலூர் ஏரியில் ஒரு சூழலியல் பூங்காவைத் திறந்து வைத்தார்.
- சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம், இந்திய விமான நிலையங்கள் ஆணையம் (AAI) மற்றும் இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு (FICCI) ஆகியவை இணைந்து, ஹைதராபாத்தில் 'விங்ஸ் இந்தியா 2026' என்ற பெயரில் ஒரு பெரிய சிவில் விமானப் போக்குவரத்து மாநாடு மற்றும் கண்காட்சியை ஏற்பாடு செய்தன.
- இந்திய ராணுவமும் இந்தோ-திபெத்திய எல்லைக் காவல்படையும் (ITBP) அருணாச்சலப் பிரதேசத்தின் கிழக்கு சியாங் மாவட்டத்தில் உள்ள சிகாரில் "அக்னி பரீட்சை" என்ற கூட்டுப் பயிற்சியை நடத்தின.
  - இந்த பயிற்சி, பீரங்கிப் படையில் அல்லாத வீரர்களுக்குப் பீரங்கிப் பயன்பாட்டுப் பயிற்சி அளிப்பதில் கவனம் செலுத்தியதுடன், இரு படைகளுக்கும் இடையேயான முதல் ஒருங்கிணைந்த துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சியாகவும் அமைந்தது.
- எல்லைப்புறச் சாலைகள் அமைப்பானது (BRO) ஜனவரி 2026ல், கனமழை மற்றும் பனிப்பொழிவுக்குப் பிறகு சடர்கலா கணவாயில் சாலை இணைப்பை மீட்டெடுத்து, ஒரு மீட்பு நடவடிக்கையை மேற்கொண்டது.
  - இந்த நடவடிக்கை ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள சதர்கலா கணவாயில் (10,500 அடி) சம்பர்க் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டது.
- தமிழ்நாடு முதலமைச்சர், ராணிப்பேட்டையின் முதல் கார் உற்பத்தி ஆலையை, பனப்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு மாநில தொழில்கள் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட்) வளாகத்தில் திறந்து வைக்கவுள்ளார்.
  - இது மின்சார வாகனங்களில் நிபுணத்துவம் பெற்ற, டாடா மோட்டார்ஸுக்குச் சொந்தமான, சொகுசு வகை ஜாகுவார் லேண்ட் ரோவர் (JLR) கார் மாடல்களைத் தயாரிக்கும் இந்தியாவின் முதல் ஆலையாகும்.
- புகழ்பெற்ற கல்வியாளர் எஸ்.எஸ். ராஜகோபாலன் சமீபத்தில் காலமானார்.
  - சமச்சீர் கல்வி முறையை உருவாக்கிய குழுவில் அவர் ஒரு உறுப்பினராக இருந்ததுடன், அகில இந்தியக் கல்வி உரிமை மன்றத்தின் தொழில்நுட்பக் குழுவிலும் பணியாற்றினார்.
- ஒடிசாவின் பாரதீப் துறைமுக ஆணையமானது 'ஆண்டின் தூய்மையான துறைமுகமாக' தேர்ந்தெடுக்கப் பட்டதுடன் ஸ்வச்சதா பக்வாடா விருதுகள் 2025-ல் முதல் பரிசையும் வென்றது.
- ஃபோர்ப்ஸ் பத்திரிகையின்படி, SpaceX மற்றும் xAI நிறுவனங்களின் இணைப்புக்குப் பிறகு, எலோன் மஸ்க் 800 பில்லியன் டாலர் நிகர சொத்து மதிப்பைத் தாண்டிய வரலாற்றின் முதல் நபராக மாறியுள்ளார்.
- பிப்ரவரி 1 முதல் பிப்ரவரி 15, 2026 வரை அனுசரிக்கப்படும் சாக்சம் (சம்ரக்சன் சமதா மகோத்சவம்) 2026 எனும் எரிபொருள் சேமிப்புப் பிரச்சாரம் சண்டிகரில் தொடங்கப் பட்டது.

- கடல்சார் தளவாடங்களை வலுப்படுத்தும் நோக்கில், பாரத் கொள்கலன் கப்பல் நிறுவனத்தை (BCSL) நிறுவுவதற்காக மத்திய அரசு பல்வேறு பங்குதாரர்களுடன் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இந்தியாவும் சீனாவும் 2025 ஆம் ஆண்டில் 155.6 பில்லியன் அமெரிக்க டாலர் வரலாற்று இருதரப்பு வர்த்தகத்தைப் பதிவு செய்தன என்ற நிலையில் இது இந்த ஆண்டில் சுமார் 12% அதிகரித்து ள்ளது.
    - சீனாவிற்கான இந்திய ஏற்றுமதி 2025 ஆம் ஆண்டில் 9.7% அதிகரித்துள்ளது.
- உலகளாவிய மத நல்லிணக்க வாரம் 2026 ஆனது, அமைதி, சகிப்புத்தன்மை, அகிம்சை மற்றும் சமயங்களுக்கு இடையேயான புரிதலை மேம்படுத்தும் நோக்கில், பிப்ரவரி 1 முதல் 7 வரை உலகெங்கிலும் அனுசரிக்கப்படுகிறது.
- தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்றமானது (TNSCST) 38வது கேரள மாநில அறிவியல் மாநாட்டில் முதல் பரிசை வென்றது.
- தமிழக முதல்வர், மறைந்த நடிகர் 'கலைவாணர்' என்.எஸ். கிருஷ்ணனின் சிலையை சென்னையில் திறந்து வைத்தார்.
- தமிழக முதல்வர் மாமல்லபுரத்தில் மாநிலத்தின் முதல் ஒளிரும் பூங்காவைத் திறந்து வைத்தார்.
- 13வது இந்தியா-கிர்கிஸ்தான் கூட்டு ராணுவப் பயிற்சியான 'கஞ்சர்-XIII' அசாமின் மிசாமரியில் நடைபெற உள்ளது.
- இந்திய விமானப்படை (IAF) தனது மிகப்பெரிய பகலிரவு விமானப்படை பயிற்சியான 'வாயு சக்தி-2026'-ஐ ராஜஸ்தானில் நடத்த உள்ளது.
- மத்திய ரயில்வே அமைச்சகமானது, மும்பை-அகமதாபாத் அதிவேக ரயில் (MAHSR) திட்டத்திற்காக வெட்டப்பட்ட மகாராஷ்டிராவின் பால்கரில் உள்ள இரண்டாவது மலைச் சுரங்கப்பாதை MT-6 முடிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்திய ஆசிரியையான ரூபிள் நாகி, துபாயில் நடைபெற்ற உலக அரசாங்க உச்சி மாநாட்டில் ஒரு மில்லியன் டாலர் மதிப்புள்ள சர்வதேச ஆசிரியர் பரிசு 2026-ஐ வென்றுள்ளார்.
- ஈரானிய பேட்மிண்டன் வீராங்கனையான சோரயா அகாஹே ஹஜிஹா, சர்வதேச ஒலிம்பிக் குழுவிற்கு (IOC) ஈரானில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் உறுப்பினராக மாறியுள்ளார்.
- பூடான் அரசரின் ராணி தாயாரான கியால்யம் ஆஷி டோர்ஜி வாங்மோ வாங்சுக், 22வது உபேந்திர நாத் பிரம்மா 'மனிதநேயப் போர்வீரர்' விருது- 2025 ஐ பெற்றுள்ளார்.
- உலகின் மிகப்பெரிய சர்வதேச நாடக விழாவான பாரத் ரங் மஹோத்சவத்தின் 25வது பதிப்பு ஹரியானாவின் ரோத்தக்கில் நடைபெற உள்ளது.
- மத்திய அமெரிக்காவின் செயல்பாட்டில் உள்ள எரிமலைகளில் ஒன்றான வோல்கன் டி ஃபுயேகோ (Volcano of Fire) சமீபத்தில் குவாத்தமாலாவில் வெடித்தது.
- இந்தியாவின் முதல் பிரத்யேக கண்ணாடி அருங்காட்சியகமானது, 'இந்தியாவின் கண்ணாடி நகரம்' என்று அழைக்கப்படும் உத்தரப் பிரதேசத்தின் ஃபிரோசாபாத்தில் உருவாக்கப்பட்டு வருகிறது.

- திரிபுரா கிராமின் வங்கியானது (TGB), கிராமப்புற மற்றும் பகுதியளவு நகர்ப் புறங்களில் டிஜிட்டல் வங்கிச் சேவைகளையும் நிதி உள்ளடக்கத்தையும் விரிவு படுத்தும் நோக்கில், இந்தியாவின் முதல் பிராந்திய கிராமப்புற வங்கி (RRB) கூட்டாண்மை ரூபே கடன் அட்டையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- வால்மார்ட் நிறுவனம் பிப்ரவரி 2026-ல் 1 டிரில்லியன் டாலர் சந்தை மதிப்பை எட்டிய உலகின் முதல் சில்லறை வர்த்தக நிறுவனமாக மாறியது.
- NTPC Green Energy Limited (NGEL) நிறுவனமானது, ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப் பட்டினத்திற்கு அருகிலுள்ள புடிமடகா பசுமை ஹைட்ரஜன் மையத்தில், இந்தியாவின் முதல் பெரிய அளவிலான பசுமை யூரியா உற்பத்தி அமைப்பை உருவாக்க உள்ளது.
- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், சென்னையில் உள்ள எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் தமிழ்நாட்டில் முதன் முறையாக அமைக்கப் பட்டுள்ள ஜெர்மானிய தத்துவஞானியும் பொதுவுடைமைத் தலைவருமான கார்ல் மார்க்ஸின் சிலையைத் திறந்து வைத்தார்.
- வ.உசிதம்பரனார் (VOC) துறைமுக ஆணையமானது, இந்தியாவில் ஆளில்லா விமான எதிர்ப்பு அமைப்பை நிறுவிய முதல் துறைமுகமாக மாறியுள்ளது.
- DRDO அமைப்பானது, ஒடிசா கடற்கரையில் அணுசக்தித் திறன் கொண்ட அக்னி-3 உந்துவிசை (ballistic) ஏவுகணையை (நிலத்திலிருந்து நிலத்தில் உள்ள இலக்கைத் தாக்கும் ஏவுகணை) வெற்றிகரமாக பரிசோதித்தது.
- ஜனவரி 30, 2026 நிலவரப்படி, இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு 723.8 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்து, இதுவரை இல்லாத புதிய உச்சத்தை எட்டியது..
- ஜிம்பாப்வேயின் ஹராரேயில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி இந்தியாவானது ஐசிசி 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் உலகக் கோப்பை 2026-ஐ வென்றது.
- புது டெல்லியில் நடைபெற்ற ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் 2026 போட்டியில், சாம்ராட் ராணா மற்றும் சுருச்சி சிங் ஆகியோர் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு அணிகள் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.
- ராஜஸ்தானின் அல்வார் மாவட்டம், "2047-க்குள் அனைவருக்கும் காப்பீடு" என்ற திட்டத்தின் கீழ் 100% காப்பீட்டுப் பாதுகாப்பை அடைந்த இந்தியாவின் முதல் மாவட்டமாக மாறியுள்ளது.
- இந்திய ரயில்வேயானது, இந்தியாவின் முதல் LNG-டீசல் இரட்டை எரிபொருள் DEMU (Diesel Electric Multiple Unit) ரயிலை அகமதாபாத்தில் உள்ள சபர்மதியில் அறிமுகப்படுத்தியது.
- இங்கிலாந்தின் மான்செஸ்டரைச் சேர்ந்த இரண்டு வயது ஜூட் ஓவன்ஸ், ஸ்னூக்கர் விளையாட்டில் பேங்க் ஷாட் மற்றும் டபுள்-பாட் ஷாட் ஆகியவற்றை அடித்த இளம் வீரர் என்ற இரண்டு கின்னஸ் உலக சாதனைகளைப் படைத்தார்.
- மத்தியத் தொழிலகப் பாதுகாப்புப் படையால் (CISF) ஏற்பாடு செய்யப்பட்ட வந்தே மாதரம் கடலோர சைக்கிளோத்தான்-2026 ஆனது, "வந்தே மாதரம்" தேசியப் பாடலின் 150 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில் ஆந்திரப் பிரதேசத்திற்குள் நுழைந்தது.
- மேஜர் ஜெனரல் பிபின் பக்சி (ஓய்வு), ஏர் மார்ஷல் ராஜேஷ் குமார் (ஓய்வு), தூதர் அனில் த்ரிகுனாயத் மற்றும் பிரிகேடியர் அகிலேஷ் பார்கவா (ஓய்வு) ஆகியோரால் எழுதப்பட்ட 'Red Lines Redrawn: Operation Sindoor and India's New Normal' என்ற புத்தகம், இந்தியாவின் சிந்தூர் நடவடிக்கை பற்றி விரிவாகக் கூறுகிறது.

- மேகாலயாவின் கிழக்கு ஜெயிந்தியா மலைப்பகுதியில் உள்ள ஒரு சட்ட விரோத எலித் துளை நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 18 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.
  - சுமார் 4-5 அடி ஆழமுள்ள குறுகிய சுரங்கப்பாதைகளைப் பயன்படுத்தி நிலக்கரியை வெட்டி எடுக்கும் எலித் துளை சுரங்க முறையை பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் அபாயங்கள் காரணமாக 2014-ஆம் ஆண்டில் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தால் தடை செய்யப்பட்டது.
- கர்நாடகாவின் கௌரிபிதனூரில், பெங்களூரின் FICCI மகளிர் அமைப்பால் (FLO) முதல் பெண்கள் தலைமையிலான தொழிற்பூங்கா திறந்து வைக்கப்பட்டது.
- அருண் ஐஸ்கிரீம்ஸ் நிறுவனம் ஹைதராபாத்தில் உலகின் மிகப்பெரிய ஐஸ்கிரீம் சமூக விருந்தை ஏற்பாடு செய்து கின்னஸ் உலக சாதனை படைத்தது.
- கோடக் மஹிந்திரா வங்கியானது, இந்தியாவில் முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப் பட்ட வெளிநாட்டு துறைசார் முதலீட்டாளர் (FPI) உரிமத்தை வழங்கிய முதல் வங்கியாக ஆனது.
- விமானப் போக்குவரத்துத் துறையில் நிலையான விமானப் போக்குவரத்து ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில், ஏர்பஸ் நிறுவனம் குஜராத்தின் வதோதராவில் உள்ள கதி சக்தி விஸ்வவித்யாலயாவில் (GSV) ஒரு சிறப்பு மையத்தைத் (CoE) திறந்து வைத்துள்ளது.
- சீனா, ஜியாங்சு மாகாணத்தில் உலகின் மிகப்பெரிய அழுத்தப்பட்ட காற்று ஆற்றல் சேமிப்பு (CAES) மின் நிலையத்தை இயக்கித் தொடங்கியுள்ளது என்ற நிலையில் இதன் சேமிப்புத் திறன் 2,400 மெகாவாட் மணிநேரம் மற்றும் மின் உற்பத்தித் திறன் 600 மெகாவாட் ஆகும்.
- ஒடிசா மாநில முதலமைச்சர், சம்பல்பூர் மாவட்டத்தில் உள்ள ஆதித்யா அலுமினியம் வளாகத்தில் இந்தியாவின் முதல் தட்டையான உருட்டப்பட்ட பொருட்கள் (FRP) அலுமினிய உற்பத்திப் பிரிவைத் திறந்து வைத்தார்.
- அருணாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த இந்திய மலையேற்ற வீரர் கபக் யானோ, அர்ஜென்டினாவில் உள்ள அகோன்காகுவா மலையின் சிகரத்தின உச்சியை வெற்றிகரமாக அடைந்தார்.
- பிராந்திய இணைப்புத் திட்டம் – உடே தேஷ் கா ஆம் நாக்ரிக் (RCS–UDAN) திட்டத்தின் கீழ், முன்னுரிமையற்ற பகுதிப் பிரிவில் உத்தரப் பிரதேசம் “மிகவும் முனைப்பான மாநிலம்” என்ற விருதைப் பெற்றது.
- ஜலந்தரில் நடைபெற்ற குரு ரவிதாஸின் பிறந்தநாள் விழாவின் போது, பஞ்சாபில் உள்ள ஆதம்பூர் விமான நிலையமானது, குரு ரவிதாஸ் ஜி மகாராஜ் ஜி விமான நிலையம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- ஹரியானாவைச் சேர்ந்த பேட்மிண்டன் வீராங்கனையான தேவிகா சிஹாக், தாய்லாந்து மாஸ்டர்ஸ் 2026 போட்டியில் தனது முதல் பேட்மிண்டன் உலகக் கூட்டமைப்பு (BWF) சூப்பர் 300 பட்டத்தை வென்றார்.
- வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) தலைமையிலான பங்கேற்புடன், இந்தியா முதல் முறையாக துபாயில் நடைபெற்ற Gulfood 2026 கண்காட்சியில் பங்காளர் நாடாகப் பங்கேற்றது.
- GPT-4o மற்றும் அது தொடர்புடைய மாதிரிகள் பிப்ரவரி 13, 2026 அன்று நிறுத்தப்படும் என்றும், GPT-5.2 புதிய தொழில்முறை அடிப்படையாக மாறும் என்றும் OpenAI அறிவித்து உள்ளது.

- இந்திய விமானப்படையின் பெச்சோரா தரையிலிருந்து வான் இலக்கை தாக்கும் ஏவுகணை அமைப்பானது, வான் பாதுகாப்புத் திறனை மேம்படுத்துவதற்காக முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளது.
    - பெச்சோரா என்பது 1970-களில் இந்திய விமானப்படையில் சேர்க்கப்பட்ட தரையிலிருந்து வான் இலக்கை தாக்கும் ஒரு ஏவுகணை அமைப்பாகும்.
- ஹைதராபாத் பேராயர் கார்டினல் பூலா அந்தோணி, இந்திய கத்தோலிக்க பிஷப்ஸ் மாநாட்டின் (CBCI) தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
    - இந்தியாவின் கிட்டத்தட்ட இரண்டு கோடி கத்தோலிக்கர்களை வழி நடத்தும் முதல் தலித் மதகுரு என்ற பெருமையை அவர் பெறுகிறார்.
- புது தில்லியில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு ஆசிய ரைபிள் மற்றும் பிஸ்டல் துப்பாக்கி சுடும் சாம்பியன்ஷிப் போட்டியில் மேகனா சஜ்ஜனார் தனிநபர் வெண்கலப் பதக்கம் வென்றார்.
- விமான நிலையப போக்குவரத்தில் உமிழ்வைக் குறைக்க வேண்டி பயணிகள் போக்குவரத்திற்காக ஹைட்ரஜன் மூலம் இயங்கும் பேருந்துகளை இயக்கும் இந்தியாவின் முதல் விமான நிலையமாக கேரளாவில் உள்ள கொச்சின் சர்வதேச விமான நிலையம் (CIAL) மாறவுள்ளது.
- சுற்றுலா, உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை ஊக்குவிப்பதற்காக, சம்பாவத் மாவட்டத்தில் உள்ள தனக்பூரில் சாரதா நதி வழித்தடத் திட்டத்திற்கு உத்தரகண்ட் முதல்வர் அடிக்கல் நாட்டினார்.
- நாகாலாந்தின் கோஹிமாவிற்கு அருகிலுள்ள ருசோமா கிராமத்தில் தோட்டக்கலை பயிர்கள் வழியேயான கிராமப்புற மேம்பாடு மற்றும் ஆரஞ்சு சாகுபடியை ஊக்குவிக்கும் 5வது ருசோமா ஆரஞ்சு விழா தொடங்கியது.
    - இந்த விழா " Abundance of Rüsoma" என்ற கருத்துருவின் கீழ் நடத்தப்படுகிறது.
- சால்டிசிடே குடும்பத்தைச் சேர்ந்த அரிய துள்ளும் சிலந்தியான கோலிட்டஸ் பிலினேட்டஸ், இந்தியாவில் முதன்முறையாக அசாமில் பதிவு செய்யப்பட்டது.
- குஜராத்தின் கட்ச் ரான் பகுதியில் உள்ள தோலாவிராவில் சந்திர-வாழ்விட சூழலை உருவகப்படுத்தும் ஆய்வில் கலந்து கொண்டதன் மூலம், 17 வயதான ஆதித்ய பாண்டியா இத்தகையத் திட்டத்தில் பங்குபெற்ற இந்தியாவின் இளம் விண்வெளி வீரராக மாறியுள்ளார்.
- Moltbook என்பது ஆக்டேன்ஏஐயின் தலைமை நிர்வாக அதிகாரி மேட் ஷ்லிச்ட் உருவாக்கிய AI-மட்டுமே அங்கம் வகிக்கும் சமூக வலைப்பின்னல் தளமாகும் என்ற நிலையில் இது செயற்கை நுண்ணறிவு (AI) முகவர்கள் மனிதத் தூண்டுதல்கள் அல்லது கட்டுப்பாடுகள் இல்லாமல் இடுகையிட, கருத்து தெரிவிக்க மற்றும் தொடர்பு கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- கேரளா மாநிலமானது, ஆக்கிரமிப்பு தாவர இனங்களைக் கண்டறிய செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் இயங்கும் கைபேசி செயலியான NeophyteID-யை அறிமுகப் படுத்தியது.
- பிரான்சில் நடைபெற்ற NIMES வில்வித்தைப் போட்டி 2026 இல், இந்திய வில்வித்தை வீரர் ஸ்மரன் சர்வேஷ் ரீகர்வ் 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார்.
- கேரள மாநிலத்தில் உரிமையியல் நீதிபதி ஜூனியர் பிரிவு ஆட்சேர்ப்புக்கான நீதித்துறை சேவையின் மாற்றுத்திறனாளி தகுதிப் பட்டியலில் முதலிடம் பிடித்த முதல் பார்வையற்ற பெண்மணியாக தன்யா நாதன் சி மாறியுள்ளார்.

- பார்வைக் குறைபாடுள்ள விண்ணப்பதாரர்களை நீதித் துறை சேவைக்கு தகுதி பெற அனுமதிக்கும் 2025 உச்ச நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து இந்தச் சாதனை எட்டப்பட்டுள்ளது.

❖ இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் (ICMR) கியாசனூர் வன நோய்க்கு (KFD) ஒரு தடுப்பூசியை உருவாக்கி வருகிறது.

- KFD என்பது KFD ஃபிளவிவைரஸால் ஏற்படும் வைரஸ் ரத்தக்கசிவு காய்ச்சலாகும் என்ற நிலையில் இது உண்ணி கடித்தல் அல்லது பாதிக்கப்பட்ட விலங்குகளுடன் தொடர்பு கொள்வதன் மூலம் பரவுகிறது.

❖ குளிர்கால ஒலிம்பிக் 2026 / மிலானோ கோர்டினா 2026 போட்டிகளானது பிப்ரவரி 2026 இல் இத்தாலியின் மிலன் மற்றும் கோர்டினா டி'ஆம்பெஸ்ஸோவில் நடைபெறும்.

❖ அமெரிக்காவின் வாஷிங்டனில் நடந்த ஸ்குவாஷ் ஆன் ஃபயர் ஓபன் 2026 இல் தனது முதல் தொழில்முறை ஸ்குவாஷ் சங்க PSA வெண்கலப் பட்டத்தை வென்ற பிறகு இந்திய ஸ்குவாஷ் வீராங்கனை அனாஹத் சிங் உலகின் முதல் 20 வீரர்கள் தரவரிசையில் நுழைந்தார்.

❖ கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் டிப்ளோசென்ட்ரம் பாப்பிலோசம் என்ற புதிய மந்தாரை இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர் என்ற நிலையில் இது தெற்கு மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வாழும் டிப்ளோசென்ட்ரம் இனத்தைச் சேர்ந்தது.

❖ இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், மாரடைப்பின் ஆரம்பக் கட்டங்களுடன் தொடர்புடைய ஒரு முக்கியமான இதய உயிரியக்கக் குறி காட்டியான மயோகுளோபினை விரைவாகக் கண்டறியும் திறன் கொண்ட ஒரு மிக நெகிழ்வான மற்றும் விலை மலிவான உயிரி-உணர்வியை உருவாக்கியுள்ளனர்.

- மையோகுளோபின் என்பது இதயத் தசைக் காயத்திற்குப் பிறகு வெளிவரும் ஆரம்பகால உயிரியக்கக் குறிகாட்டியாகும்.

❖ இந்தியாவில் சூப்பர்ஜெட்-100 (SJ-100) விமானங்களை தயாரிப்பதற்கான ஒப்பந்தத்தில் இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) மற்றும் ரஷ்யாவின் யுனைடெட் ஏர்கிராஃப்ட் கார்ப்பரேஷன் (UAC) ஆகியவை கையெழுத்திட்டுள்ளன.

❖ கண்புரை தொடர்பான பார்வையின்மையைக் குறைப்பதற்கான பங்களிப்புக்காக, புதுச்சேரியைச் சேர்ந்த மூத்த கண் மருத்துவர்கள் டாக்டர் ஹரிப்ரியா அரவிந்த் மற்றும் டாக்டர் ஆர். வெங்கடேஷ் ஆகியோர் சாங்-கிராண்டால் மனிதாபிமான விருது 2026 க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

❖ 2026 பிப்ரவரி 10–13 வரை ஜெர்மனியின் நியூரம்பெர்க்கில் நடைபெற்ற உலகின் மிகப் பெரிய கரிம வர்த்தக கண்காட்சியான BIOFACH 2026 இல் இந்தியா ஆண்டின் சிறந்த நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ நோக்கியா நிறுவனமானது தனது மிகப்பெரிய உலகளாவிய நிலையான நெட்வொர்க்குகள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வசதியை சென்னை சிறுசேரியில் உள்ள சிப்காட் பகுதியில் திறந்து வைத்துள்ளது.

❖ பாதுகாப்பான இணைய தினம் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி இரண்டாவது செவ்வாய்க் கிழமை (பிப்ரவரி 10) அனுசரிக்கப்படுகிறது.

- 2026 ஆம் ஆண்டின் கருத்துரு "Smart Tech, Safe Choices: Exploring the Safe and Responsible Use of Artificial Intelligence (AI)" என்பதாகும்.

- காவல் துறையில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக திருநெல்வேலி மாவட்ட காவல்துறை, "திருநெல்வேலி மாவட்ட காவல் செய்திகள்" என்ற வலையொலி (YouTube) சேனலைத் தொடங்கியது என்பதோடு இந்த மாநிலத்தில் இந்த வகையில் இதுவே முதல் முறை ஆகும்.
    - இதில் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் (POCSO) மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகள் குறித்து மாணவர்களுக்கு சிறப்புப் பதிவுகளும் உருவாக்கப்படும்.
- மும்பை கடற்கரை சாலையில், நரிமன் பாயிண்டிலிருந்து வொர்லி வரை வடக்கு நோக்கிச் செல்லும் பாதையில் இந்தியாவின் முதல் இசைச் சாலையை மும்பை கடற்கரை சாலை அறிமுகப்படுத்தியது.
- டெல்லி மெட்ரோ ரயிலின் மெஜந்தா பாதையானது, டெல்லி மெட்ரோ வலை எமைப்பின் மிக நீளமான வழித்தடமாக மாறவுள்ளது என்பதோடு இது சுமார் 89 கிலோ மீட்டர் நீளம் கொண்டதாக இருக்கும்.
- மக்கள் தொடர்பு ஊடகமாக வானொலியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்ட, உலக வானொலி தினம் பிப்ரவரி 13, 2026 அன்று உலகளவில் அனுசரிக்கப் பட்டது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு- “Radio and Artificial Intelligence: AI is a tool, not a voice” என்பதாகும்.
- ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் சமூக கண் மருத்துவம் மற்றும் பார்வையின்மையைத் தடுப்பதில் மூன்று தசாப்தங்களாக ஆற்றியப் பங்களிப்பிற்காக என கண் மருத்துவர் மோகன் ராஜன், 2026 ஆம் ஆண்டுக்கான பார்வையின்மைத் தடுப்புக்கான சிறந்த சேவை விருதைப் பெற்றார்.
- சத்தீஸ்கரில் யுனெஸ்கோவுடன் இணைந்து ஆகாஷ்வாணி ராய்ப்பூர் அமைப்பால் 2026 ஆம் ஆண்டு உலக வானொலி தின மாநாடு நடத்தப்பட்டது.
- இந்திய ராணுவம் முதன்முதலில் சர்வதேச Military Adventure Challenge Cup (IMACC ) 2026 என்ற நிகழ்வினை கிழக்கு இமயமலைப் பகுதியில் நடத்தவுள்ளது.
    - பூடான், பிரேசில், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், நேபாளம், இலங்கை மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ராணுவ அணிகள் இந்த நிகழ்வில் பங்கேற்கும்.
- இந்திய விமானப்படை (IAF), தாய்லாந்து விமானப்படை (RTAF) உடன் இணைந்து, இரு படைகளுக்கும் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு, செயல்பாட்டு ஒருங்கிணைப்பு மற்றும் இயங்குந் தன்மையை மேம்படுத்துவதற்காக ஒரு கூட்டு விமானப் பயிற்சியை நடத்தி வருகிறது.
- இந்தியாவின் அசாமில் முதல் நீருக்கடியில் இரட்டைக் குழல் வடிவ சாலை மற்றும் ரயில் சுரங்கப்பாதை திட்டத்திற்கு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
    - பிரம்மபுத்திரா நதியின் கீழ் கோப்பூர் (NH-15) மற்றும் நுமாலிகர் (NH-715) ஆகியவற்றை இணைக்கும் வகையில் இந்த சுரங்கப்பாதை அமைக்கப்படும்.
- மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக, WWF இந்தியா (இயற்கையான இந்தியாவிற்கான உலகளாவிய நிதியம்) உருவாக்கிய அதன் முதல் பல்லுயிர் மற்றும் கலாச்சார அம்ச வரைபடத்தை கோவா வெளியிட உள்ளது.
    - இந்த வரைபடம் பாரம்பரியக் கலை வடிவங்களையும், பறவைகள், பாலூட்டிகள், ஊர்வன, கடல் விலங்குகள், சதுப்புநிலங்கள் மற்றும் பூச்சிகள் உட்பட 48 பொதுவாகக் காணப்படும் உயிரினங்களையும் எடுத்துக்காட்டுகிறது

- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY), பிப்ரவரி 2026 இல் "அனைவருக்கும் யுவா AI" தேசிய AI எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ், கௌஷல் ரத் என்ற கைபேசி வழி செயற்கை நுண்ணறிவு (AI) விழிப்புணர்வு முயற்சியைத் தொடங்கியது
- மடகாஸ்கரில் உள்ள ஒரு முக்கியத் துறைமுக நகரமான டோமாசினா பகுதியில் கெசானி புயல் கரையைக் கடந்தது.
- 2026 ஆம் ஆண்டு BRICS தலைமையின் ஒரு பகுதியாக, இந்தியா முதல் BRICS ஷெர்பா மற்றும் துணை-ஷெர்பா கூட்டத்தை புது தில்லியில் நடத்தியது.
  - இந்தியாவின் தலைமைப் பொறுப்பின் கருத்துரு "Building for Resilience, Innovation, Cooperation and Sustainability" என்பதாகும்.
- அறிவுசார் துணிச்சல், பெரும் அறிவியல் சிந்தனை, ஆர்வம் மற்றும் உண்மைக்கான தேடலைக் கொண்டாடும் வகையில், சார்லஸ் டார்வினின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 12 அன்று டார்வின் தினம் அனுசரிக்கப் படுகிறது.
- இந்தியப் பிரதமர், அசாமின் திப்ருகரில் உள்ள மோரான் பைபாஸில் வடகிழக்கு இந்தியாவில் முதல் அவசரகாலத் தரையிறங்கும் தளத்தை (ELF) திறந்து வைத்தார்.
- புது தில்லியில் கல்வி அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பாரத் போதன் AI மாநாடு 2026, கல்வியறிவு, கற்பித்தல், நிர்வாகம் மற்றும் பன்மொழி கற்றல் உள்ளிட்ட பள்ளிக் கல்வியை மேம்படுத்த செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்துவதில் கவனம் செலுத்தியது.
- இந்தியாவின் முதல் தேசியப் பசு கலாச்சார அருங்காட்சியகம் உத்தரப் பிரதேச மாநிலம் மதுராவில் நிறுவப்படவுள்ளது.
- ஆந்திரப் பிரதேச சட்டமன்றம் 2026 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு (MLA) செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான டிஜிட்டல்வழி வருகைப்பதிவு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 10 மாத குழந்தையான ஆலின் ஷெரின் ஆபிரகாம், விபத்தில் இறந்த பிறகு, கேரளாவின் இளம் வயது உறுப்பு தானம் செய்தவராக மாறியுள்ளார்.
  - அவரது பெற்றோர்கள் அவரது உறுப்புகளை தானம் செய்து உயிர்களைக் காப்பாற்ற முடிவு செய்ததை அங்கீகரிக்கும் விதமாக, அவரது இறுதிச் சடங்கு அரசு மரியாதையுடன் நடைபெற்றது.
- அமெரிக்கா முதன்முறையாக ஒரு இராணுவ சரக்கு விமானத்தைப் பயன்படுத்தி ஒரு சிறு (Micro) அணு உலையை வெற்றிகரமாக விமானம் மூலம் கொண்டு சென்றது.
  - சிறு அணு உலைகள் என்பது சிறிய அளவிலான மேம்பட்ட அணுசக்தி அமைப்புகள் ஆகும் என்பதோடு, அவை பொதுவாக 10 மெகாவாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்கின்றன.
- FIDE (சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பு) அமைப்பு அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்த முதல் போட்டியான 2026 ஃப்ரீஸ்டைல் சதுரங்க உலகச் சாம்பியன்ஷிப்பை, அதன் இறுதிப் போட்டியில் ஃபேபியானோ கருவானாவை தோற்கடித்து மேக்னஸ் கார்ல்சன் வென்றார்.
- சுற்றுலாத் துறையைப் பாதிக்கும் நெருக்கடிகள் மற்றும் இடையூறுகளைக் கையாள மீள்தன்மை மற்றும் நீடித்த சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 17 அன்று உலக சுற்றுலா மீள்தன்மை தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Tourism Resilience in Action: From Crisis Response to Impactful Transformation" என்பதாகும்.

- 2026 குளிர்கால ஒலிம்பிக்கின் போது நடந்த மாபெரும் ஸ்லாலோம் பிரிவு ஆல்பைன் பனிச்சறுக்கு போட்டியில் பிரேசிலின் முதல் குளிர்கால ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தை லூகாஸ் பின்ஹெய்ரோ பிராத்தன் வென்றார்.
- ராஜஸ்தான் மாநிலத்தின் பாலைவன நகரமான ஜெய்சால்மர், நாட்டின் முதல் ஜெயின் சதர் மஹோத்சவத்தை 2026 மார்ச் 6 முதல் 8 வரை நடத்தவுள்ளது.
- "இணையத்தின் தாத்தா" என்று அழைக்கப்படும் டேவிட் ஜே. ஃபார்பர், டோக்கியோவில் தனது 91 வயதில் காலமானார்.
  - அமெரிக்க கணினி விஞ்ஞானியான இவர் ஆரம்பகால கணினி வலையமைப்பின் வளர்ச்சிக்கும் இணையத்தின் முன்னோடியான ARPANET இன் விரிவாக்கத்திற்கும் பங்களித்தார்.
- ரூ.261 கோடி மதிப்பிலான சர்வதேச விளையாட்டு நகரத்திற்கான அடிக்கல்லை சென்னையில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நாட்டினார்.
- பெங்களூருவை தளமாகக் கொண்ட சர்வம் AI, புது தில்லியில் நடைபெற்ற இந்தியா AI தாக்க உச்சி மாநாடு 2026 என்பதில் இரண்டு செயற்கை நுண்ணறிவு (AI) மொழி மாதிரிகளை வெளியிட்டது
  - ஒரு மாதிரி செயல்விளக்கத்தின் போது அதற்கு "விக்ரம்" என்று குறிப்பிடப்பட்டது, ஆனால் அதன் அதிகாரப்பூர்வ பெயர் இன்னும் அறிவிக்கப்படவில்லை.
- பாஷினி தேசிய மொழி உள்கட்டமைப்பில் நடைபெற்ற இந்திய AI தாக்க உச்சி மாநாடு 2026 இல் VoiceERA என்ற இலவச குரல் செயற்கை நுண்ணறிவு (AI) தொகுப்பை அறிமுகப் படுத்தியது.
  - VoiceERA என்பது பன்மொழிப் பேச்சுகளை புரிந்துகொள்ளும் மற்றும் உரையாடல் சேவைகளை ஆதரிக்கும் ஒரு முழுமையான குரல் AI செயல்படுத்தல் அமைப்பு ஆகும்.
- இந்தியாவின் முதல் இறையாண்மை ஜிகாவாட் அளவிலான செயற்கை நுண்ணறிவு (AI) தொழிற்சாலை உள்கட்டமைப்பை உருவாக்க லார்சன் & டூப்ரோ (L&T) NVIDIA உடன் கூட்டு சேர்ந்தது.
- ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் கோளாறு (ASD - ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் கோளாறு) என்பதின் ஒரு பகுதியாக இருக்கும் ஆஸ்பெர்கர் நோய்க்குறி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பிப்ரவரி 18 அன்று சர்வதேச ஆஸ்பெர்கர் நோய்க்குறி தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - ஆஸ்பெர்கர் நோய்க்குறி என்பது மக்கள் சாதாரண அல்லது உயர் நுண்ணறிவு கொண்டவர்களாக இருந்தாலும் சமூகத் தொடர்பு சிரமங்களை எதிர்கொள்ளும் ஒரு நரம்பியல் வளர்ச்சி நிலை கோளறாகும்.
- ஐஐடி மெட்ராஸ் குளோபல் ரிசர்ச் பவுண்டேஷன், ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் காமர்சிட்டியில் தனது முதல் பயன்பாட்டுச் செயற்கை நுண்ணறிவு (AI) புத்தாக்க மையத்தைத் தொடங்கியது.
- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA), தமிழ்நாட்டிலிருந்து கனடாவிற்கு 0.5 மெட்ரிக் டன் (MT) எடையுள்ள புவிசார் குறியீடு பெற்ற சேலம் ஜவ்வரிசியின் முதல் ஏற்றுமதியை மேற்கொண்டது.
- இந்தியாவின் புவிசார் குறியீடு பெற்ற தயாரிப்புகளை உலகளவில் " A World Exclusive " என்ற முழக்கத்தின் கீழ் ஊக்குவிப்பதற்காக, தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையானது (DPIIT) 'பாரத் GI' முன்னெடுப்பைத் தொடங்கி உள்ளது.

- இந்தியக் கடற்படை நடத்தும் பலதரப்பு கடற்படைப் பயிற்சியான Exercise MILAN-இன் 13வது பதிப்பு ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் தொடங்கப்பட்டது.
- கர்நாடகாவின் வேமகலில் H125 க்கான தனது முதல் தனியார் துறை ஹெலிகாப்டர் இறுதி அசெம்பிளி லைனை (FAL) இந்தியா தொடங்கியுள்ளது.
- ஆசியாவிலேயே முதல் முறையாக மத்தியப் பிரதேசத்தின் ஜபல்பூரில், ஆசிய-பசிபிக் பிராந்தியத்திற்கான சிறிய ஆயுதங்கள் மற்றும் இலகுரக ஆயுதங்கள் (SALW) கட்டுப்பாடு குறித்த ஐக்கிய நாடுகளின் தொடக்க பெல்லோஷிப் பயிற்சித் திட்டத்தை இந்தியா நடத்துகிறது.
- அசாம் மாநிலம் கோலாகாட்டில் மூங்கிலை மூலப்பொருளாகப் பயன்படுத்தும் உலகின் முதல் வணிக அளவிலான இரண்டாம் தலைமுறை (2G) உயிரி எத்தனால் ஆலையை பிரதமர் திறந்து வைத்தார்.
- பீகார் மாநில அமைச்சரவையானது சரண் மாவட்டத்தில் உள்ள சோனேபூரில் ஒரு புதிய சர்வதேச விமான நிலையத்தைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- மகாராஷ்டிராவின் வசாய் நகரில் உள்ள 475 ஆண்டுகள் பழமையான அருள் அன்னை கதீட்ரல், 2025 ஆம் ஆண்டுக்கான யுனெஸ்கோ ஆசிய-பசிபிக் கலாச்சாரப் பாரம்பரிய பாதுகாப்பு விருதுகளில் உயரிய நிலை விருதை வென்றுள்ளது.
- ஜப்பானின் கீழவையானது மகத்தான தேர்தல் வெற்றிக்குப் பிறகு சனே தகைச்சியை மீண்டும் பிரதமராக நியமித்தது என்ற நிலையில் இதன் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஜப்பானின் முதல் பெண் பிரதமராக மாறியுள்ளார்.
- எட்டு வயது ரன்வீர் சச்தேவா, இந்திய AI தாக்க உச்சி மாநாடு 2026 இல் உரையாற்றிய இளம் வயது பேச்சாளராக மாறியுள்ளார்.
- இந்தியாவின் டாடா குழுமம், நாட்டின் முதல் பெரிய அளவிலான AI தரவு மையத்தை உருவாக்க OpenAI உடன் கூட்டு சேர்ந்துள்ளது.
- நிதி ஆயோக்கின் கீழ் இயங்கும் அடல் புத்தாக்கத் திட்டம் (AIM), அடல் தொழிற்காப்பு மையங்களால் ஆதரிக்கப்படும் 30+ துறைகளில் 45 AI புத்தாக்க நிறுவனங்களை ஆவணப் படுத்தும் ஒரு காபி மேசைப் புத்தகமான AI-Preneurs of India ஐ அறிமுகப் படுத்தியது.
- தமிழ் மற்றும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் ஒப்பீட்டுச் சொற்பிறப்பியல் அகராதியின் நான்காவது தொகுதியை தமிழ்நாடு துணை முதல்வர் சென்னையில் வெளியிட்டார்.
    - நான்காவது தொகுதியானது, மேற்கத்திய இந்தோ-ஐரோப்பிய மொழிகளான லத்தீன், கிரேக்கம், ஜெர்மன், பிரஞ்சு, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதம், பாலி மற்றும் சிங்களம் போன்ற கிழக்கு மொழிகளில் 19 தமிழ் மூலச் சொற்களிலிருந்து சொற்களின் வரலாற்று வளர்ச்சியைக் காட்டுகிறது.
- உலகளாவிய AI அறிவுசார் பந்தய அறிக்கை 2026 ஆனது, செயற்கை நுண்ணறிவில் (AI) அமெரிக்காவை முதலிடத்திலும், சீனா (2வது) மற்றும் சிங்கப்பூர் (3வது) இடத்திலும் தரவரிசைப் படுத்துகிறது.
    - 6வது இடத்தில் உள்ள இந்தியாவானது, திறன்மிக்கோர் தயார்நிலையில் வலுவான நிலையில் உள்ள போதிலும் உள்கட்டமைப்பு மற்றும் நிர்வாகத்தில் பலவீனமாக உள்ளது.
- திபெத்தியப் புத்தாண்டையும் நெருப்பு குதிரை ஆண்டின் தொடக்கத்தையும் குறிக்கும் வகையில் லோசர் விழா 2026 பிப்ரவரி 18–20 வரை இமாச்சலப் பிரதேசத்தின் மெக்லியோட் கஞ்சில் கொண்டாடப்படுகிறது.

- சோமி தேசிய தினம் பிப்ரவரி 20, 2026 அன்று மணிப்பூரின் சூரசந்த்பூர் மாவட்டத்தில் கொண்டாடப் பட்டது என்பதோடு இது அதன் 78வது கொண்டாட்டத்தைக் குறிக்கிறது.
    - சோமி சமூகத்தின் ஒற்றுமை மற்றும் கலாச்சார அடையாளத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள இந்த நாள் சோமி தேசிய அமைப்பின் உருவாக்கத்தைக் குறிக்கும் வகையில் 1948 இல் முதன்முதலில் அனுசரிக்கப் பட்டது.
- பாலைவனப் போர் சூழல்களில் சுயமாக இயங்கும் K9 வஜ்ரா பீரங்கி அமைப்பின் செயல்பாட்டுத் தயார்நிலையை நிரூபிக்க, ராஜஸ்தானில் உள்ள பொக்ரான் துப்பாக்கிச் சூடு தளத்தில் இந்திய ராணுவம் Vajra Ghaat எனும் பயிற்சியை நடத்தியது.
- இந்தியாவும் பிரான்சும் பாதுகாப்பு, எரிசக்தி, முக்கியக் கனிமங்கள், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றில் 21 ஒப்பந்தங்கள் மற்றும் ஆவணங்களை பரிமாறிக் கொண்டதம் மூலம் அவற்றின் உறவை சிறப்பு உலகளாவிய மூலோபாய கூட்டாண்மையாக மேம்படுத்தின.
- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள 1,750 மெகாவாட் Demwe Lower Hydel திட்டத்திற்கு 2037 வரை 11 ஆண்டு சுற்றுச்சூழல் அனுமதி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.
    - லோஹித் ஆற்றில் அமையும் இந்தத் திட்டத்திற்கு முதலில் 2010 இல் சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டது;
- செயற்கை நுண்ணறிவு (AI), தானியங்குதன்மை, மருந்து கண்டுபிடிப்பு மற்றும் உயிரி மருந்தியல் மேம்பாட்டை மையமாகக் கொண்டு, சர்வதேச வாழ்க்கை அறிவியல் உச்சி மாநாடான BioAsia 2026 இன் 23வது பதிப்பு ஹைதராபாத்தில் தொடங்கியது.
    - இந்த உச்சிமாநாட்டின் கருத்துரு "TechBio Unleashed – Artificial Intelligence (AI), Automation, and Revolutionary Changes in Life Sciences" என்பதாகும்.
- பள்ளி மாணவர்களிடையே திரைமுன் செலவழிக்கும் நேரத்தைக் குறைத்து வாசிப்பை ஊக்குவிக்க கர்நாடக அரசு Mobile Bidi Pustaka Hidi எனும் பிரச்சாரத்தைத் தொடங்கவுள்ளது.
    - இந்தப் பிரச்சாரம் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை வளர்ப்பதையும், கவனம் செலுத்துதல் மற்றும் கல்வித் திறனை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மகாராஷ்டிராவின் பந்தாரா மாவட்டத்தைச் சேர்ந்த பேலா கிராமப் பஞ்சாயத்து, இந்தியாவின் முதல் நிகர-சுழிய உமிழ்வுப் பஞ்சாயத்தாக 2026 ஆம் ஆண்டு மும்பை காலநிலை வாரத்தில் காட்சிப்படுத்தப்பட்டது.
    - பேலா கிராம் அதன் காலநிலை முயற்சிகளுக்காக 2024 இல் Carbon Neutral Vishesh Panchayat Puraskar விருதைப் பெற்றது.
- தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் (NGT), உத்தரப் பிரதேச அரசாங்கத்திற்கு, அதிகாரப் பூர்வப் பதிவுகளில் சுவாவின் நிலையை "வடிகால்" என்பதிலிருந்து "நதி" என மாற்ற உத்தரவிட்டது.
    - சுவாவ் (சுவாவான் என்றும் அழைக்கப்படுகிறது) என்பது உத்தரப் பிரதேசத்தின் பல்ராம்பூர் மாவட்டத்தில் உள்ள ரப்தி ஆற்றின் துணை நதியாகும்.
- இந்தியக் கடற்படை தனது முதல் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட படைப் பிரிவு பயிற்சி கப்பல் (CTS) 'கிருஷ்ணா'வை சென்னை காட்டுப்பள்ளியில் உள்ள எல்&டி கப்பல் கட்டும் தளத்தில் அறிமுகப்படுத்தியது.

- குடியரசுத் துணைத்தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், அடல் பிஹாரி வாஜ்பாயிக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும், நாடாளுமன்ற உறுப்பினரிலிருந்து பிரதமர் வரையிலான அவரது பயணத்தை எடுத்துக் காட்டுவதற்காகவும், புது தில்லியில் Atal Bihari Vajpayee: The Eternal Statesman என்ற காபி மேசை புத்தகத்தை வெளியிட்டார்.
- இந்தியாவின் முன்னணி கியூ விளையாட்டு வீரரான பங்கஜ் அத்வானி, Liber Win Champions Cup 2026 ஐ வென்று Liber Win-க்கான இந்திய விளம்பர தூதராக நியமிக்கப் பட்டார்.
- Addverb நிறுவனமானது தளவாடங்கள் மற்றும் கிடங்குச் செயல்பாடுகளுக்காக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட சக்கரங்கல் கொண்ட மனித உருவ ரோபோவான Elixis-W ஐ LogiMAT India 2026 இல் அறிமுகப்படுத்தியது.
- உத்தரப்பிரதேசத்தில் உள்ள டெல்லி மற்றும் மீரட்டை இணைக்கும் டெல்லி-மீரட் வழித் தடத்தில் இந்தியாவின் முதல் நமோ பாரத் விரைவு ரயில் போக்குவரத்து அமைப்பை (RRTS - பிராந்திய விரைவு போக்குவரத்து அமைப்பு) இந்தியப் பிரதமர் திறந்து வைத்தார்.
    - இந்தியாவில் நமோ பாரத் மற்றும் மெட்ரோ ரயில்கள் ஒரே நிலையத்திலிருந்தும் ஒரே பாதையிலும் இயங்குவது இதுவே முதல் முறையாகும்.
- அமெரிக்க எரிசக்தித் துறை அதன் கதிர்வீச்சு பாதுகாப்பு விதிகளில் இருந்து As Low As Reasonably Achievable (ALARA) கொள்கையை நீக்கியுள்ளது.
    - ALARA-ஆனது பொறியியல் கட்டுப்பாடுகளைப் பெருமளவு பயன்படுத்தி அதன் தேவையற்ற வெளிப்பாட்டைக் குறைப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் பாதுகாப்புக் கலாச்சாரத்தை ஊக்குவிக்கிறது.
- 2026 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய AI தாக்க உச்சி மாநாட்டிற்குப் பிறகு, ஜெனீவாவில் (2027) மற்றும் 2028 ஆம் ஆண்டில் ஐக்கிய அரபு அமீரகத்தில் அடுத்த உலகளாவிய AI உச்சி மாநாடுகளுக்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டன.
- ராப் ஜெட்டன் தனது 38 வயதில் நெதர்லாந்தின் இளம் வயது பிரதமராக பதவியேற்று உள்ளார்.
- பி.வி.ஆர். சுப்பிரமணியம் தனது மூன்று ஆண்டு பதவிக் காலத்தை பிப்ரவரி 24, 2026 அன்று நிறைவு செய்ததை அடுத்து, நிதி ஆயோக்கின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக நிதி சிப்பர் கூடுதல் பொறுப்பேற்றுள்ளார்.
- இஸ்ரேலுக்கான இரண்டு நாள் பயணத்தின் போது, இஸ்ரேல் நாடாளுமன்றத்தின் நெசெட் பிளீனத்தில் (இஸ்ரேல் நாடாளுமன்றம்) உரையாற்றிய முதல் இந்தியப் பிரதமராக பிரதமர் நரேந்திர மோடி மாறியுள்ளார்.
- தேசிய குவாண்டம் திட்டத்தின் கீழ் இந்தியாவின் முதல் குவாண்டம் தொழில்நுட்ப வசதியை ஆந்திரப் பிரதேசத்தின் அமராவதி திறக்கவுள்ளது.
- துணைக் குடியரசுத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், இந்திய அரசியலமைப்பின் புதுப்பிக்கப் பட்ட தமிழ் மற்றும் குஜராத்தி பதிப்புகளை உபராஷ்டிரபதி பவனில் வெளியிட்டார்.
- இந்திய ராணுவமும் அமெரிக்க ராணுவமும் இணைந்து பிப்ரவரி 23 முதல் மார்ச் 15, 2026 வரை இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள பக்லோவில் 16வது வஜ்ர பிரஹார் பயிற்சியை நடத்துகின்றன.
- குஜராத்தின் வேராவலில் உள்ள இந்தியாவின் பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் (EEZ) மீன்பிடிக்கான அணுகல் அனுமதி உத்தரவை இந்திய அரசு அறிமுகப்படுத்தியது.

- NPCI அமைப்பானது, 'UPI One World' பணக்கோப்புச் சேவையை, இந்திய AI தாக்க உச்சி மாநாடு 2026 இல் கலந்து கொண்ட 40க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பார்வையாளர்களுக்கு விரிவுபடுத்தியது.
    - இந்த வசதி வெளிநாட்டுப் பயணிகள் இந்திய வங்கிக் கணக்கு இல்லாமல் UPI மூலம் வணிகர்களுக்கு பணம் செலுத்த அனுமதிக்கிறது.
- உலகிலேயே அதிக அளவில் குடை மிளகாயை (capsicum) உற்பத்தியை செய்யும் நாடாக சீனா உள்ளது.
    - இந்தியாவில், குறிப்பாக கோலார் மற்றும் பெங்களூரு கிராமப்புற மாவட்டங்களுடன் கர்நாடகா மிகப்பெரிய உற்பத்தியாளர்களில் ஒன்றாகும் என்ற நிலையில் இந்தியாவில் மகாராஷ்டிரா மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகியவை இதனை உற்பத்தி செய்யும் பிற முக்கிய மாநிலங்களில் ஒன்றாகும்.
- புழக்கத்தில் உள்ள தடுப்பூசியிலிருந்து பெறப்பட்ட போலியோ வைரஸ் வகை 2 (cVDPV2) ஐ எதிர்த்துப் போராட, உலக சுகாதார நிறுவனம் கூடுதலாக ஒரு புதிய வாய் வழி போலியோ சொட்டுமருந்து 2 (nOPV2) க்கு முதல்கட்ட அனுமதியளித்துள்ளது.
- ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி அதுல்யா மிஸ்ரா மற்றும் ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி அபய் குமார் சிங் ஆகியோரை தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் மாநிலத் தகவல் ஆணையர்களாக தமிழக அரசு நியமித்துள்ளது.
    - கடந்த ஆண்டு டிசம்பரில் மாநிலத் தகவல் ஆணையர்களின் எண்ணிக்கையை ஆறிலிருந்து எட்டாக மாநில அரசு உயர்த்தியது.
- நாகர்கோவிலில் சுதந்திரப் போராட்ட வீரரும் காங்கிரஸ் தலைவருமான பொன்னப்ப நாடார் சிலையை முதலமைச்சர் திறந்து வைத்தார்.
    - கன்னியாகுமரி மாவட்டத்தை தமிழ்நாட்டுடன் இணைப்பதில் மார்ஷல் நேசமணி உடன் இணைந்து அவர் ஆற்றியப் பங்கை இது அங்கீகரிக்கிறது.
- உலக அமைதி, அறநெறிசார் தலைமைத்துவம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 23 அன்று உலக அமைதி மற்றும் புரிதல் தினம் கொண்டாடப் படுகிறது என்பதோடு இது 1905 ஆம் ஆண்டு சிகாகோவில் நடைபெற்ற முதல் ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் கூட்டத்தைக் குறிக்கிறது.
- இந்தியக் கடற்படையானது சென்னை துறைமுகத்தில் INS Anjadip-ஐ செயல்பாட்டிற்கு கொண்டு வரவுள்ளது என்பதோடு, இது ஆழமற்றப் பகுதிகளில் செயல்படும் நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்க் கப்பல் (ASW-SWC) திட்டத்தின் கீழ் வரும் மூன்றாவது கப்பலாகும்.
    - கடலோர மற்றும் ஆழமற்ற பகுதிகளில் எதிரி நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறிந்து அழிப்பதால் இது " Dolphin Hunter " என்று அழைக்கப்படுகிறது.
- லைசோசோமால் சேமிப்பு கோளாறு நோய்க்கென அர்ப்பணிக்கப்பட்ட முதல் அரசு ஆதரவு பெற்ற தேசிய உயிரி வங்கியை இந்தியா நிறுவியது.
    - இவ்வகை கோளாறுகள் குறிப்பிட்ட நொதிகளின் குறைபாட்டால் ஏற்படும் மரபு வழி வளர்சிதை மாற்ற நோய்கள் ஆகும்.
- உலக அரசு சாரா தொண்டு நிறுவன தினம் 2026 பிப்ரவரி 27 அன்று உலக அரசு சாரா நிறுவனங்களின் (NGO) பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு " Restoring Dignity Through Inclusion " என்பதாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## தோழி விடுதிகள் மற்றும் கடலோரப் புனரமைப்பு

- 2025-26 ஆம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கை, தமிழ்நாட்டின் 'தோழி' பணி புரியும் பெண்களுக்கான விடுதிகளையும், தமிழ்நாடு கடலோரப் புனரமைப்புத் திட்டத்தையும் (TN-SHORE) மேற்கோள் காட்டியுள்ளது.
- தோழி விடுதிகளானது, தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் கழகத்தால் அரசு-தனியார் கூட்டாண்மை (PPP) மாதிரியின் கீழ் நடத்தப்படுகின்றன.
- தற்போது, 15 மாவட்டங்களில் உள்ள 19 தோழி விடுதிகள் சுமார் 1,824 பணிபுரியும் பெண்களுக்குப் பயனளிக்கின்றன என்பதோடு மேலும் ₹176.93 கோடி செலவில் 14 விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.
- தமிழ்நாட்டில் 14 மாவட்டங்களில் 1,069 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரை உள்ளது என்பதோடு இது மண் அரிப்பு, புயல் அலைகள் மற்றும் கடல் மட்ட உயர்வால் பாதிக்கப் படக் கூடியது.
- TN-SHORE என்பது கடலோரப் பல்லுயிர்ப் பெருக்கம், பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்காக உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல் படுத்தப் படும் ₹1,675 கோடி மதிப்பிலான ஒரு திட்டமாகும்.
- இந்தப் பொருளாதார ஆய்வில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் கிராமங்களைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது; கடலூர் மாவட்டத்தில் உள்ள கில்லை கிராமம் தமிழ்நாட்டின் அத்தகைய முதல் கிராமமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டின் அறிவுசார் நகரத் திட்டம்

- சென்னையில் நடைபெற்ற இந்தியா உலகளாவிய கல்வி உச்சி மாநாடு 2026ல், தமிழ்நாடு அரசு அறிவுசார் நகரத் திட்டம் மற்றும் பல சர்வதேச கல்விசார் ஒப்பந்தங்களை அறிவித்தது.
- திருவள்ளூர் மாவட்டத்தில் 872 ஏக்கர் பரப்பளவில் ஒரு ஒருங்கிணைந்த கல்வி-தொழில்துறை சூழல் அமைப்பாக அறிவு நகரம் திட்டமிடப்பட்டுள்ளது.
- இது உயர்கல்வி, ஆராய்ச்சி, மேம்பட்ட உற்பத்தி, தூய்மையான தொழில்நுட்பம் மற்றும் தொழில்முனைவோரை ஒன்றிணைக்கும்.
- திட்டத்தின் முதல் கட்டம் 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஒதுக்கீட்டிற்குத் தயாராகி விடும்.
- இந்தத் திட்டம் நீண்ட கால அடிப்படையில் 25,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு

- முதன்முறையாக, மெட்ராஸ் உயர் நீதிமன்றம் 'சூப்பர் லா கோர்ட்ஸ்' எனப்படும் செயற்கை நுண்ணறிவு (AI) உதவியுடன் இயங்கும் ஒரு வழிமுறை அமைப்பைப் பயன்படுத்த உள்ளது.

- இது, வழக்குகளை மிகவும் விரைவாக விசாரிப்பதற்கும், வழக்குகளை விரைந்து முடிப்பதற்கும், நீதி வழங்கும் அமைப்பில் நேரத்தையும் ஆற்றலையும் சேமிக்கும் நோக்கத்துடன், வழக்கு ஆவணங்களிலிருந்துத் தேவையான பல்வேறு தகவல்களை வடிகட்டுவதற்கும் ஆகும்.
- இந்த வழிமுறையானது, சட்ட வல்லுநர்கள் ஒரு குறிப்பிட்ட வழக்கிற்காகத் தன்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் உள்ள தகவல்களைக் கண்டறியவும், ஒழுங்கமைக்கவும், புரிந்து கொள்ளவும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- அதிக அளவிலான ஆவணங்களை கைமுறையாகத் தேடுவதிலும், குறுக்குச் சரி பார்ப்பு செய்வதிலும் உள்ள நேரத்தையும் உழைப்பையும் குறைக்கும் நோக்கில் இந்த வழிமுறை உருவாக்கப்பட்டது.
- இருப்பினும், இது சட்டப்பூர்வ பகுத்தறிவு, நீதித்துறைத் தீர்மானம் அல்லது ஒரு வழக்கறிஞரின் தொழில்முறைத் தீர்ப்பிற்கு மாற்றாக இருக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டதல்ல.
- சூப்பர்லா கோர்ட்ஸ், நீதிமன்ற நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படும் கட்டுப்பாடுகளுக்கு இணையான கட்டுப்பாடுகளின் கீழ் செயல்படுகிறது.
- சூப்பர்லா கோர்ட்ஸ் அந்த வழக்கிற்காக வழங்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே செயல்படுகிறது என்றும், அது வெளி ஆதாரங்கள், பொது அறிவு அல்லது பதிவேட்டிற்கு வெளியே உள்ள பொருட்களைக் கலந்தாலோசிப்பதில்லை என்றும் நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.
- பதிவேட்டில் தகவல்கள் கண்டறியக்கூடிய வடிவத்தில் இல்லை என்றால், வழங்கப் பட்ட ஆவணங்களில் அத்தகைய தகவல் காணப்படவில்லை என்று அந்த அமைப்பு தெரிவிக்கும்.
- ஆவணங்கள் சூப்பர்லா கோர்ட்ஸில் பதிவேற்றப்படும் போது, அது ஆதாரமற்றப் பதிலை உருவாக்காது.
- இந்த அமைப்பு, நீதித்துறை அறைகளில் உள்ள முத்திரை வைக்கப்பட்ட ஆவண அறைக்கு ஒத்த ஒரு பிரத்தியேக டிஜிட்டல் பணிச் சூழலை உருவாக்குகிறது என்பதோடு பின்னர் ஆவணங்கள் பயன்படுத்தக்கூடியவை என்பதை உறுதிப்படுத்த செயலாக்கப்படுகின்றன.
- ஸ்கேன் செய்யப்பட்ட அல்லது பட அடிப்படையிலான ஆவணங்கள், தேடக்கூடிய வகையில் ஒளியியல் எழுத்து அங்கீகாரம் (OCR) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தேடக் கூடிய உரையாக மாற்றப்படுகின்றன.
- செயற்கை நுண்ணறிவுப் பங்காளியின் பங்கு, மீட்டெடுக்கப்பட்ட பகுதிகளைத் தெளிவான மொழியில் மீண்டும் வெளிப்படுத்துவது அல்லது சுருக்கி வழங்குவதுடன் மட்டுமே வரம்பிடப்பட்டுள்ளது.
- அது புதிய உண்மைகளை அறிமுகப்படுத்தாது, யூகங்களை உருவாக்காது அல்லது சட்டப்பூர்வ பகுத்தறிவைப் பயன்படுத்தாது.
- மீட்டெடுக்கப்பட்ட பொருள் ஒரு பதிலுக்கு ஆதரவளிக்கவில்லை என்றால், அந்த அமைப்பு அதைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது.
- சூப்பர்லா கோர்ட்ஸ் ஒரு விதிவிலக்காக ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் எச்சரிக்கையான ஆவண உதவியாளராகச் செயல்படுகிறது.

## ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சிலை

- சென்னை, ஓமந்தூரார் அரசு வளாகத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில், சென்னை மாகாணத்தின் முன்னாள் பிரதமரான (முதலமைச்சர்) ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரின் சிலை நிறுவப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- அவர் 23 மார்ச் 1947 முதல் 6 ஏப்ரல் 1949 வரை சென்னை மாகாணத்தின் பிரதமராகப் பணியாற்றினார்.
- ராமசாமி ரெட்டியார் வள்ளலாரின் தீவிர பக்தர் ஆவார்.
- அவரது பதவிக் காலத்தில், 1947 ஆம் ஆண்டு சென்னை கோயில் நுழைவு அங்கீகாரச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- இந்தச் சட்டம், தலித்துகள் மற்றும் பிற தடை செய்யப்பட்ட இந்துக்களுக்கு இந்து கோயில்களில் நுழைவதற்கான முழுமையான உரிமைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.
- 1947 ஆம் ஆண்டு தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம், தேவதாசி முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.
- அவரது பதவிக்காலத்தில் தான் இந்தியா ஐக்கியப் பேரரசிடம் இருந்து சுதந்திரம் பெற்றது.
- 1948 ஆம் ஆண்டில், சென்னை அரசாங்கத்திற்குச் சொந்தமான முதல் விமானமான 'டி ஹேவிலாந்து டோவ்' விமானத்தை வாங்குவதற்கு அவர் உத்தரவிட்டார்.
- நாட்டில் முதன்முறையாக, அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 14.29% இட ஒதுக்கீட்டை அவர் அறிமுகப்படுத்தினார்.
- மேலும் அவரது பதவிக்காலத்தில் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கு 29% இட ஒதுக்கீடும் வழங்கப்பட்டது.
- விவசாயிகளுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்ட 1947 ஆம் ஆண்டு ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்தையும் அவர் மேற்பார்வையிட்டார்.

## 2026 மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கான அறிவிப்புகள்

- மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், மலைப் பாதைகள், ஆமைப் பாதைகள் மற்றும் பறவைகள் கண்காணிப்புப் பாதை ஆகியவற்றை மேம்படுத்துவதாக அறிவித்தார்.
- இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட் மற்றும் ஜம்மு காஷ்மீர், கிழக்குத் தொடர்ச்சி மலையில் உள்ள அரக்குப் பள்ளத்தாக்கு (ஆந்திரப் பிரதேசம்) மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள பொதிகை மலை (தமிழ்நாடு - கேரளா) ஆகிய இடங்களில் அரசாங்கம் சூழலியல் ரீதியாக நிலையான மலைப் பாதைகளை மேம்படுத்தும்.
- மேலும், ஒடிசா, கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களின் கடலோரப் பகுதிகளில் உள்ள முக்கிய முட்டையிடும் தளங்களில் ஆமைப் பாதைகள் அமைக்கப்படும் என்றும் அரசு அறிவித்தது.
- ஆந்திரப் பிரதேசம்-தமிழ்நாடு எல்லையில் உள்ள புலிகாட் ஏரியின் ஓரமாக ஒரு பறவைகள் கண்காணிப்புப் பாதை உருவாக்கப்படும்.

## தமிழ்நாட்டில் தொல்லியல் ஆய்வுகள்

- ❖ தொல்லியல் ஆய்வுகள் தமிழ்நாட்டின் செழுமையான மற்றும் பன்முக மரபை ஒரு பரந்த கண்ணோட்டத்தில் நிலை நிறுத்தியுள்ளன.
- ❖ இது இந்தியவியலாளரும், "தமிழ்: ஒரு சுயசரிதை" என்ற நூலின் ஆசிரியருமான டேவிட் ஷுல்மானின் வாதத்துடன் ஒத்துப் போகிறது.
- ❖ கீழடியில் கண்டெடுக்கப்பட்ட கண்டுபிடிப்புகள், அங்கு ஒரு காலத்தில் நகர்ப்புற மற்றும் தொழில்துறை நாகரிகம் செழித்து வளர்ந்ததைக் காட்டுகின்றன.
- ❖ அந்த இடத்தில் இருந்து மீட்கப்பட்ட கலைப்பொருட்களின் கார்பன் காலக் கணிப்பு, அவை கிமு 6 ஆம் நூற்றாண்டுக்கும் கிபி 1 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டவை என்று குறிப்பிடுகிறது.
- ❖ இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் சங்க காலப் பண்புகளையும், செங்கல் கட்டுமானங்களின் தொடர்ச்சியையும் வெளிப்படுத்தியுள்ளன.
- ❖ இங்கு படுகை அடுக்குகளில் இருந்து பெறப்பட்ட முடுக்கி நிறை நிறமாலையியல் (AMS) காலக்கணிப்புகள், கீழடியின் மக்கள் கிமு 6 ஆம் நூற்றாண்டிலேயே எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்தனர் என்றும், வைகை ஆற்றங்கரையில் ஒரு நகர்ப்புற நாகரிகத்தில் வாழ்ந்தனர் என்றும் காட்டுகின்றன.
- ❖ தமிழ்நாடு அரசும சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கொந்தகையில் கீழடியில் ஒரு திறந்தவெளி தொல்லியல் தள அருங்காட்சியகத்தை நிறுவியுள்ளது.
- ❖ இந்த அருங்காட்சியகத்தில் வைகை மற்றும் கீழடி; வேளாண்மை மற்றும் நீர் மேலாண்மை; மட்பாண்டத் தொழில்கள்; நெசவு மற்றும் மணிகள்; கடல் வர்த்தகம்; மற்றும் வாழ்க்கை முறை ஆகிய ஆறு கருப்பொருள் பிரிவுகளில், தகவல் பலகைகள் மற்றும் காட்சிப்படுத்தப்பட்ட தொல்லியல் கலைப் பொருட்களுடன் ஒழுங்கமைக்கப்பட்ட காட்சிக்கூடங்கள் இடம் பெற்றுள்ளன.
- ❖ இந்த அருங்காட்சியகத்தில் வைகை ஆற்றுப் படுகையில் சங்க கால நகர்ப்புறக் குடியிருப்பின் கட்டமைப்பு எச்சங்களும் கலாச்சார அடுக்குகளும் உள்ளன.
- ❖ அகழ்ந்தெடுக்கப்பட்ட அம்சங்களில் வரிசையாக அமைக்கப்பட்ட சுட்ட செங்கல் சுவர்கள், சாயமிடும் தொட்டிகளாக அடையாளம் காணப்பட்ட செவ்வக செங்கல் தொட்டிகள், சுடுமண் குழாய்கள் மற்றும் செங்கற்களால் செய்யப்பட்ட மூடப்பட்ட வடிகால் அமைப்பு மற்றும் நீர் மேலாண்மைக்காகப் பயன்படுத்தப்பட்ட சுடுமண் வளையக் கிணறுகள் ஆகியவை அடங்கும்.
- ❖ பொருநை அருங்காட்சியகம் சிவகளை, கொற்கை மற்றும் ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சிகளில் இருந்து பெறப்பட்ட கலைப்பொருட்களைக் காட்சிப்படுத்துகிறது.
- ❖ இது திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ரெட்டியார்பட்டியில் அமைந்துள்ளது.
- ❖ இது கப்பல் சிதைவுப் பொருட்கள், ஈயக் கட்டிகள் மற்றும் ரோமானிய மட்பாண்டங்கள் உள்ளிட்ட நீருக்கடியில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களையும் காட்சிப்படுத்துகிறது என்பதோடு இது ரோம், சீனா மற்றும் தென்கிழக்கு ஆசியாவுடனான பண்டைய வர்த்தகத் தொடர்புகளைச் சுட்டிக்காட்டுகிறது.
- ❖ அரியலூர் மாவட்டத்தில் உள்ள கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ள அருங்காட்சியகம், பேரரச சோழ வம்சத்தின் வரலாற்று மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும் காட்சிப்படுத்தவும் உருவாக்கப்பட்டு வருகிறது.

- இது யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளமான பிரகதீஸ்வரர் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ளது.
- கங்கைகொண்ட சோழபுரம் என்பது ராஜேந்திர சோழனால் வடதிசை வெற்றியைக் குறிக்கும் வகையில் நிறுவப்பட்ட ஒரு நகரமாகும்.
- அதன் கருப்பொருள் முதலாம் ராஜேந்திர சோழனின் பேரரசுப் பாரம்பரியம், கடல்வழி வர்த்தகம் மற்றும் இராஜதந்திரம் என்பதாகும்.
- இது மாளிகைமேட்டில் உள்ள அரச அரண்மனையின் செங்கல் எச்சங்கள், போர்க் கோப்பைகள், கல் சிற்பங்கள், கல்வெட்டுகள், கட்டிடக்கலைப் பகுதிகள் மற்றும் அப்பகுதியின் தொல்பொருள் கலைப்பொருட்களைக் காட்சிப்படுத்தும்.
- தஞ்சாவூரில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் மாபெரும் சோழர் அருங்காட்சியகத்தை நிறுவுவதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- இது சோழ வம்சத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தும்.
- இந்த அருங்காட்சியகத்தின் ஒரு முக்கிய அம்சமாக, சோழப் பேரரசர் முதலாம் இராஜராஜ சோழனின் 125 அடி உயரச் சிலை அமையவுள்ளது.
- நாவாய் அருங்காட்சியகம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மண்டபத்தில் அமையவுள்ளது.
- அழகன்குளத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருட்கள் இதன் கருப்பொருளாக இருக்கும்.
- நாவாய் என்பது பண்டைய தமிழில் ஒரு பெரிய கப்பலைக் குறிக்கும்.
- பிற்காலச் சோழர்களின் கடல் வெற்றி, சோழ மன்னர்களால் பின்பற்றப்பட்ட ஒரு நீடித்த கடற்படைக் கொள்கைக்குத் தெளிவான சான்றாக நிற்கிறது.
- சங்க காலத்தின் முற்காலச் சோழர்களும் இந்தியக் கடல்களில் கடல் வர்த்தகம் மற்றும் கடல்சார் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்கப் பங்கு வகித்தனர் என்று வரலாற்றாசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடுகிறார்.
- பாண்டியர்களும் கடல்சார் வணிகத்தில் சிறந்து விளங்கினர்.
- இதற்கான வரலாற்று அடிப்படை, அழகன்குளத்தில் இருந்து கிடைத்த விரிவான தொல்பொருள் கண்டுபிடிப்புகளில் உள்ளது.
- இது வைகை ஆறு மற்றும் வங்காள விரிகுடாவின் சங்கமத்தில் அமைந்துள்ள ஒரு பழங்காலத் துறைமுகமாகும்.
- கிமு 2 ஆம் நூற்றாண்டுக்கும் கிபி 5 ஆம் நூற்றாண்டுக்கும் இடையில், இந்தத் துறைமுகம் தென்னிந்தியாவை ரோம், எகிப்து மற்றும் தென்கிழக்கு ஆசியாவுடன் இணைக்கும் ஒரு முக்கியப் பாண்டிய வர்த்தக மையமாகச் செயல்பட்டது.
- மிகவும் குறிப்பிடத்தக்க காட்சிப் பொருட்களில் ஒன்றாக மூன்று பாய்மரக் கப்பலின் செதுக்கப்பட்ட உருவத்தைக் கொண்ட ஒரு அரிய மட்பாண்ட ஓடான 'கப்பல் கீறல் சித்திரம்' இருக்கும் என்பதோடு இது மேம்பட்ட கடல்சார் மரபுகளுக்குப் பொருள்சார் சான்றுகளை வழங்குகிறது.
- ரோமானிய ஆம்போராக்கள், அரெட்டைன் மட்பாண்டங்கள் மற்றும் சிலுவை பொறிக்கப்பட்ட முத்திரை உட்பட, அந்தத் தளத்திலிருந்து மீட்கப்பட்ட 13,000-க்கும் மேற்பட்ட பழம்பொருட்கள், தொலைதூரத் தொடர்புகளைக் கொண்ட ஒரு பன்னாட்டு வர்த்தகக் குடியிருப்பைச் சுட்டிக் காட்டுகின்றன.

- நொய்யல் அருங்காட்சியகம் ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெருந்துறையில் அமைந்துள்ளது.
- கொடுமணலில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருட்கள் இதன் கருப்பொருளாக இருக்கும்.
- சங்க இலக்கியமான பதிற்றுப்பத்தில் கொடுமணல், கொடுமனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- நொய்யல் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள கொடுமணல், கிமு 5 ஆம் நூற்றாண்டுக்கும் கிபி 3 ஆம் நூற்றாண்டுக்கும் இடையில் ஒரு பல்துறைத் தொழில்கள் கொண்ட குடியிருப்பாகச் செயல்பட்டது. இந்தத் தளம், பெரில், கார்னிலியன், அகேட், குவார்ட்ஸ், லாபிஸ் லாசுலி மற்றும் சபையர் கற்களால் செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான மணிகளுடன், விலை மதிப்பற்ற கற்களால் ஆன மணிகள் தயாரிப்பதற்கான ஒரு முக்கிய மையமாக இருந்தது.
- பெரில் கல் அருகிலுள்ள படியூரிலிருந்து உள்ளூரிலேயே பெறப்பட்டாலும், லாபிஸ் லாசுலி என்பது ஆப்கானிஸ்தானில் இருந்து கொண்டு வரப்பட்டது என்பதோடு இது விரிவான நீண்ட தூர வர்த்தக வலைப்பின்னல்களைச் சுட்டிக்காட்டுகிறது.
- தமிழ்நாட்டிலேயே தமிழ்-பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளின் மிகப்பெரிய தொகுப்புகளில் ஒன்றையும் கொடுமணல் தளம் வழங்கியுள்ளது.
- கூடுதலாக, இந்த அருங்காட்சியகம், கார்னிலியன் மணிகள் மற்றும் இரும்பு வாள்கள் போன்ற மதிப்புமிக்க ஈமப்பொருட்களுடன் கூடிய நெடுங்கற்கள் மற்றும் கற்பதுகைக் கல்லறைகள் உள்ளிட்ட இப்பகுதியின் பெருங்கற்காலப் புதைகுழிக் கலாச்சாரத்தை காட்சிப்படுத்தும்.
- பண்டைய இலக்கியங்களில் திருக்கடல்மல்லை என்று அறியப்படும், தமிழ்நாட்டின் பழமையான துறைமுக நகரமான மாமல்லபுரம், பல நூற்றாண்டுகளாக கடல்சார் வலிமையின் சக்திவாய்ந்த சின்னமாகத் திகழ்கிறது.
- சங்க காலம் முதல் செழித்து வளர்ந்து, கி.பி. 6 மற்றும் 9 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் பல்லவர்களின் ஆட்சிக்காலத்தில் அதன் கட்டிடக்கலை உச்சத்தை அடைந்த இந்த நகரம், வர்த்தகம் மற்றும் பயணத்திற்கான மையமாக மட்டுமல்லாமல், தமிழ் பிராந்தியத்தை இலங்கை, தென்கிழக்கு ஆசியா மற்றும் அதற்கு அப்பால் உள்ள தொலைதூர நாகரிகங்களுடன் இணைக்கும் ஒரு முக்கியப் பாலமாகவும் செயல்பட்டது.
- இந்த அருங்காட்சியகம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான கிழக்கு கடற்கரைச் சாலையில் (ECR) உள்ள பீச் ரிசார்ட் வளாகத்தில் அமைக்கப்படும்.
- தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அதியமான் கோட்டையில், நடுகற்களை மையக் கருத்தாகக் கொண்டு தர்மபுரி அருங்காட்சியகத்தை அமைக்க மாநில அரசு முன்மொழிந்துள்ளது.
- இந்த நடுகல், பண்டையத் தமிழ் சமூகங்களின் சமூக, வரலாற்று மற்றும் கலைப் பழக்கவழக்கங்கள் குறித்த நுண்ணறிவை வழங்கும் ஒரு முக்கியமான தொல்பொருள் கலைப்பொருளாகும்.
- தென்காசி மாவட்டத்தில் உள்ள குற்றாலத்தில் கட்டப்பட்டு வரும் குற்றாலம் அருங்காட்சியகத்தில், திருமலபுரம் மற்றும் ராஜகால்மங்கலம் ஆகிய இடங்களில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருட்கள் இடம் பெறும்.
- திருவண்ணாமலையில் உள்ள தமிழ் கலாச்சார அருங்காட்சியகம் மற்றும் சென்னையில் எழும்பூரில் உள்ள சிந்துவெளி கலைக்கூடம் அருங்காட்சியகம் ஆகியவை முன்மொழியப்பட்ட இதர மற்ற அருங்காட்சியகங்களில் அடங்கும்.

## தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி - 1976

- 50 ஆண்டுகளுக்கு முன்பு, 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 ஆம் தேதி, தமிழ்நாட்டு அரசாங்கம் வரலாற்றில் முதல் முறையாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பின் 356வது சரத்தின் கீழ் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது.
- அப்போதைய அரசாங்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் (திமுக) சேர்ந்த முதலமைச்சர் மு. கருணாநிதி தலைமையில் இயங்கியது.
- மாநில அரசாங்கத்தால் இனி அரசியலமைப்பின்படி செயல்பட முடியாது என்று ஆளுநர் கே. கே. ஷா அளித்த அறிக்கையைத் தொடர்ந்து இந்த பதவி நீக்கம் நிகழ்ந்தது.
- 1976 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் தேதி முடிவடையவிருந்த அதன் ஐந்தாண்டு பதவிக் காலத்தை முடிப்பதற்கு முன்பே, தமிழ்நாடு சட்டமன்றம் கலைக்கப்பட்டது.
- திமுக அரசாங்கத்தின் நிர்வாகச் சீர்கேடுகள், ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகச் செயல்கள் குறித்து ஆளுநர் அறிக்கை அளித்தார்.
- அதிக சுயாட்சி கோரும் போர்வையில் பிரிவினைவாத நடவடிக்கைகளை ஊக்குவித்ததாக அந்த அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டப்பட்டது.
- 14 நாட்களுக்குக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஊர்வலங்களுக்குத் தடை விதித்து சென்னையில் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.
- அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (அதிமுக) தலைவர் எம். ஜி. ராமச்சந்திரன் இந்தப் பதவி நீக்கத்தை ஆதரித்ததுடன், ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை ஆணையம் அமைக்க வேண்டும் என்றும் கோரினார்.
- கருணாநிதி மற்றும் சில திமுக அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க, உச்ச நீதிமன்ற நீதிபதி ஆர். எஸ். சர்க்காரியாவை ஒரு நபர் விசாரணை ஆணையமாக மத்திய அரசு நியமித்தது.
- மாநிலத்தை நிர்வகிக்க ஆளுநருக்கு உதவுவதற்காக, பி. கே. தவே மற்றும் ஆர். வி. சுப்பிரமணியன் ஆகிய இரண்டு மத்திய அரசு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டனர்.
- குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டதன் மூலம் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை மீட்டெடுத்து, முறையான நிர்வாகத்தை உறுதிப்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கப் பட்டது.

## நிதி நிலையறிக்கை 2026 - ஆதிச்சநல்லூர் தொல்லியல் தளம்

- மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், நாடு முழுவதும் உள்ள 15 தொல்லியல் தளங்களை துடிப்பான மற்றும் அனுபவமிக்க கலாச்சாரத் தலங்களாக மேம்படுத்த முன்மொழிந்தார்.
- இதில் லோதல், தோலாவிரா, ராக்கிகர்கி, ஆதிச்சநல்லூர், சாரநாத், ஹஸ்தினாபுரம் மற்றும் லே அரண்மனை ஆகியவை அடங்கும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட தளங்களில், ஹரியானாவில் உள்ள ராக்கிகர்கி மற்றும் குஜராத்தில் உள்ள தோலாவிரா மற்றும் லோத்தல் போன்ற சிந்து சமவெளி நாகரிக (IVC) தளங்களும் அடங்கும்.

- மேலும், சாரநாத் மற்றும் ஹஸ்தினாபுரம் போன்ற உத்தரப் பிரதேசத்தில் உள்ள பௌத்த தளங்களும் இதில் அடங்கும்.
- இந்தியாவின் பழமையான தொல்லியல் தளங்களில் ஒன்றான ஆதிச்சநல்லூர், தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.
- இது ஆரம்பகால இரும்புக்கால வாழ்க்கை மற்றும் பண்டைய தமிழ் நாகரிகம் பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது.
- இந்தியத் தொல்லியல் துறை (ASI) அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட பகுதி முழுவதும் நடந்து செல்லும் சரிவுப் பாதைகளை நிறுவிய முதல் தளம் இதுவாகும்.
- ஆதிச்சநல்லூர் அதன் ஈமத்தாழிகளுக்காக மிகவும் அறியப்படுகிறது என்ற நிலையில் இவை இறந்தவர்களைப் புதைக்கப் பயன்படுத்தப்பட்ட பெரிய களிமண் பானைகள் ஆகும் என்பதோடு இவற்றுடன் இரும்புக் கருவிகள், ஆபரணங்கள் மற்றும் மட்பாண்டங்களும் வைக்கப்பட்டிருக்கும்.
- இந்த ஈமத்தாழிகள் முதன்முதலில் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரிட்டிஷ் தொல்லியல் ஆய்வாளர் அலெக்சாண்டர் ரீ என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டன.

## பெண்ணையாறு நதிநீர்ப் பிரச்சினைக்கான தீர்ப்பாயம்

- தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலங்களுக்கு இடையே உள்ள பெண்ணையாறு நதி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு தீர்ப்பாயத்தை அமைக்க மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பிரச்சினைகள் தீர்ப்பாயத்தை அமைப்பதற்கான அறிவிப்பை ஒரு மாதத்திற்குள் வெளியிட வேண்டும் என்று மத்திய அரசுக்கு அது உத்தரவிட்டது.
- மாநிலங்களுக்கு இடையேயான ஒரு நதியின் நீர் ஓட்டம் ஒரு தேசியச் சொத்து என்றும், எந்த ஒரு மாநிலமும் அதன் நீரின் மீது பிரத்தியேக உரிமையைக் கோர முடியாது என்றும் தமிழ்நாடு இங்கு வாதிட்டது.
- நதிநீர் தொடர்பான 1892 ஆம் ஆண்டு ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு "செல்லுபடியாகும் மற்றும் கட்டுப்படுத்தும் தன்மை கொண்டது" என்றும் இந்த மாநிலம் கூறியது.
- ஒரு நதி என்பது, அதில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நீரை வழங்கும் நீரோடை, துணை நதிகள் மற்றும் பிற நீர்வழிகளையும் உள்ளடக்கியது என்றும் இந்த மாநிலம் கூறியது.
- கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களிலும் நீர்ப்பிடிப்புப் பகுதியைக் கொண்ட முக்கிய துணை நதியான மார்க்கண்டேய நதியை, அந்த ஒப்பந்தத்தின் வரம்பிற்கு அப்பாற்பட்டதாகக் கருத முடியாது.
- தென்பெண்ணை ஆறு தமிழில் தென்பெண்ணை அல்லது பொன்னையாறு அல்லது பெண்ணையாறு என்று அழைக்கப் படுகிறது.
- 497 கி. மீ நீளமுள்ள இது, காவேரிக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டின் இரண்டாவது நீளமான நதியாகும்.
- இந்த நதி கர்நாடகாவின் சிக்கபல்லாப்பூர் மாவட்டத்தில் உள்ள நந்தி மலையில் உருவாகி, தமிழ்நாட்டின் வழியாகப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

- இந்த நதியின் மீது கட்டப்பட்டுள்ள மிகப்பெரிய அணை திருவண்ணாமலைக்கு அருகிலுள்ள சாத்தனூர் அணை ஆகும்.
- இது ஒரு டெல்டாவாகப் பிரிகிறது என்ற நிலையில் அதன் மீது கடலூர் நகரம் அமைந்துள்ளது.

## தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு 2026

- சென்னையில் நடைபெற்ற 2026 தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாட்டில், 2027 ஜனவரியில் தமிழ்குறித்த பெரிய அளவிலான சர்வதேச சமகால கலைக் கண்காட்சி நடைபெறும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.
- மாநில அரசு ₹22,794 கோடி மதிப்புள்ள 127 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது என்ற நிலையில் இதன் மூலம் சுமார் 65,937 வேலைவாய்ப்புகள் உருவாக்கப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மாமல்லபுரத்தில் உலகத் தரம் வாய்ந்த சுற்றுலா உள்கட்டமைப்பை உருவாக்க, ₹100 கோடி மதிப்பீட்டில் ஒரு சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையம் அமைக்கப்படும்.
- சிறப்பு உவகைக் கோட்டங்கள், தங்குமிட வசதிகள், முகாமிடும் தளங்கள் மற்றும் இயற்கை சார்ந்த ஓய்வு விடுதிகளை மேம்படுத்துவதற்காக தமிழ்நாட்டின் 31 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு சுற்றுலா கொள்கை 2023-இன் கீழ், தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகமானது (சிப்காட்) கன்னியாகுமரி, கள்ளக்குறிச்சி, ஈரோடு மற்றும் தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து, அங்கு வசதிகளை மேம்படுத்தும்.
- கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழ்நாடு சுற்றுலாத்துறையில் ₹612.18 கோடி முதலீடு செய்து, 128.97 கோடி உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளையும் 45 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளையும் ஈர்த்துள்ளது.

## தமிழ்நாடு மற்றும் மத்திய பட்ஜெட் 2026

- 16வது நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி, பகிரப்படக் கூடிய மத்திய வரிகளின் நிகர வருவாயில் 4.097 சதவீதத்தைத் தமிழ்நாடு பெறும்.
- இது ஏப்ரல் 1, 2026 முதல் நடைமுறைக்கு வரும்.
- 15வது நிதிக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட பகிரப்படக் கூடிய மத்திய வரிகளின் நிகர வருவாயில் 4.079 சதவீதத்துடன் ஒப்பிடும்போது இது சற்றே அதிகமாகும்.
- இதனால், இது 0.44% அதிகரிப்பு விகிதத்தைக் கொண்டுள்ளது.
- 2026-27 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் மதிப்பீட்டின்படி, பகிரப்படக் கூடிய மத்திய வரிகளின் நிகர வருவாயாக தமிழ்நாடு ₹62,530.65 கோடி பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இது 2025-26 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடான ₹56,819.23 கோடியை விட அதிகமாகும்.
- தமிழ்நாட்டைத் தொடர்ந்து தெலுங்கானா 3.43% வளர்ச்சியுடன் இரண்டாவது இடத்திலும், ஆந்திரப் பிரதேசம் 4.2% வளர்ச்சியுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

- கர்நாடகா மற்றும் கேரளா மட்டுமே 13.27% மற்றும் 23.74% என்ற அளவில் இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தைக் கண்டுள்ளன.
- அகில இந்திய அளவில், கேரளாவின் வளர்ச்சி விகிதம் ஹரியானாவின் 24.52%க்கு அடுத்தபடியாக மட்டுமே உள்ளது அதே நேரத்தில் மூன்றாவது இடம் கர்நாடகாவிற்கு செல்கிறது.
- பரப்பளவு, மக்கள்தொகை செயல்திறன் மற்றும் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி) ஆகியவற்றின் அளவுகோல்களுக்கு ஒதுக்கப்பட்ட மதிப்பீடுகள் தமிழ்நாடு மற்றும் கேரளா போன்ற மாநிலங்களைப் பாதிப்பதைக் குறைத்துள்ளன.
- மக்கள்தொகை அளவுகோல் மட்டுமே அதன் மதிப்பீட்டில் 15% இலிருந்து 17.5% ஆக அதிகரிப்பைக் கண்டுள்ளது.
- இருப்பினும், தமிழ்நாடு மற்றும் கேரளா உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கு இது பயனளிக்காது.
- தெற்கிற்கான செங்குத்து அதிகாரப் பகிர்வில் அதிகரிப்பு, மேற்கு வங்கத்தைத் தவிர உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் பீகார் போன்ற ஆறு வட மாநிலங்களின் பங்கைக் குறைப்பதன் மூலம் அடையப் பட்டதாகத் தெரிகிறது.
- 51.20% ஆக இருந்த அந்த ஏழு மாநிலங்களின் ஒருங்கிணைந்தப் பங்கு 49.93% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
- 16வது நிதிக்குழு மானியங்கள் என்ற விவகாரத்தை விரிவாகக் கையாண்டுள்ளது என்றதோடு இந்த விஷயத்தில் தெற்கு ஒரு முன்னோடியாக இருந்து வருகிறது.
- 2023 24 ஆம் ஆண்டில் ₹78,453 கோடியுடன், தமிழ்நாடு அதிகபட்ச முழுமையான மானிய அளவைப் பெற்றது.
- அதைத் தொடர்ந்து கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா முறையே ₹70,149 கோடி, ₹63,951 கோடி மற்றும் ₹62,847 கோடியுடன் உள்ளன.
- மாநிலத்தின் அளவைக் கருத்தில் கொண்டு முழுமையான மானிய அளவுகள் "ஓரளவு தவறாக வழி நடத்தும்" என்று நிதிக்குழு சுட்டிக் காட்டுகிறது.
- 2024-26 காலக் கட்டத்தில் மானிய அளவுகள், அந்தந்த மாநிலத்தின் GSDP விகிதத்தில் 5% ஐத் தாண்டிய மாநிலங்களில் ஒன்றாக தெலுங்கானாவையும், ஆந்திரப் பிரதேசம் 3% முதல் 5% வரை மானிய அளவைக் கொண்டிருந்த மாநிலமாகவும் ஆணையம் பெயரிடுகிறது.
- தென் மாநிலங்கள் பல விஷயங்களில் இதே போன்ற நிலைப்பாட்டை எடுத்திருந்தாலும், வருவாய் இடைவெளியைக் குறைப்பதற்கான நோக்கதத்தினைக் கொண்டுள்ள வருவாய்ப் பற்றாக்குறை மானியங்கள் தொடர்பாக அவை தங்களுக்குள் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தன.
- கர்நாடகா இதில் சந்தேகம் தெரிவித்தாலும், ஆந்திரா, கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகியவை இந்த மானியங்களைத் தொடர விரும்பின.
- இருப்பினும், 16வது நிதிக் குழுவின் பரிந்துரை இந்த மானியங்களுக்கு எதிரானது.
- பகிரக் கூடிய நிதியிலிருந்து மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதிப் பகிர்வின் செங்குத்துப் பங்கில் 41 சதவீதத்தில் மத்திய அரசு தற்போதைய நிலையையே நீட்டித்துள்ளது.

## தமிழகத் திட்டங்கள் குறித்த பொருளாதார ஆய்வு

- தொழிலாளர்களுக்கான தமிழ்நாட்டின் 'தோழி' விடுதிகளை பொருளாதார ஆய்வு அறிக்கை சுட்டிக் காட்டியது.
- 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதிகள், உழைக்கும் பெண்களுக்கு மலிவு விலையில் தாங்கும் வசதிகளை வழங்குகின்றன.
- இந்த விடுதிகள் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் கழகத்தால் பொது-தனியார் கூட்டாண்மை மூலம் நடத்தப்படுகின்றன.
- இவை பாலினத்திற்குப் பொருந்தும் வடிவமைப்பு, அலங்கார அறைகள், குழந்தைப் பராமரிப்பு மையங்கள், சமையலறைகள் மற்றும் பகிரப்பட்ட இடம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.
- பெண் பணியாளர்களை விரிவுபடுத்த விரும்பும் மாநிலங்களுக்கு அவை ஒரு நடைமுறை வரைபடத்தை வழங்குகின்றன.
- பெண் தொழிலாளர் வளத்தைப் பொறுத்தவரை தமிழ்நாடு இந்தியாவில் முன்னணி மாநிலமாகும்.
- நாட்டின் பதிவு செய்யப்பட்ட பெண் தொழிலாளர்களில் 40%க்கும் அதிகமானோர் இந்த மாநிலத்தில் உற்பத்தித் துறையில் உள்ளனர்.
- இது தோராயமாக 43-47% பெண் தொழிலாளர் படை பங்கேற்பு விகிதத்தைக் கொண்டுள்ளது.
- இது வரை, 15 மாவட்டங்களில் அதிநவீன வசதிகளுடன் கூடிய 19 'தோழி' விடுதிகள் நிறுவப் பட்டுள்ளன.
- கடற்கரை அரிப்பு, புயல் அலைகள் மற்றும் கடல் மட்ட உயர்வு ஆகியவற்றால் பாதிக்கப்படக்கூடிய 14 மாவட்டங்களில் 1,069 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரையைத் தமிழ்நாடு கொண்டுள்ளது என்று கணக்கெடுப்பு குறிப்பிடுகிறது.
- தமிழ்நாடு கடலோர மறுசீரமைப்பு இயக்கம் (TN-SHORE) கடலோரப் பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல், வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் மாசுபாட்டைக் குறைத்தல் ஆகியவற்றிற்குப் பன்முக அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது.
- TN-SHORE என்பது உலக வங்கியின் ₹1,675 கோடி நிதியளிக்கப்பட்ட திட்டமாகும்.
- மொத்த முதலீட்டில், சுமார் ₹1,000 கோடி உலக வங்கியிலிருந்து வரும் என்ற நிலையில் மீதமுள்ள தொகையை மாநிலம் இந்த பங்களிக்கும்.
- தமிழ்நாடு மற்றும் வேறு சில மாநிலங்களில் எடுக்கப்பட்ட ஒரு முன்முயற்சியான கால நிலை மீள் கிராமங்களையும் இந்த கணக்கெடுப்பு எடுத்துக்காட்டுகிறது.
- தமிழ்நாட்டில், தனது பரந்த சதுப்புநிலக் காடுகளுக்கு பெயர் பெற்ற கடலூர் மாவட்டத்தில் பிச்சாவரம் அருகே உள்ள கிள்ளை என்பது முதல் காலநிலை மீள் கிராமமாகும்.
- நிலைத்தன்மை நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் தங்கள் வணிகச் சூழலை மேம்படுத்திய சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.
- வணிகச் சீர்திருத்தச் செயல் திட்டத்தின் மூலம் சுற்றுச்சூழல் அனுமதிக்காக எடுக்கும் நேரத்தையும் இது குறைத்துள்ளது.

- தமிழ்நாடு ஒற்றைச் சாளர அனுமதி, டிஜிட்டல் மயமாக்கப்பட்ட ஒப்புதல் மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் மூலம் வணிகம் செய்வதை எளிதாக்கியுள்ளது, அதே நேரத்தில் சூரியப் பூங்காக்கள், மாவட்ட அளவிலான கார்பன் நீக்கத் திட்டங்கள் மற்றும் எரிசக்தி திறன் திட்டங்களையும் இது ஊக்குவித்துள்ளது.

## தமிழகப் பொருளாதாரத்தின் சிறப்பம்சங்கள்

- இந்தியப் பொருளாதார ஆய்வறிக்கை (2025-26) முதலீட்டுக்குத் தயாராக, தொழில்துறையில் முதன்மையான மாநிலமாக தமிழ்நாட்டின் நிலையை வலுப் படுத்துகிறது.
- தமிழ்நாடு வேகமாக வளரும் மாநிலப் பொருளாதாரமாகத் தனித்து நிற்கிறது என்பதோடு, 2024–25 ஆம் ஆண்டில் 11.19% உண்மையான வளர்ச்சியைப் பதிவு செய்கிறது.
- இந்தியாவின் இரண்டாவது பெரிய மாநிலப் பொருளாதாரமாக, தமிழ்நாடு தேசிய வளர்ச்சிக்கும் முக்கியப் பங்களிப்பை அளிக்கிறது.
- இந்தச் செயல்திறன் முதன்மையாக 13.43% வளர்ச்சி என்ற நிலையில் இரண்டாம் நிலைத் துறையால் இயக்கப்படுகிறது, இது.
- இதில், உற்பத்தி ஒரு முக்கிய வளர்ச்சி இயந்திரமாக உருவெடுத்துள்ளது என்பதோடு இது 14.74% உண்மையான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது என்ற நிலையில் இது அகில இந்திய சராசரியான 4.5% ஐ விட மூன்று மடங்கு அதிகம்.
- ஒவ்வொரு மாநிலத்தின் மத்தியிலும் தமிழ்நாடு நான்கு ஆண்டு சராசரி உண்மையான உற்பத்தி வளர்ச்சியில் (2021-22 முதல் 2024-25 வரை) 9.38% என்ற அளவில் தலைமை தாங்குகிறது, அதே நேரத்தில் அதன் ஒட்டுமொத்த GSDP 8.63% என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது.
- முதன்மையான CPI பணவீக்கம் 2025-26 இல் (டிசம்பர் வரை) 2.45% ஆகக் குறைந்துள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டில் 26.15 பில்லியன் டாலரிலிருந்து 2024-25 ஆம் ஆண்டில் 52.07 பில்லியன் டாலராக இம்மாநிலத்தின் பொருட்கள் ஏற்றுமதி கிட்டத்தட்ட இரு மடங்காக அதிகரித்துள்ளது.
- சிமென்ட் துறையில் 85% குவிந்துள்ள சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.
- மருத்துவச் சாதனப் பூங்காக்களை மேம்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் மருத்துவச் சாதனப் பூங்காவை நிறுவ ₹100 கோடி நிதி உதவிக்கு இறுதி ஒப்புதல் பெற்ற மூன்று மாநிலங்களில் இதுவும் ஒன்றாகும்.
- இந்தியாவின் உற்பத்தி வேலைவாய்ப்பில் தமிழ்நாடு 15% பங்களிக்கிறது என்று கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.
- இது அனைத்து மாநிலங்களிலும் மிக உயர்ந்தது.
- குஜராத் (13%), மகாராஷ்டிரா (13%) மற்றும் உத்தரப் பிரதேசம் (8%) ஆகியவற்றையும் தமிழ்நாடு விஞ்சியுள்ளது.
- வணிகச் சீர்திருத்தச் செயல் திட்டம் (BRAP) 2024 இன் கீழ், சூரிய சக்திப் பூங்காக்கள், மாவட்ட அளவிலான கார்பனைசேஷன் திட்டங்கள் மற்றும் எரிசக்தி-திறன் திட்டங்கள் மூலம் ஒற்றைச் சாளர அனுமதிகள், டிஜிட்டல் மயமாக்கப்பட்ட ஒப்புதல்கள் மற்றும் நில சீர்திருத்தங்கள் மூலம் வணிகம் செய்வதை எளிதாக்கியுள்ளது.

- தேசியப் பசுமை ஹைட்ரஜன் திட்டத்தின் கீழ் உள்ள மூன்று பசுமை ஹைட்ரஜன் மையங்களில் ஒன்றாக வ.உ. சிதம்பரனார் துறைமுகம் தேர்ந்தெடுக்கப் பட்டதன் மூலம், இந்தியாவின் பசுமை ஹைட்ரஜன் பொருளாதாரத்தில் தமிழ்நாடு ஒரு முக்கியப் பங்கைப் பெற்றுள்ளது.
- 2030 ஆம் ஆண்டுக்குள் ஆண்டுதோறும் ஐந்து மில்லியன் மெட்ரிக் டன் பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்யும் இந்தியாவின் இலக்கில் இது முன்னணியில் உள்ளது.
- சென்னை-வேலூர்-விழுப்புரம்-செங்கல்பட்டு வழித்தடம் ஒரு சாத்தியமான பிராந்திய விரைவு போக்குவரத்து அமைப்பு பாதையாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- 14 கடலோர மாவட்டங்களில் 1,076 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரையில் காலநிலைப் பாதிப்புகளை நிவர்த்தி செய்யும் தமிழ்நாடு நிலையான பெருங்கடல் வளங்கள் மற்றும் நீல பொருளாதாரத் திட்டத்தை இந்த கணக்கெடுப்பு கவனத்தில் கொள்கிறது.
- கர்நாடகா, மகாராஷ்டிரா, தமிழ்நாடு மற்றும் தெலுங்கானா ஆகியவை இந்தியாவின் சேவை உற்பத்தியில் கிட்டத்தட்ட 40% அளவிற்குப் பங்களிக்கின்றன என்பதையும் இது குறிப்பிடுகிறது.
- மேம்பட்ட வகைகள், பல பயிர்ச் சுழற்சிகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் மீதான நிலையான கொள்கை கவனம் காரணமாக, குஜராத் மற்றும் கர்நாடகாவுடன் இணைந்து நிலக்கடலை உற்பத்தியில் அதிக செயல்திறன் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடும் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- வாழை சாகுபடியில் அதன் சாதனைகள் தோட்டக்கலையில் பிராந்திய-குறிப்பிட்ட வெற்றிக் கதைகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- நகர்ப்புற மேம்பாட்டில், சென்னை உலகின் மிகப்பெரிய நகர்ப்புற ஒருங்கிணைப்புகளில் ஒன்றாக இருப்பதாக கணக்கெடுப்பு எடுத்துக்காட்டுகிறது.
- சென்னையின் பெருநகரப் பகுதி வாகன நிறுத்துக் கொள்கை 2025 என்பது ஒரு தேசிய சிறந்த நடைமுறையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- மேலும் இந்தியா டுடே பத்திரிக்கையின் மொத்த உள்நாட்டு நடத்தைக் கணக்கெடுப்பில் குடிமை நடத்தையில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
- உயர்கல்வியில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 17 நிறுவனங்கள் NIRF 2025 முதல் 100 ஒட்டு மொத்தத் தரவரிசையில் இடம் பெற்றுள்ளன என்ற நிலையில் இது அனைத்து மாநிலங்களிலும் மிக உயர்ந்தது.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் 2024 இல் தொடங்கப்பட்ட திறன் உத்தரவாதம் திட்டமும் பிற்படுத்தப் பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆதரவளிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## துணைவேந்தர் நியமனங்கள் குறித்து உச்ச நீதிமன்ற தீர்ப்பு

- தமிழ்நாடு மாநிலப் பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் நியமனங்கள் தொடர்பான சென்னை உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது.
- துணைவேந்தர்களை நியமிக்க தமிழக அரசுக்கு அதிகாரம் அளிக்கும் திருத்தப்பட்ட சட்டப் பிரிவுக்கு உயர் நீதிமன்றம் முன்னதாகத் தடை விதித்திருந்தது.
- மாநில அரசு தனது தரப்பு வாதங்களை முன்வைக்க நியாயமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் கூறியது.

- இந்த விவகாரம் குறித்து ஆறு வாரங்களுக்குள் முடிவு செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றத்திற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

## காவல் துறை ஆர்டர்லி முறை ஒழிப்பு

- காவல் துறை உதவியாளர் (ஆர்டர்லி) முறையை ஒழிப்பதற்காக 2026 ஆம் ஆண்டு ஜனவரி 21 ஆம் தேதி அரசாணை பிறப்பித்துள்ளதாக தமிழ்நாடு அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தது.
- இந்த நடைமுறையை ஒழிப்பதை கண்காணிப்பதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப் பட்டு உள்ளன.
- இந்தக் குழுக்களில் மாவட்ட வருவாய் அலுவலர் (DRO), கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (AdSP) மற்றும் பிற மூத்த அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.
- இந்தக் குழுக்கள் புகார்களைச் சேகரித்து, தகவல்களைத் திரட்டி, காவல் துறையினர் மூத்த அதிகாரிகளின் வீட்டு அல்லது தனிப்பட்ட பணிகளுக்குப் பயன்படுத்தப் படவில்லை என்பதை உறுதி செய்யும்.
- இதன் அமலாக்கம் குறித்த அறிக்கைகள் ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கும் உள்துறைச் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.
- காவல் துறை தலைமை இயக்குநர் (DGP) மற்றும் மாநில அரசு இந்த உத்தரவு பின்பற்றப் படுவதைக் கண்காணிக்கும், மேலும் உத்தரவை மீறும் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படலாம்.

## தமிழ்நாட்டிலுள்ள பழங்கற்கால தளங்கள்

- தமிழ்நாட்டின் திருச்சி, புதுக்கோட்டை மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 500க்கும் மேற்பட்ட கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பதோடு இது பழங் கற்கால மற்றும் இடைக் கற்கால வாழ்விடங்களைக் குறிக்கிறது.
- முக்கியமாக குவார்ட்ஸால் செய்யப்பட்ட கை கோடாரிகள், வெட்டுகத்தி, கொடுவாள், கற்செதில்கள் மற்றும் பல்முனை வெட்டு கருக்கல் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளில் அடங்கும்.
- குரும்பப்பட்டி, கல்லிக்குடி, வால்கரடு, வீரமலை, நடுக்காட்டுப்பட்டி, முள்ளிப்பட்டி, மலம்பட்டி, சருகுமலை, சித்தர்மலை, தலைமலை ஆகிய இடங்களில் தளங்கள் கண்டறியப்பட்டன.
- இந்தத் தளங்களில் உள்ள நுண்கற்காலக் கருவிகள், இப்பகுதியை வரலாற்றுக்கு முந்தைய கட்டத்தின் இறுதிக்காலத்தை சேர்ந்தவையாக குறிப்பிடுகின்றன.

## தமிழ்நாடு நகர்ப்புறப் பசுமையாக்கல் கொள்கை 2026

- தமிழ்நாடு அரசானது பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற பசுமையாக்கல் கொள்கை 2026-ஐ வெளியிட்டது.
- நகர்ப்புறப் பசுமைப் பரப்பை அதிகரிப்பதன் மூலம், தட்பவெப்பநிலையைத் தாங்கக்கூடிய, நீடித்த மற்றும் வாழத்தகுந்த நகரங்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

- மரங்கள், நகர்ப்புறக் காடுகள், பூங்காக்கள், ஈரநிலங்கள் மற்றும் நீல-பச்சை உள்கட்டமைப்புகளை நகரத் திட்டமிடலில் ஒருங்கிணைப்பதில் இந்தக் கொள்கை கவனம் செலுத்துகிறது.
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், நகர்ப்புறப் பகுதிகளில் குறைந்தபட்சம் 15% நிலப்பரப்பை பசுமையான பரப்பாக பராமரிக்க வேண்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- பசுமைத் தமிழ்நாடு இயக்கமானது, மாநிலத்தில் காடுகள் மற்றும் மரங்களின் பரப்பை 33% ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தமிழ்நாட்டில் பெண் கல்வி

- புதுமைப் பெண் திட்டம் காரணமாக தமிழ்நாட்டில் உயர்கல்வியில் பெண்கள் சேர்க்கை 34% அதிகரித்துள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், கல்லூரிகளில் படிக்கும் மாணவிகளுக்கு மாதத்திற்கு ₹1,000 வழங்கப்படுகிறது.
- இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் எட்டு லட்சம் மாணவிகள் பயனடைந்துள்ளனர்.
- இதில் நகர்ப்புற மாணவர்களை விட கிராமப்புற மாணவிகள் மிகவும் அதிகம் பயன் அடைந்துள்ளதாக மாநிலத் திட்டக் குழு ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.
- புதுமைப் பெண் திட்டம் பெண் கல்வியை ஆதரிப்பதையும் பள்ளிக் கல்விக்குப் பிறகு இடைநிற்றலைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டம் பெண்கள் உயர்கல்வி பெறுவதற்கான அணுகலை மேம்படுத்தச் செய்வதற்கான தமிழக அரசின் முயற்சிகளில் ஒரு பகுதியாகும்.

## தமிழ்நாடு மின்னணுவியல் மையம்

- தமிழ்நாடு 2030 ஆம் ஆண்டுக்குள் 150 பில்லியன் டாலர் மதிப்புள்ள மின்னணுவியல் மையமாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 2025 நிதியாண்டில் (FY) இந்தியாவின் மொத்த மின்னணு ஏற்றுமதியில் 41% பங்கை தமிழ்நாடு கொண்டிருந்தது என்ற நிலையில் இதன் மதிப்பு $15 பில்லியன் ஆகும் என்பதோடு, மேலும் இது 2026 நிதியாண்டில் 45% ஆக உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தியாவின் மின்னணு உற்பத்தி மொத்த விற்பனை மதிப்பில் தமிழ்நாடு 28.6% பங்களிப்பதுடன் இது நாட்டில் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- 2021–22 முதல் 414% அதிகரிப்பைப் பதிவு செய்த தமிழகம் மின்னணுவியல் ஏற்றுமதி $14.65 பில்லியனை எட்டியுள்ளது.
- சென்னை, ஸ்ரீபெரும்புதூர், ஓசூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் முக்கியத் தொழிலகத் தொகுப்புகளைக் கொண்ட தமிழகதில் 191 மின்னணு கருவிகள் உற்பத்தி அலகுகள் உள்ளன.
- இந்தியாவின் மின்னணுவியல் உற்பத்தித் துறை 2030 ஆம் ஆண்டுக்குள் சுமார் $500 பில்லியனை எட்ட இலக்கு வைத்துள்ளது.

## எகிப்தில் தமிழ் பிராமி கல்வெட்டுகள்

- கி.பி 1 மற்றும் 3 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த, எகிப்தின் மன்னர்களின் பகுதிகளில் கிட்டத்தட்ட 30 தமிழ் பிராமி கல்வெட்டுகள் அடையாளம் காணப் பட்டுள்ளன.
- 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் போது, தீபன் நெக்ரோபோலிஸில் உள்ள ஆறு கல்லறைகளில் இந்தக் கல்வெட்டுகள் காணப்பட்டன.
- அவற்றில் தமிழ் பிராமி, பிராகிருதம் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் எழுத்துக்கள் உள்ளன என்ற நிலையில் இது இந்தியப் பயணிகளின் இருப்பைக் குறிக்கிறது.
- ஐந்து கல்லறைகளில் சிகை கொற்றன் என்ற மீண்டும் மீண்டும் வரும் பெயர் எட்டு முறை பொறிக்கப்பட்டுள்ளது.
- இந்தக் கண்டுபிடிப்புகள் தமிழகத்திற்கும் ரோமானியப் பேரரசுக்கும் இடையிலான பண்டைய வர்த்தக தொடர்புகளுக்கான சான்றுகளை வழங்குகின்றன.
- எகிப்தில் உள்ள செங்கடல் துறைமுகமான பெரெனிகேவிலும் இதே போன்ற தமிழ் பெயர்கள் முன்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## பொதுத் துறை புத்தாக்கக் கொள்கை

- தமிழ்நாடு மாநில அளவிலான பொதுத்துறை புத்தாக்கக் கொள்கை மற்றும் மாநிலப் புத்தாக்கக் குறியீட்டை உருவாக்குவதாக அறிவித்தது.
- தமிழ்நாடு மாநில திட்டக் குழுவின் (SPC) ஒரு குழு பிரான்சின் பாரிஸில் உள்ள UNICEF அமைப்பின் புத்தாக்க அலுவலகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (OECD) ஆகியவற்றைப் பார்வையிட்டது.
- பொதுத்துறை புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்காக சர்வதேச நிறுவனங்களுடன் ஒரு மூலோபாய கூட்டாண்மையில் இணைந்த உலகின் முதல் மாநில அரசாங்கமாக தமிழ்நாடு ஆனது மாறியுள்ளது.
- தமிழ்நாடு மாநில திட்ட ஆணையத்திற்கும் ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியத்திற்கும் இடையே ஒரு விருப்பக் கடிதம் பரிமாறப்பட்டது.
- புத்தாக்கக் கட்டமைப்புகள் மற்றும் கண்காணிப்பு அமைப்புகளை உருவாக்குவதற்காக பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பும் இந்த ஒத்துழைப்பில் அடங்கும்.
- கொள்கை உருவாக்கம் மற்றும் செயல்படுத்தலை வழி நடத்த நிபுணர்களின் துறை சார்ந்த பணிக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

## முதலீடு மாற்ற மாநாடு 2026

- சென்னையில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு முதலீடு மாற்ற மாநாடு நிகழ்வின் போது, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து கையெழுத்திடப் பட்ட 73.53% புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதலீட்டு திட்டங்களாக மாற்றப்பட்டுள்ளதாக அறிவித்தார்.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் ₹12.37 லட்சம் கோடி மதிப்புள்ள மொத்தம் 1,179 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன என்பதோடு இதன் மூலம் 36.52 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

- இவற்றில், 867 திட்டங்கள் செயல்படுத்தும் நிலையில் உள்ளன என்பதோடு மேலும் 35.11% திட்டங்கள் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ளன.
- ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் தரவுகளின்படி, கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் சுமார் 29.63 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப் பட்டன.
- தமிழ்நாடு மற்றும் வெளிநாடுகளில் மாநில அரசு 18 முதலீட்டு மாநாடுகளை ஏற்பாடு செய்தது என்பதோடு இதன் விளைவாக ₹10.43 லட்சம் கோடி மதிப்புள்ள 1,130 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.
- காஞ்சிபுரத்தில் திறன் மேம்பாட்டு மையத்திற்காக பாரத் பயோடெக் நிறுவனத்துடனும், ஹூண்டாய் மோட்டார் இந்தியா அறக்கட்டளையுடனும் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.
- டாபர் இந்தியா லிமிடெட் தென்னிந்தியாவில் அதன் முதல் உற்பத்தி ஆலையை திண்டிவனத்தில் கட்டத் தொடங்கியது.

## தமிழ்நாட்டின் பொருளாதார மற்றும் மேம்பாட்டுச் செயல்திறன்

- தமிழ்நாடு இந்தியாவில் மிக உயர்ந்த தனிநபர் வருமான வளர்ச்சியைப் பதிவு செய்து உள்ளது என்பதோடு இது 2020–2021 இல் 0.07% இலிருந்து 11.19% ஆக அதிகரித்துள்ளது.
- தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 2020–2021 இல் ₹2,09,628 இலிருந்து ₹3,61,619 ஆக அதிகரித்து, ₹1.76 லட்சமாக அதிகரித்துள்ளது.
- தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியானது (GSDP) 2020–2021 இல் இருந்த ₹17.89 லட்சம் கோடியிலிருந்து 2024-25 இல் ₹31.19 லட்சம் கோடியாக அதிகரித்து, சுமார் 16% வளர்ச்சியைப் பதிவு செய்து இந்தியாவில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- தமிழ்நாட்டில் வறுமை விகிதம் 2020–2021 ஆம் ஆண்டில் இருந்த 2.20%-இல் இருந்து 1.43% ஆகக் குறைந்துள்ளது என்பதோடு இது சுமார் 11.2% வீழ்ச்சியைக் காட்டுகிறது.
- தமிழ்நாட்டின் ஏற்றுமதி மதிப்பு 2020–2021 ஆம் ஆண்டில் 64.93 பில்லியன் அமெரிக்க டாலர்களில் இருந்து தற்போது 80.89 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்து, இந்தியாவின் முன்னணி ஏற்றுமதியாளர்களில் ஒன்றாக மாநிலத்தை மாற்றியது.
- 2020–2021 ஆம் ஆண்டில் 3வது இடத்தில் இருந்த தமிழ்நாடு, இந்தியாவில் மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.
- தமிழ்நாட்டின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDG) குறியீட்டு மதிப்பெண் 2020–2021 ஆம் ஆண்டில் 74 புள்ளிகளிலிருந்து தற்போது சுமார் 78.8 புள்ளிகளாக அதிகரித்துள்ளது என்ற நிலையில் மேலும் தமிழகம் இந்தியாவில் 3வது இடத்தைப் பிடித்தது.

## மண் வளத்திற்கான உத்திசார் திட்ட வரைபடம்

- நமது மாநிலத்தில் மண் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் நிலையான விவசாயத்தை ஆதரிக்கவும் ஒரு உத்திசார் திட்ட வரைவைத் தமிழ்நாடு செயல்படுத்தி வருகிறது.
- தமிழக அரசின் மண் வளத்தை வலுப்படுத்தும் திட்டத்திற்கு சுமார் ₹206 கோடி பட்ஜெட் ஒதுக்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்ட வரைவு, விவசாய நிலங்களில் மண் ஊட்டச்சத்து மற்றும் வளத்தை மேம்படுத்த பசுந்தாள் உர சாகுபடியை ஊக்குவிக்கிறது.

- சுமார் 2 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்களில் பசுந்தாள் உர விதைகளைப் பரப்ப திட்டமிடப்பட்டுள்ளது என்பதோடு இதனால் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைவார்கள்.
- மண்-வள மேம்பாட்டு நடவடிக்கைகளை ஆதரிக்க ₹20 கோடி தொடக்க நிதி ஒதுக்கப் பட்டது.
- மண் ஊட்டச்சத்துக்கள் மற்றும் உரப் பயன்பாடு குறித்த தகவல்களை வழங்கச் செய்வதற்காக தமிழ்நாடு ஏற்கனவே 15.25 மில்லியனுக்கும் அதிகமான மண் சுகாதார அட்டைகளை (SHC) விவசாயிகளுக்கு விநியோகித்துள்ளது.
- இந்தத் திட்ட வரைவு மாநிலத்தில் நிலையான விவசாயம், காலநிலை மீள்தன்மை மற்றும் நீண்ட கால உணவுப் பாதுகாப்பை ஆதரிக்கிறது.

## தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள் 2025–26

- 2025–26 ஆம் ஆண்டிற்கான கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் மேலும் ஒரு லட்சம் வீடுகளைக் கட்ட தமிழக அரசு ₹3,500 கோடி நிர்வாக ஒப்புதலை வழங்கியது.
- மாநிலம் முழுவதும் தகுதியான பயனாளிகளுக்கு நிரந்தர வீடுகளை வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- வேலை தேடுபவர்கள் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராக உதவும் வகையில் 'தேர்வுக் காலம்' எனும் கைபேசி செயலியை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.
- இளைஞர்களின் திறன் மேம்பாட்டை ஆதரிப்பதற்காக திறன் 360 எனும் தளத்தையும் அவர் தொடங்கி வைத்தார்.
- சென்னை ஷெனாய் நகரில், அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான பயிற்சி மையமாக செயல்படவுள்ள ₹62.50 கோடி மதிப்பிலான கட்டிடத்திற்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

## தமிழ்நாட்டில் அருங்காட்சியகங்கள் மற்றும் நினைவுத் திட்டங்கள்

- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பல கலாச்சாரத் திட்டங்களைத் தொடங்கி வைத்து மாநிலம் முழுவதும் பல அருங்காட்சியகங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.
- சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடியில் ₹24 கோடி செலவில் ஒரு திறந்தவெளி அருங்காட்சியகம் திறக்கப்பட்டது.
- ஈரோடு மாவட்டத்தில் நொய்யல் அருங்காட்சியகம், மண்டபத்தில் உள்ள நாவாய் அருங்காட்சியகம் மற்றும் தஞ்சாவூரில் உள்ள சோழர் அருங்காட்சியகம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
- தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மனோரா நினைவுத் தூணில் புதிய உள்கட்டமைப்பு மற்றும் முகப்பு விளக்குகள் திறக்கப்பட்டன.
- அரியலூர் மாவட்டத்தில் கீழப்பழுவூர் சின்னசாமிக்கு நினைவு மண்டபம் திறக்கப் பட்டது.
- தமிழைப் பாதுகாப்பதற்காக தனது உயிரைத் தியாகம் செய்த அவர், தனது சொந்த ஊரில் இந்தி திணிப்பை எதிர்த்துப் போராடினார்.
- ஈரோடு மாவட்டத்தில் குதிரையின் மேல் அமர்ந்தபடி உள்ள சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் சிலை திறக்கப்பட்டது.

- முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், காவிரி மீட்புக் குழுவின் முன்னாள் உறுப்பினருமான சி. முத்துசாமியின் சிலையையும் முதல்வர் திறந்து வைத்தார்.
- அவர் கரூர் அருகே உள்ள வைரமடையில் விவசாயிகளின் உரிமைகளுக்காகப் பாடுபட்டார் மற்றும் பல போராட்டங்களை நடத்தினார்.
- கே. ராஜன் மற்றும் ஆர். சிவானந்தம் எழுதிய "தமிழ்நாடு பாறைக் கலை" என்ற புத்தகத்தை அவர் வெளியிட்டார்.
- அப்போதைய சென்னை மாகாணத்தின் முன்னாள் முதல்வர் பி. சுப்பராயன் அவர்களின் மார்பளவுச் சிலையையும், நாமக்கல் மாவட்டத்தில் கட்டப்பட்ட நினைவு மண்டபத்தையும் முதல்வர் மெய்நிகர் முறையில் திறந்து வைத்தார்.
- கரூர் மாவட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி. முத்துசாமியின் சிலையையும் அவர் திறந்து வைத்தார்.
- சென்னை சோழிங்கநல்லூரில் தமிழ்நாடு மின்னணு கழகத்தால் அமைக்கப்பட்ட "ELCOSEZ" நிறுவனத்தை முதலமைச்சர் மெய்நிகர் முறையில் திறந்து வைத்தார்.

## குழந்தைப் பராமரிப்பு பெட்டகம் திட்டம்

- குறைந்த எடை கொண்ட குழந்தைகளிடையே குழந்தை இறப்பு விகிதத்தை (IMR) குறைக்க தமிழ்நாடு அரசு ஒரு "குழந்தை பராமரிப்பு பெட்டகம்" திட்டத்தை அறிமுகப் படுத்தியது.
- இந்தத் திட்டம் இரும்புச் சத்து சொட்டு மருந்துகள், மல்டிவைட்டமின் சொட்டு மருந்துகள், வைட்டமின் டி3 சொட்டு மருந்துகள், ஒரு குழந்தை மருத்துவ அட்டை மற்றும் 12 குழந்தை வளர்ச்சி அறிகுறிகள் குறித்த ஒரு சிறு புத்தகத்தை மாதாந்திரப் பெட்டகங்களாக வழங்குகிறது.
- அரசு மருத்துவமனைகளில் ஆண்டுதோறும் சுமார் 4.5 லட்சம் பிரசவங்கள் நடைபெறுகின்றன என்ற நிலையில் மேலும் சுமார் 52,000 குழந்தைகள் குறைந்த எடையுடன் (2.5 கிலோவிற்கும் குறைவாக) பிறக்கின்றன.
- மாநில பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட இந்த முயற்சியானது சுமார் ₹8.07 கோடி செலவில் செயல்படுத்தப் படுகிறது.
- தமிழ்நாட்டின் பச்சிளம் குழந்தைகளின் இறப்பு விகிதம் ஆனது 1,000 பிறப்புகளுக்கு 8.2 (2023–24) இலிருந்து 7.7 (2024–25) ஆகக் குறைந்துள்ளது.
- பிரசவத்திற்கு முந்தைய பராமரிப்பு, நோய்த்தடுப்பு மற்றும் அதிக ஆபத்து எச்சரிக்கைகளை கண்காணிப்பதற்காக வேண்டி கர்ப்பம் மற்றும் குழந்தை கூட்டுக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (PICME)-க்கான கைபேசி செயலியான “தாய்மை” தொடங்கப் பட்டது.

## வள்ளலார் பிறந்தநாள் விழா

- ராமலிங்க சுவாமிகளின் (வள்ளலார்) பிறந்தநாள் ஒவ்வொரு ஆண்டும் மூன்று நாட்கள் கொண்டாடப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- இந்து சமய மற்றும் அறநிலையத்துறை (HR&CE) துறை ஏற்பாடு செய்த சர்வதேச வள்ளலார் மாநாட்டின் போது முதலமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

- சென்னையில் உள்ள மனிதவள மற்றும் பொதுச் சேவைத் துறை தலைமையகத்தில் வள்ளலார் குறித்த ஆராய்ச்சி மையம் நிறுவப்படும்.
- வள்ளலாரின் "ஆன்மீக ரசவாதம்" என்ற புத்தகம் மனிதவள மற்றும் பொதுச் சேவைத் துறையால் வெளியிடப்படும்.
- மேட்டுக்குப்பம், கருங்குழி மற்றும் மருதூரில் வள்ளலார் அன்னதான மையங்கள் நிறுவப் படும்.
- வட சென்னையில் உள்ள திருவொற்றியூர் உயர் சாலை வள்ளலார் உயர் சாலை எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் பால் உற்பத்தி

- சமீபத்திய அடிப்படை கால்நடைப் பராமரிப்பு (BAH) புள்ளி விவரங்கள், தீவனம் மற்றும் தீவனப் பற்றாக்குறை காரணமாக, தமிழ்நாட்டில் கலப்பினப் பசுவின் பால் உற்பத்தி கிட்டத்தட்ட தேக்க நிலையில் இருப்பதாகக் காட்டுகின்றன.
- தமிழ்நாட்டில், 2018 மற்றும் 2025க்கு இடையில் கலப்பினப் பசுவின் பால் உற்பத்தி ஒரு நாளைக்கு சுமார் 7.1 கிலோவாகவே உள்ளது.
- இது 2023–24 இல் ஒரு நாளைக்கு 7.03 கிலோவிலிருந்து 2024–25 இல் ஒரு நாளைக்கு 7.84 கிலோவாக உயர்ந்துள்ளது என்ற நிலையில் இது ஒரு சிறிய முன்னேற்றத்தை மட்டுமே காட்டுகிறது.
- தமிழ்நாட்டில் தீவனப் பயிர்களின் பரப்பளவு 48,000 ஹெக்டேரிலிருந்து (2018–19) 35,000 ஹெக்டேராகக் குறைந்துள்ளது (2025).
- கர்நாடகாவில், தீவனப் பயிர் பரப்பளவு 71,000 ஹெக்டேரிலிருந்து 90,000 ஹெக்டேராக அதிகரித்துள்ளது என்ற நிலையில் கலப்பின கால்நடைகள் ஒரு நாளைக்கு சுமார் 10.71 கிலோ பால் உற்பத்தி செய்கின்றன.
- கர்நாடகா பால் மானியத்தை லிட்டருக்குச சுமார் ₹5 (சமீபத்தில் லிட்டருக்கு ₹7 ஆக அதிகரிக்கப் பட்டது) என்ற அளவில் வழங்குகிற அதே நேரத்தில் தமிழ்நாடு லிட்டருக்கு ₹3 வழங்குகிறது.
- ஆவின் தற்போது ஒரு நாளைக்கு சுமார் 30–35 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்கிறது, இருப்பினும் அதன் பதப்படுத்தும் திறன் ஒரு நாளைக்கு சுமார் 50 லட்சம் லிட்டர் ஆகும்.

## பாளையங்கோட்டை கடிகார கோபுரம்

- பாளையங்கோட்டையில் உள்ள புனித திருத்துவ கதீட்ரலில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க கோபுர கடிகாரம் மீட்டெடுக்கப்பட்டு மீண்டும் ஒலிக்கத் தயாராக உள்ளது.
- இந்த கடிகாரம் 1854 இல் தயாரிக்கப்பட்டு 1855 இல் நிறுவப்பட்டது என்பதோடு, இது 1859 இல் நிறுவப்பட்ட லண்டனில் உள்ள பிக் பென்னுக்கு முந்தையது.
- இந்தக் கடிகாரத்தில் நிறுவப்பட்ட ஆண்டு 1854 என பொறிக்கப்பட்டுள்ளது என்பதோடு மேலும் இது லண்டனை தளமாகக் கொண்ட கடிகாரத் தயாரிப்பு நிறுவனமான ஜான் மூர் & சன்ஸ் ஆல் அமைக்கப்பட்டது.
- பேராயர் சார்லஸ் தியோபிலஸ் எவால்ட் ரேனியஸால் 1826 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த கதீட்ரல் சமீபத்தில் அதன் இருநூறாவது ஆண்டு விழாவைக் கொண்டாடியது.

## வெளியேற்ற உத்தரவு மீறல் – சென்னை

- ❖ சென்னை பெருநகரக் காவல்துறை பிறப்பித்த வெளியேற்ற உத்தரவை மீறியதற்காக, சரித்திரப் பதிவேடு குற்றவாளி ஒருவர் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார்.
- ❖ இக்குற்றவாளி மீது நடவடிக்கை எடுக்க, மெட்ராஸ் நகர காவல் சட்டம் 1888 இன் பிரிவு 51A-ஐ காவல்துறை பயன்படுத்தியது.
- ❖ வெளியேற்ற உத்தரவை மீறியதற்காக ஒருவரை சிறையில் அடைக்க நகர காவல் சட்டத்தின் விதிகள் பயன்படுத்தப்படுவது கிட்டத்தட்ட 25 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும்.
- மார்ச் 2025 நிலவரப்படி, இரயில்வே வலையமைப்பு 69,439 கிலோமீட்டர்களை எட்டியது, மேலும் அக்டோபர் 2025-க்குள் 99.1% தடம் மின்மயமாக்கப்பட்டது.

- இந்தியா உலகின் மூன்றாவது பெரிய உள்நாட்டு விமானப் போக்குவரத்து சந்தையாக மாறியுள்ளது; விமான நிலையங்களின் எண்ணிக்கை 2014-ல் 74-லிருந்து 2025-ல் 164 ஆக அதிகரித்துள்ளது.
- இந்தியா சுயாதீன விண்கலமிணைப்புப் பரிசோதனையை (SpaDeX) வெற்றிகரமாகச் செய்து, அவ்வாறு செய்த உலகின் நான்காவது நாடாக மாறியது.
- சேவைகள் ஏற்றுமதியால் உந்தப்பட்டு, 2025 நிதியாண்டில் மொத்த ஏற்றுமதி 6.1% ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்து, சாதனை அளவான 825.3 பில்லியன் டாலர்களை எட்டியது.
- வங்கித் துறையின் சொத்துத் தரம் மேம்பட்டுள்ளது; செப்டம்பர் 2025ல் மொத்த வாராக் கடன் (GNPA) 2.2% ஆகவும், நிகர வாராக்கடன் (Net NPA) 0.5% ஆகவும் இருந்தது.
- 2026 நிதியாண்டிற்கான நிதிப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.4% என்ற இலக்குக்கு ஏற்ப உள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் இந்திய ரூபாய் மதிப்பு மோசமாக வீழ்ச்சியுற்றது என்ற நிலையில், இது நாட்டின் வலுவான பொருளாதார அடிப்படைகளைப் பிரதிபலிக்கவில்லை.
- இந்தியா ஒரு பெரிய உள்நாட்டுச் சந்தை, வலுவான அந்நியச் செலாவணி இருப்புக்கள் மற்றும் நம்பகமான அளவிலான மூலோபாய சுயாட்சி ஆகியவற்றால் பயனடைகிறது என்ற நிலையில் நிதி ஏற்ற இறக்கங்களுக்கு எதிராக இடையகங்களை வழங்குகிறது.
- அதிகரித்து வரும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் உலகளாவிய நிச்சயமற்றத் தன்மைகளுக்கு மத்தியில், சுதேசியை ஒரு சட்டப்பூர்வமான கொள்கைக் கருவியாக இந்த கணக்கெடுப்பு ஆதரிக்கிறது.
- இது இறக்குமதி மாற்றீடு, மூலோபாய மீள்தன்மை மற்றும் மூலோபாய இன்றியமையாத தன்மையை நீண்ட கால முன்னுரிமைகளாக வலியுறுத்துகிறது.
- வேளாண்மை, உற்பத்தி மற்றும் சேவைகள் ஆகியவை உந்துதலைத் தக்கவைக்க ஒன்றாக வளர வேண்டும்.
- புதிய தொழிலாளர் குறியீடுகளானது, கிக் (Gig) மற்றும் இணையம் மூலம் சேர்க்கப் படும் சேவை வழங்கும் தொழிலாளர்களை அங்கீகரிக்கின்றன, சமூகப் பாதுகாப்பு மற்றும் சலுகைகளை விரிவுபடுத்துகின்றன, மேலும் முறையான வேலைவாய்ப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- காலநிலைசார் நிதித்தேவை ஒரு முக்கியத் தடையாகவே நீடிக்கிறது என்ற நிலையில் காலநிலை நடவடிக்கை இப்போது இந்தியாவின் வளர்ச்சி உத்தியின் ஒரு முக்கிய அங்கமாக உள்ளது.
- குழந்தைகளிடையே டிஜிட்டல் கருவிகளுக்கு அடிமையாகும் பழக்கத்தைத் தடுக்க சமூக ஊடகங்களுக்கான வயது அடிப்படையிலான வரம்புகளையும், ஆன்லைன் கற்பித்தலைக் குறைப்பையும் இந்த கணக்கெடுப்பு பரிந்துரைக்கிறது.
- அதிகரித்து வரும் குழந்தைப் பருவ உடல் பருமனை எடுத்துக்காட்டி, காலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை தீவிரப் பதப்படுத்தப்பட்ட உணவுகளின் விளம்பரங்களைத் தடை செய்ய வேண்டும் என்றும் அது பரிந்துரைக்கிறது.
- தகவல் அறியும் உரிமைச் சட்டம் அதன் அசல் நோக்கத்தைத் தக்க வைத்துக் கொண்டே, உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் சீரமைக்கப் படுவதற்கு மறு பரிசீலனை செய்யப்பட வேண்டியிருக்கலாம்.

- செயற்கை நுண்ணறிவுத் துறையில் இந்தியாவின் தாமதமான நுழைவு ஒரு நன்மையை வழங்குகிறது என்ற நிலையில் இது பொது நோக்கங்களுடன் சீரமைக்கப் பட்ட, வளத் திறனுள்ள மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு ஏற்பை சாத்தியம் ஆக்குகிறது.
- இந்த ஆய்வறிக்கை நகரமயமாக்கல், செயற்கை நுண்ணறிவு, சுற்றுச்சூழல், உள் கட்டமைப்பு, தொழில், கல்வி மற்றும் மூலோபாய மீள்திறன் போன்ற தலைப்புகளை உள்ளடக்கிய 16 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது.

## முக்கிய கனிம அந்தஸ்து – கற்கரி

- இந்திய அரசானது, 1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டத்தின் (MMDR சட்டம்) கீழ், கற்கரியை (Coking Coal) ஒரு முக்கிய மற்றும் மூலோபாய கனிமமாக அறிவித்துள்ளது.
- இந்த அறிவிப்பானது கற்கரியை முதல் அட்டவணையின் பகுதி D-யில் சேர்ப்பதன் மூலம், சுரங்கத் தொழில் மற்றும் மேம்பாட்டிற்கு அதற்கு உயர் முன்னுரிமையை வழங்குகிறது.
- எஃகு உற்பத்தியில் பயன்படுத்தப்படும் கற்கரிக்கான இந்தியாவின் 95% இறக்குமதி சார்பைக் குறைப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.
- கற்கரியானது உலோகவியல் நிலக்கரி என்றும் அழைக்கப்படுகிறது எனவே இது எஃகு தயாரிப்பதற்கு இன்றியமையாதது என்பதோடு அனல் மின் நிலக்கரியால் இதை ஈடு செய்ய முடியாது.
- இந்த முடிவு, 2030-ஆம் ஆண்டுக்குள் 300 மில்லியன் டன் எஃகு உற்பத்தி என்ற தேசிய எஃகு கொள்கையின் இலக்கை ஆதரிக்கிறது.
- இந்தியாவில் ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், சத்தீஸ்கர் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பெருமளவிலான கற்கரி இருப்புக்கள் உள்ளன ஆனால் தரப் பிரச்சினைகள் காரணமாக இந்தியா இறக்குமதியைச் சார்ந்துள்ளது.

## இந்தியாவின் இணையப் பயனர்கள்

- இந்திய இணையம் மற்றும் கைபேசிச் சங்கத்தின் (IAMAI) தகவலின்படி, இந்தியாவில் தற்போது 958 மில்லியன் செயலில் உள்ள இணையப் பயனர்கள் உள்ளனர்.
- பயனர்களில் 57% பேர், அதாவது சுமார் 548 மில்லியன் மக்கள், கிராமப்புறங்களில் வசிக்கின்றனர்; இந்த வளர்ச்சி நகர்ப்புறங்களை விட கிட்டத்தட்ட நான்கு மடங்கு வேகமாக உள்ளது.
- செயற்கை நுண்ணறிவு (AI) பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது; 44% பயனர்கள் குரல் வழித் தேடல், சாட்பாட்கள் மற்றும் பட அடிப்படையிலான தேடல் போன்ற செயற்கை நுண்ணறிவு அம்சங்களைப் பயன்படுத்துகின்றனர்.
- ஒன்றுக்கும் மேற்பட்ட சாதனங்களைப் பயன்படுத்தும் பழக்கம் அதிகரித்து வருகிறது; 193 மில்லியன் பயனர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட சாதனங்களை வைத்துள்ளனர்.
- இருப்பினும், இந்தியாவின் மக்கள் தொகையில் 38% பேர் (சுமார் 579 மில்லியன் மக்கள்) இணையத்தைப் பயன்படுத்துவதில்லை.

## மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 – சாதிவாரி கணக்கெடுப்பு முறை

- இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடத்தப்படும்; வீடுகளின் பட்டியல் தயாரிப்பு மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு (HLO) ஏப்ரல் முதல் செப்டம்பர் 2026 வரை நடைபெறும் என்ற நிலையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு (PE) பிப்ரவரி 2027-ல் நடைபெறும்.
- வரவிருக்கும் மக்கள் தொகை கணக்கெடுப்பில் சாதி வாரியான கணக்கெடுப்பிற்காகப் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை.
- சாதி வாரியான கணக்கெடுப்பு, மக்கள் தொகை கணக்கெடுப்பின் இரண்டாம் கட்டமான பிப்ரவரி 2027-ல் நடைபெறும்.
- லடாக் மற்றும் ஜம்மு காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்டின் பனி சூழ்ந்தப் பகுதிகளில் செப்டம்பர் 2027-ல் மட்டுமே மக்கள் தொகை கணக்கெடுப்பு கட்டம் தொடங்குகிறது.
- இது 16வது மக்கள் தொகை கணக்கெடுப்பாகும் என்பதோடு பட்டியலின சாதிகள் (SC) மற்றும் பட்டியலின பழங்குடியினர் (ST) தவிர இதர மற்ற அனைத்து சாதிகளையும் கணக்கிடும் சுதந்திர இந்தியாவின் முதல் கணக்கெடுப்பாகும்.
- 2011 சமூக-பொருளாதார சாதிவாரிக் கணக்கெடுப்பானது (SECC) மக்கள் தொகை கணக்கெடுப்பின் வரம்பிற்கு வெளியே செய்யப்பட்டது.
- இந்த முறை மேற்கொள்ளப்படும் சாதிவாரிக் கணக்கெடுப்பு இரண்டாவது மற்றும் இறுதிக் கட்டத்தில் நடத்தப்பட்டு, அதற்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.
- 2011-இன் SECC 46 லட்சத்திற்கும் மேற்பட்ட சாதிகளை கணக்கெடுத்தது, அதே சமயம் சுதந்திரத்திற்கு முந்தைய 1931 மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது மொத்த சாதிகளின் எண்ணிக்கை 4,147 ஆக இருந்தது.
- மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவுகள் ஸ்மார்ட்போன்கள் மற்றும் மொபைல் செயலிகள் மூலம் டிஜிட்டல் முறையில் சேகரிக்கப்படுவது இதுவே (2027) முதல் முறை ஆகும்.
- மேலும், குடிமக்கள் இணையதளத்தின் மூலம் சுயமாகத் தகவல்களைப் பதிவு செய்ய முடிவதும் இதுவே முதல் முறையாகும்.
- இந்தியாவின் தலைமைப் பதிவாளர் மற்றும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஆணையர் ஜனவரி 22 அன்று, வீட்டுப் பட்டியல் கட்டத்திற்காக 33 வினாக்களை அறிவித்தார்.
- இந்த வினாத்தாளில் 12வது வினாவாக "குடும்பத் தலைவர் பட்டியலின சாதியினரா / பழங்குடியினரா/மற்றவர்களா?" என்பதாகும்.
- வினா 12, இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (ஓபிசி) மற்றும் பொதுப் பிரிவினரை வெளிப்படையாக உள்ளடக்கவில்லை.
- 2011 ஆம் ஆண்டு வீட்டுப் பட்டியல் கட்டத்திற்கான அட்டவணை அல்லது வினாத் தாளிலும் இதே வினா 15வதாக இருந்தது.
- பட்டியல் சாதி / பழங்குடியினர் பிரிவின் விவரங்கள் மத்திய அரசால் அங்கீகரிக்கப் பட்ட பட்டியல் மூலம் இரண்டாம் கட்டத்தில் நிரப்பப்பட்டன.
- ஓபிசி பட்டியல் மாநில மற்றும் மத்திய அரசுகளால் பராமரிக்கப்படலாம் என்றாலும், பட்டியலின சாதி / பழங்குடியினர் பெயர்கள் மத்திய அரசால் மட்டுமே பராமரிக்கப் படுகின்றன.

- சமீபத்திய அரசாங்கத் தரவுகளின்படி, மத்தியப் பட்டியலில் சுமார் 2,650 இதர பிற்படுத்தப் பட்ட வகுப்பினரும், பட்டியலின சாதிப் பிரிவில் 1,170 சமூகங்களும், பட்டியலினப் பழங்குடியினர் பட்டியலில் 890 சமூகங்களும் உள்ளன.
- “மற்றவை” என்ற பத்தியில் மத்திய மற்றும் மாநில ஓபிசி பட்டியல்கள் இணைக்கப் பட்ட பட்டியல் இருக்குமா அல்லது இடஒதுக்கீடு செய்யப்படாத சாதிப் பிரிவுகளின் பட்டியல் இருக்குமா என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

## இந்தியாவின் அரிய மண் தாதுப் பெருவழித்தடங்கள்

- மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், கனிம வளம் நிறைந்த ஒடிசா, கேரளா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களுக்கு ஆதரவளிக்க முன்மொழிந்தார்.
- இந்தியாவின் அரிய மண் காந்தங்களுக்கான விநியோகத்தைப் பாதுகாக்கும் நோக்கில், பிரத்தியேக அரிய மண் தாதுப் பெருவழித்தடங்கள் நிறுவப்பட உள்ளன.
- அரிய மண் தாதுக்களுக்காக சீனா மீதான தனது சார்புநிலையைக் குறைக்க இந்தியா முயற்சிக்கும் வேளையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- நவம்பர் 2025-ல், மத்திய அரசு, இந்தியாவில் அரிய மண் நிரந்தரக் காந்தங்களை (REPM) உற்பத்தி செய்வதற்காக, ₹7,280 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஒரு புதிய, 'முதன்முறையான' திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.
- 'வெப்பப் படுத்தப் பட்ட அரிய மண் நிரந்தரக் காந்தங்கள் உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டம்' என்பது, இந்தியாவில் ஆண்டுக்கு 6,000 மெட்ரிக் டன் ஒருங்கிணைந்த அரிய மண் நிரந்தரக் காந்த (REPM) உற்பத்தியை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டது.

## மாதவிடாய் சுகாதாரம் - அடிப்படை உரிமை

- அரசியலமைப்பின் 21வது பிரிவின் கீழ் வாழ்வதற்கான உரிமையின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக மாதவிடாய் சுகாதாரத்திற்கான உரிமை உள்ளது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- டாக்டர் ஜெயா தாக்கூர் எதிர் இந்திய அரசு வழக்கில் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு வழங்கப் பட்டது.
- சுகாதாரப் பொருட்கள் கிடைக்காதது, அரசியலமைப்பின் 21A பிரிவின் கீழ் உள்ள கல்விக்கான அடிப்படை உரிமையையும், கல்வி உரிமைச் சட்டத்தையும் (RTE) பாதிக்கிறது.
- மாதவிடாய் சுகாதார நடவடிக்கைகள் கிடைக்காதது, பள்ளிகளில் சமமான அடிப்படையில் பங்கேற்பதற்கான உரிமையைப் பறிக்கிறது.
- இது அரசியலமைப்பின் 14வது பிரிவின் கீழ் உள்ள சமத்துவத்திற்கான உரிமையை மீறுகிறது.
- 6 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான இளம் வயதுப் பெண் குழந்தைகளுக்கான பள்ளிகளில், மத்திய அரசின் 'பள்ளி செல்லும் மாணவிகளுக்கான மாதவிடாய் சுகாதாரக் கொள்கையை' அகில இந்திய அளவில் செயல்படுத்தவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.
- அனைத்துப் பள்ளிகளும் ஆண் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பாலின வாரியாகப் பிரிக்கப்பட்ட கழிப்பறைகள், இலவச சானிட்டரி நாப்கின்கள் (முன்னுரிமையாக விற்பனை இயந்திரங்கள் மூலம்), மற்றும் பிரத்தியேக மாதவிடாய் சுகாதார மேலாண்மைக் கூடங்களை வழங்க வேண்டும்.

## யுஜிசி சமத்துவ விதிமுறைகள் 2026 குறித்து உச்ச நீதிமன்றம்

- ❖ பல்கலைக்கழக மானியக் குழுவின் (உயர்கல்வி நிறுவனங்களில் சமத்துவத்தை மேம்படுத்துதல்) விதிமுறைகள், 2026-ஐ நிறுத்தி வைக்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.
- ❖ முந்தைய 2012 வழிகாட்டுதல்களே (யுஜிசி (உயர்கல்வி நிறுவனங்களில் சமத்துவத்தை மேம்படுத்துதல்) விதிமுறைகள், 2012) நடைமுறையில் நீடிக்கும் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.
- ❖ 2012 விதிமுறைகள் ரத்து செய்யப் பட்டிருந்ததால், நீதிமன்றம் தனது அதிகாரத்தை அரசியலமைப்புச் சட்டத்தின் 142வது பிரிவின் கீழ் பயன்படுத்தியது.
- ❖ நீதிமன்ற அமர்வு இந்த விதிமுறையை 15(4)வது பிரிவின் மூலம் ஆய்வு செய்தது.
- ❖ அது, பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் உட்பட சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்திற்காக சிறப்பு விதிகளை உருவாக்க அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.
- ❖ தற்போது நடைபெற்று வரும் அபீதா சலீம் தட்வி எதிர் இந்திய யூனியன் (2019) வழக்கிற்குப் பதிலளிக்கும் விதமாக 2026 விதிமுறைகள் உருவாக்கப்பட்டன.
- ❖ தற்போதைய மனுக்கள் குறிப்பாக பிரிவு 3(1)(c)-ஐ எதிர்த்து சவால் விடுத்தன.
- ❖ அந்தப் பிரிவு பட்டியல் சாதியினர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு எதிரான பாகுபாட்டை மட்டுமே வரையறுக்கிறது, அதன் மூலம் அது பொதுப் பிரிவினரை விலக்குகிறது.
- ❖ மேலும், 2026 விதிமுறைகளில் தவறான புகார்களுக்குத் தண்டனை வழங்குவதற்கான எந்த வழிமுறையும் இல்லை.
- ❖ சுற்றுச்சூழல் மற்றும் சமூக நீதிச் சட்டத்திலிருந்து 'பின்னோக்கிச் செல்லாமை கோட்பாட்டை' உச்ச நீதிமன்றம் மேற்கோள் காட்டி, 2012 பதிப்பை விட 2026 விதிகள் ஏன் குறைந்த விதிகளை உள்ளடக்கியதாக உள்ளன என்று கேள்வி எழுப்பியது.

## சுதேசி சூர்யாஸ்த்ரா ராக்கெட் அமைப்பு - 77வது குடியரசு தின அணிவகுப்பு

- ❖ இது யுனிவர்சல் ராக்கெட் லாஞ்சர் சிஸ்டம் (URLLS) – சூர்யாஸ்த்ராவின் முதல் காட்சிப் படுத்தலாகும்.
- ❖ இது இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பல வகை ராக்கெட்டுகளை ஏவக் கூடிய ஒரு அமைப்பாகும்.
- ❖ இது துல்லியமான தரைக்குத் தரைத் தாக்குதல்களை நடத்தும் திறன் கொண்டது.
- ❖ இது 150 கி.மீ மற்றும் 300 கி.மீ தூர இலக்குகளைத் தாக்கும்.
- ❖ இது பல ராக்கெட் மற்றும் ஏவுகணை வகைகளை ஒரே தளத்தில் ஒருங்கிணைக்கும் திறன் கொண்டது.

## அம்ருத் 2.0 பலன்கள்

- ❖ அடல் புத்துயிர்ப்பு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டத்தின் (அம்ருத்) மற்றும் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ், நகர்ப்புறங்களில் குழாய் நீர் இணைப்பு வசதி 2011-ஆம் ஆண்டிலிருந்து 64% அதிகரித்துள்ளது.

- இது 49%-லிருந்து 2026-ஆம் ஆண்டில் சுமார் 77% ஆக உயர்ந்துள்ளது.
- நகரங்கள் முழுவதும் மொத்தம் 228 லட்சம் வீட்டிற்கு குழாய் நீர் இணைப்புகளும், 20 லட்சம் கழிவுநீர் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.
- இந்தத் திட்டம் 7,480 ஏக்கர் நீர்ப்பரப்புகளைப் புத்துயிர் பெறச் செய்துள்ளதுடன், 2,704 ஏக்கர் பசுமைப் பகுதிகளையும் உருவாக்கியுள்ளது.
- அம்ருத் மித்ரா, நீர் மேலாண்மை, தரக் கண்காணிப்பு, கட்டண வசூல் மற்றும் செடிகள் பராமரிப்பு ஆகியவற்றுக்கு ஆதரவளிப்பதற்காக 28,000க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை ஈடுபடுத்தியுள்ளது.

## இந்திய ஒன்றிய அரசின் நிதிநிலையறிக்கை 2026

- நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பிப்ரவரி 1, 2026 அன்று ஒன்றிய அரசின் நிதிநிலையறிக்கையை தாக்கல் செய்தார்.
- இந்தியாவின் வரலாற்றில் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று நிதி நிலையறிக்கை தாக்கல் செய்யப்பட்டது இதுவே முதல் முறையாகும்.
- இந்த நிதி நிலையறிக்கை தற்சார்பை ஊக்குவிக்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், இந்தியாவின் உலகளாவியப் போட்டித்தன்மையை மேம்படுத்தவும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நிதி நிலையறிக்கையில் உள்ள மொத்த நிதித் தொகை ₹53.5 லட்சம் கோடி ஆகும்.
- இதன் திட்டம் பின்வரும் மூன்று 'கடமைகளில்' கவனம் செலுத்துகிறது: பொருளாதார வளர்ச்சி, மக்களின் கனவுகளுக்கு உதவுதல் மற்றும் அனைவருக்கும் சம வாய்ப்புகளை வழங்குதல்.
- இது, உயிரி மருத்துவ சக்தி, குறைக் கடத்திகள், ஜவுளி, இரசாயனங்கள், அரிய வகை தனிமங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் உள்ளிட்ட ஏழு மூலோபாய மற்றும் முன்னணித் துறைகளில் உற்பத்தியை அதிகரிப்பதில் கவனம் செலுத்துகிறது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) நிதிப் பற்றாக்குறை 4.3% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கிறது.
- சாலைகள் மற்றும் பாலங்கள் போன்ற பெரிய உள்கட்டமைப்புகளைக் கட்டுவதற்காக அரசாங்கம் ₹12.2 லட்சம் கோடி செலவிடவுள்ளது, இது மூலதனச் செலவு (Capex) என்று அழைக்கப்படுகிறது.
- 2026-27 நிதியாண்டுக்கான நிகர சந்தைக் கடன் ₹11.73 லட்சம் கோடியாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

### *பணம் மற்றும் வரிகள்*

- வருமான வரிச் சட்டம் 2025 என்ற புதிய சட்டம் ஏப்ரல் 1, 2026 அன்று நடைமுறைக்கு வரும்.
- தனிநபர்களுக்கான தற்போதைய வருமான வரி வரம்புகளில் எந்த மாற்றங்களும் இல்லை.
- இந்தியத் தரவு மையங்களைப் பயன்படுத்தி மேகக் கணினி சேவைகளை வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு 2047 ஆம் ஆண்டு வரை வரி விலக்கு அளிக்கப்படும்.
- Futures And Options வர்த்தகத்திற்கான பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வரி (STT) அதிகரிக்கப் பட்டுள்ளது.

- 17 புற்றுநோய் மருந்துகளின் விலையைக் குறைக்கும் நோக்கில், அவற்றுக்கான சுங்க வரி (இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரி) குறைக்கப்பட்டுள்ளது.
- லித்தியம்-அயன் மின்கலன்கள் மற்றும் விமானங்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப் படும் பாகங்களுக்கான அடிப்படை சுங்க வரி நீக்கப்பட்டுள்ளது.
- வரி மாற்றங்கள் காரணமாக சோப்புகள், சலவைத் தூள்கள் மற்றும் குடைகளின் விலை உயரக் கூடும்.

***போக்குவரத்து மற்றும் உள்கட்டமைப்பு***

- இந்திய ரயில்வேக்கு ₹2.93 லட்சம் கோடி என்ற அதிக்கப்பட்ச அளவிலான முதலீடு கிடைக்கவுள்ளது.
- மும்பை-புனே மற்றும் சென்னை-பெங்களூரு போன்ற வழித்தடங்கள் உட்பட ஏழு புதிய அதிவேக ரயில் (HSR) வழித்தடங்களை அரசாங்கம் அமைக்கும்.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் இருபது புதிய நீர்வழிகள் திறக்கப் படும்.
- துர்காபூரில் ஒரு சிறப்பு மையத்துடன் கூடிய புதிய கிழக்குத் கடற்கரை தொழில் வழித் தடம் ஒன்று அமைக்கப்படும்.
- புதிய அதிவேக ரயில் வழித்தடங்களில் இரண்டு சென்னைக்கு கிடைக்கும்.

***அறிவியல் மற்றும் தொழில்துறை***

- இந்தியா தனது சொந்த கணினி சிப்களைத் தயாரிப்பதற்கு உதவும் வகையில், இந்திய குறைகடத்தி இயக்கம் (ISM) 2.0 தொடங்கப்பட்டது.
- மருந்துகள் தயாரிப்பதற்கு உதவும் வகையில், உயிரி மருத்துவ சக்தி (Biopharma SHAKTI - மூலோபாய சுகாதாரம் மற்றும் அறிவு கண்காணிப்பு முயற்சி) திட்டத்திற்கு ₹10,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- விண்வெளித் துறைக்கு அதன் திட்டங்களுக்காக ₹13,705 கோடி வழங்கப்பட்டது.
- 200 பழைய தொழில்துறைப் பகுதிகளை (மரபுசார் தொழிற்பகுதிகள்) நவீனமயமாக்கி மேம்படுத்த அரசாங்கம் உதவும்.
- இந்தியா சிறந்த விளையாட்டு உபகரணங்களைத் தயாரிக்க உதவும் வகையில், "விளையாட்டுப் பொருட்கள்" க்காக ஒரு சிறப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டது.

***சுகாதாரம் மற்றும் கல்வி***

- சுகாதார அமைச்சகத்திற்கு ₹1.06 லட்சம் கோடி ஒதுக்கப்படும்.
- வட இந்தியாவில் இரண்டாவது தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் நிறுவனம் (நிம்ஹான்ஸ்-2) அமைக்கப்படும்.
- மருத்துவ சிகிச்சைக்காக அதிக மக்களை இந்தியாவிற்கு ஈர்க்கும் வகையில், அரசாங்கம் ஐந்து பிராந்திய மருத்துவ மையங்களை அமைக்கப்படும்.
- கார்ட்டூன்கள் மற்றும் விளையாட்டுகளை உருவாக்குவதைக் கற்றுக்கொள்வதற்காக புதிய பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் AVGC - Animation, Visual Effects, Gaming, and Comics தொடர்பான சிறப்பு ஆய்வகங்கள் அமைக்கப்படும்.
- கிழக்கு இந்தியாவில் ஒரு புதிய தேசிய வடிவமைப்பு நிறுவனம் (National Institute of Design - NID) திறக்கப்படும்.

*விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாடு*

- விவசாயிகளுக்கு உதவுவதற்காக பாரத்-விஸ்தார் (Bharat-VISTAAR - Versatile Information System for Targeted Agricultural Assistance and Resources) என்றழைக்கப்படும் ஒரு புதிய செயற்கை நுண்ணறிவு (AI) கருவி அறிமுகப்படுத்தப்பட்டது.
- விவசாயிகள் அதிக அளவில் தேங்காய், முந்திரி, கோகோ மற்றும் சந்தன மரங்களை பயிரிட அரசாங்கம் உதவும்.
- பெண் தொழில்முனைவோர் தங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்ய உதவும் வகையில் "SHE மார்ட்ஸ்" திறக்கப்படும்.
- விவசாயிகளுக்கான பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி (PM-Kisan) திட்டத்திற்கு ₹63,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

*பாதுகாப்பு மற்றும் பிற அம்சங்கள்*

- பாதுகாப்புச் செலவினம் (ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைக்கான நிதி) 15.3% அதிகரித்து ₹7.84 லட்சம் கோடியாக உயரும்.
- நாட்டின் பாதுகாப்பைப் பேணுவதற்காக உள்துறை அமைச்சகத்திற்கு ₹2.55 லட்சம் கோடி ஒதுக்கப்படும்.
- இளைஞர்கள் விளையாட்டுகளில் சிறந்து விளங்க உதவுவதற்காக கேலோ இந்தியா திட்டம் தொடங்கப்பட்டது.
- தொழில்நுட்பத்தில் பயன்படுத்தப்படும் சிறப்புத் தாதுக்களைக் கண்டறிவதற்காக ஒடிசா மற்றும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் சிறப்பு "அருமண் தாது வழித் தடங்கள்" அமைக்கப்படும்.
- உயர்கல்வி மற்றும் திறன் மேம்பாட்டை வலுப்படுத்தும் நோக்கில் ஐந்து பல்கலைக் கழக நகரங்கள் அமைக்கப்படும் என்று 2026-27 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப் பட்டது.

## மகாத்மா காந்தி கிராம சுயராஜ்ய முன்முயற்சி

- இந்தியாவில் காதி மற்றும் கைவினைப் பொருட்களை வலுப்படுத்தும் நோக்கில், மகாத்மா காந்தி கிராம சுயராஜ்ய முன்முயற்சி 2026-27 ஆம் ஆண்டு ஒன்றிய நிதி நிலையறிக்கையில் அறிவிக்கப்பட்டது.
- இந்த முன்முயற்சியானது, காதி மற்றும் அது தொடர்பான பொருட்களுக்கான உலகளாவியச் சந்தை இணைப்புகளையும் வணிக அடையாள ஆதரவையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது கைவினைஞர்கள் மற்றும் நெசவாளர்களுக்கான பயிற்சி, திறன் மேம்பாடு மற்றும் உற்பத்தியின் தரம் ஆகியவற்றை நெறிப்படுத்தி ஆதரிக்கும்.
- இந்தத் திட்டத்தால் நெசவாளர்கள், கிராமத் தொழில்கள், ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு (ODOP) திட்டம் மற்றும் கிராமப்புற இளைஞர்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்த முன்முயற்சியானது, தேசிய இழைத் திட்டம் மற்றும் ஜவுளி விரிவாக்கம் மற்றும் வேலை வாய்ப்புத் திட்டம் உள்ளிட்ட ஐந்து முக்கிய கூறுகளைக் கொண்ட ஒரு பரந்த ஒருங்கிணைந்த ஜவுளித் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## ஒருங்கிணைந்த ஜவுளித் திட்டம் – ஒன்றிய நிதிநிலை அறிக்கை 2026/27

- ஒருங்கிணைந்த ஜவுளித் திட்டமானது இந்தியாவின் அதிக வேலைவாய்ப்புகளை வழங்கும் ஜவுளி மற்றும் ஆடைத் துறையை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.
- கடந்த ஆண்டை ஒப்பிடும்போது ஜவுளித் துறைக்கு சுமார் 25% அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- செயற்கை இழைகள், பட்டு, கம்பளி மற்றும் பிற இழைகளை ஊக்குவிப்பதற்காக ஒரு தேசிய இழைத் திட்டம் முன்மொழியப்பட்டது.
- தொழில்நுட்ப ஜவுளி மற்றும் மதிப்புக் கூட்டலை ஆதரிப்பதற்காக மெகா ஜவுளிப் பூங்காக்கள் உருவாக்கப்படும்.
- ஜவுளி விரிவாக்கம் மற்றும் வேலைவாய்ப்புத் திட்டமானது, இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான ஆதரவுடன் பாரம்பரிய மையங்களை நவீன மயமாக்கும்.
- தேசிய கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் திட்டம் நெசவாளர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு இலக்கு சார்ந்த ஆதரவை வழங்கும்.
- மகாத்மா காந்தி கிராம சுயராஜ்ய முன்முயற்சி காதி, கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களை வலுப்படுத்தும்.
- டெக்ஸ்-எகோ (Tex-Eco) முன்முயற்சி நிலையான மற்றும் உலகளவில் போட்டித்தன்மை வாய்ந்த ஜவுளி மற்றும் ஆடைகளை ஊக்குவிக்கும்.
- சமர்த் 2.0 திட்டம் நாடு முழுவதும் உள்ள ஜவுளித் திறன் மேம்பாட்டுச் சூழலை மேம்படுத்தும்.

## மாற்றுத்திறனாளிகள் நலத் திட்டங்கள் – 2026–27

- மாற்றுத்திறனாளிகளுக்கான திறன் அடிப்படையிலான வேலைவாய்ப்பு மற்றும் உதவி ஆதரவை மேம்படுத்துவதற்காக இரண்டு புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டன.
- திவ்யாங்ஜன் கௌஷல் யோஜனா திட்டமானது, தகவல் தொழில்நுட்பம் (IT), AVGC (Animation, Visual Effects, Gaming and Comics), விருந்தோம்பல் மற்றும் உணவு மற்றும் பானங்கள் துறைகளில் மாற்றுத் திறனாளிகளுக்குத் தனிப்பயனாக்கப்பட்ட, தொழில் துறைக்குத் தொடர்புடைய பயிற்சியை வழங்கும்.
- இந்தத் திட்டம், பல்வேறு வகை மாற்றுத் திறனாளிகளுக்குப் பொருத்தமான பணி சார்ந்த மற்றும் செயல்முறை அடிப்படையிலான பணிகளில் கவனம் செலுத்துகிறது.
- திவ்யாங் சஹாரா யோஜனா திட்டமானது, தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு உயர்தர உதவி சாதனங்கள் சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், இந்தியச் செயற்கை உறுப்புகள் உற்பத்தி கழகத்திற்கு (ALIMCO) உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கு ஆதரவளிக்கப்படும்.
- மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூத்தக் குடிமக்களுக்காக, பிரதம அமைச்சரின் திவ்யாஷா கேந்திரா மையங்களை வலுப்படுத்தவும், நவீன சில்லறை விற்பனை மையங்கள் போன்ற உதவி தொழில்நுட்பச் சந்தைகளை அமைக்கவும் இந்த நிதி நிலை அறிக்கை முன்மொழிகிறது.

## மத்திய பட்ஜெட் 2026 சிறப்பம்சங்கள்

- பிரதமர் நரேந்திர மோடி இரண்டாவது முறையாக அமோக வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தபோது, 2019-ல் இந்தியாவின் முதல் முழுநேர பெண் நிதியமைச்சராக நிர்மலா சீதாராமன் நியமிக்கப்பட்டார்.
- 2024-ல் மோடி மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்த பிறகும், நிர்மலா சீதாராமன் தனது நிதித்துறையைத் தக்க வைத்துக் கொண்டார்.
- மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், ஞாயிற்றுக்கிழமை (பிப்ரவரி 1, 2026) அன்று, ஏப்ரல் 2026 முதல் மார்ச் 2027 வரையிலான காலத்திற்கு தனது தொடர்ச்சியான ஒன்பதாவது மத்திய பட்ஜெட்டை மக்களவையில் தாக்கல் செய்தார்.
- சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் முதல் முறையாக, இது ஒரு ஞாயிற்றுக்கிழமை அன்று தாக்கல் செய்யப்பட்டது.
- மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான வரி வருவாய்ப் பகிர்வுக்கான 2026-2031 ஆம் ஆண்டுக்கான 16வது நிதிக் குழுவின் அறிக்கையையும் நிதியமைச்சர் தாக்கல் செய்தார்.
- தொடர்ச்சியாக 9 பட்ஜெட்களைத் தாக்கல் செய்ததன் மூலம், நிர்மலா சீதாராமன் நீண்ட காலம் பணியாற்றிய நிதியமைச்சர் ஆனார்.
- இது, வெவ்வேறு காலக் கட்டங்களில் முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் தாக்கல் செய்த 10 பட்ஜெட்கள் என்ற சாதனையை நிர்மலா சீதாராமன் நெருங்க வழி வகுக்கும்.
- முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் 10 முறை மத்திய பட்ஜெட்டைத் தாக்கல் செய்துள்ளார், அதே சமயம் பி. சிதம்பரம் ஒன்பது முறை பட்ஜெட்டைத் தாக்கல் செய்துள்ளார், ஆனால் அவை இரண்டும் தொடர்ச்சியான ஆண்டுகளில் அல்ல.
- தேசாய் 1959 முதல் 1964 வரை நிதியமைச்சராக இருந்த காலத்தில் ஆறு பட்ஜெட்களையும், 1967 மற்றும் 1969-க்கு இடையில் நான்கு பட்ஜெட்களையும் தாக்கல் செய்தார்.
- முன்னாள் நிதியமைச்சர்களான பி. சிதம்பரம் மற்றும் பிரணாப் முகர்ஜி ஆகியோர் வெவ்வேறு பிரதமர்களின் கீழ் முறையே ஒன்பது மற்றும் எட்டு பட்ஜெட்களைத் தாக்கல் செய்துள்ளனர்.
- தொடர்ச்சியாக நீண்ட காலம் பணியாற்றிய மற்றொரு நிதியமைச்சர் சி. டி. தேஷ்முக் ஆவார்.
- அவர் ஜூன் 1, 1950 அன்று அமைச்சகப் பொறுப்பை ஏற்று, சுமார் ஆறு ஆண்டுகள் மற்றும் இரண்டு மாதங்கள் அப்பதவியில் நீடித்தார்.
- பொருளாதார தாராளமயமாக்கலுக்குப் பெயர் பெற்ற மன்மோகன் சிங், ஜூன் 21, 1990 மற்றும் ஜூன் 16, 1996-க்கு இடையில் சுமார் ஐந்து ஆண்டுகள் நிதியமைச்சராக இருந்தார்.
- பின்னர் பிரதமராக இருந்தபோது, சிங் 2008-ல் ஒரு முறையும், மீண்டும் 2012-ல் ஒரு முறையும் குறுகிய காலத்திற்கு நிதித்துறையின் கூடுதல் பொறுப்பை வகித்தார்.
- சுதந்திர இந்தியாவின் முதல் நிதியமைச்சர் ஆர். கே. சண்முகம் செட்டி ஆவார்.
- சுதந்திர இந்தியாவின் முதல் மத்திய பட்ஜெட் நவம்பர் 26, 1947 அன்று தாக்கல் செய்யப்பட்டது.
- பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையிலான என்டிஏ அரசாங்கத்தில் இந்தியாவின் நிதியமைச்சராக இருந்த யஷ்வந்த் சின்ஹா, 1999 ஆம் ஆண்டு மத்தியப் பட்ஜெட்டை காலை 11 மணிக்கு அறிவித்து, நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டு வந்த மரபை மாற்றினார்.

- இதற்கு முன்னர், பிரிட்டிஷ் காலை நேரத்துடன் ஒத்துப் போகும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு காலனித்துவ நடைமுறையாக, பட்ஜெட் மாலை 5 மணிக்கு தாக்கல் செய்யப்பட்டு வந்தது.
- பிப்ரவரி 1, 2020 அன்று நிர்மலா சீதாராமன் ஆற்றிய பட்ஜெட் உரை இரண்டு மணி நேரம் 40 நிமிடங்கள் நீடித்ததால், மிக நீண்ட பட்ஜெட் உரை ஆற்றியவர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.
- 1977 ஆம் ஆண்டில் ஹிருபாய் முல்ஜிபாய் படேல் ஆற்றிய இடைக்கால பட்ஜெட் உரை, வெறும் 800 வார்த்தைகளுடன் இது வரை இல்லாத அளவில் மிகக் குறுகிய உரையாகும்.
- பாராளுமன்ற ஒப்புதல் செயல்முறையை மார்ச் மாத இறுதிக்குள் முடித்து, ஏப்ரல் 1 ஆம் தேதி நிதியாண்டின் தொடக்கத்தில் இருந்தே பட்ஜெட்டை அமல்படுத்த அரசாங்கத்திற்கு வசதியாக, 2017 ஆம் ஆண்டில் பட்ஜெட் தாக்கல் செய்யும் தேதி பிப்ரவரி 1 ஆம் தேதிக்கு மாற்றப்பட்டது.
- பிப்ரவரி 28 அன்று பட்ஜெட்டை தாக்கல் செய்வதன் மூலம், 2-3 மாத பாராளுமன்ற ஒப்புதல் செயல்முறையைக் கணக்கில் கொண்டால், மே/ஜூன் மாதத்திற்கு முன்பு பட்ஜெட் அமலாக்கத்தைத் தொடங்க முடியாது என்ற நிலை இருந்தது.

## இந்தியாவில் நீதித்துறை இட ஒதுக்கீடு

- பாஜக தலைமையிலான மத்திய அரசின் கீழ் உள்ள மத்திய சட்ட அமைச்சகம் நாடாளுமன்றத்தில் அளித்த எழுத்துப்பூர்வப் பதிலின்படி, இந்தியாவின் மற்ற பகுதிகளை ஒப்பிடும்போது, மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றங்களில் பட்டியல் சாதி, பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த நீதிபதிகளின் பிரதிநிதித்துவம் தமிழ்நாட்டில் தான் மிக அதிகமாக உள்ளது.
- நாட்டில் உள்ள மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றங்களில் 14.15% தலித்துகள், 5.12% பழங்குடியினர் மற்றும் 26.64% இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நீதிபதிகளாக உள்ளனர்.
- நாட்டின் மற்ற பகுதிகளை ஒப்பிடும்போது, தென் இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவில் இவர்களிடையே பன்முகத் தன்மை அதிகமாக இருப்பதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.
- உயர் நீதிமன்றங்களுடன் ஒப்பிடும்போது, கீழமை நீதிமன்றங்களில் பிரதிநிதித்துவம் அதிகமாக உள்ளது என்றும் அந்தப் புள்ளி விவரங்கள் காட்டின.
- 2018 முதல் நியமிக்கப்பட்ட 847 நீதிபதிகளில் 3.89% பேர் மட்டுமே தலித்துகள், 2% பேர் பழங்குடியினர் மற்றும் 12.27% பேர் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆவர்.
- உத்தரப் பிரதேசம், பீகார், மகாராஷ்டிரா மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் கீழமை நீதிமன்றங்களில் குறிப்பிடத்தக்க பிரதிநிதித்துவம் உள்ளது.
- அதே சமயம், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி, மேற்கு வங்கம் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் உள்ள கீழமை நீதிமன்றங்களில் பட்டியல் சாதி, பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த நீதிபதிகள் "பூஜ்ஜியம்" என்ற எண்ணிக்கையில் உள்ளனர்.
- பெரிய மாநிலங்களில், தமிழ்நாட்டில் இந்த வகைகளைச் சேர்ந்தவர்கள் 97.65% (1,234-ல் 1,205) உள்ளனர் என்ற நிலையில் அவர்களில் பட்டியல் சாதியினர் 20.66% (255), பழங்குடியினர் 1.21% (15) மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 75.76% (935) ஆகியோர் உள்ளனர்.

- உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளாக உச்ச நீதிமன்ற கொலீஜியத்தால் பரிந்துரைக்கப்படுபவர்கள் மட்டுமே நியமிக்கப்படும் நிலையில், அந்தந்த மாநில அரசுகள், அந்தந்த உயர் நீதிமன்றங்களுடன் கலந்தாலோசித்து, அந்தந்த மாநில நீதித்துறை சேவையில் நீதித்துறை அதிகாரிகளை நியமனம் மற்றும் ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்குகின்றன.
- மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் இட ஒதுக்கீட்டுக் கொள்கை இல்லை..

## 2025ல் 30 லட்சம் இணைய வழித் தாக்குதல் சம்பவங்கள் - இந்தியா

- இந்திய கணினி அவசரகாலப் பதிலளிப்புக் குழு (CERT-In) இணையவழித் தாக்குதல்களுக்கு எதிரான இந்தியாவின் முன்னணிப் பாதுகாப்பு அமைப்பாக உருவெடுத்துள்ளது.
- இது 2004 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000-இன் பிரிவு 70B-இன் கீழ் நிறுவப்பட்டது.
- CERT-In, மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் இணைய வழிச் சம்பவங்களுக்கான தேசியப் பதிலளிப்பு முகமையாகச் செயல் படுகிறது.
- 2025 ஆம் ஆண்டில், CERT-In 29.44 லட்சத்திற்கும் மேற்பட்ட இணையவழிச் சம்பவங்களைக் கையாண்டது.
- 2025 ஆம் ஆண்டளவில், இந்தியாவில் இணைய இணைப்புகளின் எண்ணிக்கை 100 கோடி என்ற மைல்கல்லைத் தாண்டி, 100.29 கோடியாக உயர்ந்தது என்ற நிலையில் இது மார்ச் 2014ல் இருந்த 25.15 கோடியுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஆகும்.
- உலகப் பொருளாதார மன்றத்தால் (WEF) வெளியிடப்பட்ட 'குளோபல் சைபர் செக்யூரிட்டி அவுட்லுக் 2025' அறிக்கையில், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான சூழ்நிலை விழிப்புணர்வு அமைப்புகளைப் பயன்படுத்தியதற்காக CERT-In சிறப்பித்துக் காட்டப்பட்டுள்ளது.

## இந்தியாவின் மருந்து மற்றும் மருத்துவச் சாதனங்கள் துறையில் மாற்றம்

- இந்தியாவின் மருந்துத் தொழில், சிக்கலான பொதுவான மருந்துகள், பயோசிமிலர்கள் மற்றும் புதுமைகளில் தனது கவனத்தைக் கூர்மையாக்கி வருகிறது.
- குறைந்த விலையில் தடுப்பூசிகளை வழங்குவதில் இந்தியா ஒரு உலகளாவிய தலைவராக உள்ளது.
- தற்போது, மதிப்பு அடிப்படையில் மருந்துப் பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியா உலக அளவில் 11வது இடத்தில் உள்ளது என்பதோடு இதன் உலகளாவியப் பங்கு 3 சதவீதமாக உள்ளது.
- அளவு அடிப்படையில் உலகிலேயே மூன்றாவது பெரிய நாடாக இந்தியா உள்ளதுடன், உலகளாவிய பொதுவான மருந்துகளுக்கான தேவையில் சுமார் 20 சதவீதத்தைப் பூர்த்தி செய்கிறது என்ற நிலையில் 2025 நிதியாண்டில் இது 191 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.
- இந்த ஏற்றுமதிகளில் பாதிக்கும் மேற்பட்டவை அமெரிக்கா மற்றும் ஐரோப்பா போன்ற கடுமையான ஒழுங்குமுறைச் சந்தைகளைக் கொண்ட நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

- பொதுவான மருந்துகளுக்கு அப்பால், உலகின் பெரும்பாலான டிபிடி, பிசிஜி மற்றும் தட்டம்மை தடுப்பூசிகளையும் இந்தியா வழங்கி வருகிறது.
- இந்தியாவின் மருத்துவச் சாதனங்கள் துறையும் வேகமாக உலக அளவில் போட்டித்தன்மை கொண்டதாக மாறி வருகிறது என்பதோடு 2025 நிதியாண்டில் 187 நாடுகளுக்கு இது ஏற்றுமதி செய்கிறது.

## கவச் 4.0

- இந்திய இரயில்வேயானது ஒரே நாளில் 472.3 கி.மீ. தூரத்திற்கு கவாச் அமைப்பு 4.0 பாதுகாப்பு அமைப்பைச் செயல்படுத்தியுள்ளது என்பதோடு இது இதுவரையில்லாத அளவிலான நீண்ட தொலைவாகும்.
- இந்த விரிவாக்கம் மேற்கு, வடக்கு மற்றும் கிழக்கு மத்திய ரயில்வேயில் உள்ள முக்கியப் பகுதிகளை உள்ளடக்கியுள்ளது என்பதோடு இதன் மூலம் கவாச் பாதுகாப்பு வசதி மொத்தம் 1,300 கிலோமீட்டருக்கும் மேல் விரிவடைகிறது.
- கவாச் 4.0 என்பது இந்தியாவின் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தானியங்கி ரயில் பாதுகாப்பு (ATP) அமைப்பாகும்.
- இந்த அமைப்பு அபாயகரமான நிலையில் சமிக்ஞைகளைக் கடந்து செல்வதைத் (SPAD) தடுப்பதுடன், அதிவேகத்தையும் தவிர்க்கிறது என்பதோடு மேலும் அதிகப் போக்குவரத்து நெரிசல் உள்ள ரயில் வழித்தடங்களில் செயல்பாட்டு நம்பகத் தன்மையை மேம்படுத்துகிறது.

## சம்பூர்ணதா அபியான் 2.0

- நிதி ஆயோக்கானது, சம்பூர்ணதா அபியான் 2.0 என்பதை ஜனவரி 28 முதல் ஏப்ரல் 14, 2026 வரை மூன்று மாத கால பிரச்சாரமாகத் தொடங்கியுள்ளது.
- இந்தப் பிரச்சாரத்தின் நோக்கம், இந்தியா முழுவதும் உள்ள 112 லட்சியமிகு மாவட்டங்களில் 5 முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளிலும் (KPIs) மற்றும் 513 லட்சியமிகு வட்டாரங்களில் 6 முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளிலும் முழுமையான இலக்கை அடைவதாகும்.
- முக்கிய கவனம் செலுத்தப்படும் பகுதிகளில் குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம், அங்கன்வாடி மையங்களில் உள்ள அடிப்படை வசதிகள், பள்ளிகளில் உள்ள மாணவிகளுக்கான கழிப்பறைகள் மற்றும் கால்நடைத் தடுப்பூசி ஆகியவை அடங்கும்.
- மாவட்டங்களும் வட்டாரங்களும் 3 மாத செயல் திட்டங்களைத் தயாரித்து, மாதாந்திர முன்னேற்றக் கண்காணிப்பை மேற்கொண்டு, கள ஆய்வுப் பயணங்களை மேற்கொள்ளும்.
- இந்த முன்முயற்சியானது சம்பூர்ணதா அபியான் 2024-ஐ அடிப்படையாகக் கொண்டதுடன், லட்சியமிகு மாவட்டங்கள் திட்டம் (2018) மற்றும் லட்சியமிகு வட்டாரங்கள் திட்டம் (2023) ஆகியவற்றின் இலக்குகளையும் ஆதரிக்கிறது.

## அதிவேக ரயில் பாதைகள்

- மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், 2026 ஆம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில், சென்னையில் இருந்து இரண்டு வழித்தடங்கள் உட்பட ஏழு புதிய அதிவேக ரயில் (HSR) வழித்தடங்களை அறிவித்தார்.

- சென்னையானது எதிர்காலத்தில் இரண்டு புதிய அதிவேக ரயில் பாதைகளைப் பெற உள்ளது.
- இந்த ஏழு HSR வழித்தடங்கள்: மும்பை முதல் புனே, புனே முதல் ஹைதராபாத், சென்னை முதல் பெங்களூரு, சென்னை முதல் ஹைதராபாத், ஹைதராபாத் முதல் பெங்களூரு, டெல்லி முதல் வாரணாசி மற்றும் வாரணாசி முதல் சிலிகுரி வரை.
- 2026-27 ஆம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட ஏழு அதிவேக ரயில் பாதைகளில் மூன்று ஹைதராபாத்தை இணைக்கின்றன.
- இந்தத் திட்டத்தைத் தேசிய அதிவேக ரயில் கார்ப்பரேஷன் லிமிடெட் (NHSRCL) செயல்படுத்தும்.
- புதிய அதிவேக ரயில் பாதையிலுள்ள ரயில்கள் குறைந்தபட்சம் மணிக்கு 230 கிமீ வேகத்தில் இயக்கப்படும்.
- புல்லட் ரயில்கள் மணிக்கு 370 கிமீ வேகத்தில் இயக்கப்படும்.
- HSR வழித் தடத்திற்கு, புல்லட் ரயில்களைப் போன்ற சர்வதேச தரங்களைப் போன்ற புதிய பாதைகள் கட்டப்படும்.
- பயணிகள் அதிக அளவில் விமானப் பயணம் மேற்கொள்ளும் நகரங்களுக்கு இடையே HSR வழித்தடங்கள் இயக்கப்படும்.
- இந்த வழித்தடங்கள் 4000 கி.மீ நீளம் கொண்டதாக இருக்கும் என்பதோடு இவை ₹16 லட்சம் கோடி செலவில் உருவாக்கப்படும்.
- தற்போது, வந்தே பாரத் உட்பட ரயில்களில் சென்னையிலிருந்து பெங்களூருக்கு பயண நேரம் சுமார் ஆறு மணி நேரமாகவும், ஹைதராபாத்திற்கு 12 மணி நேரத்திற்கும் அதிகமாகவும் உள்ளது.
- இந்த வழித்தடங்கள் சென்னையிலிருந்து பெங்களூருக்கு இடையிலான பயண நேரத்தை 1.5 மணி நேரமாகவும், பெங்களூருவிலிருந்து ஹைதராபாத் 2 மணி நேரமாகவும், ஹைதராபாத் முதல் சென்னை வரை 2 மணி நேரம் 55 நிமிடங்களாகவும் குறைக்கும்.
- மேற்கு வங்காளத்தில் உள்ள தன்குனியிலிருந்து குஜராத்தில் உள்ள சூரத்தை இணைக்கும் புதிய பிரத்தியேக சரக்கு வழித் தடத்தையும் நிதியமைச்சர் அறிவித்தார்.

## 2026 மத்திய பட்ஜெட் புள்ளி விவரங்கள்

- 2026-27 நிதியாண்டிற்கான மொத்த சந்தைக் கடன்கள் ₹17.2 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதோடு, நிகரக் கடன்கள் ₹11.7 லட்சம் கோடியாக உள்ளது.
- இது 2026 நிதியாண்டில் இருந்த ₹14.8 லட்சம் கோடியுடன் ஒப்பிடப்பட்டது மற்றும் 2026 நிதியாண்டின் பட்ஜெட் மதிப்பீடுகளை விட 16% அதிகமாகும்.
- 2026 நிதியாண்டிலேயே, ₹14.82 லட்சம் கோடி கடன்களை ஈர்த்துக் கொள்வதில் பத்திரச் சந்தை சிரமப்பட்டது.
- நிதிப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.3% ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது என்பதோடு இது 2025-26 ஆம் ஆண்டில் இருந்த 4.4% ஐ விட சற்றே குறைவாகும்.
- 2026-27 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.5% ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- 2025-26 திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 56.1 சதவீதமாக இருந்த கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம், 2026-27 பட்ஜெட் மதிப்பீடுகளில் 55.6% ஆகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 2026-27 ஆம் ஆண்டிற்கு, கடன் அல்லாத வருவாய்கள் ₹36.5 லட்சம் கோடியாகவும், மொத்தச் செலவினம் ₹53.5 லட்சம் கோடியாகவும் கணிக்கப்பட்டுள்ளது என்பதோடு நிகர வரி வருவாய்கள் ₹28.7 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இதனுடன் ஒப்பிடுகையில், 2025-26 திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் கடன் அல்லாத வருவாய்கள் ₹34 லட்சம் கோடியாகவும், நிகர வரி வருவாய்கள் ₹26.7 லட்சம் கோடியாகவும் இருந்தன.
- மொத்தச் செலவினம் ₹49.6 லட்சம் கோடியாக இருந்தது என்பதோடு இதில் மூலதனச் செலவினமாக சுமார் ₹11 லட்சம் கோடி அடங்கும்.
- இந்த பட்ஜெட்டிற்கான நிதி ஆதாரங்களில் கடன்கள் மற்றும் பிற பொறுப்புகளே மிகப்பெரிய பங்கைக் கொண்டுள்ளன என்பதோடு இது மொத்த வரவுகளில் 24% ஆகும், இது முந்தைய ஆண்டிலிருந்து மாறாமல் உள்ளது.
- வருமான வரி இரண்டாவது பெரிய பங்களிப்பாக 21% ஆக உள்ளது (கடந்த ஆண்டு 22% ஆக இருந்தது), அதைத் தொடர்ந்து ஜிஎஸ்டி மற்றும் பிற வரிகள் 15% ஆக உள்ளன என்ற நிலையில் இது 2025-26 ஆம் ஆண்டில் 18% ஆக இருந்தது.
- நிறுவனங்கள் வரியும் 18% என்ற குறிப்பிடத்தக்கப் பங்கைக் கொண்டுள்ளது.
- மீதமுள்ள பட்ஜெட் வளங்கள் வரி அல்லாத வருவாய், மத்திய கலால் வரிகள், சுங்க வரிகள் மற்றும் கடன் அல்லாத மூலதன வரவுகள் ஆகியவற்றிலிருந்து வருகின்றன.
- பட்ஜெட்டில், செலவினத்தில் 22% (கடந்த ஆண்டிலிருந்து மாறாமல்) மாநிலங்களின் வரிகள் மற்றும் தீர்வைகளின் பங்கிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து வட்டி செலுத்துதல்களுக்கு 20% ஒதுக்கப்பட்டுள்ளது.
- மொத்தச் செலவினத்தில் 26 சதவீதமும், வருவாய் வரவுகளில் 40 சதவீதமும் வட்டி செலுத்துதல்களுக்குச் செல்கிறது.
- மொத்த செலவினத்தில் 17 சதவீதம் மத்தியத் துறைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படுகிறது.
- பாதுகாப்புத் துறைக்கு 11 சதவீதமும், நிதி ஆணையம் மற்றும் பிற மானியங்கள் மற்றும் மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்களுக்கு முறையே 8 சதவீதம் மற்றும் 7 சதவீதமும் ஒதுக்கப் படுகின்றன.
- அரசாங்கச் செலவினத்தில் 2 சதவீதம் ஓய்வூதியங்களுக்காகச் செலவிடப்படுகிறது என்ற நிலையில் மீதமுள்ள 7 சதவீதம் மற்ற இனங்களுக்காகச் செலவிடப்படுகிறது.
- 2026-27 ஆம் ஆண்டில் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் 10 சதவீதமாக இருக்கும் என்று அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது.

## வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கீடு

- மொத்தம் ₹53.5 லட்சம் கோடி ஒதுக்கீட்டைக் கொண்ட 2026-27 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட், துறைசார் மற்றும் துறைசாரா செலவினங்களாகப் பிரிக்கப் பட்டு உள்ளது.
- நிதி அமைச்சகத்திற்கு அதிகபட்சமாக ₹19.72 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது என்பதோடு இதில் வருவாய்ச் செலவினங்களுக்காக ₹17.22 லட்சம் கோடியும், மூலதனச் செலவினங்களுக்காக ₹2.50 லட்சம் கோடியும் அடங்கும்.

- இந்த ஒதுக்கீடு வட்டி செலுத்துதல், மானியங்கள் மற்றும் மாநிலங்களுக்கான நிதிப் பரிமாற்றங்களுக்கான செலவினங்களைப் பிரதிபலிக்கிறது.
- 2026-27 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பாதுகாப்புத் துறைக்கு இதுவரை இல்லாத வகையில் அதிகபட்சமாக ₹7.85 லட்சம் கோடி ஒதுக்கீட்டை அறிவித்தார்.
- இதில் வருவாய் செலவினமாக ₹5.54 லட்சம் கோடியும், மூலதனச் செலவினமாக ₹2.31 லட்சம் கோடியும் அடங்கும்.
- ரயில்வே அமைச்சகத்திற்கு ₹2.93 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- துறைசாரா செலவினங்கள் என்பது தனிப்பட்ட அமைச்சகங்களுக்கு ஒதுக்கப் படாத கட்டாயப் பொறுப்புகளை உள்ளடக்கியது.
- இதில் கடந்தகாலக் கடன்களுக்கான வட்டி செலுத்துதல், பாதுகாப்பு மற்றும் குடிமைப் பணி ஊழியர்களுக்கான ஓய்வூதியங்கள், மற்றும் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கான வரிப் பகிர்வு மற்றும் மானியங்கள் போன்ற சட்டப்பூர்வ நிதிப் பரிமாற்றங்கள் ஆகியவை அடங்கும்.
- 16வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, 2026-27 நிதியாண்டிற்காக மாநிலங்களுக்கு நிதிக் குழு மானியங்களாக அரசாங்கம் ₹1.4 லட்சம் கோடியை வழங்கியுள்ளது.

## உலக கடல் உணவு மாநாடு 2026

- இந்தியா முதன்முறையாக 2026 ஆம் ஆண்டுக்கான உலக கடல் உணவு மாநாட்டை (WSC) சென்னையில் நடத்தவுள்ளது.
- உலக கடல் உணவு மாநாடு என்பது மீன்வளம் மற்றும் மீன் வளர்ப்பு குறித்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒரு உலகளாவிய கூடுகையாகும்.
- WSC 2026 மாநாட்டை சர்வதேச மீன் ஆய்வாளர்கள் சங்கம், பிடிஏ வென்ச்சர்ஸ் மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (NFDB) ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்கின்றன.
- உணவு பதப்படுத்துதல் தொழில்கள் அமைச்சகம், புவி அறிவியல் அமைச்சகம் மற்றும் நிதி ஆயோக் ஆகியவற்றின் ஆதரவுடன், மீன்வளத் துறையால் இது இணைந்து ஏற்பாடு செய்யப்படுகிறது.
- இந்த மாநாடு நீடித்த கடல் உணவு வர்த்தகம், மீன்பிடித் தொழில்நுட்பம், உணவுப் பாதுகாப்பு மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

## வடகிழக்கு இந்தியாவில் பௌத்த சுற்றுலா வழித்தடம்

- 2026-27 ஆம் ஆண்டுக்கான மத்திய நிதிநிலையறிக்கையில் வடகிழக்கு இந்தியாவில் ஒரு பௌத்த சமயம் சார்ந்த பகுதிகளில் சுற்றுலா வழித்தடத்தை மேம்படுத்துவதற்காக ஒரு புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது.
- இந்தத் திட்டம் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள பௌத்தக் கோயில்கள் மற்றும் மடாலயங்களைப் பாதுகாத்து மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பௌத்த யாத்திரைத் தலங்களைச் சுற்றியுள்ள சுற்றுலா உள்கட்டமைப்பு மற்றும் இணைப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.
- இந்த முயற்சியானது, கலாச்சார பாரம்பரியம் மற்றும் பிராந்திய வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## 2026 டெல்லி பிரகடனம்

- புது டெல்லியில் நடைபெற்ற இரண்டாவது இந்திய-அரபு வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தின் போது 2026 டெல்லி பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- பஹ்ரைனில் நடைபெற்ற முதல் இந்திய-அரபு வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்று 10 ஆண்டுகள் நிறைவடைந்ததை இந்தக் கூட்டம் குறித்தது.
- இந்தப் பிரகடனம் இந்தியாவாலும் அரபு நாடுகளின் கூட்டமைப்பாலும் கூட்டாக வெளியிடப் பட்டது.
- இது இஸ்ரேல்-பாலஸ்தீனப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காண்பதற்காக 2002 ஆம் ஆண்டின் அரபு அமைதி முன்முயற்சிக்கு ஆதரவளித்தது.
- இது சூடான், லிபியா மற்றும் சோமாலியா போன்ற நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு மதிப்பளிப்பதை வலியுறுத்தியது.
- இது ஏமனில் ஹைதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களைக் கண்டித்ததுடன், ஏமனின் ஒற்றுமை மற்றும் நிலைத்தன்மைக்கு ஆதரவளித்தது.

## உச்ச நீதிமன்றத்தில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த வழக்கு

- மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி, வாக்காளர் பட்டியல்களின் சிறப்புத் தீவிர திருத்தம் (SIR) தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் ஆஜரானார்.
- இந்தியாவில் பதவியில் இருக்கும் ஒரு முதலமைச்சர் தனது சொந்த வழக்கில் வாதிடுவதற்காக உச்ச நீதிமன்றத்தில் தனிப்பட்ட முறையில் ஆஜரானது இதுவே முதல் முறையாகும்.
- இந்தியத் தேர்தல் ஆணையத்தால் (ECI) நடத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் திருத்தச் செயல்முறையை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், தனிப்பட்ட முறையில் வாதங்களை முன்வைக்க அவர் நீதிமன்றத்திடம் அனுமதி கோரினார்.
- இந்த வழக்கு, இந்தியத் தேர்தல் ஆணையத்தால் (ECI) மேற்கொள்ளப்படும் வாக்காளர் பட்டியல்களின் சிறப்புத் தீவிர திருத்தம் (SIR) தொடர்பானது.

## நுரையீரல் புற்றுநோய் பராமரிப்பு குறித்த வழிகாட்டுதல்கள்

- இந்தியா தனது முதல் தேசிய, சான்றுகள் அடிப்படையிலான நுரையீரல் புற்றுநோய் பராமரிப்பு வழிகாட்டுதல்களை "நுரையீரல் புற்றுநோய் சிகிச்சை மற்றும் தணிப்பு: சான்றுகள் அடிப்படையிலான வழிகாட்டுதல்கள்" என்ற தலைப்பில் வெளியிட்டது.
- இந்த ஆவணம் நோயறிதல், சிகிச்சை மற்றும் தணிப்புப் பராமரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய 15 பரிந்துரைகளை வழங்குகிறது.
- இந்தியா முழுவதும் நுரையீரல் புற்றுநோய் பராமரிப்பில் ஆரம்பகால நோயறிதலை ஊக்குவிப்பது, சிகிச்சையைத் தரப்படுத்துவது மற்றும் பல்வேறு பிராந்திய ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதே இதன் நோக்கமாகும்.
- இந்த வழிகாட்டுதல்கள் அரசு மற்றும் தனியார் சுகாதார அமைப்புகள் இரண்டிற்கும் பொருந்தும்.

## தேசிய குப்பை சேகரிப்பாளர்கள் தரவுத் தளம்

- மத்திய அரசு, 'நமஸ்தே' (NAMASTE - தேசிய இயந்திரமயமாக்கப்பட்ட சுகாதார சுற்றுச் சூழல் அமைப்புக்கான தேசிய நடவடிக்கை) திட்டத்தின் கீழ், குப்பை சேகரிப்பாளர்கள் குறித்த முதல் தேசிய தரவுகளை வெளியிட்டது.
- 35 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் சுமார் 1.52 லட்சம் குப்பை சேகரிப்பாளர்கள் அடையாளம் காணப் பட்டு, அவர்களின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டுள்ளன.
- குப்பை சேகரிப்பாளர்களில் சுமார் 84.5% பேர் பட்டியலின சாதிகள் (SC), பட்டியலின பழங்குடியினர் (ST) மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) சமூகங்களைச் சேர்ந்தவர்கள்.
- விவரங்கள் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களில் ஏறக்குறைய 48.7% பேர் பெண்கள், 51.3% பேர் ஆண்கள் மற்றும் 12 பேர் திருநங்கைகள் ஆவர்.
- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் நமஸ்தே திட்டம், துப்புரவுப் பணியாளர்களை அங்கீகரிப்பதற்கும், அபாயகரமான கழிவுநீர் மற்றும் கழிவுநீர் தொட்டிகள் சுத்தம் செய்வதால் ஏற்படும் இறப்புகளை தடுப்பதும் ஆகும்.

## உச்ச நீதிமன்ற மரண தண்டனை விவரம்

- கடந்த மூன்று ஆண்டுகளில் ஒரு மரண தண்டனையை கூட உச்ச நீதிமன்றம் உறுதிப்படுத்தவில்லை.
- இந்தியாவில் மரண தண்டனைகள் குறித்த வருடாந்திர புள்ளிவிவர அறிக்கையின்படி இது கூறப் பட்டது.
- ஹைதராபாத்தில் உள்ள NALSAR சட்டப் பல்கலைக்கழகத்தின் குற்றவியல் நீதித்துறை முன்முயற்சியான ஸ்கொயர் சர்க்கிள் கிளினிக் என்ற அமைப்பால் இது வெளியிடப் பட்டது.
- உண்மையில், 2025 ஆம் ஆண்டில், மரண தண்டனை விதிக்கப்பட்ட 10 கைதிகளை உச்ச நீதிமன்றம் விடுவித்தது.
- கடந்த பத்தாண்டுகளில் இதுபோன்ற அதிகபட்ச விடுதலைகள் இதுவாகும்.
- கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா முழுவதும் மரண தண்டனை போக்குகளை இந்த அறிக்கை ஆய்வு செய்தது.
- 2016 முதல் 2025 வரை நாடு முழுவதும் 1,310 மரண தண்டனைகளை அமர்வு நீதிமன்றங்கள் வழங்கியதாகக் கண்டறியப்பட்டது.
- கீழமை நீதிமன்றங்கள் 2025 ஆம் ஆண்டில் மட்டும் 128 நபர்களுக்கு மரண தண்டனை விதித்தன.

### *நிரபராதிகளின் அதிக விகிதம்*

- 1,310 மரண தண்டனைகளில், 842 தீர்ப்புகள் உயர் நீதிமன்றங்களால் வழங்கப்பட்டன.
- அவற்றில் 70 - அதாவது, வெறும் 8.31% மட்டுமே - உறுதி செய்யப்பட்டன.
- உயர் நீதிமன்றங்கள் மரண தண்டனை விதிக்கப்பட்ட 285 பேரை விடுவித்தன.
- அதே சமயம் 411 மரண தண்டனைகள் ரத்து செய்யப்பட்டன.

- உச்ச நீதிமன்றத்தின் நிலைப்பாடு இன்னும் கட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது என்பதோடு கடந்த மூன்று ஆண்டுகளில் எந்த மரண தண்டனையும் உறுதிப்படுத்தப்படவில்லை.
- மேலும், உயர் நீதிமன்றங்களால் உறுதிப்படுத்தப்பட்ட, அமர்வு நீதிமன்றங்கள் விதித்த மரண தண்டனைகளில், ஒரு தண்டனை கூட இன்னும் உச்ச நீதிமன்றத்தால் உறுதி செய்யப்படவில்லை.
- உச்ச நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட 37 மரண தண்டனைகளில், 15 பேர் விடுதலை செய்யப்பட்டனர், 14 பேர் வேறு தண்டனைக்கு உள்ளாக்கப் பட்டனர்.
- டிசம்பர் 31, 2025 நிலவரப்படி, இந்தியாவில் 574 கைதிகள் - 550 ஆண்கள் மற்றும் 24 பெண்கள் - மரண தண்டனையில் உள்ளனர் என்றும் அறிக்கை காட்டுகிறது.
- விடுவிக்கப்படுவதற்கு முன்பு மரண தண்டனையை எதிர்பார்த்து இருந்த காலத்தில் செலவிடப்பட்ட சராசரி காலம் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகும் என்ற நிலையில், சில கைதிகள் விடுவிக்கப்படுவதற்கு முன்பு கிட்டத்தட்ட ஒரு பத்தாண்டு காலத்திற்கு சிறையில் வாடினர்.
- இருப்பினும், அந்த ஆண்டில் 138 நபர்கள் விடுதலை, கலவரம் அல்லது ரிமாண்ட் உத்தரவுகள் மூலம் மரண தண்டனையிலிருந்து நீக்கப்பட்டனர்.
- அறிக்கையின் மிகவும் ஆபத்தான கண்டுபிடிப்புகளில் ஒன்று, தண்டனை கொடுக்கும் சமயத்தில் ஏற்படும் குளறுபடிகள் தொடர்பானது .
- மனோஜ் vs மத்தியப் பிரதேசம் வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் இதற்கு தெளிவான வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டன.
- இது உளவியல் மதிப்பீடுகள், சிறை நடத்தை அறிக்கைகள் மற்றும் தணிப்பு விசாரணைகளை கட்டாயமாக்குகிறது.
- வசந்த சம்பத் துபரே vs இந்திய யூனியன் வழக்கில் அவர்களுக்கு நியாயமான விசாரணை உரிமைகள் தேவை என்று இந்த வழிகாட்டுதல்கள் தரம் உயர்த்தப் பட்டன.
- ஆனால் 2025 ஆம் ஆண்டில், 2025 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 95% மரண தண்டனைகள் இணக்கமின்றி விதிக்கப்பட்டன.
- குற்றம் சாட்டப்பட்ட சில நாட்களுக்குள் அடிக்கடி விசாரணைகள் நடத்தப்பட்டன, இதனால் அர்த்தமுள்ள பாதுகாப்பு பிரதிநிதித்துவத்திற்கான வாய்ப்புகள் குறைவாகவே இருந்தன.
- மரண தண்டனைக்கு மாற்றாக முன் கூட்டிய விடுதலை எதுவும் இல்லாமல் ஆயுள் தண்டனையை பயன்படுத்துவது வளர்ந்து வரும் மற்றொரு போக்கு ஆகும்.

## நன்றியுரைத் தீர்மானம் 2026

- பிரதமரின் வழக்கமான பதில் உரை இல்லாமலேயே, மக்களவை குரல் வாக்கெடுப்பு மூலம் நன்றியுரைத் தீர்மானத்தை நிறைவேற்றியது.
- காலை முதல் தொடர்ச்சியான இடையூறுகளுக்குப் பிறகு, சபாநாயகர் நன்றியுரைத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டு, எதிர்க்கட்சிகளால் கொண்டு வரப்பட்ட திருத்தங்களை வாக்கெடுப்புக்கு விட்டார்.
- அவை நிராகரிக்கப்பட்டன.

- பின்னர், சபாநாயகர் ஓம் பிர்லா, ஜனவரி 28 அன்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் குடியரசுத் தலைவர் ஆற்றிய உரைக்கான நன்றியுரைத் தீர்மானத்தைப் படித்துக் காட்டினார்.
- எதிர்க்கட்சிகளின் முழக்கங்கள் தொடர்ந்த போதிலும், அது குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.
- தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது பிரதமர் மக்களவையில் இல்லை.
- உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோரும் அந்த அவையில் இருக்கவில்லை.
- குடியரசுத் தலைவர் உரைக்கான நன்றியுரைத் தீர்மானம் பிரதமரின் பதில் உரை இல்லாமல் நிறைவேற்றப்பட்டது கடைசியாக ஜூன் 2004-ல் ஆகும்.
- அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங், மக்களவையில் நடந்த விவாதத்திற்கு தனது பதில் உரையை வழங்க முடியவில்லை.
- மாநிலங்களவையானது, நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- இங்கு பிரதமரின் உரை 97 நிமிடங்கள் நீடித்தது.
- எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் அவையில் இல்லாத நிலையில், அவர்களால் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் குரல் வாக்கெடுப்பில் தோற்கடிக்கப் பட்டன.

## தற்காலிக டிஜிபி நியமனம் குறித்த உச்ச நீதிமன்றம்

- இரண்டு ஆண்டுகள் நிலையான பதவிக்காலத்துடன் வழக்கமான காவல்துறை தலைமை இயக்குநர்களை (டிஜிபி) நியமிப்பதை மாநிலங்கள் தவிர்த்து வருகின்றன என்று உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டது.
- 20 ஆண்டுகள் பழமையான உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மீறி, அதற்குப் பதிலாகத் தங்களுக்கு விருப்பமான 'தற்காலிக' காவல்துறைத் தலைவர்களை அந்த மாநிலங்கள் நியமித்து வருகின்றன.
- 2006-ஆம் ஆண்டு பிரகாஷ் சிங் வழக்கில் வழங்கிய தீர்ப்பில், டிஜிபி பதவி என்பது அரசியல் அல்லது பிற வெளிப்புற அழுத்தங்களிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும் என்பதை நீதிமன்றம் தெளிவுபடுத்தியதுடன், அரசியலையும் சட்ட அமலாக்கத்தையும் கலக்க வேண்டாம் என்று அரசாங்கங்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தது.
- மத்தியப் பணியாளர் தேர்வாணையத்தால் (யுபிஎஸ்சி) பட்டியலிடப்பட்ட மூன்று மூத்த மற்றும் தகுதியான அதிகாரிகளிலிருந்து மாநில அரசுகள் டிஜிபியைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று உத்தரவிட, அரசியலமைப்பின் 142-வது பிரிவின் கீழ் உள்ள தனது அசாதாரண அதிகாரங்களை நீதிமன்றம் பயன்படுத்தியது.
- தற்காலிக டிஜிபி என்ற 'கருத்தை' நீதிமன்றம் நிராகரித்திருந்தது.
- மாநிலக் காவல்துறைத் தலைவர்களுக்குக் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் நிலையான பதவிக்காலம் இருக்க வேண்டும் என்றும் அது கூறியிருந்தது.
- பதவியில் இருக்கும் டிஜிபி ஓய்வு பெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே சம்பந்தப் பட்ட மாநிலம் யுபிஎஸ்சி-க்கு ஒரு முன்மொழிவை அனுப்ப வேண்டும்.
- பின் யுபிஎஸ்சி தகுதியான அதிகாரிகளின் பட்டியலைத் தயாரிக்கும்.

- அதன் பின் மாநிலம், பட்டியலிடப்பட்ட அதிகாரிகளில் ஒருவரை உடனடியாக டிஜிபியாக நியமிக்க வேண்டும்.
- கடைசியான வழக்கமான டிஜிபி சுமார் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு, நவம்பர் 2017-ல் ஓய்வு பெற்றதாக யுபிஎஸ்சி கூறிய தெலங்கானா மாநிலம் தொடர்பான வழக்கை நீதிமன்ற அமர்வு விசாரித்து வந்தது.
- வழக்கமான டிஜிபியை நியமிக்கும் செயல்முறையைத் தொடங்க மாநிலம் எந்த முன்மொழிவுகளையும் அனுப்பவில்லை.
- அதற்குப் பதிலாக, தனது காவல்துறைப் படையின் தலைமைப் பொறுப்பில் 'தற்காலிக' டிஜிபிகளுடன் அவை தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

## அரசியலமைப்பு அங்கீகாரம் - சீர் மரபினர்

- பட்டியலிடப்படாத பழங்குடியினர், நாடோடிப் பழங்குடியினர், பகுதி நாடோடிப் பழங்குடியினர் ஆகியோர் 2027 சாதி மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 'தனிப் பிரிவு' கோருகின்றனர்.
- தாங்கள் அரசியல் ரீதியாக பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகிய பிரிவுகளில் தவறாக வகைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.
- இப்பிரிவுகளுக்குள் உள்ள பின்தங்கிய நிலையை முன்னிலைப்படுத்த துணை வகைப்பாடு வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.
- பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடியினர் (SCs/STs) மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் (OBCs) தற்போதைய வகைப்பாடுகளுக்கு இணையாக, ஒரு அட்டவணையில் பட்டியலிடப்படாத பழங்குடியினருக்கு அரசியலமைப்பு அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாகும்.
- 1931-க்குப் பிறகு முதல் முறையாக, பிப்ரவரி 2027-ல் இந்தியா சாதிவாரியான மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்தவுள்ளது.
- 1931 மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்குப் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, இந்திய அரசு (பட்டியல் சாதிகள்) ஆணை, 1936 என்ற வடிவத்தில் பட்டியல் சாதிகள் பட்டியலின் தோற்றம் உருவானது.
- 1871-ல், ஒரு காலனித்துவச் சட்டம் முழு சமூகங்களையும், குறிப்பாக நாடோடி மற்றும் பகுதி நாடோடிப் பழங்குடியினரை, "குற்றவாளிகள்" என்று வகைப்படுத்தியது.
- 1952-ல் அந்தச் சட்டம் ரத்து செய்யப்பட்ட பிறகு, இந்த குழுக்கள் "பட்டியலிடப்படாத" பழங்குடியினர்/ சீர் மரபினர் என்று அறியப்பட்டன.
- இந்த பட்டியலிடப்படாத, நாடோடி மற்றும் பகுதி நாடோடிப் பழங்குடியினரை வரவிருக்கும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சேர்க்க வேண்டும் என்று சமூக நீதி அமைச்சகம் இப்போது இந்தியப் பதிவாளர் ஜெனரல் அலுவலகத்திற்குப் பரிந்துரைத்துள்ளது.
- குற்றப் பழங்குடியினர் சட்டம் முதன்முதலில் 1871-ல் இயற்றப்பட்டு, பின்னர் 1924-ல் திருத்தப்பட்டு, ஆகஸ்ட் 31, 1952 அன்று அதிகாரப்பூர்வமாக ரத்து செய்யப்பட்டது.
- 1871 ஆம் ஆண்டு சட்டம், "சில குற்றப் பழங்குடியினர் மற்றும் திருநங்கைகளின் பதிவு, கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு" ஆகியவற்றிற்கானது என்று கூறியது.

- மேலும், "குற்றப் பழங்குடியினர்" என்பதைப் பிணையில் வெளிவர முடியாத குற்றங்களைச் செய்வதில் "பழக்கமுள்ள" "பழங்குடி, கும்பல் அல்லது நபர்களின் வகுப்பு" என்று அது விவரித்தது.
- 1952-ல் சட்டம் ரத்து செய்யப்பட்ட பிறகு, அந்தச் சட்டத்தின் கீழ் "குற்றவாளிகள்" என்று அறிவிக்கப்பட்ட சமூகங்கள் "பட்டியலிடப்படாதவர்கள்" ஆயினர்.
- இவ்வாறு, அவர்கள் பட்டியலிடப்படாத, நாடோடி மற்றும் பகுதி நாடோடிப் பழங்குடியினர் (DNTs) என்று அறியப்படுகிறார்கள்.
- பிகு ராம்ஜி இடேட் தலைமையிலான கடைசி DNT-களுக்கான தேசிய ஆணையம், அத்தகைய 1,200 பழங்குடியினரை அடையாளம் கண்டது.
- அவர்களில் பெரும்பாலானோர் கடந்த ஏழு தசாப்தங்களாக SC, ST அல்லது OBC வகைப்பாடுகளில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.
- இருப்பினும், 2017 ஆம் ஆண்டு தனது அறிக்கையில், இடேட் ஆணையம், அவ்வாறு வகைப்படுத்தப்படாத சுமார் 267 நாடோடி மற்றும் பழங்குடி சமூகங்களை பட்டியலிட்டது.
- இந்த சமூகங்களின் நலனுக்காகவே SEED திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.

## யுவ சககர் மற்றும் சுயம்சக்தி சககர் திட்டங்கள்

- தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் (NCDC) யுவ சஹகார் திட்டம் மற்றும் ஸ்வயம்சக்தி சஹகார் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.
- யுவ சஹகார் திட்டம், புதுமையான யோசனைகளைக் கொண்ட புதிதாக உருவாக்கப் பட்ட கூட்டுறவு சங்கங்களை ஊக்குவிக்கிறது.
- 2024-25 ஆம் ஆண்டில் யுவ சஹகார் திட்டத்தின் கீழ் 11,010 பயனாளிகளுக்கு ₹165.91 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டது.
- 2024-25 ஆம் ஆண்டில் ஸ்வயம்சக்தி சஹகார் திட்டத்தின் கீழ் 3,15,211 பயனாளிகளுக்கு ₹1,754.60 கோடி நிதி உதவி வழங்கப்பட்டது.

## 2026 UPSC குடிமைப் பணி தேர்வில் முக்கிய மாற்றங்கள்

- மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) 2026 ஆம் ஆண்டுக்கான குடிமைப் பணிகள் தேர்வு அறிவிப்பு, தேர்வில் 14 முக்கிய மாற்றங்களை அறிமுகப் படுத்தியுள்ளது.
- பணிநாடுநர் கணக்கு உருவாக்குதல், பொதுப் பதிவு எண் (URN), பொது விண்ணப்பப் படிவம் (CAF) மற்றும் தேர்வுக்கான பிரத்தியேகத் தொகுதி உள்ளிட்ட நான்கு கட்ட இணையவழி விண்ணப்ப முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- விண்ணப்பதாரர்கள் நிகழ்நேர புகைப்படம் மற்றும் கையொப்பத்தைப் பதிவேற்ற வேண்டும், ஆதார் சரிபார்ப்பு மேற்கொள்ளப்படும் என்பதோடு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த பிறகு எந்தத் திருத்தமும் அல்லது திரும்பப் பெறுதலும் அனுமதிக்கப் படாது.
- தேர்வு மையங்களில் கட்டாய முக அங்கீகாரம், இணையவழி அனுமதிச் சீட்டுகள், மற்றும் IAS, IFS,மற்றும் IPS தேர்வர்களுக்கான சேவைத் தகுதி மீதான கட்டுப்பாடுகள் ஆகியவற்றையும் அறிமுகப்படுத்தியுள்ளது.
- குறைக்கப்பட்ட வினாத்தாள் பிரதிநிதித்துவ சாளரம், PwBD விண்ணப்ப தாரர்களுக்கான மைய ஒதுக்கீடு விதிகள் மற்றும் முதல்நிலைத் தேர்வு மற்றும் முதன்மைத் தேர்வுக்குப் பிறகு கட்டாய உள்நுழைவு ஆகியவை பிற மாற்றங்களில் அடங்கும்.

## பாரத் டாக்ஸி கூட்டுறவு வாடகைக்கார் சேவை

- ❖ மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர், இந்தியாவின் முதல் கூட்டுறவு அடிப்படையிலான சவாரி முன்பதிவு தளமான பாரத் டாக்ஸியைத் தொடங்கி வைத்தார்.
- ❖ இது 2002 ஆம் ஆண்டு பல்மாநில கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்டு, ஜூன் 6, 2025 அன்று நிறுவப்பட்டது.
- ❖ இந்தத் தளம், சாரதிகள் என்று அழைக்கப்படும் ஓட்டுநர்களை உரிமை மற்றும் செயல்பாடுகளின் மையமாகக் கொண்டு, சுரண்டல் நிறைந்த இணையவழி ஒருங்கிணைப்பாளர் மாதிரிகளைச் சார்ந்திருக்கும் நிலையை நீக்குகிறது.
- ❖ பாரத் டாக்ஸியானது தரகு கட்டணமில்லாத மற்றும் நெரிசல் நேர கூடுதல் கட்டணமற்ற விலைக் கொள்கையில் செயல்பட்டு, லாபத்தை நேரடியாக ஓட்டுநர்களுக்கு விநியோகிக்கிறது.
- ❖ இந்தத் தளம் இரண்டு ஆண்டுகளுக்குள் இந்தியா முழுவதும் விரிவடைவதை இலக்காகக் கொண்டுள்ளது.

## PLASTINDIA கண்காட்சி 2026

- ❖ உலகின் மிகப்பெரிய நெகிழிப் பொருட்கள் கண்காட்சிகளில் ஒன்றான PLASTINDIA 2026, புது டெல்லியில் நடைபெறுகிறது.
- ❖ புதிய தொழில்நுட்பங்களையும் சர்வதேச ஒத்துழைப்பையும் ஊக்குவிக்கும் அதே வேளையில், நெகிழி சார் புத்தாக்கம், நிலையான உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றிற்கான உலகளாவிய மையமாக இந்தியாவின் நிலையை வலுப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தப் பதிப்பின் கருத்துரு "Bharat Next" என்பதாகும், இது தற்சார்பு பாரதம் மற்றும் வளர்ந்த பாரதம் ஆகிய தொலைநோக்குப் பார்வைகளை ஆதரிக்கிறது.
- ❖ இந்தக் கண்காட்சி நான்கு முக்கிய தூண்களாக மனிதர்கள், மூலப்பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் சந்தைகள் ஆகியவற்றையும், வர்த்தகம், தொழில்நுட்பம், திறமை, பாரம்பரியம் மற்றும் சுற்றுலா ஆகிய ஐந்து மூலோபாயக் கூறுகளையும் மையமாகக் கொண்டுள்ளது.
- ❖ முதல் முறையாக, இக்கண்காட்சியானது ஒரு கழிவுகளற்ற கண்காட்சியாக ஏற்பாடு செய்யப்படுகிறது என்பதோடு இதில் அனைத்து திடக் கழிவுகளும் பிரிக்கப்பட்டு, மறு சுழற்சி செய்யப்பட்டு, மீண்டும் பயன்படுத்தப்படும்.

## சபாசார் முன்முயற்சி

- ❖ சபாசார் முன்முயற்சி என்பது பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட ஒரு புதிய செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கருவியாகும்.
- ❖ இது ஒலி மற்றும் காணொளிப் பதிவுகளைத் தானாகவே உரைச் சுருக்கங்களாக மாற்றுவதன் மூலம், கிராம சபை மற்றும் பஞ்சாயத்துக் கூட்டங்களை ஆவணப் படுத்துவதை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தியா AI திட்டத்தின் கீழ் செயற்கை நுண்ணறிவு மற்றும் கிளவுட் தொழில் நுட்பத்தில் செயல்படும் சபாசார் கருவியானது, அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கும் கிடைக்கிறது.

- இந்தக் கருவி கூட்டங்களின் கட்டமைக்கப்பட்ட கூட்டக் குறிப்புகளை உருவாக்க உதவுகிறது மற்றும் நாடு முழுவதும் ஒரு சீரான தன்மையை உறுதி செய்கிறது.
- அரசாங்கத்தின் செயற்கை நுண்ணறிவு மொழித் தளமான பாஷினி மூலம் இயக்கப் படுகின்ற சபாசார் கருவியானது இந்தி, பெங்காலி, தமிழ், தெலுங்கு, மராத்தி, குஜராத்தி மற்றும் ஆங்கிலம் போன்ற முக்கிய இந்திய மொழிகளை ஆதரிக்கிறது.
- இந்த முன்முயற்சியானது ஆவணப்படுத்துதலை எளிதாக்கி, நிர்வாக அமைப்புகளுக்கு உதவுகிறது, மேலும் கூட்டங்களின் முக்கிய அம்சங்களை உடனடியாக அணுகுவதன் மூலம் உள்ளூர் சமூகங்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.

## பேரிடரில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கான SOP

- தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) இந்தியாவின் முதல் நிலையான செயல்பாட்டு நடைமுறையை (SOP) வெளியிட்டது.
- 2026 குடியரசு தினத்தன்று ஏற்பட்ட பெருமளவிலான உயிரிழப்பு சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கான இது " Comprehensive Disaster Victim Identification and Management" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் ஏர் இந்தியா விபத்து (அகமதாபாத்), ரசாயன தொழிற்சாலை வெடிப்பு (சங்கரெட்டி, தெலுங்கானா), கம்பீரா பாலம் இடிந்த விபத்து (வதோதரா), திடீர் வெள்ளம் (தாராளி, உத்தரகண்ட்) மற்றும் டெல்லி கார் குண்டுவெடிப்பு உள்ளிட்ட பெரிய பேரழிவுகளுக்கு இது பொருந்தும்.
- இது பின்வரும் நான்கு கட்ட அடையாளச் செயல்முறையை பரிந்துரைக்கிறது: அவை எச்சங்களை மீட்டெடுப்பது, பிரேத பரிசோதனை தரவு சேகரிப்பு, குடும்பங்களிலிருந்து பிரேத பரிசோதனைக்கு முந்தைய தரவு, ஒத்திசைவு மற்றும் முடிவை வெளியிடல்.
- பல் மருத்துவப் பதிவுகள் பேரழிவுகளில் இருந்து தப்பித்து பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண உதவுவதால், தேசிய பல் மருத்துவத் தரவுப் பதிவேடு பரிந்துரைக்கப் படுகிறது.
- இந்தச் செயல்முறைத் தரநிலை, பல் மருத்துவம் மற்றும் தொல்லியல் போன்ற தடயவியல் துறைகளை ஒருங்கிணைத்து மனிதாபிமானத் தடயவியலுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது, மேலும் இதில் உள்ள இடைவெளிகளைக் கையாள்வதற்காக நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் பல்வேறு செயல்பாட்டு வழி காட்டுதல்களை வழங்குகிறது.

## திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC), சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986-இன் கீழ், 2016 ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை விதிகளுக்குப் பதிலாக, 2026 ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை விதிகளை அறிவித்துள்ளது.
- இந்த விதிகள் நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் முழுவதும் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும்.
- இது கழிவுகளை அதன் மூலத்திலேயே பின்வரும் நான்கு வகைகளாகப் பிரிப்பதை கட்டாயமாக்குகின்றன. அவை — ஈரக் கழிவுகள், உலர் கழிவுகள், சுகாதாரக் கழிவுகள் மற்றும் சிறப்புப் பராமரிப்பு தேவைப்படும் கழிவுகள்.

- இந்த விதிகள் 'மாசுபடுத்துபவரே செலவை ஏற்றல்' என்ற கொள்கையைப் பின்பற்றுகின்றன என்ற நிலையில் இதற்கான அபராதங்கள் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களால் செயல் படுத்தப் படும்.
- தினமும் 100 கிலோ அல்லது அதற்கு மேற்பட்ட கழிவுகளை உருவாக்கும் நிறுவனங்கள், அல்லது பெரிய கட்டிடங்கள் மற்றும் நிறுவனங்கள் பெருமளவு கழிவு உருவாக்குபவர்கள் (BWG) என அழைக்கப்படுகின்றனர்.
- ஒரு மையப்படுத்தப்பட்ட இணையவழி வலைதளம் ஆனது கழிவு உருவாக்கம், சேகரிப்பு மற்றும் அகற்றல் ஆகியவற்றை கண்காணிக்கும்.
- குப்பைக் கிடங்குகளானது மறு சுழற்சி செய்ய முடியாத மற்றும் வினையுறா கழிவுகளுக்கு மட்டுமே பயன்படுத்தப் படும் என்ற நிலையில் மேலும் பழைய குப்பைக் கொட்டும் இடங்களிலிருந்து உயிரி முறையில் கழிவுகளைப் பிரித்தெடுப்பது என்பது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

## PAIMANA இணையதளம்

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) PAIMANA (நாட்டைக் கட்டமைப்பதற்கான திட்ட மதிப்பீடு, உள்கட்டமைப்பு கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வு) என்ற இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது ₹150 கோடி மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள மத்திய துறை உள்கட்டமைப்புத் திட்டங்களைக் கண்காணிப்பதற்கான ஒரு இணைய அடிப்படையிலான தளமாகும்.
- இது சிறந்த நிகழ்நேரக் கண்காணிப்புக்காக OCMS-2006 (நிகழ்நேர கணினிமயமாக்கப் பட்ட கண்காணிப்பு அமைப்பு) அமைப்பிற்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தத் தளமானது, API-களைப் (பயன்பாட்டு நிரலாக்க இடைமுகம்) பயன்படுத்தி, DPIIT-இன் (தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை) ஒருங்கிணைந்த திட்ட கண்காணிப்பு தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- 2025 டிசம்பர் நிலவரப்படி, 1,392 உள்கட்டமைப்புத் திட்டங்கள் இந்த தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இந்த இணையதளம் வெளிப்படைத்தன்மை, தரவுகளின் தரம் மற்றும் உள் கட்டமைப்புத் திட்டங்களை உரிய நேரத்தில் முடிப்பதை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## திறன்மிகு மீன்பிடித் துறைமுகம் – மாயாபந்தர்

- மத்திய மீன்வளத் துறை, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் உள்ள மாயாபந்தரில் ஒரு திறன்மிகு மற்றும் ஒருங்கிணைந்த மீன்பிடித் துறைமுகத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- வடக்கு மற்றும் மத்திய அந்தமான் மாவட்டத்தில் உள்ள மாயாபந்தர் நகரம் ஆனது மீன்பிடித் தொழில், சுற்றுலா மற்றும் உள்ளூர் பொருளாதாரத்திற்கான ஒரு முக்கிய மையமாகத் திகழ்கிறது.
- ஆண்டுதோறும் 9,900 டன் மீன்களைக் கையாளும் இந்தத் துறைமுகம் 430 மீன்பிடிப் படகுகளுக்கு நங்கூரமிடும் வசதியை வழங்கும்.

- இது நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் டிஜிட்டல்வழி கண்டறியும் தன்மைக்காக இணைய உலகம் தொழில்நுட்பத்தைப் (IoT) பயன்படுத்தும்.
- இந்தத் திட்டம் நிலையான மேலாண்மை மற்றும் சட்டவிரோத, அறிவிக்கப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தலை எதிர்த்துப் போராடுவதில் கவனம் செலுத்துகிறது.

## இந்தியாவில் விவசாயக் குழுக்கள்

- இந்திய அரசு, ஒரு மத்தியத் துறைத் திட்டத்தின் கீழ் 10,000 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை (FPOs) அமைக்கும் பணியை நிறைவு செய்துள்ளது.
- சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குக் கூட்டு உற்பத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் பதப்படுத்துதல் ஆகியவற்றில் ஆதரவளிப்பதற்காக இந்தத் திட்டம் 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 29 அன்று தொடங்கப்பட்டது.
- இந்த உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளில் மொத்தம் 21.96 லட்சம் பெண் விவசாயிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- இந்தத் திட்டத்தை செயல்படுத்தும் முகமைகளில், சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பு (SFAC), தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD), தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் (NCDC) மற்றும் இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு (NAFED) ஆகியவை அடங்கும்.
- உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் சிறந்த வருமானத்திற்காக நிதி உதவி, கடன் உத்தரவாதங்கள், சந்தை இணைப்புகள் மற்றும் முறையான பயிற்சிகளைப் பெறுகின்றன.
- உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் விவசாயிகள் சுமார் 22% அதிக விலையைப் பெறவும், சந்தைப்படுத்தல் செலவுகளை சுமார் 31% குறைக்கவும் உதவுகின்றன என்று ஆதாரங்கள் உள்ளன.

## இந்தியாவில் அடிப்படை தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனம்

- இந்திய அரசாங்கம் 'அடிப்படை தொழில்நுட்பம்' (Deep Tech) புத்தொழில் நிறுவனங்களுக்கான அதிகாரப்பூர்வ வரையறையை வெளியிட்டுள்ளது.
- தொழில்துறை மற்றும் உள் வர்த்தக மேம்பாட்டுத் துறையின் (DPIIT) படி, ஒரு அடிப்படை தொழில்நுட்ப புத்தொழில் என்பவை அறிவியல் அல்லது பொறியியலில் உள்ள புதிய யோசனைகள் அல்லது கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் தீர்வுகளை உருவாக்குகிறது.
- இத்தகைய புத்தொழில் நிறுவனங்கள் தங்கள் நிதியில் பெரும்பகுதியை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக (R&D) செலவிடுவதுடன் குறிப்பிடத்தக்க அறிவுசார் சொத்துக்களை (IP) உருவாக்குகின்றன, மேலும் அவற்றை வணிகமயமாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றன.
- இந்த நிறுவனங்கள் பெரும்பாலும் நீண்ட துவக்கநிலை உருவாக்க காலங்கள், அதிக மூலதனத் தேவைகள் மற்றும் தொழில்நுட்ப நிச்சயமற்ற தன்மையை எதிர் கொள்கின்றன.
- ஒரு நிறுவனம் 20 ஆண்டுகள் வரையிலும், ₹300 கோடி வரையிலான வருவாய் ஈட்டும் வரையிலும் அடிப்படை தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனமாக கருதப்படலாம்.

- நிறுவனங்கள் சான்றிதழுக்காக DPIIT-க்கு விண்ணப்பிக்க வேண்டும் என்ற நிலையில் இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST) மற்றும் உயிரி தொழில்நுட்பத் துறை ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு பல்துறை அமைச்சக வாரியத்தால் மதிப்பாய்வு செய்யப்படுகிறது.
- இந்த முன்முயற்சியானது, தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் புத்தொழில் நிறுவனங்கள் மீதான அரசாங்கத்தின் கவனத்திற்கு ஆதரவளிக்கிறது மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கு நிதியளிப்பதற்காக என்று உருவாக்கப்பட்ட ₹1 லட்சம் கோடி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு புத்தாக்க (RDI) நிதியத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

## இந்தியாவின் கம்பளி உற்பத்தி 2026

- ராஜஸ்தான் இந்தியாவின் மிகப்பெரிய கம்பளி உற்பத்தி செய்யும் மாநிலமாகும் என்ற நிலையில் மேலும் இது 16,013.50 ஆயிரம் கிலோ (மொத்த உற்பத்தியில் 47.53%) அளவில் பங்களிக்கிறது.
- ராஜஸ்தானின் கம்பளியானது மார்வாரி மற்றும் சோக்லா இன செம்மறி ஆடுகளிலிருந்து பெறப்படுகிறது என்ற நிலையில், இது முக்கியமாக தரைவிரிப்புகள், கம்பளங்கள் மற்றும் போர்வைகளில் பயன்படுத்தப்படுகிறது.
- சங்தாங்கி மற்றும் மெரினோ போன்ற சிறந்த தரமான கம்பளிக்குப் பெயர் பெற்ற ஜம்மு காஷ்மீர் 7,770 ஆயிரம் கிலோ உற்பத்தியுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது என்ற நிலையில் இது சால்வைகள் மற்றும் ஆடைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.
- இதில் கர்நாடகா மற்றும் தெலுங்கானா மூன்றாவது மற்றும் நான்காவது பெரிய உற்பத்தியாளர்களாகும் என்பதோடு இவை முக்கியமாக நடுத்தரம் முதல் கரடு முரடான ராகம் வரையிலான கம்பளியை உற்பத்தி செய்கின்றன.
- இந்தியாவில் 77.4 மில்லியன் செம்மறி ஆடுகள் உள்ளன என்பதோடு இது உலகளவில் இரண்டாவது அதிக எண்ணிக்கையாகும்.
- இந்தியாவில் உள்ள கம்பளியின் வகைகளில் தரை விரிப்புத் தரம் (85%), ஆடைத் தரம் (5%), மற்றும் கரடுமுரடான தரம் (10%) ஆகியவை அடங்கும்.
- பஞ்சாப் மாநிலம் கம்பளி உற்பத்தியில் 22.04% என்ற மிக உயர்ந்த ஆண்டு வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளது.

## என்.பி.எஸ் ஸ்வஸ்த்யா ஓய்வூதியத் திட்டம்

- ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PFRDA) தேசிய ஓய்வூதிய அமைப்பு ஸ்வஸ்த்யா ஓய்வூதியத் திட்டத்தை ஒரு முன்னோடித் திட்டமாக அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது உடல்நலம் தொடர்பான நிதிப் பலன்களை தேசிய ஓய்வூதிய அமைப்புடன் (NPS) ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டம் வெளிநோயாளி மற்றும் உள்நோயாளி மருத்துவச் செலவுகளுக்கும் நிதி உதவியை வழங்குகிறது.
- இது தேசிய ஓய்வூதிய அமைப்பின் (NPS) பல்திட்டக் கட்டமைப்பு (MSF) கீழ் செயல் படுத்தப் படும் ஒரு தன்னார்வப் பங்களிப்புத் திட்டமாகும்.

## பருப்பு வகைகளில் ஆத்மநிர்பர்தா இயக்கம்

- மத்தியப் பிரதேசத்தின் செஹோர் மாவட்டத்தில் உள்ள அம்லாஹாவில் இருந்து நாடு தழுவிய பருப்பு வகைப் புரட்சியை இந்தியா தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டம் பருப்பு வகைகளில் தன்னிறைவுக்கான (ஆத்மநிர்பர்தா) திட்டம் என்று அழைக்கப்படுகிறது.
- பருப்பு வகைகளின் உற்பத்தியில் இந்தியாவை தன்னிறைவு அடையச் செய்வதையும் இறக்குமதியைக் குறைப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025–26 மத்திய நிதிநிலையறிக்கையில் அறிவிக்கப்பட்டது.
- 2025–26 முதல் 2030–31 வரை செயல்படும் இந்தத் திட்டம் ₹11,440 கோடி செலவில் மேற் கொள்ளப்படும்.
- விதை மேம்பாடு, விவசாயம் தொகுதிகள், பதப்படுத்தும் ஆலைகள் மற்றும் சந்தைகளை ஆதரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

## eSankhyiki தளம்

- தேசியப் புள்ளி விவரங்கள் அலுவலகம் (NSO), eSankhyiki தளத்திற்கான மாதிரி சூழல் நெறிமுறை (MCP) சேவையகத்தின் பீட்டா பதிப்பை அறிமுகப்படுத்தியது.
- eSankhyiki என்பது இந்தியாவின் அதிகாரப் பூர்வப் புள்ளி விவரங்களுக்கான தேசிய அளவிலான தளம் ஆகும்.
- இந்த நெறிமுறையானது கோப்புகளைப் பதிவிறக்கம் செய்யாமல் தரவுத் தொகுப்புகளுக்கான AI அடிப்படையிலான, நிகழ்நேர அணுகலை அனுமதிக்கிறது.
- பீட்டா வெளியீட்டில் வருடாந்திர தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு (PLFS), நுகர்வோர் விலைக் குறியீடு (CPI), தொழில்துறை உற்பத்தி குறியீடு (IIP), தேசிய கணக்கு புள்ளி விவரங்கள், மொத்த விலைக் குறியீடு (WPI), தொழில்துறைகளின் வருடாந்திரக் கணக்கெடுப்பு மற்றும் சுற்றுச்சூழல் புள்ளி விவரங்கள் போன்ற தரவுத் தொகுப்புகள் அடங்கும்.
- இந்த முயற்சி தரவு சார்ந்த நிர்வாகம் மற்றும் அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களுக்கான பரந்த அணுகலை ஆதரிக்கிறது.

## புதிய கைலாஷ் யாத்திரை பாதை - ஷிப்கி லா கணவாய்

- கைலாஷ் மானசரோவர் யாத்திரைக்காக இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள ஷிப்கி லா கணவாய் உட்பட கூடுதல் பாதையைத் திறப்பது குறித்து ஆராய சீனாவுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.
- உத்தரகாண்டில் உள்ள லிபுலேக் கணவாய் மற்றும் சிக்கிமில் உள்ள நாது லா கணவாய் ஆகியவை யாத்திரைக்கான தற்போதைய பாதைகளில் அடங்கும்.
- 2025 யாத்திரை ஜூன் முதல் ஆகஸ்ட் வரை வெற்றிகரமாக நடைபெற்றது என்ற ஒரு நிலையில், இதற்காக மாநில அரசுகள் மற்றும் இந்தோ-திபெத்திய எல்லைக் காவல்துறையுடன் ஒருங்கிணைக்கப் பட்டது.
- ஷிப்கி லா கணவாய் இந்தியா-சீன எல்லைக்கு அருகில் அமைந்துள்ளது என்ற ஒரு நிலையில், ஆனால் புதிய வழித் தடங்களைத் திறப்பதற்கான தளவாடச் சிக்கல்களை சீனா மேற்கோளிட்டுள்ளது.

## சவல்கோட் நீர்மின் திட்டம்

- 2025 பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து சிந்து நதி நீர் ஒப்பந்தம் இடை நிறுத்தப்பட்ட பிறகு சவல்கோட் நீர்மின் திட்டம் துரிதப்படுத்தப்பட்டு வருகிறது.
- 1,856 மெகாவாட்திறன் கொண்ட சவல்கோட் நீர்மின் திட்டமானது ஜம்மு-காஷ்மீரின் ராம்பன் மாவட்டத்தில் உள்ள செனாப் நதியில் ஆற்றில் கட்டமைக்கப்படும் நீர்மின் திட்டமாகும்.
- இந்தத் திட்டம் 1984 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது என்ற நிலையில் பின்னர் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாக அறிவிக்கப்பட்டது.
- செனாப் ஆனது உலக வங்கியின் இடையீட்டுடன் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின் (1960) கீழ் பாகிஸ்தானுக்கு ஒதுக்கப்பட்ட சிந்து நதியின் மேற்குப்பகுதி துணை நதியாகும்.

## யானை ஊடுருவல் கண்டறிதல் அமைப்பு

- ரயில் பாதைகளில் யானைகள் இறப்பதைத் தடுக்க இந்திய ரயில்வே செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான அமைப்பைப் பயன்படுத்தியுள்ளது.
- தண்டவாளங்களுக்கு அருகில் யானைகளின் நடமாட்டத்தைக் கண்டறிய இந்திய ரயில்வே AI-இயக்கப்பட்ட ஊடுருவல் கண்டறிதல் அமைப்பை (IDS) அறிமுகப் படுத்தி உள்ளது.
- இந்த அமைப்பு ஒளியிழை வடங்களில் நிறுவப்பட்ட பகிரப்பட்ட ஒலி உணர்விகளை (DAS) பயன்படுத்துகிறது.
- இது ரயில்களை வேகத்தைக் குறைக்க அல்லது நிறுத்தக் கோரி ரயில் ஓட்டுனர்கள், நிலைய மேலாளர்கள் மற்றும் ரயில்வே கட்டுப்பாட்டு அறைகளுக்கு நிகழ்நேர எச்சரிக்கைகளை அனுப்புகிறது.
- இந்த அமைப்பு தற்போது வடகிழக்கு எல்லைப்புற ரயில்வேயில் (NFR) 141 தட கிலோ மீட்டர்களுக்கும் அதிகமான இடங்களில் செயல்பட்டு வருகிறது.
- இந்தத் திட்டம் சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் (MoEFCC) ஆதரவுடன் செயல்படுத்தப்படுகிறது.

## SATYA ஆய்வக தானியங்கமயமாக்கல் தளம்

- SATYA தளம் ஆனது மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் (MeitY) கீழ் தொடங்கப்பட்டது.
- SATYA என்பது தரநிலைப்படுத்தல் சோதனை மற்றும் தரச் சான்றிதழ் (STQC) இயக்குநரகத்திற்கான ஒரு ஆய்வக தானியங்கமயமாக்கல் தளம் ஆகும்.
- இந்தத் தளம் டிஜிட்டல் சோதனை, சான்றிதழ் மற்றும் தர உறுதிச் சேவைகளை ஒரே தளத்தில் வழங்குகிறது.
- இது தாமதங்களைக் குறைத்தல், வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் புத்தொழில் நிறுவனங்கள், MSMEகள் (மைக்ரோ, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்) மற்றும் தொழில்துறையை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## லடாக்கில் இரண்டு மெகா தொலைநோக்கிகள்

- 2026 ஆம் ஆண்டின் ஒன்றிய நிதிநிலையறிக்கையானது இரண்டு புதிய தொலை நோக்கிகள் மற்றும் லடாக்கில் ஏற்கனவே உள்ள தொலைநோக்கியின் மேம்படுத்தலுக்கு ஒப்புதல் அளித்தது.
- சூரியன் மற்றும் விண்வெளி வானிலையை ஆய்வு செய்வதற்காக லடாக்கில் உள்ள பாங்காங் த்சோ அருகே உள்ள மெராக் நகரில் National Large Solar Telescope அமைக்கப்படும்.
- ஹென்லேவின் இரவு வான்வெளிப் பகுதியில், வெளிப்புறக் கோள்கள், நட்சத்திரங்கள் மற்றும் பிரபஞ்சத்தின் தோற்றம் ஆகியவற்றை ஆய்வு செய்வதற்காக, National Large Optical–Near Infrared Telescope கட்டமைக்கப்படும்.
- ஹென்லேவில் உள்ள இமயமலை சந்திரா தொலைநோக்கி ஒரு பெரிய கண்ணாடிப் பிரிவுடன் மேம்படுத்தப்படும்.

## கிம்பர்லி செயல்முறைக்கான சீர்திருத்தத் திட்டம்

- உலகளாவிய வைர வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்காக கிம்பர்லி செயல்முறை சான்றிதழ் திட்டத்தில் சீர்திருத்தங்களை இந்தியா முன்மொழிந்துள்ளது.
- கிம்பர்லி செயல்முறை சான்றிதழ் திட்டம் என்பது மோதல்மிக்க பகுதிகளில் இருந்து எடுக்கப் படும் வைரங்களைத் தடுக்க பட்டைத் தீட்டப் பெறாத வைரங்களின் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் ஒரு உலகளாவிய அமைப்பாகும்.
- கிம்பர்லி செயல்முறையின் உறுப்பு நாடுகள் மட்டுமே சான்றிதழைப் பயன்படுத்தி ஒருவருக்கொருவர் பட்டைத் தீட்டப் பெறாத வைரங்களை வர்த்தகம் செய்ய முடியும்.
- இந்தியா வைர உற்பத்தி செய்யும் நாடு அல்ல, ஆனால் உலகளாவிய பட்டைத் தீட்டப் பெறாத வைரங்களில் சுமார் 40%ஐ வெட்டுவதற்கும் மெருகூட்டுவதற்கும் இறக்குமதி செய்கிறது.
- இந்தியாவில் உள்ள முக்கிய வைர வெட்டுதல் மற்றும் மெருகூட்டல் மையங்கள் சூரத் மற்றும் மும்பை ஆகும்.

## செயற்கை நுண்ணறிவு ஏற்பு மையம்

- Zscaler அமைப்பின் புதிய அறிக்கையானது, நிறுவன செயற்கை நுண்ணறிவு ஏற்பு மற்றும் இயந்திரக் கற்றல் பயன்பாட்டில் இந்தியாவை உலகளவில் இரண்டாவது இடத்தில் வைத்துள்ளது.
- Zscaler ThreatLabz 2026 செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு அறிக்கை 2025 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட ஒரு டிரில்லியன் செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் பரிவர்த்தனைகளை பகுப்பாய்வு செய்தது.
- 2025 ஆம் ஆண்டு ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு இடையில் இந்தியா சுமார் 82.3 பில்லியன் செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் பரிவர்த்தனைகளைப் பதிவு செய்தது.
- ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் மொத்த செயற்கை நுண்ணறிவு செயல்பாட்டில் இந்தியா 46.2% பங்களிக்கிறது.
- தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்புத் துறை அதிக செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டைப் பதிவு செய்தது, அதைத் தொடர்ந்து உற்பத்தி மற்றும் நிதித் துறைகள் உள்ளன.

## இந்தியா–AI தாக்க உச்சி மாநாடு 2026

- செயற்கை நுண்ணறிவில் (AI) உலகளாவிய ஒத்துழைப்பை மையமாகக் கொண்டு, இந்திய அரசு இந்தியா–AI தாக்க உச்சி மாநாடு 2026 என்பதை நடத்தவுள்ளது.
- புதுதில்லியில் நடைபெறும் இந்த உச்சிமாநாடு, உலகளாவியத் தெற்கு நாடுகளில் நடைபெறும் முதல் உலகளாவிய செயற்கை நுண்ணறிவு (AI) உச்சி மாநாடாகும்.
- இந்த உச்சி மாநாடு மக்கள், கிரகம் மற்றும் முன்னேற்றம் ஆகிய மூன்று சூத்திரங்களை அடிப்படையாகக் கொண்டது.
- இந்த மாநாட்டில் ஏழு சக்கரங்களை (கருத்துரு) சுற்றி விவாதங்கள் ஏற்பாடு செய்யப் படும், அவையாவன: மனித மூலதனம்; சமூக அதிகாரமளிப்புக்கான உள்ளடக்கம்; பாதுகாப்பான மற்றும் நம்பகமான AI; மீள்தன்மை, புத்தாக்கம் மற்றும் செயல்திறன்; அறிவியல்; AI வளங்களை ஜனநாயகப் படுத்தல்; பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நன்மைக்கான செயற்கை நுண்ணறிவு (AI).
- இது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், இந்திய செயற்கை நுண்ணறிவு (AI) திட்டம், இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் டிஜிட்டல் இந்தியா முன்முயற்சி ஆகியவற்றால் ஆதரிக்கப்படுகிறது.
- இந்த உச்சி மாநாடு என்பது பொறுப்பான AI ஏற்பை ஊக்குவித்தல், உலகளாவிய கூட்டாண்மைகளை வலுப்படுத்துதல் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மக்களவையில் பொருண்மை தீர்மானம்

- மக்களவையில் ராகுல் காந்திக்கு எதிராக நிஷிகாந்த் துபே ஒரு பொருண்மை தீர்மானத்தை (Substantive Motion) முன்மொழிந்தார்.
- ஒரு பொருண்மை தீர்மானம் என்பது சபையின் தெளிவான மற்றும் பிணைக்கும் முடிவைப் பெறுவதற்காக மக்களவையில் வைக்கப்படும் ஒரு சுயாதீனமான மற்றும் முழுமையான தீர்மானமாகும்.
- இது தன்னளவில் முழுமையானது மற்றும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் வேறு எந்த விவகாரங்களுடனும் இணைக்கப்படுவதில்லை.
- இது ஏற்றுக் கொள்ளப்படும் போது, அந்தத் தீர்மானம் ஒரு குறிப்பிட்ட விவகாரத்தில் அவையின் முறையான கருத்தை அல்லது விருப்பத்தைப் பிரதிபலிக்கிறது.
- மக்களவையின் நடைமுறை விதிகளின் கீழ், சபாநாயகர் ஓம் பிர்லாவின் ஒப்புதலுடன் மட்டுமே இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியும் என்பதோடு அவருக்கு அதை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ உரிமை உண்டு.
- இது ஏற்றுக் கொள்ளப்பட்டால், இந்த தீர்மானம் சபையில் விவாதிக்கப்பட்டு, கட்டாய வாக்கெடுப்புக்கு விடப்படும் என்பதோடு மேலும் சில சந்தர்ப்பங்களில் ஆய்வுக்காக சிறப்புக் குழுவிற்கு அது பரிந்துரைக்கப்படலாம்.
- வழக்கமான அரசியல் தகராறுகளில் இவ்வகைத் தீர்மானங்கள் பொதுவாகப் பயன்படுத்தப் படுவதில்லை என்பதோடு மேலும் அவை எதிர்க்கட்சித் தலைவர் போன்ற அரசியலமைப்புப் பதவிகள் சம்பந்தப்பட்ட விவகாரங்களைக் கருத்தில் கொள்ள ஒரு முறையான நாடாளுமன்றச் செயல்முறையை வழங்குகின்றன.

## தேசிய பாடல் மற்றும் கீதம் வழிகாட்டுதல்கள் 2026

- தேசிய பாடல் மற்றும் தேசிய கீதத்தைப் பாடும் வரிசை குறித்த வழிகாட்டுதல்களை உள்துறை அமைச்சகம் (MHA) வெளியிட்டது.
- இரண்டும் ஒன்றாக இசைக்கப்படும்போது ஜன கண மன பாடலுக்கு முன் வந்தே மாதரம் பாடப்பட வேண்டும் அல்லது இசைக்கப்பட வேண்டும் என்று இந்த வழிகாட்டுதல்கள் கூறுகின்றன.
- தேசியப் பாடலின் அதிகாரப்பூர்வ பதிப்பு சுமார் 3 நிமிடங்கள் 10 வினாடிகள் நீளமானது என்பதோடு மேலும் அது இசைக்கப்படும்போது அல்லது பாடப்படும் போது பார்வையாளர்கள் கவனத்துடன் நிற்க வேண்டும்.
- வந்தே மாதரம் பாடலை பங்கிம் சந்திர சாட்டர்ஜி எழுதினார்.
- இது ஜனவரி 24, 1950 அன்று அரசியலமைப்பு சபையால் தேசியப் பாடலாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## தகவல் தொழில்நுட்ப விதிகள் திருத்தம் 2026

- இந்திய அரசானது தகவல் தொழில்நுட்பம் (இடைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் ஊடக நெறிமுறைகள் குறியீடு) விதிகள், 2021 ஐ பிப்ரவரி 20, 2026 முதல் அமல் படுத்துகிறது.
- செயற்கையாக உருவாக்கப்பட்ட தகவல் (SGI) என்பது உண்மையானதாக தோன்றும் AI-யால் உருவாக்கப்பட்ட அல்லது AI-யால் மாற்றப்பட்ட ஒலி , காணொளி அல்லது ஒலி-ஒளி உள்ளடக்கத்தை உள்ளடக்கியது.
- AIயால் உருவாக்கப்பட்ட அனைத்து உள்ளடக்கத்திலும் வெளிப்படையான பொறுப்புத் துறப்பு அல்லது அடையாளக் குறியீடுகள் இருக்க வேண்டும் என்பதோடு மேலும் சட்டவிரோதப் பதிப்புகள் 3 மணி நேரத்திற்குள் அகற்றப்பட வேண்டும்.
- குழந்தைகள் பாலியல் வன்கொடுமை பதிவுகள் (CSAM), சம்மதமில்லாத நெருக்கமான படங்கள் (NCII), ஆள்மாறாட்டம் மற்றும் பொது பாதுகாப்பை அச்சுறுத்தும் பதிவுகள் ஆகியவை தடை செய்யப் பட்டுள்ளன.
- AI-வழி பதிவுகளின் தோற்றத்தைக் கண்டறிய மெட்டா டேட்டா மற்றும் டிஜிட்டல் தடயங்கள் உட்பொதிக்கப்பட்டுள்ளன என்பதோடு வழக்கமான திருத்தங்கள் மற்றும் அணுகல் அம்சங்களுக்கு இதில் விலக்கு அளிக்கப்படுகின்றன.

## தொழிலக உறவுகள் குறியீடு (திருத்தம்) மசோதா, 2026

- நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் போது, மக்களவை தொழிலக உறவுகள் குறியீடு (திருத்தம்) மசோதா, 2026 ஐ நிறைவேற்றியது.
- இந்த மசோதாவானது, தொழிலக உறவுகள் குறியீடு, 2020 என்பதால் மாற்றப்பட்ட தொழிலாளர் சட்டங்களுக்கான கூடுதல் சட்ட தெளிவு மற்றும் தொடர்ச்சியை வழங்குகிறது
- தொழிலக உறவுகள் குறியீடு, 2020 ஆனது தொழிற்சங்கங்கள் சட்டம், 1926, தொழில் துறை வேலைவாய்ப்பு (நிலையான ஆணைகள்) சட்டம், 1946, மற்றும் தொழில்துறை தகராறுகள் சட்டம், 1947 ஆகிய மூன்று முக்கியமானத் தொழிலாளர் சட்டங்களை ஒருங்கிணைத்து ரத்து செய்தது:

- ரத்து செய்யப்பட்ட சட்டங்களின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், பெறப்பட்ட உரிமைகள் மற்றும் தொடங்கப்பட்ட நடவடிக்கைகள் சட்ட இடையூறு இல்லாமல் தொடர்வதை உறுதி செய்வதற்காக, பிரிவு 104ன் கீழ் பாதுகாப்பு விதிகள் திருத்தத்தில் உள்ளன.

## சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம்

- பிப்ரவரி 2026 இல் மக்களவை ஓம் பிர்லாவுக்கு எதிராக எதிர்க்கட்சி நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வந்துள்ளது.
- சபாநாயகரை நீக்குவதற்கு, சரத்து 94 இன் படி, குறைந்தது 50 உறுப்பினர்கள் எழுத்துப்பூர்வ அறிவிப்பையும், வாக்களிப்பதற்கு முன் சுமார் 14 நாள் அறிவிப்பு காலத்தையும் வழங்க வேண்டும்.
- இந்த நடைமுறை மக்களவையில் நடைமுறை மற்றும் அலுவல் நடத்தை விதிகளின் விதிகள் 200A ஆல் நிர்வகிக்கப்படுகிறது.
- சபாநாயகர் மீது குற்றச்சாட்டு இருப்பதால், தீர்மானத்தின் ஏற்புத்தன்மையை அவர் தீர்மானிக்க முடியாது.
- துணை சபாநாயகர் பதவி என்பது அரசியலமைப்பின் 93வது பிரிவின்படி கட்டாய ஏற்பாடாகும்.
- துணை சபாநாயகர் இல்லை என்பதால் சபாநாயகரை நீக்குவதற்கான தீர்மானத்தில், சபாநாயகர் சபைக்குத் தலைமை தாங்க முடியாது.
- ஆனால் சபாநாயகர் அல்லது துணை சபாநாயகர் இல்லாதபோது அவைக்கு தலைவர் குழு உறுப்பினர் தலைமை தாங்குவார்.
- சபையின் அப்போதைய அனைத்து உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் நிறைவேற்றப் பட்டால், சபாநாயகர் பதவி விலக வேண்டும்.

## முன்னாள் படைவீரர் விதிகள் 2026

- முன்னாள் படைவீரர்கள் (மத்திய குடிமைபணிகள் மற்றும் பதவிகளில் மறு வேலை வாய்ப்பு) விதிகள், 2026 ஐ இந்திய அரசு திருத்தியது என்பதோடு இதன் மூலம் முன்னாள் படைவீரர்களின் வரையறையின் கீழ் ராணுவ செவிலியர் சேவையின் பணியாளர்களையும் சேர்த்துள்ளது.
- இந்தத் திருத்தம் இந்திய அரசியலமைப்பின் பிரிவு 309 இன் கீழ் அறிவிக்கப்பட்டது.
- இராணுவச் செவிலியர் சேவை (MNS) அதிகாரிகளின் மறு வேலைவாய்ப்பு சலுகைகள் குறித்த முந்தைய குழப்பத்தை இது நீக்குகிறது.
- MNS வீரர்கள் இப்போது குரூப் C பதவிகளில் 10% இட ஒதுக்கீட்டையும், மத்திய அரசின் குரூப் D பதவிகளில் 20% இடஒதுக்கீட்டையும் பெற தகுதியுடையவர்கள்.
- அவர்கள் தங்கள் ராணுவச் சேவை ஆண்டுகளுடன் கூடுதலாக மூன்று ஆண்டுகளுக்கு சமமான வயது தளர்வையும் பெறுவார்கள்.

## யானைக்கால் நோய் ஒழிப்பு பிரச்சாரம்

- ❖ யானைக்கால் நோயை ஒழிப்பதற்காக என்று மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஆண்டுதோறும் நாடு தழுவிய வெகுஜன மருந்து வழங்கும் (MDA) ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியது.
- ❖ தேவையான மக்களுக்கு டைதைல்கார்பமாசின், அல்பெண்டசோல் மற்றும் ஐவர்மெக்டின் போன்ற நோய் எதிர்ப்பு மருந்துகள் வழங்கப்படுகின்றன.
- ❖ பீகார், உத்தரப் பிரதேசம், ஒடிசா, மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா உள்ளிட்ட 12 உள்ளூர் மாநிலங்களில் இந்த பிரச்சாரம் செயல்படுத்தப்படுகிறது.
- ❖ யானைக்கால் நோய் என்பது ஒட்டுண்ணி புழுக்களால் ஏற்படும் புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயாகும், இது கொசு கடிப்பதால் பரவுகிறது.
- ❖ இந்த நோய் யானைக்கால் நோய், விரைவீக்கம் மற்றும் நீண்டகால இயலாமைக்கு வழி வகுக்கும்.
- ❖ நீடித்த வளர்ச்சி இலக்கு 3 (SDG-3) இன் கீழ் 2027 ஆம் ஆண்டுக்குள் யானைக்கால் நோயை ஒழிப்பதை இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மாநில இணையவெளி குற்ற ஒருங்கிணைப்பு மையம்

- ❖ இணையவெளி சார்ந்த மோசடிகள் குறித்த தேசிய மாநாட்டின் போது இந்திய இணையவெளி குற்ற ஒருங்கிணைப்பு மையத்தின் மாநில இணையவெளிக் குற்ற ஒருங்கிணைப்பு மையம் (S4C) தளம் தொடங்கப்பட்டது.
- ❖ இணையவெளி குற்றங்களை கையாள்வதில் மாநிலங்களுக்கு இடையே பெரும் ஒருங்கிணைப்பை வலுப்படுத்த வேண்டி உள்துறை அமைச்சகத்தால் இந்தத் தளம் தொடங்கப்பட்டது.
- ❖ இந்த அமைப்பில் சுமார் 62 வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஏற்கனவே இணைக்கப் பட்டுள்ளன.
- ❖ டிசம்பர் 2026க்குள் கூட்டுறவு வங்கிகள் உட்பட அனைத்து வங்கிகளையும் இணைக்க அரசாங்கம் இலக்கு வைத்துள்ளது.

## உறுப்பினரைத் திரும்பப் பெறும் உரிமை

- ❖ இந்தியாவில் ஜனநாயகப் பொறுப்புணர்வை வலுப்படுத்தும் சூழலில், தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளை திரும்பப் பெறும் உரிமையை முன்மொழியும் ஒரு தனிநபர் மசோதா நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது.
- ❖ திரும்பப் பெறும் உரிமை என்பது ஒரு ஜனநாயக அரசியல் முறையாகும் என்பதோடு , இது வாக்காளர்கள் தங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதியை அவர்கள் பதவிக் காலம் முடிவதற்குள் நீக்க அனுமதிக்கிறது.
- ❖ இந்த யோசனையை இந்தியாவில் 1944 ஆம் ஆண்டு எம்.என். ராய் முன்மொழிந்தார், என்பதோடு பின்னர் 1974 இல் இதனை ஜெயபிரகாஷ் நாராயண் ஆதரித்தார்.
- ❖ தேசிய அளவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் (எம்.பி.) மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் (எம்.எல்.ஏ) ஆகியோரை திரும்ப அழைக்கும் உரிமை இல்லை.

- பீகார், மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கர் போன்ற சில மாநிலங்கள் பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகள் போன்ற உள்ளாட்சி அமைப்புகளில் திரும்பப் பெறும் உரிமை விதிகளை அமல்படுத்தியுள்ளன.
- மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (1951) பொதுமக்களின் அதிருப்தியின் பேரில் அல்லாமல் சட்டப்பூர்வ குற்றங்களுக்கு மட்டுமே பிரதிநிதிகளை நீக்க அனுமதிக்கிறது.

## சேவா தீர்த்தம் - புதிய பிரதமர் அலுவலக வளாகம்

- பிரதமர் நரேந்திர மோடி தனது அதிகாரப்பூர்வப் பணியிடத்தை புதுதில்லியில் உள்ள ரைசினா மலைக்கு அருகில் புதிதாக கட்டப்பட்ட சேவா தீர்த்தத்திற்கு மாற்றினார்.
- இதன் மூலம் பிரதமர் அலுவலகம் கிட்டத்தட்ட எட்டு தசாப்த காலமாக தெற்குத் தொகுதியில் இருந்து செயல்பட்டு வந்த மரபு முடிவுக்கு வந்தது.
- வடக்குத் தொகுதி மற்றும் தெற்குத் தொகுதி ஆகியவை முதலில் ஆங்கிலேய அரசாங்கத்திற்காக கட்டப்பட்டன என்பதோடு மேலும் அவை 1947 ஆம் ஆண்டில் சுதந்திர இந்தியாவால் கையகப்படுத்தப்பட்டன.
- எட்வின் லுட்யென்ஸின் சமகாலத்தவரான கட்டிடக் கலைஞர் ஹெர்பர்ட் பேக்கரால் அவை வடிவமைக்கப்பட்டன.
- முன்னதாக, தெற்குத் தொகுதியில் பிரதமர் அலுவலகம் மற்றும் மத்திய வெளியுறவு மற்றும் பாதுகாப்பு அமைச்சகங்கள் இருந்தன, அதே நேரத்தில் வடக்குத் தொகுதியில் உள்துறை மற்றும் நிதி அமைச்சகங்கள் இருந்தன.
- இந்தக் கட்டிடங்கள் இப்போது அருங்காட்சியகங்களாக மாற்றப்படும்.
- புதிய சேவா தீர்த்த வளாகம், மத்திய எழில்முற்றத் திட்டத்தின் ஒரு பகுதியாக, முன்னர் வெவ்வேறு இடங்களில் அமைந்திருந்த பிரதமர் அலுவலகம், அமைச்சரவை செயலகம் மற்றும் தேசியப் பாதுகாப்பு குழுமச் செயலகத்தை ஒன்றிணைக்கிறது.
- இந்தக் கட்டிடக்கலை வடிவமைப்பில் 11-13 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த சாளுக்கியர் கோயில் கல் திரை வேலைப்பாடுகளால் ஈர்க்கப்பட்ட நுழைவாயில் மற்றும் சென்னகேசவர் கோயிலால் ஈர்க்கப்பட்ட செதுக்கப்பட்ட கல் பீடப் பட்டை ஆகியவை அடங்கும்.
- புதிய பிரதமர் அலுவலக வளாகத்திற்கு "சேவா தீர்த்தம்" என்று பெயரிடும் தீர்மானத்தை மத்திய அமைச்சரவை நிறைவேற்றியது.
- பிரதமர், தேவநாகரி எழுத்துக்களில் "நாக்ரிக் தேவோ பவ" (குடிமகன் கடவுளுக்கு நிகர்) என்ற வாசகத்துடன் கூடிய பெயரைக் கொண்ட பலகையைத் திறந்து வைத்தார்.
- 1931 ஆம் ஆண்டு இந்தியாவின் நவீன தலைநகராக புது தில்லி திறக்கப்பட்டதிலிருந்து 95வது ஆண்டைக் குறிக்கும் நாளில் இந்த மாற்றம் நிகழ்ந்தது.
- முன்னதாக, ஆங்கிலேய இந்தியாவின் தலைநகரம் 1912 ஆம் ஆண்டு கொல்கத்தாவிலிருந்து டெல்லிக்கு மாற்றப்பட்டது.
- பிரதமரின் இல்லம், முன்னர் ரேஸ் கோர்ஸ் சாலை என்று அழைக்கப்பட்ட லோக் கல்யாண் மார்க்கில் இன்னும் அமைந்துள்ளது.

## PM RAHAT திட்டம்

- இந்தியா அரசானது PM RAHAT (சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்த்தல் மற்றும் கட்டாய சிகிச்சை அளித்தல்) திட்டத்தை அறிமுகப் படுத்தியது.
- இந்தத் திட்டம், விபத்து நடந்த நாளிலிருந்து 7 நாட்களுக்கு சாலை விபத்தில் பாதிக்கப் பட்டவருக்கு ₹1.5 லட்சம் வரை பணமில்லா சிகிச்சையை வழங்குகிறது.
- பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அருகில் இருப்பவர்கள் ERSS (அவசரகாலப் பதில் ஆதரவு அமைப்பு) 112 என்ற எண்ணிற்கு அழைத்து செய்து ஒரு மணி நேரத்திற்குள் (கோல்டன் ஹவர்) அருகிலுள்ள நியமிக்கப்பட்ட மருத்துவமனையை அடையலாம்.
- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகத்தின் eDAR (மின்னணு வழி விரிவான விபத்து அறிக்கை) தளம் மற்றும் தேசிய சுகாதார ஆணையத்தின் TMS (பரிவர்த்தனை மேலாண்மை அமைப்பு) 2.0 ஆகியவற்றின் ஒருங்கிணைப்பின் மூலம் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## ஸ்டார்ட்அப் இந்தியா நிதியின் நிதி 2.0

- ₹10,000 கோடி நிதியுடன் ஸ்டார்ட்அப் இந்தியா நிதியின் நிதி 2.0 (FoF 2.0) திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- இந்த நிதி நீண்டகால உள்நாட்டு மூலதனத்தைத் திரட்டுவதையும் இந்தியாவின் புத்தொழில் மற்றும் துணிகர மூலதன சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்தச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஸ்டார்ட்அப் இந்தியா முன்முயற்சியின் கீழ் 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட புத்தொழில்களுக்கான நிதியின் நிதி (FFS 1.0) ஐப் பின்பற்றுகிறது.
- FFS 1.0 இன் கீழ், ₹10,000 கோடி 145 மாற்று முதலீட்டு நிதிகளுக்கு உறுதியளிக்கப்பட்டது என்பதோடு இவை 1,370 க்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்களில் ₹25,500 கோடிக்கு மேல் முதலீடு செய்தன.
- FoF 2.0 இந்தியா முழுவதும் அடிப்படை தொழில்நுட்பம், புத்தாக்க உற்பத்தி, தொடக்க நிலை நிறுவனர்கள் மற்றும் முன்னுரிமைத் துறைகளில் கவனம் செலுத்தும்.
- இந்தத் திட்டமானது தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையால் செயல்படுத்தப் பட்டு, இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியால் நிர்வகிக்கப் படுகிறது.

## இந்தியாவில் நீதிபதிகளுக்கு எதிரான புகார்கள்

- கடந்த 10 ஆண்டுகளில் பணியில் இருக்கும் நீதிபதிகளுக்கு எதிராக 8,630 புகார்கள் வந்துள்ளதாக மத்திய அரசு மக்களவையில் தெரிவித்துள்ளது.
- உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு எதிரான ஊழல், பாலியல் வன்கொடுமை மற்றும் பிற கடுமையான முறைகேடுகள் தொடர்பான புகார்கள் வந்து உள்ளன.
- நீதிபதிகளுக்கு எதிரான புகார்கள் இந்திய தலைமை நீதிபதி மற்றும் உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளால் "உள்ளக நடைமுறையின்" கீழ் கையாளப் படுகின்றன.

- CPGRAMS (மையப்படுத்தப்பட்ட பொது குறை தீர்க்கும் மற்றும் கண்காணிப்பு அமைப்பு) மூலம் சமர்ப்பிக்கப்படும் புகார்கள் சம்பந்தப்பட்ட நீதித்துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகின்றன.

## உலகின் இரண்டாவது பெரிய திறன்பேசி சந்தை - இந்தியா

- 2025 ஆம் ஆண்டில், சீனாவிற்குப் பிறகு 740 மில்லியனுக்கும் அதிகமான திறன்பேசிகள் பயன்பாட்டில் உள்ள நிலையில், உலகளவில் இரண்டாவது பெரிய செயலில் உள்ள திறன்பேசிகள் நிறுவப்பட்ட தளமாக இந்தியா மாறியது.
- செயலில் உள்ள அடிப்படை என்பது ஆண்டு விற்பனையை மட்டுமல்லாமல், தற்போது பயன்படுத்தப்படும் மொத்த திறன்பேசிகளின் எண்ணிக்கையையும் குறிக்கிறது.
- இந்திய மக்கள் தொகையில் 50%க்கும் அதிகமானோர் (சுமார் 1.45 பில்லியன்) இப்போது திறன்பேசிகளைப் பயன்படுத்துகின்றனர்.
- இந்தியாவில் சராசரி திறன்பேசி மாற்று சுழற்சியானது சுமார் 42 மாதங்கள் ஆகும் என்ற நிலையில் இது உலகளாவியச் சராசரியான 47 மாதங்களை விட சற்று குறைவு ஆகும்.

## உலகின் மிகப்பெரிய தானியங்கள் சேமிப்புத் திட்டம்

- கூட்டுறவுத் துறையில் உலகின் மிகப்பெரிய தானியங்கள் சேமிப்புத் திட்டத்தின் கீழ், மத்தியப் பிரதேசத்தின் பாலகாட், முன்னோடி மாவட்டமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளது.
- பர்ஸ்வாடாவில் உள்ள முதன்மை வேளாண் கடன் சங்கம் (PACS) அமைப்பால் 500 மெட்ரிக் டன் (MT) கிடங்கு கட்டப்பட்டது.
- வேளாண் உள்கட்டமைப்பு நிதி (AIF) மற்றும் வேளாண் சந்தைப்படுத்தல் உள் கட்டமைப்பு (AMI) திட்டம் போன்ற திட்டங்களை ஒன்றிணைப்பதன் மூலம் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- AIF இன் கீழ், PACS சேமிப்பு உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கான கடன்களுக்கு வட்டி மானியத்தைப் பெறுகிறது.
- AMI இன் கீழ் PACS-களுக்கான மானியம் 33.33% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- பரவலாக்கப்பட்ட சேமிப்பு வசதிகள் மூலம் விவசாயிகளின் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதும், விற்பனையில் ஏற்படும் சிரமங்களைத் தடுப்பதும் இந்த முயற்சியின் நோக்கமாகும்.

## அணுசக்தியில் தனியார் துறைகள்

- இந்தியாவை மாற்றுவதற்கான நிலையான அணுசக்திப் பயன்பாடு மற்றும் முன்னேற்றம் (சாந்தி) சட்டம், 2025 நிறைவேற்றப்பட்ட பிறகு அதானி குழுமம் அணு சக்தித் துறையில் நுழைந்தது.
- அதானி பவர் லிமிடெட், அதானி அணுசக்தி லிமிடெட் என்ற பெயரில் முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனத்தை உருவாக்கியுள்ளது.

- சாந்தி சட்டம் தனியார் நிறுவனங்கள் இந்தியாவில் அணு மின் நிலையங்களை இயக்கவும் வெளிநாட்டுத் தொழில்நுட்பக் கூட்டாளர்களுடன் சேர்ந்து ஒத்துழைக்கவும் அனுமதிக்கிறது.
- அணுசக்திச் சட்டத்திற்குப் பதிலாக வந்த இந்தச் சட்டம் அணுசக்தி உற்பத்தியில் தனியார் பங்களிப்பை அனுமதிக்கிறது.
- இந்தியாவில் தற்போது சுமார் 8.8 ஜிகாவாட் (GW) நிறுவப்பட்ட அணுசக்தி திறன் உள்ளது என்பதோடு இது மொத்த மின்சார உற்பத்தியில் சுமார் 3% பங்களிக்கிறது.
- ஆற்றல் மாற்ற இலக்கின் ஒரு பகுதியாக, அடுத்தப் பத்தாண்டுகளில் அணுசக்தித் திறனை 32 ஜிகாவாட்டாக உயர்த்துவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## லக்பதி தீதி திட்ட விரிவாக்கம்

- இந்திய அரசு லக்பதி தீதி திட்டத்தின் முந்தைய 3 கோடி இலக்கை முன்னதாகவே அடைந்ததையடுத்து பயனாளிகளின் எண்ணிக்கையை மார்ச் 2029க்குள் 6 கோடி பெண்களை இலக்காக உயர்த்தியுள்ளது.
- சுய உதவிக் குழுக்களில் (SHGs) பெண்கள் வாழ்வாதார நடவடிக்கைகள் மூலம் குறைந்த பட்சம் ₹1 லட்சம் ஆண்டு வருமானம் ஈட்ட இந்தத் திட்டம் உதவுகிறது.
- 2026–27 ஆம் ஆண்டுக்கான மத்தியப் பட்ஜெட்டில், அரசாங்கம் "SHE-Marts" (சுய உதவி தொழில்முனைவோர் சந்தைகள்) தொடங்குவதாக அறிவித்தது.
- நாடு முழுவதும் சுய உதவிக் குழு தயாரிப்புகளுக்கு SHE-Marts சிறந்த சந்தைப்படுத்தல் தளங்களை வழங்கும்.
- இந்த முயற்சி வருமான வாய்ப்புகளை அதிகரிப்பதையும் கிராமப்புறப் பெண்களின் தொழில்முனைவோரை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியாவில் புதிய புல்லட் ரயில் வழித்தடங்கள்

- 2026–27 மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட ஏழு புதிய அதிவேக ரயில் (புல்லட் ரயில்) வழித் தடங்களுக்கான நம்பகத்தன்மை மதிப்பீட்டை இந்திய அரசு தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டத்தை தேசிய அதிவேக ரயில் கழகம் (NHSRCL) செயல்படுத்தும்.
- இந்த ஏழு முன்மொழியப்பட்ட வழித்தடங்கள் இந்தியாவின் முக்கிய நகரங்களில் சுமார் 4,000 கிலோமீட்டர் தூரத்தை உள்ளடக்கும்.
- இந்த திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு சுமார் ₹16 டிரில்லியன் ஆகும்.
- இந்த வழித் தடங்களில் மும்பை–புனே, புனே–ஹைதராபாத், ஹைதராபாத்–பெங்களூரு, ஹைதராபாத்–சென்னை, சென்னை–பெங்களூரு, டெல்லி–வாரணாசி மற்றும் வாரணாசி–சிலிகுரி ஆகியவை அடங்கும்.
- இந்தியாவின் முதல் புல்லட் ரயில் திட்டமான மும்பை-அகமதாபாத் அதிவேக ரயில் பாதை தற்போது கட்டுமானத்தில் உள்ளது.

## இந்தியாவின் பண்டைய நாகரிகம்

- பிராரானா தளத்திலிருந்து பெறப்பட்ட புதிய தொல்பொருள் ஆராய்ச்சியானது, சிந்து சமவெளி நாகரிகம் கிட்டத்தட்ட 8,000 ஆண்டுகளுக்கு முந்தையது என்று கூறுகிறது.

- மட்பாண்டங்கள் மற்றும் விலங்கு எச்சங்களின் ரேடியோகார்பன் டேட்டிங், ஆரம்ப கால மனித குடியேற்றம் மற்றும் விவசாயச் சமூகங்கள் முன்னர் நம்பப்பட்டதை விட மிகவும் முன்னதாகவே வளர்ந்தன என்பதைக் குறிக்கிறது.
- சிந்து சமவெளி நாகரிகம் (ஹரப்பா நாகரிகம்) தற்போது கிமு 2600 முதல் கிமு 1900 வரை தேதியிடப்பட்டுள்ளது.
- முக்கிய நகர்ப்புற மையங்களில் ஹரப்பா, மொஹெஞ்சதாரோ, தோலாவிரா மற்றும் ராக்கிகர்ஹி ஆகியவை அடங்கும்.
- இந்த நாகரிகம், கட்டம் போன்ற வடிவிலான நகரங்கள், மூடப்பட்ட வடிகால் அமைப்புகள், தரப்படுத்தப்பட்ட பல்வேறு எடைகள் மற்றும் அளவீடுகள், வர்த்தக வலையமைப்புகள் மற்றும் புரிந்து கொள்ளப்படாத எழுத்து முறைகளுக்குப் பெயர் பெற்றது.

## ஆயுதப் படைகளில் உள்நாட்டு நாய்கள்

- அஸ்ஸாம் ரைபிள்ஸ், 2050 ஆம் ஆண்டுக்குள் உள்நாட்டு டாங்குல் ஹூய் மற்றும் கோம்பை நாய் இனங்களை அதன் நாய்ப் படையில் சேர்த்து, வெளிநாட்டு இனங்களை படிப்படியாக குறைக்க திட்டமிட்டுள்ளது.
- 1835 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அசாம் ரைபிள்ஸ், இந்தியாவின் பழமையான துணை ராணுவப் படையாகும் என்பதோடு உள்துறை அமைச்சகம் (நிர்வாகக் கட்டுப்பாடு) மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் (செயல்பாட்டுக் கட்டுப்பாடு) கீழ் இது செயல்படுகிறது.
- ஆயுதப்படைகளின் நாய்ப் படைகளில் இந்திய நாய் இனங்களை ஊக்குவிப்பதற்காக உள்துறை அமைச்சகம் 2025 ஆம் ஆண்டு ஒரு உத்தரவை பிறப்பித்தது.
- தங்குல் ஹூய் இனம் மணிப்பூரின் உக்ருல் மாவட்டத்தைச் சேர்ந்தது மற்றும் நோய் எதிர்ப்பு மற்றும் வேட்டையாடும் திறனுக்கு பெயர் பெற்றது.
- கோம்பை இனம் தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டது மற்றும் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகளுக்கு ஏற்றதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- இந்தப் படையில் தற்போது 253 நாய்கள் உள்ளன என்ற நிலையில் அவற்றில் மிகவும் முக்கியமாக பெல்ஜிய மாலினாய்ஸ், ஜெர்மன் ஷெப்பர்ட் மற்றும் லாப்ரடோர் ஆகியவை அடங்கும் என்பதோடு இவற்றின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை 344 ஆகும்.

## CTF-154 இன் இந்தியாவின் முதல் தலைமைத்துவம்

- இந்தியக் கடற்படை முதல் முறையாக ஒருங்கிணைந்தப் பணிக்குழு-154 (CTF-154) இன் தலைமையை ஏற்றுக் கொண்டுள்ளது.
- CTF-154 என்பது ஒருங்கிணைந்த கடல்சார் படைகளின் (CMF) கீழ் உள்ள ஒரு பன்னாட்டுப் பயிற்சி பணிக்குழு ஆகும்.
- பஹ்ரைனின் மனாமாவில் உள்ள CMF தலைமையகத்தில் தலைமை மாற்ற விழா நடைபெற்றது.
- பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் கடல்சார் பாதுகாப்பை வலுப் படுத்த CTF-154 மே 2023 இல் நிறுவப்பட்டது.

- CMF என்பது இந்தியப் பெருங்கடல் பகுதி மற்றும் அருகிலுள்ள கடல் பகுதிகளின் பாதுகாப்பிற்காகப் பணியாற்றும் 47 நாடுகளின் கடற்படைக் கூட்டாண்மை ஆகும்.
- இந்தப் பணிக்குழு கடல்சார் பாதுகாப்பு மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் திசையறிதல் மற்றும் தயார்நிலைப் பயிற்சிகள் போன்ற பயிற்சிகளை நடத்துகிறது.

## வெண்மைப் புரட்சி 2.0

- அடுத்த ஐந்து ஆண்டுகளில் பால் கொள்முதலை 50% அதிகரிக்க இந்திய அரசு வெண்மைப் புரட்சி 2.0 ஐத் தொடங்கியுள்ளது.
- இந்த முயற்சியை கூட்டுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.
- 2028–29 ஆம் ஆண்டுக்குள் தினசரி பால் கொள்முதலை 1,007 லட்சம் கிலோகிராமாக உயர்த்துவதே இதன் இலக்கு ஆகும்.
- சுமார் 75,000 புதிய பால் கூட்டுறவு சங்கங்கள் (DCS) உருவாக்கப்படும் என்பதோடு மேலும் தற்போதுள்ள 46,422 DCSகள் வலுப்படுத்தப்படும்.
- இந்தத் திட்டம் கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத் துறையின் தேசிய பால் மேம்பாட்டுத் திட்டம் 2.0 என்பதின் கீழ் நிதியளிக்கப்படுகிறது.
- இந்தியாவின் பால் பண்ணை தொழிலாளர் தொகுப்பில் கிட்டத்தட்ட 70% பெண்கள் உள்ளனர் என்ற நிலையில் இந்தத் திட்டம் அதிக பெண் பால் பண்ணையாளர்களை கூட்டுறவு அமைப்புகளுக்குள் கொண்டுவருவதில் கவனம் செலுத்துகிறது.
- விவசாயிகளின் வருமானம், கிராமப்புற வேலைவாய்ப்பு, ஊட்டச்சத்து மற்றும் பெண்களின் பொருளாதார அதிகாரமளிப்பை நன்கு மேம்படுத்துவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நகர்ப்புறச் சவால்கள் நிதி

- ₹1 லட்சம் கோடி மத்திய உதவியுடன் நகர்ப்புறச் சவால்கள் நிதியை (UCF) தொடங்குவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த நிதி முதன்முதலில் 2025–26 மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது மற்றும் ஐந்து ஆண்டுகளில் ₹4 லட்சம் கோடி மொத்த முதலீட்டைத் திரட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது நிதியாண்டு (FY) 2025–26 முதல் நிதியாண்டு 2030–31 வரை செயல்படும் என்ற ஒரு நிலையில் மேலும் இது நிதியாண்டு 2033–34 வரை நீட்டிக்கப்படலாம்.
- இந்தத் திட்டம் 10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட நகரங்கள், அனைத்து மாநிலத் தலைநகரங்கள் மற்றும் 1 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட முக்கிய தொழில்துறை நகரங்களை உள்ளடக்கும்.
- இது நகரங்களை வளர்ச்சி மையங்களாகவும், ஆக்கப்பூர்வமான மறுமேம்பாடு மற்றும் நீர் மற்றும் சுகாதார உள்கட்டமைப்பாகவும் மாற்றுவதில் கவனம் செலுத்துகிறது.
- இதன் திட்டச் செலவில் 25% என்ற அளவை மைய அரசு வழங்கும் என்பதோடு குறைந்த பட்சம் 50% சந்தை மூலங்களிலிருந்து திரட்டப்பட வேண்டும் என்ற நிலையில் மீதம் உள்ள 25% அளவை மாநிலங்கள் அல்லது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (ULBs) பங்களிக்கும்.

## AI ஆளுகை கட்டமைப்பு 2026

- AI தாக்க உச்சி மாநாடு 2026க்கு முன்னதாக இந்தியா தனது முதல் செயற்கை நுண்ணறிவு (AI) ஆளுகை கட்டமைப்பை வெளியிட்டது.
- இந்தியா ஒரு தனி AI சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு பதிலாக ஒரு கொள்கை அடிப்படையிலான AI ஆளுகை மாதிரியை ஏற்றுக்கொண்டது.
- இந்தக் கட்டமைப்பு நம்பிக்கை, பொறுப்புக் கூறல், வெளிப்படைத்தன்மை, பாதுகாப்பு, நியாயத் தன்மை, புத்தாக்கம் மற்றும் நிலைத்தன்மை உள்ளிட்ட ஏழு வழிகாட்டும் கொள்கைகளை ("சூத்திரங்கள்") அடிப்படையாகக் கொண்டது.
- இது ஒரு தேசிய AI ஆளுகை ஒருங்கிணைப்புக் குழு மற்றும் சோதனைத் தரநிலைகள் மற்றும் அபாய மதிப்பீட்டிற்கான AI பாதுகாப்பு நிறுவனம் போன்ற பல்வேறு புதிய நிறுவனங்களை முன்மொழிகிறது.
- பாதுகாப்பு, உரிமைகள் அல்லது வாழ்வாதாரங்களைப் பாதிக்கும் அதிக ஆபத்துள்ள AI பயன்பாடுகளுக்கு மனித மேற்பார்வை மற்றும் வெளிப்படைத்தன்மை அறிக்கையிடல் தேவைப்படும்.

## யுகே யுகீன் பாரத் தேசிய அருங்காட்சியகம்

- யுகீன் பாரத் தேசிய அருங்காட்சியகத்தின் முதல் காட்சியகம் 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இது மத்திய எழில் முற்றம் (சென்ட்ரல் விஸ்டா) என்பதின் மறுமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கலாச்சார அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டு வருகிறது.
- இது தற்போதுள்ள தேசிய அருங்காட்சியகத்தை மாற்றி புது தில்லியில் உள்ள வடக்கு தொகுதி மற்றும் தெற்கு தொகுதி கட்டிடங்களில் அமைந்திருக்கும்.
- 5,000 ஆண்டுகால இந்திய நாகரிகத்தைக் காட்சிப்படுத்தும் இந்த அருங்காட்சியகம், சிந்து சமவெளிப் பொருட்கள், குப்தர் கால சிற்பங்கள் மற்றும் சோழர் கால வெண்கலங்கள் போன்ற கலைப்பொருட்களைக் காட்சிப்படுத்தும்.
- அருங்காட்சியக வடிவமைப்பு மற்றும் மேலாண்மையில் பிரான்சின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, இந்தியாவும் பிரான்சும் கூட்டாக இந்த அருங்காட்சியகத்தை உருவாக்கி வருகின்றன.

## CBDC அடிப்படையிலான பொது விநியோக முறை

- குஜராத்தின் காந்திநகரில் இந்தியாவின் முதல் மத்திய வங்கியின் டிஜிட்டல் நாணயம் (CBDC) அடிப்படையிலான பொது விநியோக முறையை (PDS) மத்திய உள்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- இந்த சோதனைத் திட்டத்தை நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம், ரிசர்வ் வங்கி மற்றும் குஜராத் அரசுடன் இணைந்து தொடங்கி உள்ளது.
- இந்த அமைப்பின் கீழ், பயனாளிகள் நியாய விலைக் கடைகளில் (FPS) மானிய விலையில் உணவு தானியங்களை வாங்க தங்கள் டிஜிட்டல் பணக்கோப்புகளில் நிரல்படுத்தக் கூடிய டிஜிட்டல் ரூபாய் (e₹) கூப்பன்களைப் பெறுகிறார்கள்.

- குஜராத்தின் அகமதாபாத், ஆனந்த், வல்சாத் மற்றும் சூரத் மாவட்டங்களில் இந்த முன்னோடித் திட்டம் தொடங்கப் பட்டுள்ளது என்பதோடு மேலும் சண்டிகர், புதுச்சேரி மற்றும் தாத்ரா & நாகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ ஆகிய ஒன்றியப் பிரதேசங்களுக்கு இது விரிவுபடுத்தப்படும்.
- இந்த முன்முயற்சியானது CBDC-ஐ பொது விநியோக முறையுடன் ஒருங்கிணைத்து, பாதுகாப்பான, கண்காணிக்கக்கூடிய மற்றும் நிகழ்நேரப் பரிவர்த்தனைகளை செயல் படுத்துகிறது.

## அணைகள் பாதுகாப்பு குறித்த சர்வதேச மாநாடு 2026

- அணைகள் பாதுகாப்பு குறித்த சர்வதேச மாநாடு (ICDS) 2026 பெங்களூருவில் நிறைவு அடைந்தது.
- அணைகள் பாதுகாப்பு, காலநிலை மீள்தன்மை மற்றும் நீர் உள்கட்டமைப்பு மேலாண்மை குறித்து விவாதிக்க ஜல் சக்தி அமைச்சகத்தால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.
- அணைகள் பாதுகாப்பு சட்டம், 2021 மற்றும் அணை மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டம் (DRIP) ஆகியவற்றில் கவனம் செலுத்தும் விவாதங்கள் நடைபெற்றன.
- தொழில்நுட்ப அமர்வுகள் நீண்டகாலமாக உள்ள அணைகள், வண்டல் மேலாண்மை, ஆபத்து குறித்து முடிவெடுத்தல், வெள்ள மேலாண்மை மற்றும் அணைப் பாதுகாப்பு கண்காணிப்பு அமைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- அவசரகாலச் செயல் திட்டங்கள் (EAPs), நிகழ்நேரக் கண்காணிப்பு, நீர்த்தேக்க வண்டல் மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த நீர்த்தேக்கச் செயல்பாடுகள் ஆகியவற்றின் அவசியத்தை மாநாடு எடுத்துரைத்தது.

## 2025–26 நிதியாண்டில் மின் உற்பத்தித் திறன்

- நடப்பு நிதியாண்டில் ஜனவரி 31, 2026 வரை இந்தியா 52,537 மெகாவாட் (மெகாவாட்) மின் உற்பத்தித் திறனைச் சேர்த்துள்ளதாக மின் அமைச்சகம் அறிவித்துள்ளது.
- இது இதுவரையில் இல்லாத அளவுக்கு அதிகபட்ச வருடாந்திர மின் உற்பத்தித் திறன் இணைப்பாகும் என்பதோடு இது 2024–25 நிதியாண்டில் முந்தைய சாதனையான 34,054 மெகாவாட் மின் உற்பத்தித் திறனை விட அதிகமாகும்.
- மொத்த மின் உற்பத்தியில், சுமார் 39,657 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து பெறப்பட்டது என்பதோடு இதில் சுமார் 34,955 மெகாவாட் சூரிய சக்தியிலிருந்தும் 4,613 மெகாவாட் காற்றிலிருந்தும் பெறப்பட்டது.
- ஜனவரி 31, 2026 நிலவரப்படி, இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட மின் உற்பத்தி திறன் 5,20,510.95 மெகாவாட்டாக உள்ளது.
- மொத்த திறனில் சுமார் 50.5% புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்தும், 48% புதைபடிவ எரிபொருட்களிலிருந்தும், 1.6% அணுசக்தியிலிருந்தும் வருகிறது.

## உள்கட்டமைப்புத் திட்டம் - கிரேட் நிக்கோபார் தீவு

- தேசியப் பசுமை தீர்ப்பாயம் (NGT), சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகளுடன் கடுமையான இணக்கத்தை உறுதி செய்யும் அதே வேளையில், கிரேட் நிக்கோபார் தீவு உள் கட்டமைப்புத் திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

- இந்தத் திட்டத்தில் சர்வதேச கண்டெய்னர் பரிமாற்ற முனையம் (ICTT), நகரிய மேம்பாடு மற்றும் 450 MVA எரிவாயு மற்றும் சூரிய ஆற்றல் சார்ந்த மின் உற்பத்தி நிலையம் ஆகியவை அடங்கும்.
- மலாக்கா ஜலசந்திக்கு அருகிலுள்ள திட்டத்தின் மூலோபாய முக்கியத்துவத்தையும், இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கை மற்றும் இந்தியப் பெருங்கடல் பரவலையும் NGT குறிப்பிட்டது.
- தீவுகள் கடலோர ஒழுங்குமுறை மண்டலம் (ICRZ) அறிவிப்பு, 2019 இன் படி, 16,000க்கும் மேற்பட்ட பவளப்பாறை காலனிகளை இடமாற்றம் செய்தல் மற்றும் கண்காணித்தல் ஆகியவை பவளப்பாறை பாதுகாப்பு நடவடிக்கைகளில் அடங்கும்.
- கலாதியா விரிகுடாவில் நேரடித் திட்டப் பகுதிக்குள் பெரிய பவளப்பாறைகள் எதுவும் இல்லை என்பதை தீர்ப்பாயம் உறுதிப்படுத்தியது.

## அரசியலமைப்பு சட்ட திருத்த மசோதா, 2026 - நீதித்துறை பன்முகத்தன்மை

- நீதித்துறை நியமனங்களில் இடஒதுக்கீடு வழங்குவதற்காக, நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் பி. வில்சன், 2026 ஆம் ஆண்டு தனிநபர் அரசியலமைப்பு சட்டத் திருத்த மசோதாவை அறிமுகப்படுத்தினார்.
- உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களில் பட்டியல் சாதியினர் (SC), பட்டியல் பழங்குடியினர் (ST), இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC), மத சிறுபான்மையினர் மற்றும் பெண்களுக்கு பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதை இந்த மசோதா முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நியமனங்கள் அவர்களின் மக்கள்தொகை விகிதத்தைப் பிரதிபலிக்க வேண்டும் என்றும், மத்திய அரசு கொலீஜியத்தின் பரிந்துரைகளை அறிவிக்க 90 நாள் கால அவகாசத்தை நிர்ணயிக்கவும் அது முன்மொழிகிறது.
- நீதிக்கான அணுகலை மேம்படுத்துவதற்காக புது தில்லி, கொல்கத்தா, மும்பை மற்றும் சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் பிராந்திய அமர்வுகளையும் இந்த மசோதா முன்மொழிகிறது.
- தற்போது, இரண்டாவது நீதிபதிகள் வழக்கு (1993) மூலம் உச்ச நீதிமன்றத்தால் உருவாக்கப் பட்ட கொலீஜியம் அமைப்பு மூலம் நீதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள்.

## MANAV – AI தொழில்நுட்ப இலக்கு

- புதுதில்லியில் நடைபெற்ற இந்திய AI தாக்க உச்சி மாநாட்டில் பிரதமர் "MANAV" AI தொழில்நுட்ப இலக்கு திட்டக் கட்டமைப்பை விளக்கினார்.
- MANAV என்பது தார்மீக மற்றும் நெறிமுறை அமைப்புகள், பொறுப்புணர்வு கொண்ட ஆட்சி, தேசிய இறையாண்மை, அணுகக் கூடிய மற்றும் உள்ளடக்கிய செயற்கை நுண்ணறிவு (AI), மற்றும் செல்லுபடியாகும் மற்றும் சட்டபூர்வமான அமைப்புகள் ஆகியவற்றைக் குறிக்கிறது.
- இது இந்தியாவில் செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி மற்றும் பயன்பாட்டிற்கான ஐந்து தூண்கள் கொண்ட கட்டமைப்பை வழங்குகிறது.
- இது நியாயத் தன்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறல், தரவுப் பாதுகாப்பு மற்றும் AI அமைப்புகளுக்கான பொது அணுகல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

## டெல்லி பிரகடனம் 2026

- புதுதில்லியில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு இந்திய AI தாக்க உச்சி மாநாட்டில் டெல்லி பிரகடனம் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இந்தப் பிரகடனம் செயற்கை நுண்ணறிவு (AI) நிர்வாகத்திற்கான ஏழு கொள்கைகளை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இது AI அமைப்புகளில் நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், நியாயத் தன்மை, பாதுகாப்பு, நிலைத்தன்மை, மனித கண்ணியம் மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிக்கிறது.
- இது, ஒரு நாடு அதன் எல்லைகளுக்குள் உருவாக்கப்படும் தரவுகளின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள தரவு இறையாண்மையை ஆதரிக்கிறது.
- இது ஆதார் (இந்தியத் தனித்துவ அடையாள ஆணையம்) மற்றும் UPI (ஒருங்கிணைந்தப் பணவழங்கீட்டு இடைமுகம்) போன்ற டிஜிட்டல் பொது உள் கட்டமைப்பு (DPI) ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கிறது.
- இது AI அமைப்புகளின் ஆற்றல் நுகர்வைக் குறைப்பதில் கவனம் செலுத்தும் தூய்மையான AI-ஐயும் ஊக்குவிக்கிறது.

## Bharat VISTAAR முன்முயற்சி

- ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் 2026 ஆம் ஆண்டு நடைபெற்ற AI உச்சி மாநாட்டின் போது, வேளாண் அமைச்சகம் Bharat VISTAAR திட்டத்தின் முதல் கட்டத்தை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இது விவசாயிகளுக்கான பன்மொழி செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான உரையாடும் ஆலோசனை அமைப்பாகும்.
- விவசாயிகள் உடனடி பதில்களைப் பெற 155261 என்ற உதவி எண்ணை அழைக்கலாம்.
- இது பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா (PMFBY) மற்றும் மண் சுகாதார அட்டை திட்டம் போன்ற சேவைகளை டிஜிட்டல் விவசாயி அடையாள அட்டை இணைக்கும்.
- இது மண் பரிசோதனை, விதைகள், உரங்கள், நீர்ப்பாசனம், கடன்கள் மற்றும் காப்பீடு குறித்த வழிகாட்டுதலை வழங்குகிறது.

## AI உச்சி மாநாடு பிரகடன முடிவுகள்

- 2026 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய AI தாக்க உச்சி மாநாட்டில், 88 நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் புது தில்லி AI உச்சி மாநாடு பிரகடனத்திற்கு ஒப்புதல் அளித்தன.
- 2026 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய AI தாக்க உச்சி மாநாடு, உள்கட்டமைப்பு முதலீட்டு உறுதிமொழிகளில் $250 பில்லியனுக்கும் அதிகமான தொகையைப் பெற்றது.
- இந்த உச்சி மாநாட்டின் போது இந்திய நிறுவனங்கள் $300 பில்லியனுக்கும் அதிகமான ஒப்பந்தங்களை அறிவித்தது.
- செயற்கை நுண்ணறிவு (AI) தொடர்பான புது தில்லி பிரகடனம், உறுதிமொழிகளை தன்னார்வ மற்றும் பிணைக்கும் தன்மை இல்லாதவை என்று விவரிக்கிறது.

- புது தில்லி பிரகடனம் செயற்கை நுண்ணறிவின் (AI) ஜனநாயகப் பரவலை ஆதரிக்கிறது மற்றும் Global AI Impact Commons என்பதை, AI பயன்பாட்டு நிகழ்வுகளின் தரவுத் தளமாகவும், Trusted AI Commons என்பதைக் கருவிகள், அளவுகோல்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளின் களஞ்சியமாகவும் முன்மொழிகிறது.
- முன்னோடி தொழில்நுட்ப ஆராய்ச்சிக்காக $20 பில்லியன் உறுதியளிக்கப்பட்டது.
- உள்நாட்டுச் செயற்கை நுண்ணறிவு (AI) பிரிவில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் ₹10 லட்சம் கோடி முதலீட்டை அறிவித்துள்ளது.
- இந்தியாவில் தரவு மையம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) திட்டங்களில் அதன் $15 பில்லியன் முதலீட்டின் விவரங்களை கூகிள் பகிர்ந்து கொண்டது.
- 100 மெகாவாட் தரவு மையத்தினைக் குத்தகைக்கு எடுக்க டாடா குழுமத்துடன் OpenAI ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- செயற்கை நுண்ணறிவு (AI) ஒத்துழைப்புக்காக இன்போசிஸுடன் Anthropic நிறுவனம் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- Nvidia கிராபிக்ஸ் செயலாக்க அலகுகளைப் பயன்படுத்தி தரவு மைய உள் கட்டமைப்பில் Yotta Data Services நிறுவனம் $2 பில்லியன் முதலீட்டை அறிவித்தது.
- சர்வம் AI ஆனது இந்தியாவின் முதல் உள்நாட்டில் பயிற்சி பெற்ற பல பில்லியன் அளவுரு கொண்ட பெரிய மொழி மாதிரியை (LLM) அறிமுகப்படுத்தியது.

## இந்தியப் பெருங்கடல் கடற்படை கருத்தரங்கு 2026

- விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற 9வது தலைவர்கள் மாநாட்டில் இந்தியப் பெருங்கடல் கடற்படைக் கருத்தரங்கின் (IONS) தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுக் கொண்டது.
- 16 ஆண்டுகளுக்குப் பிறகு தாய்லாந்திடமிருந்து தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட இந்தியா, இரண்டு ஆண்டு காலத்திற்கு IONS அமைப்பை வழி நடத்தும்.
- இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் கடற்படைகளுக்கு இடையே கடல்சார் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காக 2008 ஆம் ஆண்டு இந்தியக் கடற்படையால் IONS தொடங்கப் பட்டது.
- பிலிப்பைன்ஸ் ஒரு பார்வையாளர் நாடாக அனுமதிக்கப்பட்டது என்பதோடு மேலும் ஓமன் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணத்திற்கான பணிக் குழுவில் (HADR) இணைந்தது.
- IONS தற்போது 25 உறுப்பினர் கடற்படைகளையும் 9 பார்வையாளர் நாடுகளையும் கொண்டுள்ளது என்பதோடு தலைமைப் பதவி ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் சுழற்சி முறையில் மாற்றப் படுகிறது.

## அரிய வகை புவிக் காந்த உற்பத்தி

- 2026 ஆம் ஆண்டில் இந்தியா அரிய வகை நிரந்தரமான புவிக் காந்தங்களை உற்பத்தி செய்யத் தொடங்கும் என்றும் நான்கு மாநிலங்களில் முக்கியமான கனிமப் பூங்காக்களை அமைக்கும் என்றும் மத்திய சுரங்கத் துறை அமைச்சர் அறிவித்தார்.
- மத்திய அமைச்சரவை நவம்பர் 2025 இல், ஆண்டுக்கு 6,000 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு ₹7,280 கோடி நிதி செலவில் ஒப்புதல் அளித்தது.

- மின்சார வாகனங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்புகள், மின்னணுவியல், விண்வெளி மற்றும் பாதுகாப்புத் துறைகளில் இந்தக் காந்தங்கள் பயன்படுத்தப் படுகின்றன.
- ஒடிசா, ஆந்திரா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தில் முக்கியக் கனிமங்களை தூய்மையாக்கும் பூங்காக்களை அரசாங்கம் நிறுவும்.
- பழைய கைபேசிகள் மற்றும் பிற மின்னணு கழிவுகளிலிருந்து முக்கியத் தாதுக்களை மறு சுழற்சி மூலம் மீட்டெடுக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

## தேனீ வழித்தடங்கள் முன்முயற்சி

- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI), தேசிய நெடுஞ்சாலைகளில் இந்தியாவின் முதல் தேனீ வழித்தடங்கள் முன்முயற்சியைத் தொடங்கியுள்ளது.
- இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நெடுஞ்சாலைகளில் மகரந்தச் சேர்க்கைக்கு உகந்த பசுமை வழித்தடங்களை உருவாக்கும்.
- இந்தத் திட்டம் வேம்பு, புங்கை , இலுப்பை, புரசு, நாவல் மற்றும் வாகை போன்ற பூர்வீக தேன் நிறைந்த இனங்களை நடவு செய்யும்.
- 2026–27 ஆம் ஆண்டில், NHAI 40 லட்சம் மரங்களை நட திட்டமிட்டுள்ளது என்பதோடு இதில் 60 சதவீதம் தேனீ வழித்தட முயற்சியின் கீழ் உள்ளது.
- மகரந்தச் சேர்க்கையை ஆதரிப்பது, பல்லுயிர்ப் பெருக்கத்தை அதிகரிப்பது மற்றும் நீடித்த உள்கட்டமைப்பு மேம்பாட்டை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.

## SAHI & BODH முன்முயற்சிகள்

- இந்தியாவின் சுகாதார AI சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்த, இந்திய AI தாக்க உச்சி மாநாடு 2026 இல், மத்திய சுகாதார அமைச்சர், சுகாதார முன்முயற்சிக்கான பாதுகாப்பான AI (SAHI) மற்றும் சுகாதார AIக்கான தரப்படுத்தல் திறந்தநிலை தரவுத் தளத்தை (BODH) தொடங்கினார்.
- பொறுப்புணர்வு, தனியுரிமை பாதுகாப்பு மற்றும் குடிமக்களை மையமாகக் கொண்ட பாதுகாப்புகளை மையமாகக் கொண்டு, சுகாதாரப் பராமரிப்பில் பொறுப்பான AI ஏற்புக்கான தேசிய நிர்வாகக் கட்டமைப்பை SAHI வழங்குகிறது.
- பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் நிஜ உலகத் தயார்நிலைக்கான AI அடிப்படையில் அமைந்த சுகாதாரத் தீர்வுகளை சோதிக்கவும், தரப்படுத்தவும் மற்றும் சரி பார்க்கவும் BODH ஒரு கட்டமைக்கப்பட்டத் தளத்தை வழங்குகிறது.
- இந்த முயற்சிகள் AI தீர்வுகள் பாதுகாப்பானவை, நம்பகமானவை, சான்றுகள் சார்ந்தவை மற்றும் மக்களை மையமாகக் கொண்டவை என்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன என்பதோடு அதே நேரத்தில் அவை பொதுமக்களின் நம்பிக்கையையும் வலுப்படுத்துகின்றன.
- இவை தேசிய சுகாதாரக் கொள்கை 2017 மற்றும் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டம் (2020) ஆகியவற்றின் அடிப்படையில் இயங்கக் கூடிய மற்றும் அளவிடக்கூடிய டிஜிட்டல் சுகாதார உள்கட்டமைப்பை உருவாக்குகின்றன.

## ராஷ்டிரபதி பவனில் ராஜாஜி சிலை

- ❖ ராஷ்டிரபதி பவனில் உள்ள எட்வின் லுட்யன்ஸ் சிலைக்குப் பதிலாக சி. ராஜ கோபாலாச்சாரியார் சிலை அமைக்கப்படும் என்று இந்தியப் பிரதமர் அறிவித்தார்.
- ❖ சுதந்திர இந்தியாவின் முதல் மற்றும் கடைசி இந்திய கவர்னர் ஜெனரல் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி ஆவார்.
- ❖ அவர் டிசம்பர் 10, 1878 அன்று சென்னை மாகாணத்தின் சேலத்தில் பிறந்தார்.
- ❖ 1930 ஆம் ஆண்டு வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரகத்திற்குத் தலைமை தாங்கினார் என்பதோடு மேலும் அரசியலமைப்பு முடக்கநிலையை நிவர்த்தி செய்வதற்காக 1944 ஆம் ஆண்டு சி.ஆர் சூத்திரத்தையும் முன்மொழிந்தார்.
- ❖ 1954 ஆம் ஆண்டு பாரத ரத்னா விருது பெற்ற முதல் நபர்களில் இவரும் ஒருவர்.
- ❖ எட்வின் லுட்யன்ஸ் என்பவர் புது தில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவன் மற்றும் பல முக்கியக் கட்டிடங்களை வடிவமைத்த பிரிட்டிஷ் கட்டிடக் கலைஞர் ஆவார்.

## பயங்கரவாத எதிர்ப்புக் கொள்கை 'PRAHAAR'

- ❖ உள்துறை அமைச்சகம் இந்தியாவின் முதல் பயங்கரவாத எதிர்ப்புக் கொள்கையை வெளியிட்டு, அதற்கு PRAHAAR என்று பெயரிட்டுள்ளது.
- ❖ நீர், நிலம், வான்வெளி மற்றும் இணையவெளி மூலம் இந்தியா பயங்கரவாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறது என்று PRAHAAR கூறுகிறது.
- ❖ இது எல்லை தாண்டிய பயங்கரவாதம், அல்-கொய்தா மற்றும் இஸ்லாமிய அரசு போன்ற உலகளாவிய குழுக்களின் அச்சுறுத்தல்கள் மற்றும் ஆளில்லா விமானங்கள் மற்றும் மறைகுறியாக்கப்பட்ட தளங்களின் தவறான பயன்பாடு ஆகியவற்றின் மூலம் வரும் அச்சுறுத்தல்களை எடுத்துக்காட்டுகிறது.
- ❖ இந்தக் கொள்கை மின்சாரம், ரயில்வே, விமானப் போக்குவரத்து, துறைமுகங்கள், பாதுகாப்பு, விண்வெளி மற்றும் அணுசக்தி போன்ற முக்கிய துறைகளின் பாதுகாப்பை உள்ளடக்கியது.
- ❖ இது சட்டப்பூர்வ நடவடிக்கை, தீவிர வாதம் நோக்கிய வழிநடத்தல் ஒழிப்பு, இணைய வெளி கண்காணிப்பு மற்றும் மாநிலங்களுக்கும் மத்திய அரசின் நிறுவனங்களுக்கும் இடையிலான சிறந்த ஒருங்கிணைப்பு ஆகியவற்றிலும் கவனம் செலுத்துகிறது.

## கேரளா பெயர் மாற்ற மசோதா, 2026

- ❖ கேரளாவின் பெயரை "கேரளம்" என்று மாற்றும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ கேரள மாநிலச் சட்டமன்றத்தால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் அடிப்படையில் இந்த முன்மொழிவு உருவாக்கப்பட்டது.
- ❖ இந்திய அரசியலமைப்பின் சரத்து 3 இன் கீழ், கேரள (பெயர் மாற்றம்) மசோதா, 2026 ஐ குடியரசுத் தலைவர் மாநிலச் சட்டமன்றத்திற்குப் பரிந்துரைப்பார்.
- ❖ அதன் கருத்துகளைப் பெற்ற பிறகு, இந்த மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப் படுத்துவதற்கு குடியரசுத் தலைவரின் பரிந்துரையை மத்திய அரசு கோரும்.
- ❖ அரசியலமைப்பின் சரத்து 3, தற்போதுள்ள எந்தவொரு மாநிலத்தின் பெயரையும் சட்டப் படி மாற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கிறது.

## இந்தியாவின் ரஷ்ய எண்ணெய் இறக்குமதிகள் – ஜனவரி 2026

- Centre for Research on Energy and Clean Air (CREA) வெளியிட்ட தரவுகளின்படி, 2026 ஜனவரியில் ரஷ்யாவின் புதைபடிவ எரிபொருட்களை வாங்குவதில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாகத் தொடர்கிறது.
- இந்தியா €2.2 பில்லியன் ($2.59 பில்லியன்) மதிப்புள்ள ரஷ்ய எரிபொருட்களை இறக்குமதி செய்தது என்பதோடு இந்த மொத்தக் கொள்முதலில் 78% கச்சா எண்ணெய் ஆகும்.
- ஜனவரி 2026 இல் இந்தியா ஒரு நாளைக்கு சுமார் 1.2 மில்லியன் பீப்பாய்கள் ரஷ்ய எண்ணெயை இறக்குமதி செய்தது.
- ரஷ்ய கச்சா எண்ணெயிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்ப் பொருட்களுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை ஜனவரி 21, 2026 முதல் அமலுக்கு வந்தது.
- தடைகள் மற்றும் விலைக் கட்டுப்பாடுகள் இருந்த போதிலும், இந்தியாவின் எரிசக்தி துறையில் ரஷ்யா தொடர்ந்து ஒரு முக்கிய வழங்குநராக இருந்தது அதே நேரத்தில் அதே காலக் கட்டத்தில் ரஷ்ய புதைபடிவ எரிபொருட்களின் மிகப்பெரிய வாங்கும் நாடாக சீனா இடம் பிடித்தது.

## நடமாடும் நெடுஞ்சாலை சோதனை ஆய்வகங்கள்

- தேசிய நெடுஞ்சாலைகளின் தரத்தைக் கண்காணிக்க என்று சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகம் (MoRTH) நடமாடும் தரக் கட்டுப்பாட்டு ஊர்திகளை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ராஜஸ்தான், குஜராத், கர்நாடகா மற்றும் ஒடிசாவில் இந்த சோதனைத் திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த நடமாடும் தரக் கட்டுப்பாட்டு வேன்கள், மீயொலி துடிப்பு வேக மீட்டர்கள் மற்றும் எதிரெழுச்சி சுத்தியல்கள் போன்ற துளையிடா சோதனைக் கருவிகளைக் கொண்டு உள்ளன.
- அரசாங்கம் நிகழ்நேரப் புவியிடங்காட்டி அமைப்பு (GPS) கண்காணிப்புடன் கூடிய தேசிய நெடுஞ்சாலை தரக் கண்காணிப்புத் தளத்தினையும் உருவாக்கி வருகிறது.

## SUJVIKA - AI உயிரித்தொழில்நுட்ப தரவு தளம்

- உயிரித்தொழில்நுட்ப துறையானது (DBT), அதன் 40வது நிறுவன தினத்தைக் குறிக்கும் வகையில், பிப்ரவரி 25, 2026 அன்று, செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான உயிரித் தொழில்நுட்ப தயாரிப்பு தரவு தளமான "SUJVIKA" ஐ அறிமுகப்படுத்தியது.
- இது உயிரித் தொழில்நுட்ப இறக்குமதிகள் குறித்த கட்டமைக்கப்பட்ட தரவை வழங்கும் வர்த்தகப் புள்ளி விவர டிஜிட்டல் நுண்ணறிவு தளமாகும்.
- உள்நாட்டு உயிரி உற்பத்தியை ஆதரிப்பதற்கும் இறக்குமதி சார்புநிலையைக் குறைப்பதற்கும் அதிக மதிப்புள்ள மற்றும் அதிக அளவு இறக்குமதிகளை அடையாளம் காண இந்தத் தளம் உதவுகிறது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் 1986 ஆம் ஆண்டு DBT நிறுவப் பட்டது.
- இந்தியாவின் உயிரிப் பொருளாதாரம் 2014 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 10 பில்லியன் அமெரிக்க டாலர்களிலிருந்து (USD) 2024 ஆம் ஆண்டில் சுமார் 165.7 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்தது.

# சர்வதேசச் செய்திகள்

## 15 வயதுக்குட்பட்டவர்களுக்கு சமூக ஊடகங்களுக்குத் தடை – பிரான்ஸ்

- 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்கான சட்டத்திற்கு பிரான்சின் தேசிய சட்டமன்றம் ஆதரவளித்துள்ளது.
- இந்தச் சட்டம் அங்கு நிறைவேற்றப்பட்டால், இளம் பதின்ம வயதினர் ஸ்னாப்சாட், இன்ஸ்டாகிராம் மற்றும் டிக்டாக் போன்ற சமூக வலைத்தளங்களை அங்கு பயன்படுத்த முடியாது.
- சமூக வலைத்தளங்கள் மன ஆரோக்கியத்திற்கு ஏற்படுத்தக் கூடிய பாதிப்புகள் குறித்த அதிகரித்து வரும் ஆதாரங்களால் தூண்டப்பட்டு, குழந்தைகளுக்கான சமூக வலைத்தளங்களைக் கட்டுப்படுத்தும் ஒரு வளர்ந்து வரும் போக்கின் ஒரு பகுதியாக பிரான்சின் இந்த நடவடிக்கை உள்ளது.
- இதே போன்ற ஒரு சட்டம் கடந்த ஆண்டு இறுதியில் ஆஸ்திரேலியாவிலும் நிறைவேற்றப்பட்டது.

## 4பி இயக்கம் - தென் கொரியா

- இணையத்தில் உள்ள இந்தியர்கள் 4பி இயக்கத்தை இந்தியாவிற்கு கொண்டு வர அணி திரள்கின்றனர்.
- 4பி அல்லது "நான்கு வேண்டாம்" என்பது தென் கொரியாவில் தோன்றிய ஒரு தீவிர பெண்ணிய இயக்கமாகும்.
- இந்தப் பெயர் அதன் வரையறுக்கும் நான்கு கொள்கைகளைக் குறிக்கிறது.
- அவை அனைத்தும் கொரிய மொழிச் சொல்லான 'பி' என்பதில் தொடங்குகின்றன என்ற நிலையில் இதன் தோராயமான பொருள் 'வேண்டாம்' என்பதாகும்.
- இந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் ஆண்களுடன் பழகுவதில்லை, ஆண்களைத் திருமணம் செய்வதில்லை, ஆண்களுடன் பாலியல் உறவு கொள்வதில்லை, அல்லது ஆண்களுடன் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதில்லை.
- இது உலகில் மிகக் குறைந்த பிறப்பு விகிதத்திற்கும், பாலியல் உறவைத் தவிர்ப்பதற்கும் வழி வகுத்துள்ளது.
- 4பி இயக்கம் என்பது ஒரு பாலினத்திற்கு எதிரான தனிப்பட்ட பழிவாங்கல் அல்ல, மாறாக ஏற்றத்தாழ்வுகளைத் தக்க வைக்கும் கலாச்சார நெறிமுறைகளிலிருந்து ஒரு அமைப்புரீதியான விலகல் மட்டுமே ஆகும்.
- தென் கொரியாவில் பாலின அடிப்படையிலான ஊதிய இடைவெளி உலகில் மிக அதிகமாக, கிட்டத்தட்ட 31 சதவீதமாக உள்ளது.

## இந்தியா-அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் 2026

- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள், வரிகளைக் குறைத்து இருதரப்பு வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்காக 2026-ல் ஒரு முக்கிய வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்தன.

- அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அமெரிக்காவிலிருந்து ஆண்டுதோறும் சுமார் 100 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள பொருட்களை இறக்குமதி செய்ய இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது.
- இந்தியப் பொருட்களுக்கான வரிகளை 50% இலிருந்து சுமார் 18% ஆகக் குறைக்க அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது.
- அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முக்கியப் பொருட்களில் எரிசக்திப் பொருட்கள், விமானங்கள் மற்றும் விமான பாகங்கள், தொழில்நுட்பப் பொருட்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயப் பொருட்கள் ஆகியவை அடங்கும்.
- இந்தியா பால் பொருட்கள், மரபணு மாற்றப்பட்ட பயிர்கள், கோழி வளர்ப்பு மற்றும் தானியங்கள் போன்ற முக்கியத் துறைகளைப் பாதுகாத்துள்ளது.
- இந்த ஒப்பந்தம் சந்தை அணுகலை மேம்படுத்துவதையும், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் மூலோபாய உறவுகளை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலக அரசாங்கங்கள் உச்சி மாநாடு 2026

- உலக அரசாங்கங்கள் உச்சி மாநாடு 2026 ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் நடைபெற்றது.
- இந்த உச்சிமாநாட்டின் கருத்துரு "உலகளாவிய ஆளுகை மற்றும் திறமையான தலைமைத்துவம்" என்பதாகும்.
- சர்வதேச ஒத்துழைப்பு, புத்தாக்கம் மற்றும் திறமையான பொது நிர்வாகத்தை ஊக்குவிப்பதன் மூலம் அரசாங்கங்களின் எதிர்காலத்தை வடிவமைப்பதே இந்த உச்சி மாநாட்டின் நோக்கமாகும்.
- ஆளுகை, செயற்கை நுண்ணறிவு (AI), பொருளாதாரம், சுகாதாரம் மற்றும் பொதுத் துறை புத்தாக்கம் ஆகியவை முக்கிய கவனம் செலுத்தப்படும் துறைகளாகும்.

## 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சமூக ஊடகத் தடை

- 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சமூக ஊடக அணுகலுக்கு நாடு தழுவிய தடையை ஸ்பெயின் அறிவித்துள்ளது.
- இத்தகைய தடையை விதித்த ஐரோப்பாவில் முதல் நாடாகவும், ஆஸ்திரேலியாவிற்குப் பிறகு உலகில் இரண்டாவது நாடாகவும் ஸ்பெயின் ஆனது.
- சமூக ஊடக தளங்களில் கட்டாய வயது சரிபார்ப்பு அமைப்புகளை அரசாங்கம் அமல்படுத்தும்.

## BRICS தொழில்துறைத் திறன் மையம்

- BRICS நாடுகளிடையே உற்பத்தித் திறன்களையும் தொழில்துறை ஒத்துழைப்பையும் வலுப்படுத்தும் நோக்கில், இந்தியா BRICS தொழில்துறைத் திறன் மையத்தில் (BCIC) இணைந்துள்ளது.
- இந்த முயற்சி ஐக்கிய நாடுகள் தொழில்துறை மேம்பாட்டு அமைப்புடன் (UNIDO) இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

- தேசிய உற்பத்தித்திறன் மன்றமானது (NPC) BCIC செயல்பாடுகளுக்கான இந்திய மையமாக நியமிக்கப்பட்டுள்ளது.
- தொழில்துறை 4.0 திறன்களை மேம்படுத்துவது, உற்பத்தித் திறனை அதிகரிப்பது மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (MSME-களுக்கு) ஆதரவளிப்பதே இதன் நோக்கமாகும்.

## ஸ்டார்ட் ஒப்பந்தத்தின் முடிவு

- பிப்ரவரி 5 அன்று, புதிய மூலோபாய ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் (புதிய ஸ்டார்ட்) அதிகாரப் பூர்வமாக காலாவதியானது.
- இது அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் அணு ஆயுதக் கிடங்குகளைக் கட்டுப்படுத்தும் வகையான கடைசியாக எஞ்சியிருந்த இருதரப்பு ஒப்பந்தத்தின் முடிவைக் குறித்தது ஆகும்.
- புதிய ஸ்டார்ட் ஒப்பந்தம், 2000-களின் பிற்பகுதியில் வாஷிங்டனுக்கும் மாஸ்கோவிற்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளைப் புதுப்பிக்கும் ஒரு காலகட்டத்தில் உருவானது.
- அதன் முன்னோடியான ஸ்டார்ட் I, 1991 இல் கையெழுத்திடப்பட்டு, டிசம்பர் 2009 இல் காலாவதியானது.
- அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் அவரது ரஷ்யப் பிரதிநிதி டிமிட்ரி மெட்வெடேவ் ஆகியோருக்கு இடையே லண்டனில் நடந்த சந்திப்பிற்குப் பிறகு, ஏப்ரல் 2009 இல் முந்தையதின் தொடர்ச்சியான ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் தீவிரமாகத் தொடங்கின.
- ஏப்ரல் 2010 இல், இரு தலைவர்களும் ப்ராக் நகரில் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.
- மேலும், அமெரிக்க செனட்டில் ஒரு சர்ச்சைக்குரிய ஒப்புதல் செயல்முறைக்குப் பிறகும், ரஷ்யக் கூட்டாட்சி சபையின் ஒப்புதலுக்குப் பிறகும், இது பிப்ரவரி 5, 2011 அன்று நடைமுறைக்கு வந்தது.
- இந்த ஒப்பந்தம் முதலில் 2021 இல் காலாவதியாகவிருந்தது.
- அந்தக் காலக்கெடுவுக்கு சில நாட்களுக்கு முன்பு, பைடன் நிர்வாகமும் கிரெம்ளினும் ஒரு முறை மட்டும் ஐந்து ஆண்டு கால நீட்டிப்புக்கு ஒப்புக் கொண்டன என்ற நிலையில் இதன் மூலம் அதன் காலாவதி தேதி பிப்ரவரி 5, 2026 ஆக மாற்றப்பட்டது.
- இது ஒவ்வொரு தரப்பின் அணு ஆயுதக் கிடங்கையும் 1,550 என்ற அளவில் பயன்படுத்தப்படும் மூலோபாயப் போர்க் குண்டுகளாகக் கட்டுப்படுத்தியது.
- மேலும் இது 2002 இல் நிர்ணயிக்கப்பட்ட முந்தைய வரம்பிலிருந்து கிட்டத்தட்ட 30% குறைப்பு ஆகும்.
- இன்று, உலகின் இரண்டு பெரிய அணு ஆயுதக் கிடங்குகள் மீதான சட்டப் பூர்வக் கட்டுப்பாடுகள் நீங்கிவிட்டன.
- 1972-க்குப் பிறகு முதல் முறையாக, அமெரிக்காவும் ரஷ்யாவும் பயன்படுத்தக் கூடிய மூலோபாய அணு ஆயுதங்களின் எண்ணிக்கைக்குச் சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்தும் வரம்புகள் எதுவும் இல்லை.

## FORGE முன்முயற்சி

- வாஷிங்டன் டிசியில் நடந்த முக்கியக் கனிமங்கள் அமைச்சகக் கூட்டத்தில் FORGE (வளம், புவிசார் மூலோபாய ஈடுபாடு குறித்த மன்றம்) முன்முயற்சியை இந்தியா ஆதரித்தது.
- அமெரிக்கா தலைமையிலான கனிமப் பாதுகாப்பு கூட்டாண்மையின் தொடர்ச்சியாக FORGE உள்ளது மற்றும் முக்கியமான கனிமங்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது.
- இது உலகளாவிய விநியோகச் சங்கிலிகளை அபயங்களிலிருந்து விடுவிப்பதற்கும், லித்தியம், கோபால்ட் மற்றும் நிக்கல் போன்ற அருமண் மற்றும் கனிமங்களுக்கு சீனாவை அதிகமாக நம்பியிருப்பதைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டது.
- தேசிய முக்கியக் கனிமங்கள் திட்டம் மற்றும் அருமண் தனிம வழித்தடங்கள் உள்ளிட்ட முன்முயற்சிகளை இந்தியா முன்னிலைப்படுத்தியது.

## 2026 ஆம் ஆண்டுக்கான ஐ.நா. ‘கௌரவப் பட்டியலில்’ இந்தியா

- இந்தியா 2026 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) வழக்கமான வரவு செலவுத் திட்டத்திற்கு 35.18 மில்லியன் டாலர் தொகையைச் செலுத்தியுள்ளது.
- இதன் மூலம், தங்கள் நிலுவைத் தொகையை முழுமையாகவும் சரியான நேரத்திலும் செலுத்திய 51 ஐ.நா. உறுப்பு நாடுகளின் 'கௌரவப் பட்டியலில்' இந்தியாவும் இடம் பெற்றுள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2026 ஆம் ஆண்டிற்கான 3.45 பில்லியன் டாலர் வழக்கமான வரவுசெலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் வழக்கமான வரவு செலவுத் திட்டம், பொதுச் சபை, பாதுகாப்புச் சபை, செயலகம் மற்றும் சர்வதேச நீதிமன்றம் உள்ளிட்ட முக்கிய நிர்வாகச் செலவுகளை உள்ளடக்கியது.
- உறுப்பு நாடுகளின் பங்களிப்புகள், பொருளாதார அளவு, தனிநபர் வருமானம், வெளிநாட்டுக் கடன் மற்றும் மேம்பாட்டு நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும் ஒரு சூத்திரத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன.
- இரண்டு வருடங்களுக்கான நிலுவைத் தொகையைச் செலுத்த வேண்டிய நாடுகள், அந்தப் பணம் செலுத்தப்படும் வரை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் தங்கள் வாக்களிக்கும் உரிமையை இழக்கின்றன.

## Project Vault திட்டம்

- அமெரிக்க அதிபரான டொனால்ட் டிரம்ப், முக்கியமான கனிமங்களின் மூலோபாய இருப்பை உருவாக்குவதற்கான 12 பில்லியன் டாலர் முன்முயற்சியான Project Vault திட்டத்தை அறிவித்தார்.
- இது முக்கியமான கனிமங்கள் மற்றும் அருமண் கூறுகளை வாங்கி சேமிப்பதற்கான ஒரு பொது-தனியார் கூட்டாண்மை ஆகும்.
- இந்தத் திட்டத்தில் 1.67 பில்லியன் டாலர் தனியார் நிதியுதவியும், அமெரிக்க ஏற்றுமதி-இறக்குமதி வங்கியிடமிருந்து 10 பில்லியன் டாலர் வரையிலான ஆதரவும் அடங்கும்.

- இத்திட்டத்தில் உள்ளடங்கிய கனிமங்களில் கோபால்ட், லித்தியம், காலியம் மற்றும் மின்கலன்கள், குறைக்கடத்திகள், பாதுகாப்பு மின்னணுவியல் மற்றும் ஜெட் என்ஜின்களில் பயன்படுத்தப்படும் அருமண் கூறுகளும் அடங்கும்.
- கனிம விநியோகச் சங்கிலிகளுக்காக வேண்டி சீனா மீதான அமெரிக்காவின் சார்பு நிலையைக் குறைப்பதே இந்த முன்முயற்சியின் நோக்கமாகும்.

## NCPF கட்டமைப்பு

- விக்சித் பாரத் தொலைநோக்குப் பார்வைக்கு இணையாக இந்தியாவின் வளர்ச்சியை ஆதரிப்பதற்காக, இந்தியாவும் உலக வங்கி குழுமமும் 2026–2031 ஆம் ஆண்டுக்கான புதிய நாடு கூட்டாண்மை கட்டமைப்பை (NCPF) அறிவித்துள்ளன.
- இந்தக் கட்டமைப்பு ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டுதோறும் சுமார் 8–10 பில்லியன் டாலர் நிதி உதவியை வழங்குகிறது.
- இது உள்கட்டமைப்பு, எரிசக்தி, வேளாண் வணிகம், சுகாதாரம், சுற்றுலா மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட உற்பத்தி போன்ற துறைகளில் கவனம் செலுத்துகிறது.
- வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், கிராமப்புறச் செழிப்பை வலுப்படுத்துதல், நகர்ப்புற மேம்பாடு மற்றும் காலநிலை மீள்திறனை மேம்படுத்துவதை இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கூட்டாண்மை தனியார் துறை தலைமையிலான வளர்ச்சி மற்றும் திறன் மேம்பாட்டிற்கு ஆதரவளிக்கிறது.

## உலகளாவிய LEED சான்றிதழ்கள்

- 2025 ஆம் ஆண்டில் LEED-சான்றளிக்கப்பட்ட கட்டிடப் பரப்பின் அடிப்படையில் அமெரிக்கா அல்லாத நாடுகளில் உலகளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது
- அமெரிக்கா 50 மில்லியன் மொத்தச் சதுர மீட்டருக்கும் அதிகமான சான்றளிக்கப்பட்ட இடத்துடன் முன்னணியில் உள்ளது.
- 26 மில்லியன் GSM மில்லியன் மொத்தச் சதுர மீட்டருடன் (GSM) சீனா அமெரிக்கா அல்லாத நாடுகளில் முதலிடத்தில் உள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து 16 மில்லியன் GSM உடன் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இந்தியா LEED செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு (O+M) சான்றிதழ்களில் அதிக வளர்ச்சியைக் காட்டியது என்ற நிலையில் மேலும் தற்போதுள்ள கட்டிடங்களின் செயல் திறனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.
- LEED என்பது ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் வடிவமைப்பில் தலைமைத்துவத்தைக் குறிக்கிறது என்ற நிலையில் இது அமெரிக்கப் பசுமைக் கட்டிட கவுன்சிலால் (USGBC) நிர்வகிக்கப் படுகிறது.

## இந்தியா-சீஷெல்ஸ் மூலோபாய கூட்டாண்மை

- சீஷெல்ஸ் அதிபர் பேட்ரிக் ஹெர்மினியின் இந்திய வருகையின் போது இந்தியாவும் சீஷெல்ஸும் SESEL கூட்டு தொலைநோக்கு பார்வையை அறிவித்தன.

- SESEL என்பது மேம்படுத்தப்பட்ட தொடர்புகள் மூலம் நிலைத்தன்மை, பொருளாதார வளர்ச்சி மற்றும் பாதுகாப்பைக் குறிக்கிறது.
- இந்தத் தொலைநோக்கு கடல்சார் பாதுகாப்பு, டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு, கால நிலை நடவடிக்கை, வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு ஒத்துழைப்பில் கவனம் செலுத்துகிறது.
- இந்தியா 175 மில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத் தொகுப்பை அறிவித்தது, இதில் கடன் வரி மற்றும் மானிய உதவி ஆகியவை அடங்கும்.
- ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு மன்றத்தில் (UNSC) இந்தியாவின் நிரந்தர உறுப்பினராக சீஷெல்ஸ் ஆதரவளித்தது.
- பேரிடர் தாங்கும் உள்கட்டமைப்புக்கான கூட்டணியில் (CDRI) சேரவும் சீஷெல்ஸ் ஒப்புக் கொண்டது.

## சீனாவின் பாண்டா ராஜதந்திரத்தில் மாற்றம்

- சீனாவின் ராட்சத பாண்டாக்கள் சியாவோ சியாவோ மற்றும் லீ லீ ஆகியவை ஜனவரி 2026 ஆம் ஆண்டில் ஜப்பானின் யுனோ விலங்கியல் பூங்காவிலிருந்து சீனாவிற்குத் திருப்பி அனுப்பப் பட்டன என்ற நிலையில, இது ஜப்பானில் ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக தொடர்ச்சியான பாண்டா இருப்பை முடிவுக்குக் கொண்டுவந்தது.
- இது 1972க்குப் பிறகு ஜப்பானில் ராட்சத பாண்டாக்கள் இல்லாமல் முதல் முறையாக அவை திரும்புவதைக் குறிக்கிறது.
- சியாவோ சியாவோ மற்றும் லீ லீ ஆகியோர் 2021 இல் யுனோ மிருகக்காட்சிசாலையில் பிறந்தன ஆனால் சீனாவின் நீண்ட கால பாண்டா ராஜதந்திரத் திட்டத்தின் கீழ் அவை சீனாவிற்குச் சொந்தமானவை.
- முதலில் பிப்ரவரி 2026 இல் திட்டமிடப்பட்ட இந்த நடவடிக்கை ஒப்பந்தத்தின் மூலம் முன்னெடுக்கப் பட்டது என்பதோடு பாண்டாக்கள் பொதுவாக கடன் காலம் முடிந்த பிறகு திருப்பி அனுப்பப்படும்.
- இந்தப் பரிமாற்றம் ஜப்பானுக்கும் சீனாவிற்கும் இடையிலான பாண்டா நட்பின் அடையாள சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது மற்றும் இருதரப்பு பதட்டமாக இருந்த நிலையில் இது நிகழ்ந்துள்ளது.

## இந்தியா-இங்கிலாந்து சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தம் 2026

- இந்தியாவும் ஐக்கியப் பேரரசும் புது தில்லியில் ஒரு சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இந்த ஒப்பந்தம், 36 மாதங்கள் வரை ஒருவருக்கொருவர் தங்கள் நாட்டில் தற்காலிகப் பணிகளில் ஈடுபடும் ஊழியர்களுக்கு இரட்டை சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகளைத் தவிர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஊழியர்களின் பரிமாற்றத்தை ஆதரிக்கிறது மேலும் குறுகிய கால வெளிநாட்டுப் பணிகளின் போது தொடர்ச்சியான சமூகப் பாதுகாப்பு பலன்களை உறுதி செய்கிறது.
- இந்த ஒப்பந்தம் இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு இடையேயான வர்த்தக ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும் என்பதோடு மேலும் இது விரிவான பொருளாதார வர்த்தக ஒப்பந்தத்துடன் (CETA) அமலுக்கு வரும்.

## ஆர்க்டிக் சென்ட்ரி திட்டம்

- ❖ கிரீன்லாந்து தொடர்பான பதட்டங்களுக்குப் பிறகு ஆர்க்டிக் பிராந்தியத்தில் பாதுகாப்பை வலுப்படுத்த வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (நேட்டோ) "ஆர்க்டிக் சென்ட்ரி" திட்டத்தினைத் தொடங்கியது.
- ❖ இந்தத் திட்டம் ஆர்க்டிக்கில் உள்ள நேட்டோ நாடுகளின் இராணுவ நடவடிக்கைகளை ஒரே தலைமையின் கீழ் ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ டென்மார்க், ஜெர்மனி, பின்லாந்து மற்றும் ஐக்கியப் பேரரசு போன்ற நாடுகள் படைகளையும் பாதுகாப்பு ஆதரவையும் வழங்குகின்றன.
- ❖ ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை மற்றும் சீனாவின் வளர்ந்து வரும் ஆர்வம் காரணமாக ஆர்க்டிக்கில் உள்ள பாதுகாப்பு கவலைகள் குறித்து இந்தத் திட்டம் கவனம் செலுத்துகிறது.
- ❖ ஆர்க்டிக் பிராந்தியத்தில் அதிக ஒத்துழைப்பு மற்றும் நிரந்தரப் பாதுகாப்புப் படை குறித்தும் நேட்டோ நாடுகள் விவாதித்து வருகின்றன.

## 2025 ஆம் ஆண்டுக்கான நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்பு ஒப்பந்தம்

- ❖ உலகப் பொருளாதார மன்றம் 2025 ஆம் ஆண்டில் நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்புத் தொற்றுகளுக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கையை ஆதரிப்பதற்காக டாவோஸ் நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்பு (AMR) ஒப்பந்தத்தைத் தொடங்கியது.
- ❖ AMR ஆல் ஏற்படும் இறப்புகளைக் குறைக்க பொது மற்றும் தனியார் நிதியைத் திரட்டுவதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.
- ❖ பாக்டீரியா, வைரஸ்கள், பூஞ்சைகள் மற்றும் ஒட்டுண்ணிகள் நுண்ணுயிர் எதிர்ப்பிகள் மற்றும் வைரஸ் எதிர்ப்பு மருந்துகள் போன்ற நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளுக்கு கட்டுப்படுவதை நிறுத்தும்போது AMR ஏற்படுகிறது.
- ❖ இந்த ஒப்பந்தம் 2050 ஆம் ஆண்டுக்குள் உலகளவில் 100 மில்லியனுக்கும் அதிகமான உயிர்களைக் காப்பாற்ற உதவும் நோக்கம் கொண்டது.
- ❖ இந்தியாவில், நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்புத் திறனால் ஏற்படும் தொற்றுகளால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 6 லட்சம் பேர் இறக்கின்றனர்.

## வங்காளதேச பொதுத் தேர்தல்கள் 2026

- ❖ வங்காளதேசம் தனது 13வது நாடாளுமன்றத் தேர்தலை பிப்ரவரி 2026 இல் நடத்தியது என்பதோடு இது ஷேக் ஹசீனாவின் அரசாங்கத்தை அகற்றிய 2024 ஆம் ஆண்டு வெகு ஜன எழுச்சிக்குப் பிறகு நடந்த முதல் தேசிய அளவிலான தேர்தலாகும்.
- ❖ வங்காளதேச தேசியவாதக் கட்சி (BNP) மகத்தான வெற்றியைப் பெற்று, நாடாளுமன்றத்தில் வலுவான பெரும்பான்மையைப் பெற்றது.
- ❖ தேர்தல் வெற்றிக்குப் பிறகு, முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் மகனும், பிஎன்பி கட்சியின் தலைவருமான தாரிக் ரஹ்மான் பிரதமராகப் பதவியேற்க உள்ளார்.
- ❖ நாட்டின் முதல் பெண் பிரதமரான அவரது தாயார் கலீதா ஜியாவைத் தொடர்ந்து, பல தசாப்தங்களில் ரஹ்மான் வங்காளதேசத்தின் முதல் ஆண் பிரதமராக வருவார்.
- ❖ அவர் டிசம்பர் 2025 இல் இறந்தார்.

- அவரது தந்தை ஜெனரல் ஜியாவுர் ரஹ்மான் 1975 இல் ஆட்சியைப் பிடித்து வங்காள தேசத்தின் ஜனாதிபதியானார், பின்னர் 1981 இல் அவர் படுகொலை செய்யப்பட்டார்.
- 2024 ஆம் ஆண்டு அரசியல் நெருக்கடிக்குப் பிறகு, நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால நிர்வாகத்தால் நாடு நிர்வகிக்கப்பட்டு வந்தது.
- 2025 ஜூலை மாத்தில், "ஜூலை சாசனம்" என்று அழைக்கப்படும் அரசியலமைப்பு வாக்கெடுப்புக்கு வங்காளதேசம் ஒப்புதல் அளித்துள்ளது.
- 1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு கட்டமைப்பை மாற்றுவதற்கான முக்கிய அரசியலமைப்பு சீர்திருத்தங்களை இந்த வாக்கெடுப்பு முன்மொழிந்தது.
- அரசியலமைப்பு, நீதித்துறை, தேர்தல் முறைமை, காவல்துறை, பொது நிர்வாகம் மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்திய ஆறு சீர்திருத்த ஆணையங்களின் பரிந்துரைகளின் அடிப்படையில், இடைக்கால அரசாங்கத்தின் தேசிய ஒருமித்த ஆணையத்தால் இந்த சாசனம் வரைவு செய்யப்பட்டது.
- பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல், பிரதமர் பதவிக்காலத்தின் மீது வரம்புகளை விதித்தல், ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரித்தல், அடிப்படை உரிமைகளை விரிவுபடுத்துதல் மற்றும் நீதித்துறை சுதந்திரத்தைப் பாதுகாத்தல் ஆகியவை முக்கிய சாசனச் சீர்திருத்தங்களில் அடங்கும்.
- இந்த வாக்கெடுப்பு மக்கள் அரசு நிறுவனங்களுக்கான சீர்திருத்தங்களில் வாக்களிக்க ஒரு வாய்ப்பை வழங்கும்.
- நேரடி ஜனநாயகத்தில் ஒரு வாக்கெடுப்பு என்பது ஒரு வாக்களிப்பு செயல்முறை ஆகும் என்பதோடு இதில் குடிமக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் மட்டுமே முடிவுகளை விட்டு விடுவதற்குப் பதிலாக, குறிப்பிட்ட சட்டங்கள், அரசியலமைப்பு திருத்தங்கள் அல்லது கொள்கைகளை நேரடியாக ஏற்றுக் கொள்கிறார்கள் அல்லது நிராகரிக்கிறார்கள்.

## இந்தியா-பிரான்ஸ் புத்தாக்க ஆண்டு

- தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சியில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காக வேண்டி இந்தியாவும் பிரான்சும் இந்தியா-பிரான்ஸ் புத்தாக்க ஆண்டைத் தொடங்கியுள்ளன.
- செயற்கை நுண்ணறிவு (AI), பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்ப கூட்டாண்மைகள் குறித்து இதில் தலைவர்கள் விவாதித்தனர்.
- இந்தத் திட்டம் இரு நாடுகளின் புத்தொழில் நிறுவனங்கள், விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது.
- டசால்ட் ஏவியேஷன் தயாரித்த ரஃபேல் போர் விமானங்களை வாங்குவதும் பாதுகாப்பு ஒத்துழைப்பில் அடங்கும்.
- 1998 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தியா-பிரான்ஸ் மூலோபாயக் கூட்டாண்மை, இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதைத் தொடர்கிறது.
- இரு நாடுகளும் பாதுகாப்பான, நெறிமுறை சார்ந்த மற்றும் மனிதனை மையமாகக் கொண்ட செயற்கை நுண்ணறிவு (AI) வளர்ச்சியை ஆதரிக்கின்றன.

## UNEP FI தாக்க மையம்

- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட நிதி முன்முயற்சியானது (UNEP FI), UNEP FI தாக்க மையத்தைத் தொடங்கியது.
- நிதி நிறுவனங்களில் தாக்கவிளைவுகளின் மேலாண்மையை ஆதரிப்பதற்கான ஒரு சிறப்பு தளமாக இந்த மையம் உள்ளது.
- இந்த மையம் UNEP FI உறுப்பினர்களுக்கு ஒரு முழுமையான தாக்க விளைவுகளின் முறைமைகள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவு கருவிகளை வழங்குகிறது.
- இந்த முயற்சி 2017 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட UNEP FI-இன் நேர்மறையான தாக்க நிதி கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டது.

## ஆப்பிரிக்க ஒன்றிய உச்சி மாநாடு 2026

- ஆப்பிரிக்க ஒன்றியத்தின் அரசுகள் மற்றும் அரசுத் தலைவர்கள் சபையின் 39வது சாதாரண அமர்வு எத்தியோப்பியாவின் தலைநகரமான அடிஸ் அபாபாவில் நடத்தப் பட்டது.
- அங்கோலாவிற்கு அடுத்து புருண்டியின் அதிபரான எவாரிஸ்ட் ந்டைஷிமியே, 2026 ஆம் ஆண்டிற்கான ஆப்பிரிக்க ஒன்றியத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 2026 ஆம் ஆண்டிற்கான உச்சிமாநாட்டின் கருத்துரு " Ensuring sustainable water availability and safe sanitation systems to achieve the goals of Agenda 2063" என்பதாகும்.

## வரிகள் மீதான அமெரிக்க உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- அதிபர் டொனால்ட் டிரம்பின் முந்தைய வரிகளை அமெரிக்க உச்ச நீதிமன்றம் ரத்து செய்ததையடுத்து புதிய 10% உலகளாவிய இறக்குமதி வரி அறிவிக்கப்பட்டது.
- முந்தைய வரிகள் அதிபரின் அதிகாரத்தை மீறுவதாக அமெரிக்க உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- பிப்ரவரி 24, 2026 முதல் 150 நாட்களுக்குத் தற்காலிகமாக பொருட்களின் மதிப்பில் 10% இறக்குமதி வரி விதிக்கப்பட்டது.
- 1974 ஆம் ஆண்டு வர்த்தகச் சட்டத்தின் பிரிவு 122 இன் கீழ் இந்த வரி விதிக்கப்பட்டது.
- இந்த உத்தரவிற்குப் பிறகு, இடைக்கால வர்த்தக ஒப்பந்த கட்டமைப்பின் கீழ் இந்தியாவின் கட்டண விகிதம் 18% இலிருந்து 10% ஆகக் குறைக்கப்பட்டது.
- முக்கியமான கனிமங்கள், எரிசக்தி பொருட்கள் மற்றும் மருந்துகள் போன்ற சில பொருட்களுக்குத் தற்காலிக வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

## இந்தியா மற்றும் பிரான்ஸ் - சிறப்பு உலகளாவிய மூலோபாய கூட்டாண்மை

- பிரெஞ்சு அதிபர் இம்மானுவேல் மக்ரோனின் இந்திய வருகையின் போது இந்தியாவும் பிரான்சும் தங்கள் உறவுகளை "சிறப்பு உலகளாவிய மூலோபாய கூட்டாண்மை"யாக மேம்படுத்தின.
- இந்தியாவும் பிரான்சும் 1998 ஆம் ஆண்டு ஒரு மேற்கத்திய நாட்டுடனான இந்தியாவின் முதல் மூலோபாய கூட்டாண்மையை ஏற்படுத்தின.

- புதிய கூட்டாண்மையானது பாதுகாப்பு, அணுசக்தி, விண்வெளி, காலநிலை, வர்த்தகம், தொழில்நுட்பம் மற்றும் மக்களிடையேயான உறவுகளை உள்ளடக்கியது.
- 100 ஆண்டுகால ராஜதந்திர உறவுகளுடன் ஒத்துழைப்பை இணைக்க இரு நாடுகளும் Horizon 2047 எனும் தொலைநோக்கு திட்டத்தை செயல்படுத்துகின்றன.
- மகாராஷ்டிராவில் உள்ள ஜெய்தாபூர் அணுமின் நிலையத் திட்டமும் சிவில் அணுசக்தி ஒத்துழைப்பில் அடங்கும்.

## எல்-ஃபாஷர் நகரத்தின் இனப்படுகொலை விவகாரம்

- சூடானின் வடக்கு டார்பூரில் உள்ள எல்-ஃபாஷர் நகரத்தை முற்றுகையும் கைப்பற்றலும், ஐக்கிய நாடுகள் சபையால் அமைக்கப்பட்ட சுயாதீனமான உண்மைக் கண்டறியும் குழுவின் விசாரணையைத் தொடர்ந்து "இனப்படுகொலையின் அடையாளங்களை" கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- சூடானில் நடந்து வரும் உள்நாட்டுப் போரின் போது துணை ராணுவ விரைவு ஆதரவுப் படைகளால் (RSF) எல்-ஃபாஷர் 18 மாத முற்றுகையின் கீழ் இருந்தது என்பதோடு மேலும் 2025 அக்டோபர் மாத இறுதியில் நகரம் RSF வசம் வீழ்ந்தது.
- முற்றுகையின் போதும் அதற்குப் பின்னரும் இன ரீதியாக இலக்கு வைக்கப்பட்ட கொலைகள், பாலியல் வன்முறை மற்றும் பொதுமக்கள் உள்கட்டமைப்பு அழிப்பை ஐ.நா. அறிக்கை ஆவணப்படுத்தியுள்ளது.
- ஜகாவா மற்றும் ஃபர் சமூகங்கள் போன்ற அரபு அல்லாத இனக் குழுக்களை குறி வைத்ததாக RSF மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
- ஐ.நா.வின் கண்டுபிடிப்புகளைத் தொடர்ந்து எல்-ஃபாஷரை முற்றுகையிட்டு கைப்பற்றியது தொடர்பான அட்டூழியங்களில் ஈடுபட்டதற்காக மூன்று RSF தளபதிகளை அமெரிக்கா தடை செய்தது.

## நைஜீரியா சுரங்க விபத்து 2026

- மத்திய நைஜீரியாவின் பீடபூமி மாநிலத்தின் வாஸ் பகுதியின் கம்பானிச் சமூகத்தில் உள்ள ஒரு சுரங்கத் தளத்தில் கார்பன் மோனாக்சைடு விஷத்தால் குறைந்தது 37 சுரங்கத் தொழிலாளர்கள் இறந்தனர்.
- இந்தச் சம்பவம் ஒரு செயல்படாத ஈயச் சுரங்கத்தின் நிலத்தடி பகுதிகளில் குவிந்துள்ள கனிமங்கள் மற்றும் ரசாயன எச்சங்கள் ஆபத்தான வாயுக்களை வெளியிட்டன.
- காற்றோட்டம் குறைவாக உள்ள சுரங்கப்பாதைகளில் கார்பன் மோனாக்சைடு, ஈய ஆக்சைடு மற்றும் சல்பர் கலவைகள் உள்ளிட்ட நச்சு வாயுக்கள் திடீரென வெளியிடப் படுவதாக முதற்கட்ட அறிக்கைகள் தெரிவிக்கின்றன.
- இந்த வாயுக்கள் நிறமற்றவை, மணமற்றவை மற்றும் மிகவும் அதிக நச்சுத் தன்மை கொண்டவை இதனால் சுரங்கத் தொழிலாளர்கள் இதனை சுவாசிக்கும் போது சுய நினைவை இழந்து இறக்கின்றனர்.

## இந்தியா-பிரேசில் மூலோபாய கூட்டாண்மை

- பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வாவின் புது தில்லி வருகையின் போது இந்தியாவும் பிரேசிலும் 10 ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன.
- இந்தியாவும் பிரேசிலும் ஐந்து ஆண்டுகளுக்குள் தங்கள் வர்த்தகத்தை 20 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரிக்க முடிவு செய்தன.
- லத்தீன் அமெரிக்காவில் பிரேசில் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளராகும்.
- முக்கியமான கனிமங்கள் மற்றும் அருமண் கூறுகளில் ஒத்துழைக்க இரு நாடுகளும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பில் இணைந்து நன்கு பணியாற்றவும் அவர்கள் ஒப்புக் கொண்டனர்.
- செயற்கை நுண்ணறிவு மற்றும் குறைகடத்தி தொழில்நுட்பத்தில் இந்த இருநாடுகளும் ஒத்துழைக்கும்.
- சுகாதாரம் மற்றும் மருந்துத் துறையில் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இரு நாடுகளும் சிறு,குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை (MSMEகள்) ஆதரிக்க ஒப்புக் கொண்டன.
- பாரம்பரிய அறிவு அமைப்புகளைப் பகிர்ந்து கொள்ளவும் அவர்கள் ஒப்புக் கொண்டு உள்ளனர்.
- வெகுஜன தொடர்பு மற்றும் ஊடகங்களில் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தமும் தற்போது கையெழுத்தானது.
- இரு தரப்பினரும் பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் கூட்டு இராணுவப் பயிற்சிகளை வலுப்படுத்த முடிவு செய்தனர்.
- BRICS, G20, சர்வதேச சூரிய சக்தி கூட்டணி, IBSA பேச்சுவார்த்தை மன்றம் மற்றும் G4 போன்ற சர்வதேச குழுக்களில் இந்தியாவும் பிரேசிலும் இணைந்து செயல்படுகின்றன.

## ஒட்டாவா ஒப்பந்தத்திலிருந்து போலந்து விலகல்

- ஒட்டாவா ஒப்பந்தத்திலிருந்து (மனிதர்களுக்கான கண்ணிவெடி தடை ஒப்பந்தம்) போலந்து விலகியுள்ளது.
- போலந்து அரசு 2012 இல் இந்த ஒப்பந்தத்தை அங்கீகரித்தது மற்றும் 2016 இல் அதன் பணியாளர் எதிர்ப்பு சுரங்க இருப்புக்களை அழித்தது.
- உக்ரைன் போருக்குப் பிறகு ரஷ்யா (கலினின்கிராட்) மற்றும் பெலாரஸுடனான அதன் எல்லைகளுக்கு அருகிலுள்ள பாதுகாப்பு சிக்கல்களை இந்த முடிவு சார்ந்து உள்ளது.
- ஒட்டாவா ஒப்பந்தம் (1997) மனிதர்களுக்கான கண்ணிவெடிகளின் பயன்பாடு, உற்பத்தி, இருப்பு மற்றும் பரிமாற்றத்தைத் தடை செய்கிறது.
- சில மரபுசார் ஆயுதங்கள் தொடர்பான ஒப்பந்தம் (1980), திருத்தப்பட்ட நெறிமுறை II (1996) ஆகியவற்றின் கீழ் பீரங்கி எதிர்ப்பு கண்ணிவெடிகள் தற்போது கட்டுப்படுத்தப் படுகின்றன.
- இந்தியா, ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகியவை ஒட்டாவா ஒப்பந்தத்தில் இணைய வில்லை.

## டகேஷிமா - டோக்டோ தீவு தகராறு

- பிப்ரவரி 22, 2026 அன்று ஷிமானே மாகாணத்தில் நடைபெற்ற ஜப்பானின் டகேஷிமா தின நிகழ்வுக்கு எதிராக தென் கொரியா ஒரு இராஜதந்திர எதிர்ப்பை பதிவு செய்தது.
- இந்தத் தீவுகள் ஜப்பானில் தகேஷிமா என்றும் தென் கொரியாவில் டோக்டோ என்றும் அழைக்கப்படுகின்றன.
- அவை ஜப்பான் கடலில் அமைந்துள்ளன என்ற ஒரு நிலையில் இதை தென் கொரியா கிழக்கு கடல் என்று குறிப்பிடுகிறது.
- இந்தப் பிரதேசம் டோங்டோ மற்றும் சியோடோ என்ற இரண்டு முக்கிய தீவுகளையும், பல சிறிய பாறைகளையும் கொண்டுள்ளது.
- தென் கொரியா 1954 ஆம் ஆண்டு முதல் காவல்துறையினரை நியமித்து இத்தீவுகளின் மீது கட்டுப்பாட்டைப் பராமரித்து வருகிறது.
- ஜப்பான் இந்தத் தீவுகளை ஷிமானே மாகாணத்தின் ஒரு பகுதியாகக் கூறி, ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 22 அன்று தாகேஷிமா தினத்தைக் கடைப்பிடிக்கிறது.
- இதைச் சுற்றியுள்ள நீர்நிலைகள் மீன்வளத்தால் நிறைந்துள்ளன என்ற ஒரு நிலையில் அவற்றில் குறிப்பிடத் தக்க அளவு எரிவாயு ஹைட்ரேட்டுகள் இருப்பதாக நம்பப் படுகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியா–ஐரோப்பிய ஒன்றியம் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்

- இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (FTA) பரவலாக 'அனைத்து ஒப்பந்தங்களுக்கும் தாய்' என்று அழைக்கப்படுகிறது.
- இந்தியா–ஐரோப்பிய ஒன்றியம் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ், நான்கு ஆண்டு காலத்தில் ஐரோப்பிய ஒன்றிய (EU) வங்கிகள் நாட்டில் 15 கிளைகளைத் திறக்க இந்தியா அனுமதித்துள்ளது.
- இந்த ஒப்பந்தம் உள்நாட்டு நிதி நிலைத்தன்மையை உறுதி செய்யும் அதே வேளையில், ஐரோப்பிய ஒன்றிய வங்கிகளுக்கு வரையறுக்கப்பட்ட சந்தை அணுகலை வழங்குகிறது.
- இந்தியா காப்பீட்டுத் துறையில் 100% நேரடி வெளிநாட்டு முதலீட்டையும் (FDI) வங்கிச் சேவைகளில் 74% நேரடி வெளிநாட்டு முதலீட்டையும் அனுமதிக்கிறது.
- இந்த ஒப்பந்தத்தில் தேசியப் பாதுகாப்பிற்கான பாதுகாப்பு அம்சங்களும், திடீர் இறக்குமதி அதிகரிப்பிலிருந்து உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளும் அடங்கும்.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவின் அறிவுசார் சொத்துரிமைகள் மாறாமல் இருக்கும்.
- முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும், தேவைப்பட்டால் மாற்றங்களைச் செய்வதற்கும், ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் இந்த ஒப்பந்தம் கூட்டாக மதிப்பாய்வு செய்யப்படும்.

## ரிசர்வ் வங்கியின் மாநில நிதிநிலை அறிக்கை - புதிய தகவல்கள்

- அஸ்ஸாம், கேரளா, தமிழ்நாடு, மேற்கு வங்கம் மற்றும் புதுச்சேரி ஆகியவை 2021 முதல் தங்கள் கடனைத் தொடர்ந்து 4 சதவீதப் புள்ளிகள் வரை குறைத்துள்ளன.

- இந்த மாநிலங்கள், வளர்ச்சிச் செலவினங்களைத் தக்கவைத்துக்கொண்டே, மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) இருந்து நிலுவையில் உள்ள கடன்களின் பங்கை குறைத்துள்ளன, இது நலத்திட்டங்களில் சமரசம் செய்துகொள்ளாமல் நிதி ஒழுங்குமுறையைக் கடைப்பிடிப்பதைக் காட்டுகிறது.
- 2025-26 நிதியாண்டுக்கான நிதிநிலையறிக்கை மதிப்பீடுகளின்படி, மேற்கு வங்காளம் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 39% என்ற அளவில் அதிகபட்ச கடன் பங்கைக் கொண்டுள்ளது.
- கேரளா தனது நிலுவையில் உள்ள கடன்களை 4.8 சதவீதப் புள்ளிகள் குறைத்து, தனது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) மதிப்பிடப்பட்ட 35.5 சதவீதமாகக் குறைத்துள்ளது.
- தமிழ்நாட்டின் கடன், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 29.2 சதவீதமாக இருந்தது.
- அசாம் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 28 சதவீதமும், ஒன்றியப் பிரதேசமான புதுச்சேரி 2025-26 ஆம் ஆண்டில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 26 சதவீதமும் கடனாகக் கொண்டிருந்தன.
- மாநிலங்கள் தங்கள் பொருளாதாரங்களின் அளவுடன் ஒப்பிடுகையில் கடனின் பங்கை குறைத்திருந்தாலும், அந்த விகிதம் FRBM சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்ட 20% வரம்பிற்கு மேலேயே நீடிக்கிறது.
- ஐந்து மாநிலங்களிலும் சமூகநலத் துறை மற்றும் மூலதனச் செலவினம் ஓரளவு குறைந்தன அல்லது ஒட்டு மொத்த எண்ணிக்கையை விடத் தொடர்ச்சியாகக் குறைவாகவே இருந்தன.
- வருவாய்க் கணக்கு, மூலதனச் செலவினம் மற்றும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் தொடர்பான அனைத்துச் செலவினங்களும் சமூகநலச் சேவைகள், பொருளாதாரச் சேவைகள் மற்றும் பொதுச் சேவைகள் என வகைப்படுத்தப்படுகின்றன.
- சமூகநல மற்றும் பொருளாதாரச் சேவைகளானது மேம்பாட்டுச் செலவினங்களை உருவாக்கும் அதே வேளையில், பொதுச் சேவைகளுக்கான செலவினம் மேம்பாடு சாரா செலவினமாகக் கருதப்படுகிறது.
- குறைந்து வயது மக்களைக் கொண்ட மாநிலங்கள் மனித மூலதன முதலீடுகளை வலுப்படுத்துவதன் மூலம் தங்கள் மக்கள்தொகை ஈவுத் தொகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம், இடைநிலை மாநிலங்கள் வளர்ச்சி முன்னுரிமைகளை வயதானவர்களுக்கு முன்கூட்டியே தயார்படுத்துவதன் மூலம் சமநிலைப்படுத்தலாம், மேலும் வயதான மக்களைக் கொண்ட மாநிலங்கள் சுகாதாரம், ஓய்வூதியம் மற்றும் பணியாளர் கொள்கை சீர்திருத்தங்களுடன் வருவாய் திறனை மேம்படுத்தலாம்.
- கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகியவை மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு 60 வயதுக்கு மேற்பட்டவர்களைக் கொண்டுள்ளது.

## SBI சக்ரா முன்முயற்சி

- வளர்ந்து வரும் தொழில்களுக்கு நிதியுதவியை வலுப்படுத்தும் நோக்கில், எஸ்பிஐ வங்கி 2026 ஆம் ஆண்டு ஜனவரி 31 அன்று 'சக்ரா' திட்டத்தைத் தொடங்கியது.
- சக்ரா என்பது வளர்ந்து வரும் துறைகளுக்கான சிறப்பு மையம் என்பதைக் குறிக்கிறது.
- வளர்ந்து வரும் மற்றும் உயர் தொழில்நுட்பத் துறைகளை மதிப்பிடுவதற்கும் நிதி அளிப்பதற்கும் தேவையான நிறுவனத் திறனை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

- எஸ்பிஐ வங்கியானது, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், மின்சார வாகனப் போக்குவரத்து, பசுமை ஹைட்ரஜன், குறைக்கடத்திகள், மின்கலன் சேமிப்பு, கார்பன் வெளியேற்றத்தைக் குறைத்தல், திறன்மிகு உள்கட்டமைப்பு மற்றும் தரவு மையங்கள் உட்பட எட்டு வளர்ந்து வரும் துறைகளை அடையாளம் கண்டுள்ளது.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்தத் துறைகளுக்கு 100 லட்சம் கோடி ரூபாய் மூலதனம் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- சிக்கலான தொழில்நுட்பங்களை வங்கிகளால் நிதியளிக்கக் கூடிய திட்டங்களாக மாற்றுவதற்கு, சக்ரா ஒரு அறிவுசார் மற்றும் முடிவெடுக்கும் ஆதரவு மையமாகச் செயல்படும்.

## 16வது நிதி ஆணைய அறிக்கை

- 16வது ஆணையத்திற்கு அரவிந்த் பனகாரியா தலைமை தாங்கினார்.
- நிதி ஆணையம் என்பது மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான நிதி உறவுகளை வரையறுக்கும் ஒரு அரசியலமைப்பு அமைப்பாகும் (சரத்து 280).
- 16வது நிதி ஆணையம், பகிர்ந்து அளிக்கக் கூடிய நிதித் தொகுப்பிலிருந்து மாநிலங்களுக்கு 41% வரிப் பகிர்வைத் தக்க வைத்துள்ளது.
- பகிர்ந்து அளிக்கக் கூடிய நிதித் தொகுப்பு என்பது வசூல் செலவு, வரிகள் மற்றும் கூடுதல் வரிகளைத் தவிர்த்து, மொத்த வரி வருவாயைக் கொண்டுள்ளது.
- அதன் பரிந்துரைகள் 2026-27 முதல் 2030-31 வரை பொருந்தும்.
- கிடைமட்டப் பகிர்வு முறையில் ஒரு புதிய அளவுகோலாக, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்களிப்பை 10% எடையுடன் அறிமுகப்படுத்தியது ஒரு முக்கியப் புதுமையாகும்.
- மொத்தக் கடன் அல்லாத அரசு வருவாயில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமானவற்றை மாநிலங்களே ஏற்கனவே கொண்டுள்ளன என்றும், அவற்றின் பங்கை மேலும் அதிகரிப்பது தேசியக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான மத்திய அரசின் திறனைக் கட்டுப்படுத்தும் என்றும் அது வாதிட்டது.
- இந்த முடிவு 15வது நிதி ஆணையத்துடன் தொடர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.
- இது வரி முயற்சிக்கு வழங்கப்பட்ட 2.5% மதிப்பை நீக்கி, மக்கள் தொகைக்கான மதிப்பை 2.5 சதவீதப் புள்ளிகள் அதிகரித்தது.
- மேலும், பரப்பளவு, மக்கள்தொகை செயல்திறன் மற்றும் தனிநபர் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி இடைவெளி ஆகியவற்றிற்கான மதிப்புகளையும் குறைத்தது.
- இதன் விளைவாக, கர்நாடகா, கேரளா, குஜராத் மற்றும் மகாராஷ்டிரா போன்ற தொழில்மயமான மற்றும் வேகமாக வளரும் மாநிலங்கள் அதிக பங்குகளைப் பெற்றன, அதே நேரத்தில் உத்தரப் பிரதேசம் மற்றும் பீகார் போன்ற அதிக மக்கள் தொகை கொண்ட மற்றும் ஏழ்மையான மாநிலங்கள் ஒப்பீட்டளவில் சரிவைக் கண்டன.
- முதல் முறையாக, வருவாய்ப் பற்றாக்குறை மானியங்கள் (RDG) பூஜ்ஜியமாக இருக்க வேண்டும் என்று ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

- வருவாய்ப் பற்றாக்குறை மானியங்களைக் குறைக்கும் அதே வேளையில், ஆணையம் கிராமப்புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஐந்து ஆண்டுகளில் ₹7.91 டிரில்லியன் நிதியை ஒதுக்கியது என்பதோடு இதில் 60:40 என்ற விகிதத்தில் கிராமப்புற-நகர்ப்புறப் பிரிப்புடன், நீர், சுகாதாரம் மற்றும் நகர்ப்புற உள்கட்டமைப்புக்கு முக்கியத்துவம் அளித்தது.
- மேலும், சீரமைக்கப்பட்ட பேரிடர் இடர் குறியீட்டைப் பயன்படுத்தி, மாநிலப் பேரிடர் மீட்பு மற்றும் தணிப்பு நிதிகளுக்கு ₹2.04 டிரில்லியனையும், தேசியப் பேரிடர் நிதிகளுக்கு ₹79,000 கோடியையும் அது பரிந்துரைத்துள்ளது.

## புதிய நுகர்வோர் விலைக் குறியீட்டுத் தொடர்

- மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) ஒரு புதிய நுகர்வோர் விலைக் குறியீட்டுத் (CPI) தொடரின் விவரங்களை வெளியிட்டது.
- நுகர்வோர் விலைக் குறியீட்டின் அடிப்படை ஆண்டு 2011–12 இலிருந்து 2023–24 ஆகத் திருத்தப்பட்டுள்ளது.
- நுகர்வோர் விலைக் குறியீடு என்பது, நுகர்வோர் செலுத்தும் விலைகளில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் சில்லறைப் பணவீக்கத்தை அளவிடப் பயன்படுத்தப்படும் ஒரு குறியீடாகும்.
- புதிய தொடரில் உணவு மற்றும் பானங்களின் பங்கு சுமார் 46%-லிருந்து சுமார் 37% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திருத்தம் 2023–24 ஆம் ஆண்டின் வீட்டுக் குடும்ப நுகர்வுச் செலவின ஆய்வின் அடிப்படையில் அமைந்துள்ளது.
- நுகர்வோர் விலைக் குறியீடு என்பது, இந்திய ரிசர்வ் வங்கி தனது பணவியல் கொள்கை முடிவுகளுக்குப் பயன்படுத்தும் முக்கியப் பணவீக்கக் குறியீடாகும்.

## நாடு தழுவிய புலம்பெயர்வு கணக்கெடுப்பு

- தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) ஜூலை 2026 முதல் ஜூன் 2027 வரை நாடு தழுவிய புலம்பெயர்வு கணக்கெடுப்பை நடத்தவுள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பு புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் (MoSPI) கீழ் உள்ள தேசிய புள்ளியியல் அலுவலகத்தால் நடத்தப்படும்.
- இந்தக் கணக்கெடுப்பு கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறம் நோக்கிய, மாநிலங்களுக்கு இடையேயான, பருவகால மற்றும் சொந்த ஊருக்கு திரும்பும் இடம்பெயர்வு மற்றும் புலம்பெயர்வதற்கான காரணங்கள் குறித்த தரவுகளைச் சேகரிக்கும்.
- வீட்டுவசதி, வேலைவாய்ப்பு, போக்குவரத்து மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றில் திட்டமிடலுக்கு ஆதரவளிக்கும் வகையில், இடம்பெயர்ந்தவர்களின் வேலைவாய்ப்பு விவரங்களையும் இது உள்ளடக்கும்.
- முன்னதாக, இடம்பெயர்வு குறித்த தரவுகள் 2020-21 ஆம் ஆண்டின் காலமுறை தொழிலாளர்கள் எண்ணிக்கை கணக்கெடுப்பு (PLFS) மற்றும் 2020-21 ஆம் ஆண்டின் பல்துறை குறிகாட்டிக் கணக்கெடுப்பு மூலம் சேகரிக்கப்பட்டன.

## 16வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகள்

### *தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி (வருமான இடைவெளி)*

- 16வது நிதி ஆணையம் வருமான இடைவெளியை ஒரு மாநிலத்தின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும், அதிக தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP) கொண்ட முதல் மூன்று பெரிய மாநிலங்களின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரிக்கும் இடையிலான வித்தியாசமாக வரையறுத்துள்ளது.
- 2020-21 தொற்றுநோய் ஆண்டைத் தவிர்த்து, 2018-19 மற்றும் 2023-24 காலகட்டத்தில் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி சராசரியாகக் கணக்கிடப்பட்டுள்ளது.
- தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP) குறைவாக உள்ள மாநிலங்கள், இதர மாநிலங்களிடையே சமத்துவத்தைப் பராமரிக்க, இந்த அளவுருவில் அதிக பங்கைப் பெறும்.

### *மக்கள் தொகை*

- இந்த அளவுருவில், 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள்தொகையில் உள்ள பங்கின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வில் பங்கு தீர்மானிக்கப்படுகிறது.

### *மக்கள்தொகை செயல்திறன்*

- மொத்த கருவுறுதல் விகிதத்தின் (TFR) அடிப்படையில் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தும் மாநிலங்களுக்கு நன்மை பயக்க 15வது நிதி ஆணையம் இந்த அளவுருவை அறிமுகப்படுத்தியது.
- TFR இல் ஏற்படும் மாற்றத்தை நம்புவதற்குப் பதிலாக, 1971 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் மக்கள்தொகை வளர்ச்சியைக் கணக்கிடுவதற்காக 16வது நிதி ஆணையம் இதை மறுவரையறை செய்துள்ளது.
- மக்கள்தொகை வளர்ச்சி குறைவாக உள்ள மாநிலங்கள் இந்த அளவுருவின் கீழ் அதிக பங்கைக் கொண்டிருக்கும்.

### *காடு*

- 16வது நிதி ஆணையம் ஒட்டுமொத்த வனப் பரப்பில் ஒரு மாநிலத்தின் பங்கு மற்றும் 2015 மற்றும் 2023 க்கு இடையில் ஒட்டுமொத்த வனப் பரப்பின் அதிகரிப்பில் அதன் பங்கு ஆகிய இரண்டிற்கும் ஏற்ப மதிப்பீட்டை ஒதுக்கியுள்ளது.
- மேலும், மொத்த வனப் பரப்பை அடைவதில் திறந்தவெளிக் காடுகளையும் இது கருத்தில் கொண்டுள்ளது.
- இதற்கு நேர்மாறாக, 15வது நிதி ஆணையம் அடர்த்தியான மற்றும் மிதமான அடர்த்தியான காடுகளை மட்டுமே கருத்தில் கொண்டது என்பதோடு மேலும் ஒட்டுமொத்த வனப் பரப்பில் பங்கின் அடிப்படையில் மட்டுமே அளவுருவை வரையறுத்தது.

### *மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்களிப்பு*

- தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்களிப்பைக் கணக்கிடுவதற்காக 16வது நிதி ஆணையம் இந்த அளவுருவை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது 15வது நிதி ஆணையத்தால் பயன்படுத்தப்படும் வரி மற்றும் நிதி முயற்சிகள் அளவுருவை மாற்றுகிறது என்ற நிலையில் இது மாநிலங்களுக்கு அதிக வரி வசூல் செயல்திறனை வெகுமதி அளித்தது.

- ஒரு மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்களிப்பு, அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வர்க்க மூலத்திலிருந்து அனைத்து மாநிலங்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வர்க்க மூலத்தின் கூட்டுத்தொகையாகக் கணக்கிடப்படுகிறது.
- 2018-19 மற்றும் 2023-24க்கு இடையில் (2020-21 தொற்றுநோய் ஆண்டைத் தவிர்த்து) ஒவ்வொரு மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் சராசரி பெயரளவு GSDP ஆக அளவிடப்படுகிறது.

***மானிய உதவிகள்***

- 16வது நிதிக் குழு ஐந்து ஆண்டு காலத்தில் ரூ.9.47 லட்சம் கோடி மதிப்புள்ள மானியங்களைப் பரிந்துரைத்துள்ளது.
- இவற்றில்,
    - நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள், மற்றும்
    - பேரிடர் மேலாண்மை ஆகியவற்றுக்கான மானியங்கள் அடங்கும்.
- 15வது நிதிக் குழு பரிந்துரைத்த பின்வரும் மானியங்களை 16வது நிதிக் குழு நிறுத்தியுள்ளது:
    - வருவாய்ப் பற்றாக்குறை மானியங்கள்,
    - துறை சார்ந்த மானியங்கள் மற்றும்
    - மாநில அளவிலான மானியங்கள்.

***உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள்***

- 16வது நிதிக் குழு கிராமப்புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முறையே ரூ.4.4 லட்சம் கோடி மற்றும் ரூ.3.6 லட்சம் கோடி மதிப்புள்ள மானியங்களை பரிந்துரைத்துள்ளது.
- மொத்த உள்ளாட்சி அமைப்பு மானியங்கள் ₹7,91,493 கோடியாக இருக்கும்
- இந்த மானியங்கள் அடிப்படை (80%) மற்றும் செயல்திறன் சார்ந்த (20%) கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சிறப்பு உள்கட்டமைப்பு மானியங்கள் மற்றும் நகரமயமாக்கல் பிரீமியம் மானியங்களும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.
- அனைத்து உள்ளாட்சி அமைப்பு மானியங்களும் மூன்று தொடக்க நிலை அளவுகோல்களைப் பூர்த்தி செய்தவுடன் கிடைக்கும்:
    - அரசியலமைப்பின்படி உள்ளாட்சி அமைப்புகளின் அமைப்பு,
    - பொது தளத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் தற்காலிக மற்றும் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை வெளியிடுதல், மற்றும்
    - மாநில நிதி ஆணையத்தினை சரியான காலத்தில் அமைத்தல்.

***அடிப்படை மானியங்கள்***

- அடிப்படை மானியத்தில் 50% விடுவிக்கப்படும் என்பதோடு, மீதமுள்ள 50% பின்வருவனவற்றுடன் இணைக்கப்படும்:
    - சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை, மற்றும்/அல்லது
    - நீர் மேலாண்மை.

***செயல்திறன் மானியங்கள்***

- உள்ளாட்சி அமைப்புகளுக்கான இந்த மானியங்கள் மாநிலச் செயல்திறன் மானியங்கள் மற்றும் உள்ளூர் அமைப்பு செயல்திறன் மானியங்களாக மேலும் பிரிக்கப்படுகின்றன.
- உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவற்றின் சொந்த வளங்களிலிருந்து பரிமாற்றங்களுக்கான குறைந்தபட்ச அளவுகோலைப் பூர்த்தி செய்தவுடன் மாநிலச் செயல்திறன் மானியங்கள் கிடைக்கும்.
- உள்ளாட்சி அமைப்பு செயல்திறன் மானியங்கள் சொந்த மூல வருவாய் வளர்ச்சிக்காக ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச இலக்குகளை அடைவதோடு இணைக்கப்பட்டுள்ளன.

***சிறப்பு உள்கட்டமைப்பு மானியங்கள்***

- 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1040 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களில் விரிவான கழிவுநீர் மேலாண்மை அமைப்பின் வளர்ச்சியுடன் இந்த கூறு இணைக்கப்படும்.
- ஐந்து ஆண்டுகளில் ரூ.56,100 கோடி மதிப்புள்ள மானியங்கள் இதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

***நகரமயமாக்கல் பிரீமியம் மானியம்***

- இவை மாநிலங்களுக்கு ஒரு முறை மானியமாக பின்வருவனவற்றின் அடிப்படையில் வெளியிடப்படும்:
  - புறநகர் கிராமங்களை அருகிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளுடன் இணைத்தல் மற்றும்
  - கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு மாறுதல் கொள்கையை உருவாக்குதல். நகரமயமாக்கல் பிரீமியம் கூறுகளின் கீழ் ரூ.10,000 கோடி பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

***பேரிடர் மேலாண்மை மானியங்கள்***

- மாநிலப் பேரிடர் நிவாரணம் மற்றும் மேலாண்மை நிதிகளுக்கு (SDRF மற்றும் SDMF) ரூ.2,04,401 கோடி பேரிடர் மேலாண்மை நிதியை ஆணையம் பரிந்துரைத்துள்ளது.
- மத்திய அரசிற்கும் மாநிலங்களுக்கும் இடையிலான செலவுப் பகிர்வு முறை பின்வருமாறு பரிந்துரைக்கப்படுகிறது:
  - வடகிழக்கு மற்றும் இமயமலை மாநிலங்களுக்கு 90:10, மற்றும்
  - மற்ற அனைத்து மாநிலங்களுக்கும் 75:25.
- மொத்தத்தில் மையத்தின் பங்கு ரூ.1,55,916 கோடியாக இருக்கும்.
- வெப்ப அலைகள் மற்றும் மின்னல் தாக்குதல்கள் இந்தியாவின் தேசிய அளவில் அறிவிக்கப்பட்ட பேரிடர்களின் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று அது பரிந்துரைத்துள்ளது.
- தேசிய அளவில் அறிவிக்கப்பட்ட பேரிடர்கள் என்பது பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட பேரிடர் வகைகளாகும்.
- இது அரசாங்கப் பேரிடர் நிதிகளிலிருந்து (மாநிலப் பேரிடர் மீட்பு நிதி (SDRF) மற்றும் தேசியப் பேரிடர் மீட்பு நிதி (NDRF)) நிவாரணம், மீட்பு மற்றும் நிதியுதவி நோக்கத்திற்காக உள்ளது.
- தற்போது இதில் சூறாவளிகள், வறட்சி, பூகம்பங்கள், தீ, வெள்ளம், சுனாமி, ஆலங்கட்டி மழை, நிலச்சரிவுகள், பனிச்சரிவுகள், மேக வெடிப்புகள், பூச்சித் தொற்றுகள், உறைபனி மற்றும் குளிர் அலைகள் ஆகியவை அடங்கும்.

## இந்திய தொழிலாளர் இடம்பெயர்வு

- சவுதி அரேபியாவை விஞ்சி, ஐக்கிய அரபு அமீரகம் (யுஏஇ) 2025 ஆம் ஆண்டில் இந்திய திறன்சாரா தொழிலாளர்களுக்கான மிகப்பெரிய வெளிநாட்டு இடமாக மாறியது.
- 2025 ஆம் ஆண்டில், 200,686 இந்தியத் தொழிலாளர்கள் ஐக்கிய அரபு அமீரகத்திற்குப் புலம்பெயர்ந்த அதே சமயம் சவுதி அரேபியாவிற்கு 136,812 பேர் மட்டுமே சென்றனர்.
- 2024 ஆம் ஆண்டில் சவுதி அரேபியா 167,598 தொழிலாளர்களுடன் முன்னணியில் இருந்த முந்தைய நிலையை இது மாற்றியமைத்துள்ளது.
- ஒட்டு மொத்தமாக, 2025 ஆம் ஆண்டில் 449,110 இந்தியத் தொழிலாளர்கள் 11 முக்கிய தொழிலாளர்களை ஏற்கும் நாடுகளுக்குச் சென்றனர்.
- கத்தாரில் இந்தியத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் சரிவு காணப்பட்ட நிலையில், ஓமனில் 2025-ஆம் ஆண்டில் 29,158 அளவில் நிலையான வளர்ச்சி பதிவாகி உள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் வளர்ச்சிக்கு உள்கட்டமைப்புத் திட்டங்கள், அதிக ஊதியம், வரி இல்லாத வருமானம் மற்றும் தொழிலாளர்களுக்கு உகந்த கொள்கைகளே காரணமாகும்.

## வங்கி NPAகளில் வீழ்ச்சி

- இந்தியாவின் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளின் மொத்த வராக் கடன்கள் (NPA) செப்டம்பர் 2025 இல் மிகக் குறைந்த அளவான 2.15% ஆகக் குறைந்தன.
- NPA-கள் என்பது 90 நாட்களுக்கு மேல் திருப்பிச் செலுத்தாமல் நிலுவையில் இருக்கும் கடன்கள் ஆகும்.
- பொதுத்துறை வங்கிகள் 2.50% NPA-களைப் பதிவு செய்தன அதே நேரத்தில் தனியார் துறை வங்கிகள் 1.73% NPA-களைப் பதிவு செய்தன.
- இந்தியாவில் உள்ள வெளிநாட்டு வங்கிகள் மிகக் குறைந்த NPA அளவை 0.8% ஆகப் பதிவு செய்தன.

## புதிய GDP, CPI மற்றும் IIP தொடர்கள்

- முக்கியப் பொருளாதார குறிகாட்டிகளுக்கான அடிப்படை ஆண்டைத் திருத்துவதாக புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) அறிவித்துள்ளது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் தொழில்துறை உற்பத்திக் குறியீடு (IIP) 2022-23 என்ற புதிய அடிப்படை ஆண்டைக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் நுகர்வோர் விலைக் குறியீட்டின் (CPI) அடிப்படை ஆண்டு 2024 ஆக திருத்தப்படும்.
- CPI – 12 பிப்ரவரி 2026, GDP – 27 பிப்ரவரி 2026 மற்றும் IIP – 28, மே 2026 ஆகிய தேதிகள் என்ற வகையில் புதுப்பிக்கப்பட்ட தொடர்கள் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

## புதிய CPI தொடரின் படி சில்லறை விலை பணவீக்கம்

- இந்தியாவின் சில்லறை விலை பணவீக்கம் ஜனவரி 2026 இல் புதிய நுகர்வோர் விலை குறியீட்டு (CPI) தொடரின் கீழ் 2.75% ஆக பதிவாகியுள்ளது (அடிப்படை: 2024 = 100).
- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தால் (MoSPI) வெளியிடப்பட்ட இந்தத் தரவு, திருத்தப்பட்ட CPI கட்டமைப்பின் கீழ் வெளியான முதல் பணவீக்க மதிப்பீடாகும்.

- புதிய CPI தொடர், முந்தைய அடிப்படை ஆண்டான 2012 ஐ மாற்றி வீட்டு நுகர்வு செலவு கணக்கெடுப்பு (2023–24) அடிப்படையாகக் கொண்டது.
- CPI கணக்கீட்டுப் பொருட்களில் இப்போது 358 பல்வேறு விகிதப் பங்குகளைக் கொண்ட பொருட்கள் (முன்னர் 299) அடங்கும் என்ற நிலையில் இது மாறிவரும் நுகர்வு முறைகள் மற்றும் சேவைகளின் வளர்ந்து வரும் பங்கைப் பிரதிபலிக்கிறது.
- புதிதாக சேர்க்கப்பட்டப் பொருட்களில் ஆன்லைன் ஒளிபரப்பு சேவைகள், கிராமப்புற வீட்டு வசதி, தூய்மையான எரிபொருள்கள் (CNG, PNG), உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் ஆகியவை அடங்கும்.

## வணிக வர்த்தக குறியீடுகளின் அடிப்படை ஆண்டு

- இந்திய அரசாங்கம் 2012–13 முதல் 2022–23 வரை இந்தியாவின் வணிக வர்த்தக குறியீடுகளின் அடிப்படை ஆண்டை திருத்தியுள்ளது.
- கொள்கை வகுப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்துறைப் பங்கு தாரர்களுக்கு பொருத்தம், நம்பகத்தன்மை மற்றும் பகுப்பாய்வுப் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக வணிக நுண்ணறிவு மற்றும் புள்ளி விவர இயக்குநரகம் (DGCI&S) இந்தப் புதுப்பிப்பைச் செய்தது.
- இந்தியாவின் பொருளாதாரத்தில் கட்டமைப்பு மாற்றங்களைப் பிரதிபலிக்கும் இந்தத் திருத்தத்தில் பொருட்களின் கலவையில் ஏற்படும் மாற்றங்கள், ஏற்றுமதி பல்வகைப் படுத்தல் மற்றும் புதிய வர்த்தக கூட்டாண்மைகள் ஆகியவை அடங்கும்.
- இந்தியப் புள்ளியியல் நிறுவனத்தின் பேராசிரியர் நச்சிகேதா சட்டோபாத்யாய் தலைமையிலான குழு, இந்தப் புதுப்பிப்பைப் பரிந்துரைத்தது.
- புதிய குறியீடுகளில் புதுப்பிக்கப்பட்ட பொருட்களின் உள்ளடக்கத்தில், 2022–23 வர்த்தக மதிப்புகளின் அடிப்படையில் திருத்தப்பட்ட மதிப்புகளில், சர்வதேச வர்த்தக வகைப்பாடுகளுடன் சீரமைப்பு மற்றும் விரிவாக்கப்பட்ட வர்த்தகப் பகுப்பாய்வு விதி முறைகள் (மொத்த, நிகர மற்றும் வருமான விதிமுறைகள்) ஆகியவை அடங்கும்.

## இந்தியாவின் அந்நிய செலாவணி இருப்பு – பிப்ரவரி 2026

- இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட தரவுகளின்படி, பிப்ரவரி 13, 2026 அன்று முடிவடைந்த வாரத்தில் இந்தியாவின் அந்நிய செலாவணி இருப்பு 725.727 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்ந்துள்ளது.
- ஒரு வாரத்தில் இருப்பு 8.663 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அதிகரித்துள்ளது.
- வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் (FCA) 573.603 பில்லியன் அமெரிக்க டாலர்கள் எனற அளவில் மிகப்பெரிய அங்கமாகும்.
- தங்கத்தின் இருப்பு 128.466 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்துள்ளது.
- சிறப்பு எடுப்பு உரிமைகள் (SDR) 18.924 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தன.
- FCA என்பது அமெரிக்க டாலர், யூரோ, ஜப்பானிய யென் மற்றும் பிரிட்டிஷ் பவுண்ட் ஆகியவற்றில் உள்ள இருப்புக்களை உள்ளடக்கியது.
- SDRகள் என்பது சர்வதேச நாணய நிதியத்தால் (IMF) உருவாக்கப்பட்ட சர்வதேச இருப்பு சொத்துக்கள் ஆகும்.

## 2025 நிதியாண்டுக்கான இந்திய மாநிலங்களின் GSDP தரவரிசை

- 2025 நிதியாண்டிற்கான இந்தியாவின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) தரவரிசை வெளியிடப்பட்டுள்ளது என்பதோடு இது வளமான மற்றும் ஏழ்மையான மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை (UTs) வரிசைப்படுத்துகிறது.
- ஒரு மாநிலம் அல்லது ஒன்றியப் பிரதேசத்தின் மொத்தப் பொருளாதார உற்பத்தியை GSDP (மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி) அளவிடுகிறது.
- மகாராஷ்டிரா மாநிலம், நிதி, உற்பத்தி மற்றும் சேவைகள் மூலம் ₹45.32 லட்சம் கோடி அளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் பணக்கார மாநிலமாக உள்ளது.
- வாகன உற்பத்தி, தொழில்துறை உற்பத்தி மற்றும் தகவல் தொழில்நுட்பம் (IT) ஆகியவற்றின் முன்னணி ஆதரவில் ₹31.19 லட்சம் கோடி மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.
- ₹29.78 லட்சம் கோடி மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் உத்தரப் பிரதேசம் மூன்றாவது இடத்தில் உள்ளது என்பதோடு இது உள்கட்டமைப்பு, விவசாயம் மற்றும் தொழில்துறை ஆகியவற்றால் ஆதரிக்கப்படுகிறது.
- அருணாச்சலப் பிரதேசம் ₹4,423 கோடியுடன் மிகக் குறைந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கொண்டுள்ளது என்பதோடு அதைத் தொடர்ந்து திரிபுரா ₹8,968 கோடியுடன் மற்றும் இமாச்சலப் பிரதேசம் ₹23,169 கோடியுடன் உள்ளன.
- தென் மாநிலங்கள் முதலிடத்தில் உள்ளன என்பதோடு அதே நேரத்தில் வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் சிறிய ஒன்றியப் பிரதேசங்கள் குறைந்த மக்கள் தொகை மற்றும் புவியியல் காரணமாக குறைந்த GSDP ஐக் கொண்டுள்ளன.
- 2024–25 நிதியாண்டில் இந்தியாவின் ஒட்டு மொத்த உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி 7.4% ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இறுதித் தீர்ப்பு நாள் நேரத் திருத்தம் 2026

- அணு விஞ்ஞானிகள் ஜனவரி 27, 2026 அன்று நள்ளிரவுக்கு நெருக்கமாக 85 வினாடிகள் முன்னோக்கி நகர்த்தி நிர்ணயித்தனர்.
- இந்தக் கடிகாரம், அணு ஆயுதப் போர், காலநிலை மாற்றம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற சீர்குலைக்கும் தொழில்நுட்பங்களால் ஏற்படும் உலகளாவிய பேரழிவிற்கு மனிதகுலம் எவ்வளவு நெருக்கமாக இருக்கிறது என்பதைச் சித்தரிக்கிறது.
- அதிகரித்து வரும் அணுசக்தி அச்சுறுத்தல்கள், அதிக பசுமையக வாயு வெளியேற்றம், மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு குறைந்து வருவது ஆகியன முக்கிய காரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.
- இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு 1947 ஆம் ஆண்டு, நள்ளிரவுக்கு ஏழு நிமிடங்கள் முன்னதாக கடிகாரம் முதன்முதலில் அமைக்கப்பட்டது.

## SFDR ஏவுகணை தொழில்நுட்ப சோதனை

- DRDO அமைப்பானது திட எரிபொருளால் இயங்கும் ராம்ஜெட் (SFDR) ஏவுகணை தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக செயல்விளக்கம் அளித்தது.
- SFDR என்பது நீண்ட தூர வானிலிருந்து வான்வழி இலக்குகளை தாக்கும் ஏவுகணைகளில் பயன்படுத்தப்படும் ஒரு உந்துவிசைத் தொழில்நுட்பமாகும்.
- தொடக்கத்தில் ஒரு பூஸ்டரைப் பயன்படுத்தும் இந்த ஏவுகணை, பின்னர் பறக்கும்போது ராம்ஜெட் எஞ்சின் பற்றவைக்கப்படுகிறது.

## செயற்கை நுண்ணறிவு மாதிரி - எக்ஸோமைனர்++

- தேசிய வானூர்தி மற்றும் விண்வெளி நிர்வாகம் (நாசா), புறக்கோள்களைக் கண்டறிவதற்காக எக்ஸோமைனர்++ என்ற இலவச செயற்கை நுண்ணறிவு மாதிரியை வெளியிட்டுள்ளது.
- எக்ஸோமைனர்++ என்பது சூரிய குடும்பத்திற்கு வெளியே உள்ள கோள்களை அடையாளம் காண நாசாவால் உருவாக்கப்பட்ட ஒரு மேம்பட்ட கற்றல் மாதிரி ஆகும்.
- ஒரு கோள் ஒரு நட்சத்திரத்தின் முன்னால் கடந்து செல்லும்போது, அந்த நட்சத்திரத்தின் பிரகாசத்தில் ஏற்படும் மாற்றங்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் இது செயல்படுகிறது.
- இந்த மாதிரியானது, உண்மையான கோள்களை இரட்டை நட்சத்திரங்கள் அல்லது இதர பின்னணிப் பொருள்கள் போன்றவற்றின் தவறான சமிக்ஞைகளில் இருந்து வேறுபடுத்தி அறிய உதவுகிறது.

## செயற்கை நுண்ணறிவு கருவி - ஆல்பாஜெனோம்

- கூகுள் டீப் மைண்ட் நிறுவனம், மரபணு மாற்றங்களானது மரபணு ஒழுங்குமுறை மற்றும் மனித நோய்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைக் கணிக்கும் ஒரு செயற்கை நுண்ணறிவு கருவியான ஆல்பாஜெனோமை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மரபணு மாறுபாடுகளின் தாக்கத்தை ஆய்வு செய்ய ஆல்பாஜெனோம் நீண்ட டிஎன்ஏ வரிசைகளை பகுப்பாய்வு செய்கிறது.
- இது முக்கியமாக மனித மரபணுவின் 98% ஐ உருவாக்கும் குறியீடப்படாத டிஎன்ஏ பகுதிகளில் கவனம் செலுத்துகிறது.
- இந்த கருவியால் ஒரே நேரத்தில் ஒரு மில்லியன் டிஎன்ஏ அடிப்படை இணைகளைப் பகுப்பாய்வு செய்ய முடியும்.
- இது அறிவியலாளர்களுக்கு மரபணு தொடர், ஆர்.என்.ஏ பிளவு மற்றும் பிறழ்வு தொடர்பான நோய்களை ஆராய உதவுகிறது.

## சூரியக் கதிர்வீச்சுப் புயல்

- ஒரு சக்திவாய்ந்த சூரியச் சுடரொளி வீச்சு புவி காந்தப் புயலைத் தூண்டியதைத் தொடர்ந்து, லடாக்கின் ஹன்லேவில் ஒரு அரிய சிவப்பு தென்முனைச் சுடரொளி காணப் பட்டது.

- இந்த நிகழ்வு X-வகை சூரிய சுடரொளி வெடிப்பைத் தொடர்ந்து நிகழ்ந்தது என்ற நிலையில் இது சூரிய வெடிப்பின் வலிமையான வகையாகும்.
- இந்த சுடர் பூமியின் காந்த மண்டலத்தைத் தாக்கிய ஒரு சூரிய வெப்ப உமிழ்வு (CME) ஐ உருவாக்கியது என்ற நிலையில் இதனால் G4-நிலை புவி காந்த புயல் (கடுமையானது) ஏற்பட்டது.
- மிகவும் அதிக உயரத்தில் (300 கி.மீ.க்கு மேல்) கிளர்ச்சியுற்ற ஆக்ஸிஜன் அணுக்கள் காரணமாக சிவப்பு தென்முனைச் சுடரொளி ஏற்பட்டது.
- இந்தப் புயலின் போது பூமியின் காந்த மண்டலத்தின் வலுவான சுருக்கத்தை ஆதித்யா - L1 விண்கலத்தின் தரவுகள் காட்டின.
- சூரியக் கதிர்வீச்சுப் புயல்கள் செயற்கைக் கோள்கள், புவியிடங்காட்டி, தகவல் தொடர்பு அமைப்புகள் மற்றும் மின் கட்டங்களைச் சீர்குலைக்கும்.

## MoM-z14 விண்மீன்

- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி (JWST), MoM-z14 என பெயரிடப்பட்ட மிக தொலை தூர விண்மீனைக் கண்டுபிடித்தது.
- பெருவெடிப்புக்குப் பிறகு சுமார் 280 மில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகான காலத்தில் இருந்து MoM-z14 உள்ளது.
- இந்த விண்மீனின் ஒளி பூமியை அடைய 13.5 பில்லியன் ஆண்டுகளுக்கு மேல் பயணித்தது.
- அறிவியலாளர்கள் இதில் அதிக நைட்ரஜன் அளவைக் கண்டறிந்தனர் என்ற நிலையில் இது விண்மீனில் ஆரம்பகால நட்சத்திர உருவாக்கத்தைக் குறிக்கிறது.

## ஹெலிக்ஸ் நெபுலா

- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியானது விண்வெளியில் ஹெலிக்ஸ் நெபுலாவின் விரிவான படங்களைப் படம்பிடித்தது.
- இந்தத தொலைநோக்கியானது இறக்கும் இந்த நட்சத்திரத்தைச் சுற்றியுள்ள வாயு மற்றும் தூசியைக் கவனிக்கிறது.
- ஒரு நட்சத்திரம் அதன் இறுதி கட்டத்தை அடைந்து விண்வெளியில் பொருட்களை வெளியிட்டபோது ஹெலிக்ஸ் நெபுலா உருவாக்கப்பட்டது.
- இறந்த நட்சத்திரத்தின் மீதமுள்ள மையமான ஒரு வெள்ளை குள்ளக்கோள், நெபுலாவின் மையத்தில் உள்ளது.
- வெளியிடப்பட்ட வாயு, தூசி மற்றும் மூலக்கூறுகள் பின்னர் புதிய நட்சத்திரங்கள் மற்றும் கோள்களை உருவாக்க உதவக் கூடும்.

## செவ்வாய்க் கிரகத்தில் AI வழிசெலுத்தல் சோதனை

- நாசாவின் பெர்செவரன்ஸ் உலாவியானது செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி திட்டமிடப்பட்ட முதல் செவ்வாய்க் கிரகப் பயணத்தை நிறைவு செய்தது.

- செயற்கை நுண்ணறிவு மாதிரிகள் பாதுகாப்பான பயணப் பாதைகளை உருவாக்க சுற்றுப்பாதை படங்கள் மற்றும் நிலப்பரப்பு தரவுகளைப் பகுப்பாய்வு செய்தன.
- பாதை திட்டமிடல் பணி பொதுவாக நாசாவின் ஜெட் ப்ராபல்ஷன் ஆய்வகத்தில் உள்ள பொறியாளர்களால் இதுவரை செய்யப் பட்டது.
- எதிர்கால விண்வெளி ஆய்வுப் பணிகளில் செயற்கை நுண்ணறிவு எவ்வாறு உதவ முடியும் என்பதை இந்தத் திட்டம் காட்டுகிறது.

## சுற்றுப்பாதைக் கண்காணிப்பு - அஜிஸ்டா செயற்கைக்கோள்

- உள்நாட்டுச் செயற்கைக்கோளைப் பயன்படுத்தி சர்வதேச விண்வெளி நிலையத்தை (ISS) படம் பிடித்ததன் மூலம் அஜிஸ்டா ஸ்பேஸ் இந்தியாவின் முதல் சுற்றுப்பாதையில் படம் பிடிக்கும் ("சுற்றுப்பாதையில் உளவு பார்த்தல்") திறனை அடைந்துள்ளது.
- இந்தச் செயல் விளக்கம் ABA First Runner (AFR) செயற்கைக்கோளைப் பயன்படுத்தி மேற் கொள்ளப் பட்டது.
- இந்தச் செயற்கைக்கோள் ஜூன் 2023 இல் ஸ்பேஸ்எக்ஸ்-இன் பால்கன் 9 ராக்கெட் மூலம் ஏவப்பட்டது.
- AFR என்பது அஜிஸ்டா ஸ்பேஸ் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட 80 கிலோ எடையுள்ள புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோள் ஆகும்.
- புவியின் தாழ் மட்டச் சுற்றுப்பாதையில் (LEO) சுமார் 250–300 கிமீ தூரத்திலிருந்து படப் பிடிப்பு மேற்கொள்ளப் பட்டது.

## மோன்ஸ் மவுட்டன் மலை

- சந்திரயான்-4 திட்டத்திற்காக சந்திரனில் மோன்ஸ் மவுட்டன் அருகே ஒரு பாதுகாப்பான தரையிறங்கும் தளத்தை இஸ்ரோவின் விண்வெளிப் பயன்பாட்டு மையம் அடையாளம் கண்டுள்ளது.
- மோன்ஸ் மவுட்டன் என்பது சந்திரனின் தென் துருவத்திலிருந்து சுமார் 160 கி.மீ தொலைவில் உள்ள ஒரு பெரிய, தட்டையான மலையாகும்.
- இது தென் துருவ – ஐட்கென் (SPA) படுகையின் விளிம்பிற்கு அருகில் அமைந்துள்ளது என்ற நிலையில் இதுவும் மிகப்பெரிய மற்றும் பழமையான மோதலால் உருவான படுகைகளில் ஒன்றாகும்.
- இந்த மலை 100 கி.மீ அகலம் கொண்டது மற்றும் சுற்றியுள்ள நிலப்பரப்பிலிருந்து 6,000 மீ உயரத்தில் கரடுமுரடான பள்ளங்கள் மற்றும் பாறைகளுடன் உயர்கிறது.
- சில பகுதிகள் கிட்டத்தட்ட தொடர்ச்சியான சூரிய ஒளியைப் பெறுகின்றன என்ற நிலையில் மற்றவை நிரந்தரமாக நிழலில் இருக்கும்.

## iLive Connect சுகாதார தளம்

- உலகின் முதல் மருத்துவர் தலைமையிலான செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையில் இயங்கும் வீட்டு சுகாதார சூழல் அமைப்பாக iLive Connect தளம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது மருத்துவ ஆலோசனை, தொலைதூர நோயாளி கண்காணிப்பு மற்றும் வீடு அடிப்படையிலான சுகாதாரச் சேவைகளை ஒரே டிஜிட்டல் தளத்தில் ஒருங்கிணைக்கிறது.

- நோயறிதல், சுகாதாரக் கண்காணிப்பு மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட பராமரிப்புத் திட்டமிடல் ஆகியவற்றில் மருத்துவர்களை ஆதரிக்க இந்த அமைப்பு செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகிறது.
- இந்தத் தளம் வீட்டிலேயே நோயாளிகளுக்கு, குறிப்பாக வயதான மற்றும் நாள்பட்ட நோய் வாய்ப்பட்ட நோயாளிகளுக்கு தொடர்ச்சியான பராமரிப்பில் கவனம் செலுத்துகிறது.
- இது அணுகல்தன்மை, சுகாதாரப் பிரச்சினைகளை முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் ஒருங்கிணைந்த சுகாதாரப் பரவலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## ஹேவன்-1 தனியார் விண்வெளி நிலையம்

- 2027 இல் ஏவ திட்டமிடப்பட்டுள்ள ஹேவன்-1 உலகின் முதல் தனியார் விண்வெளி நிலையமாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இது அமெரிக்காவை தளமாகக் கொண்ட தனியார் விண்வெளி நிறுவனமான வாஸ்ட் ஸ்பேஸால் உருவாக்கப்பட்டு வருகிறது.
- இது ஸ்பேஸ்எக்ஸின் பால்கன் 9 ராக்கெட்டைப் பயன்படுத்தி பூமியின் தாழ்மட்ட சுற்றுப் பாதையில் (LEO) நிறுத்தப்படும்.
- சர்வதேச விண்வெளி நிலையம் (ISS) 2030 ஆம் ஆண்டு வாக்கில் ஓய்வு பெறத் திட்டமிடப்பட்ட பிறகு, அதற்கு மாற்றாக இந்த திட்டம் அமையலாம்.

## ஒற்றை-அலகு சூரிய ஆற்றல் சேமிப்பு தொழில்நுட்பம்

- இந்திய விஞ்ஞானிகள் ஒற்றை அலகில் சூரிய சக்தியைப் சேமிக்கக்கூடிய ஒரு சாதனத்தை உருவாக்கியுள்ளனர்.
- இது ஒரு ஒளிமின்னியல் சார் மீள்மின்னேற்றம் செய்யக்கூடிய மீத்திறன் மின்தேக்கி ஆகும் என்ற நிலையில் இது சூரிய ஆற்றல் அறுவடை மற்றும் சேமிப்பை ஒரே அமைப்பில் இணைக்கிறது.
- இது சூரிய ஒளியை உறிஞ்சி மின்சாரத்தை சேமிக்க நிக்கல் நுரையில் வளர்க்கப்படும் நிக்கல்-கோபால்ட் ஆக்சைடு ($NiCo_2O_4$) நானோவயர்களைப் பயன்படுத்துகிறது.
- இந்த சாதனம் சுமார் 1.2-வோல்ட் நிலையான வெளியீட்டை வழங்குகிறது மற்றும் 1,000 சுழற்சிகளுக்குப் பிறகு சுமார் 88% மின் தேக்கத்தைத் தக்க வைத்துக் கொள்கிறது.

## கோப்பர்நிக்கஸ் சென்டினல்-2 திட்டம்

- சமீபத்தில், ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் (ESA), கோப்பர்நிக்கஸ் சென்டினல்-2 திட்டத்தினைப் பயன்படுத்தி வடக்கு இத்தாலியில் 2026 குளிர்கால ஒலிம்பிக் அரங்குகளின் உயர் தெளிவுத் திறன் கொண்ட படத்தை வெளியிட்டது.
- கோப்பர்நிக்கஸ் சென்டினல்-2 என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) கோப்பர்நிக்கஸ் திட்டத்தின் கீழ் ESA ஆல் உருவாக்கப்பட்ட ஒரு பூமி கண்காணிப்பு செயற்கைக்கோள் திட்டமாகும்.
- பூமியில் நில-மேற்பரப்பு நிலைகளில் ஏற்படும் மாற்றங்களை கண்காணிப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

- இது சூரிய-ஒத்திசைவு சுற்றுப்பாதையில் இரண்டு துருவ-சுற்றுப்பாதை செயற்கைக் கோள்களைக் கொண்டுள்ளது என்பதோடு இது உயர் தெளிவுத்திறன் கொண்ட பல்-நிறமாலை படங்களை வழங்குகிறது.
- இந்தத் தரவு விவசாயம், சுற்றுச்சூழல் கண்காணிப்பு, பேரிடர் மேலாண்மை, நீர் தர மதிப்பீடு மற்றும் காலநிலை தொடர்பான ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

## சான்ஷா யோங்கிள் நீல துளை

- தென் சீனக் கடலில் உள்ள சான்ஷா யோங்கிள் நீல துளை பற்றிய விரிவான கண்டுபிடிப்புகளை விஞ்ஞானிகள் வெளியிட்டனர்.
- டிராகன் துளை என்றும் அழைக்கப்படும் சான்ஷா யோங்கிள் நீல துளையின் 301.19 மீட்டர் ஆழம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
- மெக்சிகோவில் ஆழமான இடம் உறுதி செய்யப்படுவதற்கு முன்பு இது ஒரு காலத்தில் உலகின் ஆழமான நீல துளையாக இருந்தது.
- தொலைவிலிருந்து இயக்கப்படும் ஒரு வாகனம் 2017 ஆம் ஆண்டில் அதன் முதல் முழுமையான முப்பரிமாண வரைபடத்தை உருவாக்கியது.
- துளைக்குள் இருக்கும் பாறை விளிம்புகள் குளிர்ந்த காலநிலை உள்ள காலங்களில் கடல் மட்டத்தில் ஏற்பட்ட கடந்த கால மாற்றங்களைக் காட்டுகின்றன.
- ஆக்ஸிஜன் அளவுகள் சுமார் 100 மீட்டருக்கும் கீழே கடுமையாகக் குறைகின்றன, மேலும் ஹைட்ரஜன் சல்பைடு ஆழமான அடுக்குகளில் உள்ளது.

## கண்ட கவச அடுக்கு பூகம்பங்களின் உலகளாவிய வரைபடம்

- ஸ்டான்போர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் அரிய கண்ட கவச அடுக்கில் ஏற்பட்ட பூகம்பங்களின் முதல் உலகளாவிய வரைபடத்தை உருவாக்கினர்.
- கவச அடுக்கில் நிகழும் பூகம்பங்கள் பூமியின் மேலோட்டில் இருந்து சுமார் 80 கிலோ மீட்டருக்கும் அதிகமான ஆழத்தில் நிகழ்கின்றன
- 1990 முதல் பதிவு செய்யப்பட்ட 46,000க்கும் மேற்பட்ட நிலநடுக்கங்களின் தரவுகளை ஆராய்ச்சியாளர்கள் பகுப்பாய்வு செய்து கண்ட கவச அடுக்கில் ஏற்பட்ட சுமார் 459 பூகம்பங்களை அடையாளம் கண்டனர்.
- இந்த ஆழமான பூகம்பங்கள் முக்கியமாக இமயமலை மற்றும் பெரிங் நீர்ச்சந்திக்கு அடியில் காணப்பட்டன.
- மேலோட்டில் நிகழும் நில நடுக்கங்களிலிருந்து கவச அடுக்கில் ஏற்பட்ட பல்வேறு நில நடுக்கங்களை வேறுபடுத்த விஞ்ஞானிகள் Sn மற்றும் Lg நில அதிர்வு அலைகளைப் பயன்படுத்தினர்.

## உயிரித் தொழில்நுட்பத்திற்கான BIRAC–RDI நிதி

- BIRAC–RDI (உயிரி தொழில்நுட்ப தொழில் ஆராய்ச்சி உதவி மன்றம்–ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் கண்டுபிடிப்பு) நிதிக்கான முதல் தேசிய அளவிலான அழைப்பை மையம் அறிவித்தது.

- தற்போதைய ₹2,000 கோடி நிதியானது, ஜூலை 2025 இல் மத்திய அமைச்சரவையால் அங்கீகரிக்கப் பட்டு, நவம்பர் 2025 இல் தொடங்கப்பட்ட சுமார் ₹1 லட்சம் கோடி RDI முயற்சியின் ஒரு பகுதியாகும்.
- இது அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளையின் கீழ் செயல்படுத்தப்பட்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## அண்டார்டிகாவில் முதல் தொலைக்கட்டுப்பாட்டு மீயொலி சோதனை

- புது தில்லியில் உள்ள எய்ம்ஸ் நிறுவனமானது அண்டார்டிகாவில் உள்ள இந்தியாவின் மைத்ரி ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு நோயாளிக்கு முதல் நிகழ்நேரத் தொலைக் கட்டுப்பாட்டு மீயொலி சோதனையை செய்தது.
- தொலைநிலை-ரோபோடிக் அமைப்பு மருத்துவ நிபுணர்கள் மீயொலிக் கருவிகளை தொலைவிலிருந்து இயக்க அனுமதிக்கிறது.
- கோவிட்-19 தொற்றுநோய்களின் போது முதன்முதலில் தொலைநிலை-ரோபோடிக் அமைப்பு பயன்படுத்தப்பட்டது என்பதோடு மேலும் இவை அண்டார்டிக்கில் நிலவும் தீவிரமான நிலைமைகளுக்கு ஏற்றவாறு மாற்றப்பட்டது.

## இந்தியாவின் இறையாண்மை AI மாதிரிகள்

- இந்திய AI தாக்க உச்சி மாநாடு 2026 இல் செயற்கை நுண்ணறிவு (AI) மாதிரிகள் விளக்கப் பட்டன.
- பெங்களூருவை தளமாகக் கொண்ட ஒரு புத்தொழில் நிறுவனமான சர்வம் AI, 22 இந்திய மொழிகளில் பன்மொழி மற்றும் குரல் அடிப்படையிலான பயன்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்ட இரண்டு AI மொழி மாதிரிகளை வெளியிட்டது.
- Gnani.ai நிறுவனமானது ஒரு மில்லியன் மணி நேரத்திற்கும் அதிகமான இந்தியக் குரல் தரவுகளில் பயிற்சி பெற்ற உரைகளை பேச்சு வடிவில் அளிக்கும் (TTS) மற்றும் பேச்சுக்களை உரை வடிவில் அளிக்கும் (STT) மாதிரிகளை அறிமுகப்படுத்தியது.
- பாரத்ஜென், 17 பில்லியன் அளவுருக்கள் கொண்ட பன்மொழி நிபுணர்களின் கலவை (MoE) அடிப்படை மாதிரியான PARAM 2 17B என்பதை வெளியிட்டது.

## AI உள்கட்டமைப்பு திட்டம்

- அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் டிஜிட்டல் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) உள்கட்டமைப்பை வலுப்படுத்த கூகுள் அமெரிக்கா-இந்தியா இணைப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- இந்தத் திட்டம் இந்தியாவில் AI உள்கட்டமைப்பில் கூகுள் நிறுவனத்தின் ஐந்து ஆண்டு கால 15 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டால் ஆதரிக்கப்படுகிறது.
- விசாகப்பட்டினத்தில் சர்வதேசக் கடலுக்கு அடியில் ஒரு புதிய கம்பிவட நுழைவாயில் மற்றும் இந்தியாவை சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவுடன் இணைக்கும் புதிய கடலடிக் கம்பி வட வழித்தடங்கள் இதில் அடங்கும்.
- நான்கு புதிய ஒளியிழை வழித் தடங்கள் அமெரிக்கா, இந்தியா மற்றும் தெற்கு அரைக் கோளத்தில் உள்ள நாடுகளுக்கு இடையேயான வலையமைப்பு இணைப்பை மேம்படுத்தும்.

- இந்தத் திட்டம் விசாகப்பட்டினத்தை ஒரு உலகளாவிய முக்கியமானக் கடலடித் தள மையமாக மாற்றும் மற்றும் இந்தியாவின் டிஜிட்டல் வலையமைப்பின் மீள்தன்மை மற்றும் நம்பகத் தன்மையை மேம்படுத்தும்.

## உலகளாவிய AI for Energy திட்டம்

- சர்வதேச சூரிய சக்தி கூட்டணி (ISA), புது தில்லியில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு இந்திய AI தாக்க உச்சி மாநாட்டில் உலகளாவிய AI-for-Energy திட்டத்தினை அறிமுகப் படுத்தியது.
- 120க்கும் மேற்பட்ட உறுப்பு நாடுகளில் செயற்கை நுண்ணறிவை (AI) தூய்மையான எரிசக்தி அமைப்புகளில் ஒருங்கிணைப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.
- இது இந்தியாவின் மின்சாரத் துறை அமைச்சகம் மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்துடன் (MeitY) இணைந்து தொடங்கப்பட்டுள்ளது.
- வளரும் நாடுகளில் மின் கட்டமைப்பு நிலைத்தன்மையை மேம்படுத்துதல், புதுப்பிக்கத் தக்க எரிசக்திப் பயன்பாட்டை அதிகரித்தல் மற்றும் மலிவு விலையில் நம்பகமான மின்சார அணுகலை உறுதி செய்தல் ஆகியவை இதன் நோக்கமாகும்.

## X8.3 சூரிய ஒளிக்கதிர்

- பிப்ரவரி 1, 2026 அன்று சூரியன் X8.3 சூரிய ஒளிச்சுடர் ஒன்றை உருவாக்கியது என்பதோடு இது இந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட மிக வலிமையான சூரிய ஒளிச்சுடர் ஆகும்.
- சூரியனின் காந்தப் புலத்தில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படும் திடீர் ஆற்றல் வெடிப்புகள் சூரிய ஒளிச்சுடர்கள் ஆகும்.
- ஒளிச்சுடர் வெடிப்புகள் A, B, C, M மற்றும் X என வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதோடு இதில் X மிகவும் சக்திவாய்ந்த வகையாகும்.
- X8.3 ஒளிச்சுடர் வெடிப்பு தென் பசிபிக், கிழக்கு ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தின் சில பகுதிகளில் வானொலி தொடர்பைத் தடுத்தது.
- இந்தச் சுடரானது, நிலையற்றக் காந்தச் செயல்பாட்டைக் காட்டும் பகுதி 4366 என்ற சூரிய கரும்புள்ளிக் குழுவிலிருந்து உருவானது.

## ஈயம் இல்லாத ஒளியுணர்வி

- இந்திய ஆராய்ச்சியாளர்கள் பிப்ரவரி 2026 இல் ஒரு புதிய ஈயம் இல்லாத மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒளியுணர்வியை உருவாக்கியுள்ளனர்.
- இந்தச் சாதனமானது ஹைதராபாத்தில் உள்ள தூள் உலோகவியல் மற்றும் புதிய பொருட்களுக்கான சர்வதேச மேம்பட்ட ஆராய்ச்சி மையத்தால் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் கீழ் ஐஐடி ஹைதராபாத்துடன் இணைந்து உருவாக்கப் பட்டது.
- இது $Cs_2AgBiBr_6$ எனப்படும் இரட்டை பெரோவ்ஸ்கைட் வகை பொருளை அடிப்படையாகக் கொண்டது மற்றும் குறைந்த விலை கார்பன் மின்முனைகளைப் பயன்படுத்துகிறது.
- ஈயம் இல்லாத, சுயமாக இயங்கும் தன்மை கொண்ட இந்த ஒளியுணர்வியானது, புலப்படும் ஒளிக்கு வலுவான எதிர்வினையை வெளிப்படுத்துகிறது.
- இது 60 நாட்களுக்குப் பிறகும் 90% க்கும் அதிகமான செயல்திறனைத் தக்க வைத்துக் கொள்கிறது மற்றும் அறை வெப்பநிலையில் ஒருபடி பூச்சு முறையைப் பயன்படுத்தி தயாரிக்கப் படுகிறது.

- இது நுகர்வோர் மின்னணுவியல், பாதுகாப்பு அமைப்புகள், தொழில்துறைக் கண்காணிப்பு மற்றும் உயிரி மருத்துவப் படமிடல் ஆகியவற்றில் பயன்படுத்தப் படலாம்.

## விண்மீன்களிடை வால்நட்சத்திரத்தில் கரிம மூலக்கூறுகள்

- நாசாவின் SPHEREx விண்வெளி தொலைநோக்கி விண்மீன்களிடை வால்நட்சத்திரமான 3I/ATLAS இல் உள்ள கரிம மூலக்கூறுகளைக் கண்டறிந்தது.
- SPHEREx டிசம்பர் 2025 இல் அகச்சிவப்பு அலைநீளங்களைப் பயன்படுத்தி வால் நட்சத்திரத்தைக் கவனித்தது.
- இதில் ஆய்வாளர்கள் மெத்தனால், மீத்தேன் மற்றும் சயனைடு போன்ற கரிம மூலக் கூறுகளைக் கண்டறிந்தனர்.
- பதங்கமாதல் காரணமாக சூரியனுக்கு மிக அருகில் சென்ற பிறகு வால் நட்சத்திரம் அதிகரித்த பிரகாசத்தைக் காட்டியது.
- வால் நட்சத்திரம் 3I/ATLAS ஜூலை 2025 இல் கண்டுபிடிக்கப்பட்டு ஒரு விண்மீன்களிடை பொருளாக உறுதிப்படுத்தப்பட்டது.
- 102 அகச்சிவப்பு அலைநீளங்களில் பிரபஞ்சத்தை ஆய்வு செய்வதற்காக SPHEREx மார்ச் 2025 இல் ஏவப்பட்டது.

## ஃபோனான் வெப்பப் பரிமாற்றம்

- சமீபத்தில், இந்திய ஆராய்ச்சியாளர்கள் $Tl_2AgI_3$ இல் ஒரு அரிய துகள் நிலையிலிருந்து நிகழும்அலை போன்ற ஃபோனான் வெப்பப் பரிமாற்றப் பொறிமுறையைக் கண்டு பிடித்தனர்.
- $Tl_2AgI_3$ என்பது தாலியம் (Tl), வெள்ளி (Ag) மற்றும் அயோடின் (I) ஆகியவற்றால் ஆன பரிமாணமற்ற கனிம உலோக ஹாலைடு படிகமாகும்.
- இது ஜவஹர்லால் நேரு மேம்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்டது.
- பாலிங்கின் மூன்றாவது விதியால் இயக்கப்படும் எதிரயனிகளின் விலக்கல் காரணமாக, கட்டமைப்பு சிதைந்து ஃபோனான்களைப் பிடிக்கிறது.
- இந்தப் பொருள் மிகக் குறைந்த வெப்ப கடத்துத்திறனை வெளிக் காட்டுகிறது என்பதோடு இது வெப்ப மின்கடத்திகள் மற்றும் வெப்ப மின் பொருட்களில் பயன்படுத்தப் படலாம்.

## வியாழன் கோளின் அளவு திருத்தம்

- ஜூனோ விண்கலத்தின் தரவைப் பயன்படுத்தி நாசா வியாழனின் அளவைத் திருத்தி உள்ளது.
- வியாழனின் மத்திய ரேகை விட்டம் 88,841 மைல்கள் (142,976 கிலோமீட்டர்கள்) ஆகும் என்பதோடு இது முந்தைய மதிப்பீடுகளை விட சுமார் 5 மைல்கள் குறைவு ஆகும்.
- இதன் துருவ விட்டம் 83,067 மைல்கள் (133,684 கிலோமீட்டர்கள்) ஆகும் என்பதோடு இது முந்தையத் தரவுகளை விட சுமார் 15 மைல்கள் குறைவு ஆகும்.
- அதன் விரைவான சுழற்சி காரணமாக வியாழன் துருவங்களை விட மத்திய ரேகையில் சுமார் 7% அகலமாக இருப்பதாக கண்டுபிடிப்புகள் காட்டுகின்றன.

- 2016 முதல் வியாழனைச் சுற்றி வரும் ஜூனோ அதன் அமைப்பு குறித்த துல்லியமான தரவை வழங்குகிறது.

### BioE3 கொள்கை புதுப்பிப்பு

- உயிரி தொழில்நுட்பத் துறையின் BioE3 கொள்கையின் கீழ், உயிரி அடிப்படையிலான இரசாயனங்கள் மற்றும் நொதிகள் முன்னுரிமைப் பகுதியாக அடையாளம் காணப் பட்டுள்ளன.
- உயிரி அடிப்படையிலான இரசாயனங்கள் என்பது கரும்பு, சோளம், ஸ்டார்ச் மற்றும் உயிரி எச்சங்கள் போன்ற உயிரியல் மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் தொழில்துறை இரசாயனங்கள் ஆகும்.
- தூய்மையாக்கம், உணவு பதப்படுத்துதல், மருந்துகள், ஜவுளி மற்றும் காகிதம் போன்ற தொழில்களில் பயன்படுத்தப்படும் உயிரியல் வினையூக்கிகளாக நொதிகள் உள்ளன.
- BioE3 கொள்கை (பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் வேலைவாய்ப்புக்கான உயிரி தொழில் நுட்பம்) இந்தியாவில் உயர் செயல்திறன் கொண்ட உயிரி உற்பத்தியை ஊக்குவிக்கிறது.
- 2023 ஆம் ஆண்டில் இந்தியா சுமார் 479.8 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள அசிட்டிக் அமிலத்தை இறக்குமதி செய்தது என்பதோடு இது இறக்குமதியினைச் சார்ந்திருப்பதைக் குறிக்கிறது.
- இந்தக் கொள்கை பெட்ரோ கெமிக்கல்களைச் சார்ந்திருப்பதைக் குறைத்து நீடித்த தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### இந்தியாவில் மேலும் 2 ராம்சர் தளங்கள்

- உத்தரப் பிரதேசத்தின் எட்டா மாவட்டத்தில் உள்ள பட்னா பறவைகள் சரணாலயம் மற்றும் குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் உள்ள சாரி-தாந்த் ஆகியவை இந்தியாவின் ராம்சர் வலையமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இது இந்தியாவின் மொத்த ராம்சர் தளங்களின் எண்ணிக்கையை 98 ஆக உயர்த்தும்.
- ஈரானின் ராம்சர் நகரில் 1971-ல் கையெழுத்திடப்பட்ட, ராம்சர் மாநாடு என அழைக்கப்படும் சதுப்பு நிலங்கள் மீதான மாநாட்டின் ஒப்பந்த நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- இந்தியா 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 ஆம் தேதி இந்த மாநாட்டில் கையெழுத்திட்டது.
- இந்தியாவில் குஜராத் மாநிலம் தான் அதிக சதுப்பு நிலப் பரப்பைக் கொண்டுள்ளது; இது நாட்டின் மொத்த சதுப்பு நிலங்களில் 20% க்கும் அதிகமானதைக் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு (20) அதிக எண்ணிக்கையிலான ராம்சர் தளங்களைக் கொண்டுள்ளது.
- 2017 ஆம் ஆண்டின் சதுப்பு நிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகளின்படி, இந்திய அரசாங்கத்தின் சதுப்பு நிலங்களுக்கான வரையறையில், ஆற்றுப் படுகைகள், நெல் வயல்கள் அல்லது வணிக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் பிற பகுதிகள் ஆகியவை அடங்காது.

## தெற்குநோக்கிய துருவ சுழற்காற்று

- 2026 ஆம் ஆண்டு ஜனவரியில், அமெரிக்காவின் கிழக்குப் பகுதியின் மூன்றில் இரண்டு பங்கைப் பாதிக்கும் ஒரு கடுமையான குளிர்காலப் புயல் தாக்கியது என்பதோடு இது நியூ மெக்சிகோ மற்றும் டெக்சாஸ் முதல் நியூ இங்கிலாந்து வரை 2,000 மைல்களுக்கு மேல் பரவியது.
- அமெரிக்க அதிபர், ஏறக்குறைய 20 மாகாணங்களுக்கும் கொலம்பியா மாவட்டத்திற்கும் கூட்டாட்சி அவசரகாலப் பிரகடனங்களுக்கு ஒப்புதல் அளித்தார்.
- துருவச் சுழல் தெற்கு நோக்கி விரிவடைந்ததால் ஏற்பட்ட இந்த புயல் ஆர்க்டிக் பனிக் காற்றையும் கடுமையான குளிரையும் கொண்டு வந்தது என்பதோடு அக்காற்றின் குளிர்ச்சி நிலை -50°F (-45°C) வரை சென்றது.
- கனமழை ஓஹாயோ பள்ளத்தாக்கு முதல் வடகிழக்கு வரை பாதிப்பை ஏற்படுத்தியது.
- கீழ் மிசிசிப்பி பள்ளத்தாக்கு, தென்கிழக்கு மற்றும் மத்திய அட்லாண்டிக் பிராந்தியங்களில் பேரழிவு தரும் பனி உறைவு ஏற்பட்டது.

## சுனபேடா வனவிலங்கு சரணாலயம் - மாவோயிஸ்ட் அற்ற நிலை

- சுனபேடா வனவிலங்கு சரணாலயம் ஒடிசாவின் நுவாபடா மாவட்டத்தில் அமைந்து உள்ளது.
- இது சமீபத்தில் மாவோயிஸ்டுகள் அற்ற பகுதியாக அறிவிக்கப்பட்டது.
- மேலும், இங்கு சிறுத்தைகளின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்து வருகிறது.
- இந்த சரணாலயத்தில் 70க்கும் மேற்பட்ட சிறுத்தைகள் வசிக்கக் கூடும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.
- இது ஒரு முன்மொழியப்பட்ட புலிகள் காப்பகமாகவும் உள்ளது.
- 2016 ஆம் ஆண்டு மாநிலப் புலிகள் கணக்கெடுப்பில் நான்கு புலிகள் பதிவு செய்யப் பட்டன.
- ஆனால் கடந்த ஆண்டு ஜூலை மாதம் வெளியிடப்பட்ட சமீபத்திய தேசிய அறிக்கை, அங்கு புலிகள் எதுவும் இல்லை என்று கண்டறிந்துள்ளது.
- இந்தச் சரணாலயம் மகாநதியின் துணை நதியான ஜோங்க் ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதியாக உள்ளது.
- இந்தச் சரணாலயம் சுந்தர் மற்றும் இந்திரா ஆகிய ஆறுகளின் மூலமாகவும் திகழ்கிறது.

## அமெரிக்காவும் பாரிஸ் பருவநிலை ஒப்பந்தமும்

- அதிபர் டொனால்ட் டிரம்பின் நிர்வாகத்தின் கீழ் அமெரிக்கா பாரிஸ் ஒப்பந்தத்திலிருந்து அதிகாரப்பூர்வமாக வெளியேறியுள்ளது.
- வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பருவநிலை ஒப்பந்தத்திலிருந்து இரண்டு முறை விலகிய ஒரே நாடு இது தான்.
- 2017-ல் முதன்முதலில் விலகிய பிறகு, 2021-ல் அதிபர் பைடனின் கீழ் மீண்டும் இணைந்திருந்த அமெரிக்கா, இப்போது மீண்டும் இந்த உலகளாவிய ஒப்பந்தத்தைக் கைவிட்ட ஒரே நாடாக மாறியுள்ளது.

- சீனாவிற்குப் பிறகு உலகின் இரண்டாவது பெரிய பசுமை இல்ல வாயுக்களை வெளியிடும் நாடு அமெரிக்கா ஆகும்.
- பாரிஸ் ஒப்பந்தத்திற்கு வெளியே உள்ள மற்ற ஐ.நா உறுப்பு நாடுகள் ஈரான், லிபியா மற்றும் ஏமன் மட்டுமே.
- பாரிஸ் ஒப்பந்தம் என்பது, புவி வெப்பமயமாதலைத் தொழில்துறைக்கு முந்தைய நிலைகளை விட 2°C-க்குக் கீழே —குறிப்பாக 1.5°C-க்குக் கீழே— கட்டுப்படுத்தும் நோக்குடன், 2015-ல் (COP21) 195 தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப் பட்ட சட்டப்பூர்வ பிணைப்புடைய ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.
- இது, நாடுகள் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்டப் பங்களிப்புகள் (NDCs) எனப்படும் பெருகிய முறையில் லட்சியம் நிறைந்த, தன்னார்வப் பருவநிலைத் திட்டங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று கோருகிறது.
- 1.5°C இலக்கு என்பது ஒரு தனி ஆண்டைக் குறிக்காமல், பொதுவாக 20 ஆண்டுகளின் சராசரியைக் குறிப்பதாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.

## சவூதி அரேபியாவில் அரிய பனிப்பொழிவு

- 2025 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், சவூதி அரேபியாவின் அல்-ஜாவ்ஃப் பிராந்தியத்தின் உட்புறப் பாலைவனப் பகுதிகளில், வரலாற்றில் முதல் முறையாகப் பனிப்பொழிவு ஏற்பட்டது.
- கனமழை மற்றும் ஆலங்கட்டி மழைக்குப் பிறகு, 2025 ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் மாதங்களில் இந்தப் பனிப்பொழிவு நிகழ்ந்தது.
- மத்திய தரைக்கடல் பகுதியிலிருந்து நகர்ந்த ஒரு குளிர்ந்த வானிலை அமைப்பால் இந்த நிகழ்வு ஏற்பட்டது.
- வெப்பநிலை 0 டிகிரி செல்சியஸுக்கு நெருக்கமாக குறைந்ததால், பாலைவன மணலில் பனி படிய முடிந்தது.
- அல்-ஜாவ்ஃப், அல்-நஃபூத் பாலைவனம் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு (UAE) அருகிலுள்ள பகுதிகளில் பனிப்பொழிவு பதிவாகியுள்ளது.
- தபூக் போன்ற வடக்கு மலைப்பகுதிகளில் குளிர்காலத்தில் பனிப்பொழிவு ஏற்படுவது வழக்கம், ஆனால் அல்-ஜாவ்ஃப் உட்புறப் பாலைவனங்களில் பனிப்பொழிவு ஏற்படுவது மிகவும் அரிதானது.

## மணாலியில் இந்திய மயில்

- இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள மணாலிக்கு அருகில் சுமார் 6,000 அடி உயரத்தில் ஒரு இணை மயில்கள் காணப்பட்டன என்ற நிலையில் இது வழக்கத்திற்கு மாறான ஒரு நிகழ்வாகும்.
- மயில்கள் ஃபேசியானிடே (Phasianidae) என்ற பறவைக் குடும்பத்தைச் சேர்ந்தவை.
- இந்திய அல்லது நீல மயில் (Pavo cristatus) இந்தியாவின் தேசியப் பறவையாகும்.
- மயில்கள் பொதுவாக சமவெளிகள் மற்றும் தாழ்வான மலைப்பகுதிகளில், சுமார் 1,000–1,500 மீட்டருக்கும் குறைவான உயரத்தில் உள்ள வெப்பமான காடுகள், புல்வெளிகள் மற்றும் விவசாயப் பகுதிகளில் வாழ்கின்றன.

- பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் (IUCN)படி இது குறைந்த தீவாய்ப்புக் கவலை குறைந்த இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.

## கரிம்புழா வனவிலங்கு சரணாலயத்தில் விலங்கின கணக்கெடுப்பு

- கேரளாவில் உள்ள கரிம்புழா வனவிலங்கு சரணாலயத்தில் நடத்தப்பட்ட விலங்கின கணக்கெடுப்பில், அந்த சரணாலயத்தில் பல புதிய இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- இந்தக் கணக்கெடுப்பில் 171 பறவை இனங்கள், 177 வண்ணத்துப்பூச்சி இனங்கள் மற்றும் 42 தட்டான் இனங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன; இவற்றில் பல இனங்கள் முதல் முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இந்த புதிய சேர்க்கைகளுடன், தற்போது இந்தச் சரணாலயத்தில் 247 பறவை இனங்கள், 223 வண்ணத்துப்பூச்சி இனங்கள் மற்றும் 63 தட்டான் இனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- கரிம்புழா வனவிலங்கு சரணாலயம், நீலகிரியின் மேற்குச் சரிவுகளில், 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டில் அறிவிக்கப் பட்டது.
- இந்தச் சரணாலயத்திற்கு சாளியாறு ஆற்றின் துணை நதியான கரிம்புழா ஆற்றின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் கடற்பசுக்களின் எண்ணிக்கை

- தமிழ்நாட்டில் கடற்பசுக்களின் எண்ணிக்கை 270 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.
- பாக் வளைகுடாவும் மன்னார் வளைகுடாவும் தற்போது இந்தியாவில் கடற்பசுக்களின் மிகப்பெரிய, நிலைத்த வாழ்விடமாகத் திகழ்கின்றன.
- இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) தமிழ்நாடு வனத்துறையுடன் இணைந்து ஒரு கணக்கெடுப்பை நடத்தியது.
- இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) தமிழ்நாடு வனத்துறையுடன் இணைந்து ஒரு கணக்கெடுப்பை நடத்தியது.
- இந்தக் கணக்கெடுப்பில் பாக் வளைகுடாவில் 158 கடற்பசுக்களும், மன்னார் வளைகுடாவில் 112 கடற்பசுக்களும் கண்டறியப்பட்டன.
- இந்த அதிகரிப்பிற்கு, இழப்பீட்டுக்கு இணையான வனமயமாக்கல் நிதி மேலாண்மை மற்றும் திட்டமிடல் ஆணையத்தின் (CAMPA) ஆதரவுடன் இந்திய வனவிலங்கு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்ட கடற்பசு மீட்புத் திட்டமே முக்கியக் காரணமாகும்.
- பாக் வளைகுடாவில் 448 சதுர கிலோமீட்டர் பரப்பளவிலான முக்கிய வாழ்விடத்தை உள்ளடக்கிய கடற்பசு பாதுகாப்பு சரணாலயமும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- தரப்படுத்தப்பட்ட நெறிமுறைகளைப் பின்பற்றி, ஆளில்லா வான்வழி வாகனம் (UAV) மூலம் நடத்தப்பட்ட இந்தக் கணக்கெடுப்பு இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முதல் முறையான வான்வழி எண்ணிக்கை மதிப்பீடாகும்.
- 2012-2013 ஆம் ஆண்டுகளில் நேர்காணல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முந்தைய மதிப்பீடுகள், சுமார் 175 கடற்பசுக்கள் இருந்ததாகக் குறிப்பிட்டன. இது தற்போதைய கடற்பசுக்களின் எண்ணிக்கை அதிகரித்து, அவை நல்ல நிலையில் இருப்பதைக் காட்டுகிறது.

- ஆளில்லா விமான செயல்திறன், மின்கலன்களின் ஆயுள் மற்றும் கடலோரப் பாதுகாப்பு ஆகியவற்றால் வரையறுக்கப்பட்ட, நிலையான 3 கி.மீ. நீளமுள்ள பாதைகளில் ஆய்வுகள் நடத்தப்பட்டன இதனால் ஆழமான நீர்ப்பகுதிக்குச் சென்ற சில கடற்பசுக்கள் கணக்கிடப்படாமல் போயிருக்கலாம்.

## கடல் ஆமைகள் பாதுகாப்பு மையம்

- தமிழ்நாட்டின் முதல் கடல் ஆமை பாதுகாப்பு மையத்திற்கான அடிக்கல் சென்னையில் உள்ள கிண்டியில் நாட்டப்பட்டது.
- உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீடித்த பெருங்கடல் வளப் பயன்பாடு மற்றும் நீலப் பொருளாதாரம் (TN-SHORE) திட்டத்தின் கீழ், இந்த சிறப்பு மையம் ₹14.50 கோடி செலவில் நிறுவப்பட உள்ளது.
- இந்த மையம் கடல் ஆமைப் பாதுகாப்புக்கான அறிவியல் ஆராய்ச்சி, கண்காணிப்பு, பயிற்சி மற்றும் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகில் உள்ள ஆறு கடல் ஆமை இனங்களில் ஐந்து இனங்களைக் கொண்ட இந்தியாவின் ஒரே மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
- சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, நாகப்பட்டினம் மற்றும் கடலூர் பகுதியின் கடற்கரைகளில் ஒவ்வொரு ஆண்டும் அதிக அளவில் கடல் ஆமைகள் முட்டை இடுகின்றன.
- இந்த முயற்சி கடல் ஆமைகளைப் பாதுகாப்பதில், குறிப்பாக அழிந்து வரும் சிற்றாமைகளை (ஆலிவ் ரிட்லி) பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது.

## ஜலாஜ் வாழ்வாதார மையங்கள்

- மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சர் 25 ஜலாஜ் வாழ்வாதார மையங்களைத் திறந்து வைத்தார்.
- இவை நமாமி கங்கை இயக்கம் மற்றும் இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.
- இந்த முயற்சி, கங்கை நதிப் படுகையில் நதியின் பாதுகாப்பை நீடித்த வாழ்வாதாரங்களுடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சுழற்சிப் பொருளாதார மாதிரியை அடிப்படையாகக் கொண்ட இந்த மையங்கள் உள்ளூர் மக்களுக்குப் பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத் திறன்களில் பயிற்சி அளிக்கின்றன.
- இந்தத் திட்டம் சமூகப் பங்கேற்பு, பெண்களின் ஈடுபாடு மற்றும் நீர்வாழ் பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.

## இந்தியாவின் இரண்டாவது விரிவான பறவைகள் அட்லஸ்

- கேரளாவிற்குப் பிறகு, கோவா மாநில அளவில் பறவைகள் பரவலை வெளியிட்ட இரண்டாவது இந்திய மாநிலமாக உருவெடுத்துள்ளது
- இந்த அட்லஸ் வல்போயில் நடைபெற்ற கோவாவின் 9வது பறவைகள் விழாவின் போது வெளியிடப்பட்டது.

- இது கட்டம் சார்ந்த ஆய்வுகளைப் பயன்படுத்தி பறவைகளின் பரவலைப் பட்டியல் இடுகிறது மற்றும் காலப்போக்கில் பறவைகளின் எண்ணிக்கையில் ஏற்படும் பெரும் மாற்றங்களைக் கண்காணிக்க உதவுகிறது.
- இந்த முயற்சி பல்லுயிர்ப பாதுகாப்பு, குடிமக்கள் அறிவியல் மற்றும் சான்றுகள் அடிப்படையிலான கொள்கை உருவாக்கத்தை ஆதரிக்கிறது.
- 'கோவாவின் பறவைகள்: கொங்கணிப் பெயரிடல் – ஒலாக் சுக்னயான்சி' என்ற துணை வெளியீடு, உள்ளூர் கொங்கணி மொழியில் பறவைகளின் பெயர்களை ஆவணப் படுத்துகிறது.

## லோனார் விண்கல் பள்ளத்தாக்கு ஏரி சூழலியல் அமைப்பு

- அதிகரித்து வரும் நன்னீர் வரத்து மகாராஷ்டிராவில் உள்ள லோனார் விண்கல் பள்ளத்தாக்கு ஏரியின் சூழலியல் சமநிலையை சீர்குலைக்கிறது.
- மகாராஷ்டிராவின் புல்தானா மாவட்டத்தில் உள்ள லோனார் ஏரி, இந்தியாவின் ஒரே பாசால்டிக் விண்கல் தாக்கப் பள்ளத்தாக்கு ஏரியாகும்.
- இந்த ஏரி சுமார் 50,000 ஆண்டுகளுக்கு முன்பு டெக்கான் பாசால்ட் பகுதியில் ஒரு விண்கல் தாக்கியபோது உருவாக்கப்பட்டது.
- இது உவர்ப்பு மற்றும் கார நீர் சூழலியல் அமைப்புக்குப் பெயர் பெற்ற ராம்சார் ஈர நிலமாகும்.
- மழைப்பொழிவு மற்றும் அருகிலுள்ள ஆழமான போர்வெல்கள் நன்னீர் வரத்தை அதிகரித்து, ஏரியின் வேதியியல் கலவையை மாற்றுகின்றன.
- இது உப்புத் தன்மையைக் குறைத்து, ஏரியில் உள்ள நுண்ணுயிரிகள் மற்றும் பல்லுயிர்த் தன்மையைப் பாதிக்கிறது.

## புதிய காளான் இனங்கள்

- இந்திய இமயமலையில் ஹெமிலெசினம் இண்டிகம் என்ற புதிய காளான் இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.
- இந்த இனம் உத்தரகாண்ட் மாநிலத்தின் பாகேஷ்வர் மாவட்டத்தின் ஓக் காடுகளில், உயரமான இமயமலைப் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இது இந்தியாவில் ஹெமிலெசினம் இனத்தின் முதல் பதிவு செய்யப்பட்ட நிகழ்வு ஆகும்.
- காளான் என்பது ஓக் மரங்களுடன் எக்டோமிகோரைசல் (பூஞ்சைகள் மற்றும் தாவர வேர்களுக்கு இடையிலான கூட்டுவாழ்வு தொடர்பு) உறவுகளை உருவாக்கும் ஒரு போலேட் பூஞ்சை ஆகும்.

## பனிப்பாறைசார் அபாய முன்னறிவிப்பு ஆய்வு

- கிழக்கு இமயமலையில் பனிப்பாறை சார்ந்த அபாயங்களை முன்னறிவிப்பதற்கான ஒரு புதிய முறையை ஐஐடி குவஹாத்தி உருவாக்கியுள்ளது.
- எதிர்காலத்தில் பனிப்பாறை ஏரிகள் உருவாகக் கூடிய 492 சாத்தியமான இடங்களை இந்த ஆய்வு அடையாளம் கண்டுள்ளது.

- இந்த ஏரிகள் பனிப்பாறை ஏரி வெடிப்பு வெள்ளங்களுக்கு (GLOFs) வழி வகுக்கும் என்பதோடு இது திடீர் வெள்ளத்தையும் ஏற்படுத்தும்.
- இந்த ஆராய்ச்சி இமயமலைப் பகுதிகளில் ஆரம்ப எச்சரிக்கை அமைப்புகள் மற்றும் பேரிடர் தயார்நிலையை மேம்படுத்த உதவுகிறது.

## புதிய கடல் புழு இனங்கள்

- மேற்கு வங்காளக் கடற்கரையில் வடக்கு வங்காள விரிகுடாவில் இரண்டு புதிய கடல் புழு இனங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.
- இந்த இனங்கள் நாமலிகாஸ்டிஸ் சோலெனோடோக்னாதா மற்றும் நேரீஸ் த்ரிதியே ஆகும்.
- இந்திய விலங்கியல் ஆய்வு மையத்தின் (ZSI) இயக்குனர் திருதி பானர்ஜியின் பெயரால் நேரீஸ் த்ரிதியே பெயரிடப்பட்டது.
- இந்த நெரெய்டிட் குடும்ப (பாலிசீட்) புழுக்கள் ஊட்டச்சத்து சுழற்சி மற்றும் வண்டல்களின் காற்றோட்டத்திற்கு உதவுகின்றன.

## உலகின் மிக நீளமான பாம்பு - மலாயோபிதான் ரெட்டிகுலட்டஸ்

- இந்தோனேசியாவின் சுலவேசியில் ஒரு ரெட்டிகுலேட்டட் மலைப்பாம்பு கண்டு பிடிக்கப் பட்டது.
- இது உலகின் மிக நீளமான அளவிடப்பட்ட பாம்பாக கின்னஸ் உலக சாதனைகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- மலாயோபிதான் ரெட்டிகுலட்டஸ் என்ற இந்தப் பாம்பு 7.22 மீட்டர் அல்லது 23 அடி 8 அங்குலம் நீளம் கொண்டது.
- இதற்கு இபு பரோன் அல்லது தி பரோனஸ் என்று செல்லப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- தென்கிழக்கு ஆசியாவை பூர்வீகமாகக் கொண்ட ரெட்டிகுலேட்டட் மலைப்பாம்பு உலகின் மிக நீளமான பாம்பு இனமாகும்.

## துரும்பன் பூனை – ராஜஸ்தான்

- ராஜஸ்தானின் பாரன் மாவட்டத்தில் உள்ள ஷெர்கர் சரணாலயத்தில் துரும்பன் பூனை உயிருடன் இருப்பது பதிவு செய்யப்பட்டது.
- துரும்பன் பூனை உலகின் மிகச்சிறிய காட்டுப் பூனை இனங்களில் ஒன்றாகும்.
- இந்த இனம் IUCN ஆல் அச்சுறு நிலையை அண்மித்த இனமாக பட்டியலிடப்பட்டுள்ளது.
- இது இந்தியாவின் சில பகுதிகளில் மட்டும் காணப்படும் ஒரு இரவு நேர வாழ் தனிமையான காட்டு விலங்கு ஆகும்.

## நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பு 2026

- 16வது தாமிரபரணி பகுதி நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பில் தெற்கு தமிழ்நாட்டில் 21,000க்கும் மேற்பட்ட நீர்ப்பறவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- திருநெல்வேலி, தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 68 நீர்ப்பாசன குளங்களில் 69 இனங்களைச் சேர்ந்த மொத்தம் 21,091 நீர்ப்பறவைகள் கணக்கிடப் பட்டன.
- மத்திய ஆசிய பறக்கும் பாதையிலிருந்து வரும் இனங்கள் உட்பட, மொத்த எண்ணிக்கையில் சுமார் 36% இடம்பெயர்வுப் பறவைகள் ஆகும்.
- தூத்துக்குடி மாவட்டம் மிக அதிகமான பறவைகள் எண்ணிக்கையும் இனப் பன்முகத் தன்மையையும் பதிவு செய்துள்ளது.

## புதிய பூக்கும் தாவர இனம் - டிக்லிப்டெரா பகலிகா

- தெலுங்கானாவின் பகால் வனவிலங்கு சரணாலயத்தில் "டிக்லிப்டெரா பகாலிகா" என்ற புதிய பூக்கும் தாவர இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இந்த இனம் வெப்பமண்டலப் பூக்கும் தாவரக் குழுவான அகந்தேசி குடும்பத்தைச் சேர்ந்தது.
- டிக்லிப்டெரா இனத்தில் உலகளவில் 220க்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன, அதில் இந்தியாவில் சுமார் 29 இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இந்த இனத்தின் குறிப்பிட்ட இடப் பரவல் காரணமாக தற்போது IUCN வழி காட்டுதல்களின் கீழ் "போதிய தரவுகள் இல்லாதவை" என வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- "பகாலிகா" என்ற பெயர் சரணாலயத்தின் பெயர் பெற காரணமான பகால் ஏரியிலிருந்து பெறப்பட்டது.

## சதுப்புநில மட்டி இனப்பெருக்கம்

- சமீபத்தில், இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் (ICAR) - மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் (CMFRI) ஆகியவை சதுப்புநில மட்டியான ஜெலோயினா எரோசாவின் காப்பினப்பெருக்கத்தை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- சதுப்புநில மட்டிகள் என்பவை சேற்று மற்றும் உவர் சதுப்பு நில சதுப்பு நில வாழ்விடங்களில் வாழும் இருவோட்டுடலிகள் ஆகும்.
- அவை பொதுவாக சேற்று மட்டிகள் என்று அழைக்கப்படுகின்றன என்பதோடு மேலும் வடக்கு கேரளாவில் உள்ளூரில் "கண்டல் காக்கா" என்று அழைக்கப்படுகின்றன.
- சதுப்புநில மட்டிகள் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் பரவலாக பரவியுள்ளன.
- அவை ஊட்டச்சத்துக்களை மறுசுழற்சி செய்யும், வண்டல்களை நிலைப்படுத்தும் மற்றும் சதுப்புநிலச் சுற்றுச்சூழல் அமைப்புகளை ஆதரிக்கும் வடிகட்டியுண்ணி உயிரிகளாகும்.

## த்வைட்ஸ் பனிப்பாறை

- மனித நடவடிக்கைகளால் ஏற்படும் காலநிலை மாற்றம் காரணமாக த்வைட்ஸ் பனிப்பாறை வேகமாக உருகி வருவதாக விஞ்ஞானிகள் சமீபத்தில் எச்சரித்துள்ளனர்.
- த்வைட்ஸ் பனிப்பாறை என்பது மேற்கு அண்டார்டிகாவில் அமைந்துள்ள ஒரு பெரிய பனிப் பாறை ஆகும் என்பதோடு இது பெரும்பாலும் "டூம்ஸ்டே பனிப்பாறை" என்று அழைக்கப் படுகிறது.

- இது புளோரிடா மாகாணம் அல்லது கிரேட் பிரிட்டனின் அளவுள்ள அகலமான, வேகமாக நகரும் பனிப்பாறை ஆகும்.
- உலகளாவிய அளவில் வருடாந்திர கடல் மட்ட உயர்வுக்கு பனிப்பாறை சுமார் 4% பங்களிக்கிறது.
- இதன் சரிவு மேற்கு அண்டார்டிக் பனிக்கட்டியை சீர்குலைத்து, உலக கடல் மட்டங்களை கணிசமாக உயர்த்தக் கூடும்.

## புதிய தட்டாம்பூச்சி இனங்கள் - லிரியோதெமிஸ் கெரலென்சிஸ்

- ஆராய்ச்சியாளர்கள் கேரளாவில் லிரியோதெமிஸ் கெரலென்சிஸ் என்ற புதிய தட்டாம்பூச்சி இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த இனம் முதன்முதலில் 2013 ஆம் ஆண்டு கேரளாவின் கொத்தமங்கலத்தின் வரப்பேட்டை பகுதியில் காணப்பட்டது.
- இது முன்னர் லிட்டில் பிளட் டெயில் என்றும் அழைக்கப்படும் லிரியோதெமிஸ் அசிகாஸ்ட்ரா என்று தவறாகக் கருதப்பட்டது.
- கேரளாவில் மட்டுமே வசிக்கும் லிரியோதெமிஸ் கெரலென்சிஸ், ஒடோனாட்டா வரிசையின் கீழ் லிபெல்லுலிடே குடும்பத்தைச் சேர்ந்தது.
- பொதுவாக ஸ்லெண்டர் பாம்பார்டியர் என்று அழைக்கப்படுகின்ற இந்த இனம் தாழ்வான கடலோரம் மற்றும் விவசாயப் பகுதிகளில் காணப்படுகிறது.

## நிலப்பரப்பு பறவைகள் கணக்கெடுப்பு 2026

- தமிழ்நாட்டின் மத்தியப் பகுதியில் வனத்துறை இரண்டு நாள் ஒத்திசைக்கப்பட்ட நிலப்பரப்பு பறவைகள் கணக்கெடுப்பை நடத்தி வருகிறது.
- திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.
- இது இரவு நேர நிலப்பரப்பு பறவைகளின் எண்ணிக்கையை உள்ளடக்கிய கணக்கெடுப்பு ஆகும்.
- பறவை இனங்களை அடையாளம் காண்பது, அவற்றின் பன்முகத்தன்மை மற்றும் வாழ்விடங்களை ஆய்வு செய்வது மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆதரிப்பதே இந்தக் கணக்கெடுப்பின் நோக்கமாகும்.

## கவைவால் கொண்டைக் கரிச்சான்

- மதுரை பாலமேடு அருகே மஞ்சமலை அடிவாரத்தில் முதன்முறையாக ஒரு கவைவால் கொண்டைக் கரிச்சான் தென்பட்டது.
- Dicrurus hottentottus எனும் அறிவியல் பெயர் கொண்ட இது Dicruridae குடும்பத்தைச் சேர்ந்தது.
- இது பசுமையான காடுகள், ஈரப்பதமான இலையுதிர் காடுகள், வன விளிம்புகள், புதர்க் காடுகள் மற்றும் தோட்டங்களில் வாழ்கிறது.
- இதன் பாதுகாப்பு நிலை IUCN செந்நிறப் பட்டியலில் தீவாய்ப்புக் கவலை குறைந்த இனமாக உள்ளது என்பதோடு மேலும் இது வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972 இன் அட்டவணை II இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளது.

## சிங்க வால் குரங்கு வளங்காப்பு

- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள ஆனைமலை பகுதிகளின் மனிதர்கள் ஆதிக்கம் செலுத்தும் நிலப்பரப்புகளில் சிங்க வால் குரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சமீபத்திய ஆய்வு தெரிவிக்கிறது.
- சிங்கவால் கொண்ட குரங்கு என்பது மேற்குத் தொடர்ச்சி மலைகளின் மழைக்காடு சுற்றுச்சூழல் அமைப்பில் மட்டுமே காணப்படும் ஒரு வட்டார இனமாகும்.
- பாதுகாக்கப்பட்ட காடுகள் மற்றும் தோட்டங்கள் மற்றும் குடியிருப்புகள் போன்ற மனித ஆதிக்கப் பகுதிகளில் 37 குரங்குக் குழுக்கள் இருப்பதை இந்த 40 ஆண்டுகால ஆய்வில் கண்டறிந்தனர்.
- இது IUCN செந்நிறப் பட்டியலில் அருகி வரும் இனமாக பட்டியலிடப்பட்டுள்ளது மற்றும் CITES இன் இணைப்பு I (Appendix I) இல் சேர்க்கப்பட்டுள்ளது.
- மேலும் இது வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972 இன் அட்டவணை I இன் கீழ் பாதுகாக்கப் படுகிறது.

## பாங்கோலின் மீதான வர்த்தகத் தடை

- நாகாலாந்தில் உள்ள சாங்டம் பழங்குடி அமைப்பு பாங்கோலின்களைப் பாதுகாக்கவும் சட்டவிரோத வேட்டை மற்றும் வர்த்தகத்தை நிறுத்தவும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இந்த முயற்சியானது இந்தியா-மியான்மர் எல்லைக்கு அருகிலுள்ள கிஃபைர் மற்றும் டுயன்சாங் மாவட்டங்களை உள்ளடக்கியது (சுமார் 1,643 கிமீ) என்பதோடு இது அறியப் பட்ட வனவிலங்கு கடத்தல் பாதையாகும்.
- உலகில் அதிகம் கடத்தப்படும் பாலூட்டிகளில் பாங்கோலின்களும் அடங்கும் என்ற நிலையில் அவை அவற்றின் செதில்கள் மற்றும் இறைச்சிக்காக என வேட்டையாடப் படுகின்றன.
- இந்திய எறும்புண்ணி (மானிஸ் க்ராசிகாடேட்டா) மற்றும் சீன எறும்புண்ணி (மானிஸ் பெண்டாக்டைலா) ஆகியவை வடகிழக்கு இந்தியாவில் காணப்படுகின்றன.
- இந்திய எறும்புண்ணிகள் அருகிவரும் உயிரினங்களாக பட்டியலிடப்பட்டுள்ளன, அதே நேரத்தில் சீன நாட்டின் எறும்புண்ணிகள் IUCN சிவப்பு பட்டியலில் மிகவும் அருகி வரும் உயிரினங்களாக பட்டியலிடப்பட்டுள்ளன.
- எட்டு பாங்கோலின் இனங்களும் சர்வதேச வணிக வர்த்தகத்தைத் தடைசெய்யும் CITES இணைப்பு I இன் கீழ் பட்டியலிடப் பட்டுள்ளன.
- இந்த முயற்சியானது, இந்திய வனவிலங்கு அறக்கட்டளை (WTI) தலைமையிலான பாங்கோலின் பாதுகாப்பு நிதியத்தின் ஆதரவுடன், பாங்கோலின் கடத்தல் தடுப்புத் திட்டத்தை ஆதரிக்கிறது.

## சேற்று எரிமலை வெடிப்பு

- அந்தமான் தீவுகளில் உள்ள திக்லிபூரில் சமீபத்தில் ஒரு சேற்று எரிமலை வெடித்தது.
- சேற்று எரிமலை என்பது பூமியின் மேற்பரப்பிற்கு அடியில் இருந்து சேறு, நீர் மற்றும் வாயுக்கள் வெடிக்கும்போது உருவாகும் சேற்று மேடாகும்.

- இது வண்டல் எரிமலை அல்லது எரிவாயு-எண்ணெய் எரிமலை என்றும் அழைக்கப் படுகிறது.
- மீத்தேன் வாயு அழுத்தம் மற்றும் வண்டல் படிவுகளின் சுருக்கம் காரணமாக எண்ணெய் வயல் பகுதிகள் அல்லது வெப்ப நீரூற்று செயல்பாடு உள்ள பகுதிகளில் சேற்று எரிமலைகள் பொதுவாக உருவாகின்றன.
- உலகளவில் நிலத்திலும் ஆழமற்ற கடல்களிலும் சுமார் 1,000 சேற்று எரிமலைகள் காணப் படுகின்றன.
- இந்தியாவில், ஒரே சேற்று எரிமலை அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் உள்ள பரடாங் தீவில் அமைந்துள்ளது.

## இந்திய சாம்பல் நிற இருவாச்சி - திருப்பத்தூரின் பறவை

- வனத்துறை நடத்திய பொது வாக்கெடுப்பில் இந்திய சாம்பல் நிற இருவாச்சி 'திருப்பத்தூரின் பறவை' மாவட்டமாக வாக்களிக்கப்பட்டது.
- மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் வனப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.
- திருப்பத்தூர் மாவட்டத்தில் ஆம்பூர் மற்றும் சிங்காரப்பேட்டை வனப்பகுதிகளிலும் ஏலகிரி மலைகளிலும் இந்திய சாம்பல் நிற இருவாச்சி பறவையின் கணிசமான எண்ணிக்கை காணப்படுகிறது.
- இந்திய சாம்பல் நிற இருவாச்சி (Ocyceros birostris) IUCN செந்நிறப் பட்டியலில் தீ வாய்ப்புக் கவலை குறைந்த (LC) இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## மலபார் கறுப்பு வெள்ளை இருவாச்சி

- சத்தீஸ்கர் வனத்துறையானது, மலபார் கறுப்பு வெள்ளை இருவாச்சிப் பறவைக்காக உதந்தி சீதாநதி புலிகள் காப்பகத்தில் ஆறு "ஹார்ன்பில் உணவகங்களை" தொடங்கி உள்ளது.
- இது (ஆந்த்ராகோசெரோஸ் கொரோனாடஸ்), இது சிறிய கறுப்பு வெள்ளை இருவாச்சி என்றும் அழைக்கப்படுகிறது.
- இது மேற்குத் தொடர்ச்சி மலைகள், வடகிழக்கு இமயமலை அடிவாரங்கள், சத்புடா மலைகள், நேபாளம் மற்றும் இலங்கையில் காணப்படுகிறது.
- பழந்தின்னிகளான இது IUCN அமைப்பால் அச்சுறு நிலையை அண்மித்த ஒரு இனமாக பட்டியலிடப் பட்டுள்ளது.

## முர்ஷிதாபாத் சதுப்பு நிலங்கள்

- "தெற்கு வங்காளத்தின் சிறுநீரகங்கள்" என்று அழைக்கப்படும் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் உள்ள சதுப்பு நிலங்கள் ஆண்டுக்கு சுமார் 2.1% என்ற அளவில் வேகமாக சுருங்கி வருகின்றன.
- இந்தச் சுருக்க விகிதம் உலக சராசரியை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு மற்றும் இந்தியாவின் தேசிய சராசரியை விட சுமார் 1.5 மடங்கு அதிகம்.
- 1990 ஆம் ஆண்டில் 5,524.7 ஹெக்டேராக இருந்த 14 முக்கிய ஈர நிலங்களின் மொத்த பரப்பளவு 2025 ஆம் ஆண்டில் 1,700.2 ஹெக்டேராகக் குறைந்துள்ளதாக ஒரு ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது.

- ஈர நிலங்கள் நீர் ஓட்டங்களை ஒழுங்குபடுத்தவும், நிலத்தடி நீரை மீள்நிரப்பவும், மீன் வளம் மற்றும் விவசாயத்தை ஆதரிக்கவும் உதவுகின்றன.
- இந்த ஈரநிலங்களில் பாதிக்கும் மேற்பட்டவை ஆக்கிரமிப்பு களைகள், வண்டல் படிவு மற்றும் மாசுபாடு காரணமாக கடுமையாக சீரழிந்து வருகின்றன.
- 14 ஈரநிலங்களில் 4 மட்டுமே இன்னும் செயல்பாட்டு நதி இணைப்புகளைக் கொண்டு உள்ளன என்பதோடு இது நீர் இயக்கத்தையும் சுற்றுச்சூழல் அமைப்பின் ஆரோக்கியத்தையும் குறைக்கிறது.

## சிறுத்தைகளின் எண்ணிக்கை

- மத்தியப் பிரதேசத்தின் குனோ தேசியப் பூங்காவில் மூன்று புதிய குட்டிகள் பிறந்ததுடன் இந்தியாவின் மொத்த சிறுத்தைப்புலிகளின் எண்ணிக்கை 38 ஆக உயர்ந்தது.
- இந்தக் குட்டிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து Project Cheetah- என்ற திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட காமினி என்ற சிறுத்தைப் புலிக்குப் பிறந்தன.
- இந்தப் பிறப்புடன், இந்தியாவில் பிறந்த குட்டிகளின் எண்ணிக்கை 27 ஐ எட்டியுள்ளது.
- நமீபியா மற்றும் தென்னாப்பிரிக்காவிலிருந்து 20 சிறுத்தைகள் இடம் பெயர்ந்ததன் மூலம் 2022–23 இல் சிறுத்தைப்புலித் திட்டம் (Project Cheetah) தொடங்கப்பட்டது.
- இந்தியாவில் சிறுத்தை 1952 ஆம் ஆண்டு அழிந்து, 70 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அறிமுகப் படுத்தப்பட்டது.

## பிலிப்பைன்ஸ் கழுகு

- "குரங்கு உண்ணும் பறவை" என்று பிரபலமாக அறியப்படுகிற பிலிப்பைன்ஸ் கழுகு உலகின் மிகப்பெரிய மற்றும் அரிதான கழுகுகளில் ஒன்றாகும்.
- இது IUCN அமைப்பால் மிகவும் அருகி வரும் இனமாக வகைப் படுத்தப்பட்டுள்ளது என்பதோடு இது 500க்கும் குறைவான முதிர்ந்த உயிரினங்கள் காடுகளில் மட்டுமே எஞ்சியுள்ளது.
- இது ஒரு மேல்மட்ட அளவு வேட்டையாடுபவராகச் செயல்படுகிறது மற்றும் குரங்குகள், பறக்கும் அணில்கள், புனுகுப்பூனைகள், வெளவால்கள், பாம்புகள், பறவைகள் மற்றும் ஊர்வனவற்றை உண்பதன் மூலம் சுற்றுச்சூழல் சமநிலையைப் பராமரிக்கிறது.
- இந்த இனம் பிலிப்பைன்ஸில் உள்ள முதன்மை டிப்டெரோகார்ப் காடுகளைச் சார்ந்து உள்ளது ஆனால் காடழிப்பு, மரம் வெட்டுதல், விவசாயம் மற்றும் சுரங்கம் காரணமாக அதன் வாழ்விடம் சுருங்கி வருகிறது.
- பிலிப்பைன்ஸின் தேசியப் பறவையான இது வலிமை மற்றும் மீள்தன்மையைக் குறிக்கிறது.

## 'வன்ஜீவி தீதி' முன்முயற்சி

- சமூக அடிப்படையிலான வனவிலங்குப் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்காக பலமு புலிகள் சரணாலயம் 'வன்ஜீவி தீதி' எனும் முன்முயற்சியைத் தொடங்கியது.
- இந்த முன்முயற்சி 17 கிராமங்களில் இருந்து தலா 18 படித்த பெண்கள் வன தூதர்களாக செயல்படவும், வேட்டையாடுதல் மற்றும் காடழிப்புக்கு எதிராக விழிப்பு உணர்வைப் பரப்பவும் அதிகாரம் அளிக்கிறது.

- இது ஜார்க்கண்டின் காரு மலைத்தொடரில் பிப்ரவரி 17, 2026 அன்று தொடங்கப்பட்டது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பெண்ணுக்கும் மாதந்தோறும் ₹3,000 ஊக்கத்தொகை வழங்கப்படும்.
- பலமு புலிகள் சரணாலயம், வங்காளப் புலிகளைப் பாதுகாப்பதற்காக 1973 ஆம் ஆண்டு தொடங்கப் பட்ட புலிகள் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## கலபகோஸ் ராட்சத ஆமை

- சூழலியல் அமைப்பை மீட்டெடுக்க கலபகோஸ் தேசியப் பூங்காவானது 158 கலப்பின ராட்சத ஆமைகளை ஃப்ளோரியானா தீவில் வெளியிட்டது.
- 19 ஆம் நூற்றாண்டில் அழிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட செலோனாய்டிஸ் நைகரின் 40–80% டிஎன்ஏவை இந்த ஆமைகள் கொண்டுள்ளன.
- கலாபகோஸ் தீவுகள் பசிபிக் பெருங்கடலில், ஈக்வடாருக்கு மேற்கே சுமார் 1,000 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளன என்பதோடு மேலும் அவை எரிமலையின் செயல் பாடுகளால் உருவாக்கப்பட்டன.
- இந்தத் தீவுகள் சார்லஸ் டார்வினின் இயற்கைத் தேர்வு கோட்பாட்டை ஊக்குவித்துடன் 1978 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளமாகவும் அறிவிக்கப் பட்டன.
- ராட்சத ஆமைகள் விதைகளைப் பரப்புதல், தாவரங்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் பிற உயிரினங்களுக்கு வாழ்விடங்களை உருவாக்குவதால் அவை சுற்றுச்சூழல் பொறியாளர்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- செலோனாய்டிஸ் இனமானது பொதுவாக IUCN ஆல் அருகி வரும் இனமாக அல்லது மிகவும் அருகி வரும் இனமாக பட்டியலிடப்பட்டுள்ளது.

## ஆலிவ் ரிட்லிகள் கூடு அமைக்கும் உருப்படிமம்

- சென்னை கடற்கரையில் உலவும் ஆலிவ் ரிட்லி கடல் ஆமைகளின் ரேடியோ-குறியிடல், கூடு அமைக்கும் இட நம்பகத்தன்மைக்கான ஆரம்பகால அறிவியல் சான்றுகளை வழங்கியுள்ளது.
- தமிழ்நாட்டின் முதல் தொலை அளவியல் ஆய்வு, ஜனவரி 2026 இல் பெசன்ட் நகர் ஆமை குஞ்சு பொரிக்கும் நிலையத்தில் தொடங்கப்பட்டது என்பதோடு வங்காள விரிகுடாவில் இடம்பெயர்வு பாதைகள் மற்றும் உணவளிக்கும் வாழ்விடங்களைக் கண்காணிக்க வேண்டி இது ஃபிளிப்பர் மற்றும் செயற்கைக்கோள் குறியிடலைப் பயன்படுத்துகிறது.
- இந்த ஆய்வை இந்திய வனவிலங்கு நிறுவனம் மற்றும் மேம்பட்ட வனவிலங்குப் பாதுகாப்பு நிறுவனம் மேற்கொண்டு வருகின்றன.
- தமிழ்நாடு வனத்துறை 10 கடலோர மாவட்டங்களில் 49 ஆமை குஞ்சு பொரிக்கும் கூடங்களை அமைத்துள்ளது.
- இதுவரை, 1,35,304 முட்டைகளைப் பாதுகாக்கும் 1,150 கூடுகள் பாதுகாக்கப்பட்டுள்ளன என்பதோடு மேலும் 477 குஞ்சுகள் பொரித்து கடலுக்குச் சென்றடைந்துள்ளன.
- இருப்பினும், இந்தப் பருவத்தில் 680 ஆமை இறப்புகள் பதிவாகியுள்ளன என்பதோடு இதில் அதிக எண்ணிக்கை சென்னை வனவிலங்குப் பிரிவிலிருந்து பதிவாகியுள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து செங்கல்பட்டு பதிவு செய்துள்ளது.

## வான் தீவு மறுசீரமைப்பு

- வான் (vaan) தீவின் மறுசீரமைப்புக்கான தொழில்நுட்ப மதிப்பீடானது செலவுக்கும் பலனுக்குமான விகிதத்தை (BCR) 2.34 ஆக அறிவித்தது.
- இந்த மதிப்பீட்டை தமிழ்நாடு கடலோர மறுசீரமைப்பு திட்டம், சுகந்தி தேவதாசன் கடல் ஆராய்ச்சி அறக்கட்டளை மற்றும் IIT-மெட்ராஸ் ஆகியவை இணைந்து நடத்தின.
- மன்னார் வளைகுடாவில் உள்ள 21 மக்கள் வசிக்காத பவளப் பாறைத் தீவுகளில் வான் தீவும் ஒன்றாகும்.
- 1969 மற்றும் 2015 க்கு இடையில் பவள அறுவடை, பாறைகள் சீரழிவு மற்றும் கடல் மட்ட உயர்வு காரணமாக தீவு 92% சுருங்கியது.
- அரிப்பைத் தடுக்கவும் தீவை மீட்டெடுக்கவும் 2015 முதல் செயற்கைப் பவளப்பாறை தொகுதிகள் பயன்படுத்தப்பட்டன.
- ₹26.37 கோடி செலவிலான இந்தத் திட்டம ₹61.67 கோடி மதிப்பிலான சமூக-சுற்றுச்சூழல் பலன்களை உருவாக்கியுள்ளது.

## வரிப்புற நீர்நாய் – உத்தரகாண்ட்

- உத்தரகாண்ட் மாநிலத்தின் நந்தௌர் வனவிலங்கு சரணாலயத்தில் முதன்முறையாக வரிப்புற நீர்நாய் (Smooth-Coated Otter) அதிகாரப் பூர்வமாக பதிவு செய்யப்பட்டன.
- நந்தௌர் வனவிலங்கு சரணாலயமானது உத்தரகாண்ட் மாநிலத்தின் நைனிடால் மாவட்டத்தில் கோலா மற்றும் ஷார்தா நதிகளுக்கு இடையில் அமைந்துள்ளது.
- வரிப்புற நீர்நாய் (Lutrogale perspicillata) IUCN ஆல் எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனமாக பட்டியலிடப்பட்டுள்ளது.
- இந்த இனம் நன்னீர் ஆறுகள், ஈர நிலங்கள் மற்றும் சதுப்புநிலங்களில் காணப்படும் ஒரு பகுதியளவு நீர்வாழ் பாலூட்டியாகும்.

## புதிய டிப்ளூரா இனங்கள் - லெபிடோகாம்பா சிக்கிமென்சிஸ்

- இந்திய விலங்கியல் ஆய்வக அறிவிலாளர்கள் கிழக்கு இமயமலையில் லெபிடோகாம்பா சிக்கிமென்சிஸ் என்ற புதிய டிப்ளூரா இனத்தைக் கண்டுபிடித்து உள்ளனர்.
- டிப்ளூரா என்பவை ஹெக்சபோடா வகுப்பின் கீழ் பழமையான ஆறுகாலிகள் ஆகும்.
- இவை மண்ணில் வாழும் மைக்ரோ- கணுக்காலிகள் ஆகும்.
- இந்திய ஆராய்ச்சிக் குழுவால் முறையாக விவரிக்கப்பட்ட முதல் டிப்ளூரா இனம் இது ஆகும்.
- இதுவரையில், இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட 17 டிப்ளூரா இனங்களும் வெளிநாட்டு விஞ்ஞானிகளால் அடையாளம் காணப்பட்டன.
- கிட்டத்தட்ட 50 ஆண்டுகளாக பதிவு செய்யப்படாத ஒரு அரிய கிளையினமான Lepidocampa juradii bengalensis-ஐயும் ஆராய்ச்சியாளர்கள் மீண்டும் கண்டுபிடித்து உள்ளனர்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக அணுசக்தி கண்ணோட்ட அறிக்கை 2026

- உலக அணுசக்தி சங்கமானது உலக அணுசக்தி கண்ணோட்ட அறிக்கை 2026-ஐ வெளியிட்டது.
- 2050ம் ஆண்டிற்குள் உலகளாவிய அணுசக்தி உற்பத்தித் திறன் என்பது 1,446 ஜிகாவாட் மின்சாரத்தை (GWe) எட்டக் கூடும் என்ற ஒரு நிலைமையில் இது அணுசக்தியை மும்மடங்காக்குவதற்கான பிரகடனத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட 1,200 GWe இலக்கை விட அதிகமாகும்.
- சீனா, பிரான்ஸ், இந்தியா, ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகிய ஐந்து நாடுகள் 980 ஜிகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியவை என்ற நிலையில் இது உலகளாவிய அணுசக்தித் திறனில் பெரும்பகுதியை உள்ளடக்கியுள்ளது.
- நீண்ட கால கார்பன் வெளியேற்றக் குறைப்பு, கார்பன் டை ஆக்சைடு உமிழ்வைக் குறைத்தல் மற்றும் உலகளவில் எரிசக்திப் பாதுகாப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக அணுசக்தி பரிந்துரைக்கப்படுகிறது.
- சரிநிலை வளர்ச்சிக்காக மின்சாரச் சந்தைகளில் சீர்திருத்தங்களை அந்த அறிக்கை பரிந்துரைக்கிறது மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களுக்குக் குறைந்த கார்பன் உமிழ்வு கொண்ட ஒரு மாற்றாக அணுசக்தியை வலியுறுத்துகிறது.

## நுகர்வோர் நம்பிக்கை குறியீடு

- ஜனவரி 2026ல் இந்தியா உலகின் இரண்டாவது மிகவும் நம்பிக்கையான நுகர்வோர் சந்தையாக மாறியது.
- LSEG–இப்சோஸ் முதன்மை நுகர்வோர் மனநிலை குறியீடு (PCSI) இந்தியாவிற்கு 60.7 மதிப்பெண்ணை வழங்கியது.
- இந்தோனேசியா 62.6 மதிப்பெண்ணுடன் முதலிடம் பிடித்தது.
- இந்தியாவில் பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு குறித்த எதிர்பார்ப்புகள் மிக கணிசமாக உயர்ந்தன என்பதோடு இது வேலைகள் மற்றும் வளர்ச்சி குறித்த நம்பிக்கையைக் குறிக்கிறது.

## நீர் திவால் அறிக்கை 2026 - ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம் (UNU-INWEH) அறிக்கை

- ஐக்கிய நாடுகள் சபை ஜனவரி 2026-ல் உலகளாவிய நீர் திவால் நிலை குறித்த ஒரு முக்கிய அறிக்கையை வெளியிட்டது.
- அதற்கு "உலகளாவிய நீர் திவால்நிலை: நெருக்கடிக்குப் பிந்தைய காலத்தில் நமது நீரியல் வளங்களுக்கு அப்பாற்பட்டு வாழ்வது" என்று பெயரிடப்பட்டது.
- இது 'நீர் திவால்நிலை' என்பதை, தொடர்ச்சியான பற்றாக்குறைகள் அல்லது சேதங்கள் காரணமாக பல நீர் அமைப்புகளால் அவற்றின் வரலாற்று அடிப்படை நிலைகளுக்குத் திரும்ப முடியாத ஒரு நிலை என வரையறுக்கிறது.

- நீர் திவால்நிலை என்பது "திறனற்ற தன்மை மற்றும் மீளமுடியாத தன்மை ஆகிய இரண்டாலும் வரையறுக்கப்படும் ஒரு நிலை" என்று அந்த அறிக்கை கூறுகிறது.
- திறனற்ற தன்மை என்பது, புதுப்பிக்கத்தக்க நீர்வரத்து மற்றும் பாதுகாப்பான வற்றல் வரம்புகளுக்கு அப்பால் நீரை எடுப்பதையும் மாசுபடுத்துவதையும் குறிக்கிறது.
- மீளமுடியாத தன்மை என்பது, ஈரநிலங்கள் மற்றும் ஏரிகள் போன்ற நீர் தொடர்பான இயற்கை மூலதனத்தின் முக்கியப் பகுதிகளுக்கு ஏற்படும் சேதத்தைக் குறிக்கிறது என்பதோடு இது நீர் அமைப்பை அதன் ஆரம்ப நிலைக்கு மீட்டெடுப்பதை சாத்தியமற்றதாக்குகிறது.
- புதுப்பிக்கத்தக்க நீர் ஓட்டங்களைத் தொடர்ந்து அதிகமாகப் பயன்படுத்துவதன் மூலம் பல நாடுகள் தங்கள் 'நீர் அமைப்பு மிகைப் பயன்பாட்டு' நிலைக்குள் நுழைந்துவிட்டன என்று ஐ.நா வாதிடுகிறது என்பதோடு இது ஆறுகள் மற்றும் பிற நீர்வழிகள் இயல்பான காலக்கெடுவில் தங்களைத் தாங்களே நிரப்பிக் கொள்ளும் திறனைக் குறைக்கிறது.
- 1990-களின் முற்பகுதியில் இருந்து உலகின் பெரிய ஏரிகளில் பாதிக்கும் மேற்பட்டவை சுருங்கிவிட்டன, அதே நேரத்தில் 1970-லிருந்து சுமார் 35 சதவீதம் இயற்கை ஈரநிலங்கள் அழிக்கப்பட்டு விட்டன.
- உலகின் மக்கள்தொகையில் கிட்டத்தட்ட முக்கால் பகுதியினர் நீர் பாதுகாப்பற்ற அல்லது மிகக் கடுமையாக நீர் பாதுகாப்பற்ற என வகைப்படுத்தப்பட்ட நாடுகளில் வாழ்கின்றனர்.
- சுமார் நான்கு பில்லியன் மக்கள் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது ஒரு மாதமாவது கடுமையான நீர் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர்.
- கடந்த ஐந்து தசாப்தங்களில் உலகம் தோராயமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் பரப்பளவிற்குச் சமமான ஒரு பகுதி  என்ற அளவில் 410 மில்லியன் ஹெக்டேர் இயற்கை ஈரநிலங்களை இழந்துள்ளது.
- உலகளாவிய நன்னீர் வளங்களில் இந்தியாவில் வெறும் 4% மட்டுமே உள்ளது.
- இந்தியாவில் 1951-ஆம் ஆண்டிலிருந்து தனிநபர் நீர் கிடைக்கும் அளவு 73% குறைந்துள்ளது.
- இந்தோ-கங்கைச் சமவெளி கடுமையான நிலத்தடி நீர் வற்றலுக்கான ஒரு முக்கியப் பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- பல இந்திய நகரங்கள் "பூஜ்ஜிய நாள்" (முழுமையான வற்றல்) சூழ்நிலைகளை எதிர்கொள்கின்றன.
- 'பூஜ்ஜிய நாள்' என்பது ஒரு நகரம் அல்லது பிற இடத்தில் நீர் முற்றிலும் தீர்ந்து போகும் நிலையைக் குறிக்கப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஒரு சொல் ஆகும்.
- இது 2018-ல் கேப் டவுன் நீர் பற்றாக்குறை நெருக்கடியின் போது பிரபலப்படுத்தப் பட்டது.
- ஈரானில் உள்ள தெஹ்ரான் இப்போது தொடர்ச்சியாக ஆறாவது ஆண்டாக வறட்சியை எதிர் கொண்டுள்ளது.

## உலகளாவிய செயற்கை நுண்ணறிவு முதலீடுகள்

- உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) வெள்ளையறிக்கையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) ஒரு பங்காக செய்யப்படும் செயற்கை நுண்ணறிவு (AI) முதலீடுகளில், 11 நாடுகளில் இந்தியா 8வது இடத்தில் இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

- இந்தியா 2010 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில், தனது 2024-ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 1.2% முதல் 1.8% வரை செயற்கை நுண்ணறிவுத் துறையில் முதலீடு செய்துள்ளது.
- அமெரிக்காவும் சிங்கப்பூரும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிகபட்ச செயற்கை நுண்ணறிவு முதலீட்டுப் பங்கைக் கொண்டு முன்னணியில் உள்ளன.
- 2010 ஆம் ஆண்டு முதல் உலகளாவிய செயற்கை நுண்ணறிவு முதலீடுகளில் சுமார் 65%-ஐ அமெரிக்காவும் சீனாவும் கூட்டாகக் கொண்டுள்ளன.
- தரவு மையங்கள் உட்பட உலகளாவிய செயற்கை நுண்ணறிவு உள்கட்டமைப்பு முதலீடுகள், 2010 ஆம் ஆண்டு முதல் 600 பில்லியன் அமெரிக்க டாலர்களைத் தாண்டியுள்ளன.
- அடுத்த மூன்று ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான முதலீடுகளாக இந்தியா 67 பில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமான அளவைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## உலகளாவிய மென்பலக் குறியீடு 2026

- உலகளாவிய மென்பலக் குறியீடு 2026-ஐ பிராண்ட் ஃபைனான்ஸ் நிறுவனம் வெளியிட்டது.
- இந்தியா 48.0 புள்ளிகளுடன் உலக அளவில் 32வது இடத்தில் உள்ளது.
- முதல் 3 இடங்களில் உள்ள நாடுகள் அமெரிக்கா, சீனா மற்றும் ஜப்பான் ஆகியவை ஆகும்.
- இந்தக் குறியீடு ஒரு நாடு கலாச்சாரம், விழுமியங்கள், இராஜதந்திரம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் மூலம் மற்றவர்கள் மீது தாக்கம் ஏற்படுத்தும் திறனை அளவிடுகிறது.

## பஞ்சாயத்து முன்னேற்றக் குறியீடு 2.0

- பஞ்சாயத்து முன்னேற்றக் குறியீடு (PAI) 2.0 இல் திரிபுரா முதல் இடத்தைப் பிடித்தது.
- இக்குறியீட்டை இந்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் வெளியிட்டது.
- சிபாஹிஜாலா மாவட்டத்தில் உள்ள ஜுகல் கிஷோர் நகர் கிராமக் குழு 88.44 மதிப்பெண்களுடன் இந்தியாவில் முதலிடம் பிடித்தது.
- தெற்கு நல்சார் கிராமப் பஞ்சாயத்து மூன்றாவது இடத்தையும் (88.14), செஸ்ரிமாய் கிராம பஞ்சாயத்து நான்காவது இடத்தையும் (87.85) பிடித்தன.
- திரிபுராவில் உள்ள அனைத்து 1,176 கிராமப் பஞ்சாயத்துகளும் 2023-24 ஆம் ஆண்டிற்கான தரவு சமர்ப்பிப்பு மற்றும் சரிபார்ப்பில் 100% அளவினை அடைந்து உள்ளன.
- இக்குறியீடு கிராமப் பஞ்சாயத்துகளின் ஆளுகை மற்றும் சேவை வழங்கல் செயல் திறனை அளவிடுகிறது.

## IOM உலகளாவிய வேண்டுகோள் 2026 அறிக்கை

- சர்வதேசப் புலம்பெயர்வு அமைப்பானது (IOM) உலகளாவிய வேண்டுகோள் 2026 அறிக்கையை வெளியிட்டது.
- இது 2026 ஆம் ஆண்டில் உலகெங்கிலும் உள்ள 41 மில்லியன் மக்களுக்கு உதவுவதற்காக 4.7 பில்லியன் அமெரிக்க டாலர்களைக் கோருகிறது.

- இந்த அறிக்கை, புலம்பெயர்ந்த மக்களுக்கு ஆதரவளிப்பதற்கும் பாதுகாப்பான புலம் பெயர்வை ஊக்குவிப்பதற்கும் உருவாக்கப்பட்ட IOMன் 2024-2028 மூலோபாயத் திட்டத்துடன் ஒத்துப் போகிறது.
- 2024 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் புலம்பெயர்வு 83.4 மில்லியன் மக்களை எட்டியது என்ற நிலையில் இது உலகளவில் இது வரையில் பதிவு செய்யப்பட்டதிலேயே மிக உயர்ந்த எண்ணிக்கையாகும்.
- பேரிடர் தொடர்பான புலம்பெயர்வு 2024 ஆம் ஆண்டில் 9.8 மில்லியனாக உயர்ந்தது என்ற நிலையில் இது முந்தைய ஆண்டை விட 29% அதிகரிப்பைக் காட்டுகிறது.
- புலம்பெயர்ந்தோர் 2024 ஆம் ஆண்டில் 905 பில்லியன் அமெரிக்க டாலர்களை சர்வதேசப் பணப் பரிமாற்றமாக அனுப்பியுள்ளனர் என்ற நிலையில் இது பல பொருளாதாரங்களுக்கு ஆதரவளிக்கிறது.
- உலகளவில் சுமார் 168 மில்லியன் புலம்பெயர் தொழிலாளர்கள் உள்ளனர், இவர்கள் பல்வேறு துறைகளில் உள்ள தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்கின்றனர்.

## உலக வங்கியின் காற்று மாசுபாடு குறித்த அறிக்கை

- உலக வங்கி, சிந்து-கங்கை சமவெளி மற்றும் இமயமலை அடிவாரப் பகுதிகளில் காற்று மாசுபாடு குறித்த "A Breath of Change" என்ற 2025 அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கை வங்காளதேசம், பூடான், இந்தியா, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 13 அதிகார வரம்புகளை உள்ளடக்கியது.
- இந்தப் பிராந்தியத்தில் காற்று மாசுபாடு காரணமாக ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1 மில்லியன் மக்கள் முன்கூட்டியே இறக்கின்றனர்.
- மாசுபாட்டினால் ஏற்படும் பொருளாதார இழப்பு, இந்த பிராந்தியத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஆண்டுதோறும் சுமார் 10% ஆகும்.
- சிந்து-கங்கை சமவெளி மற்றும் இமயமலை அடிவாரப் பகுதி, உலகின் மிக உயர்ந்த காற்று மாசுபாடு அளவுகளைக் கொண்டுள்ளது என்பதோடு இங்குள்ள PM2.5 என்ற துகள்களின் அளவு, உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டுதல்களை விட 8 முதல் 20 மடங்கு அதிகமாக உள்ளது.
- இந்த அறிக்கை, காற்று மாசுபாட்டின் அளவைக் குறைப்பதற்கான "35 by 35" என்ற இலக்கை ஆதரிக்கிறது.
- இது தகவல், ஊக்கத்தொகைகள், நிறுவனங்கள் மற்றும் உள்கட்டமைப்பு ஆகிய "4I" கட்டமைப்பு மூலம் தீர்வுகளைப் பரிந்துரைக்கிறது.

## உலகளாவிய உயிரி எரிசக்தி உற்பத்தித் தரவரிசை 2026

- 2026 ஆம் ஆண்டில், உயிரி எரிசக்தி உற்பத்தியில் அமெரிக்கா உலகில் முதலிடம் பிடித்தது.
- உயிரி எரிசக்தியானது மரம், விவசாயக் கழிவுகள், உணவுக் கழிவுகள் மற்றும் விலங்குகளின் சாணம் போன்ற கரிமப் பொருட்களிலிருந்து உற்பத்தி செய்யப் படுகிறது.
- கரும்பிலிருந்து பயோ எத்தனால் உற்பத்தி செய்வதன் காரணமாக பிரேசில் இதில் இரண்டாம் இடத்தில் உள்ளது.
- இதில் இந்தோனேசியா மூன்றாம் இடத்திலும், அதைத் தொடர்ந்து சீனா நான்காம் இடத்திலும் உள்ளன.

- உலகளாவிய உயிரி எரிசக்தி உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடத்தில் உள்ளது.
- உயிரி எரிசக்தி என்பது ஒரு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலமாகும், ஏனெனில் கரிமப் பொருட்களை மீண்டும் உருவாக்க முடியும்.

## உலகளாவியப் புத்தாக்கக் குறியீடு

- உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பால் (WIPO) வெளியிடப்படும் உலகளாவியப் புத்தாக்கக் குறியீடு (GII) புத்தாக்க உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகளின் அடிப்படையில் நாடுகளை தரவரிசைப்படுத்துகிறது.
- சீனா 2024-இல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக (R&D) உலகின் அதிகம் செலவிட்ட நாடாக உள்ளது.
- உலகளாவிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செலவினம் 2024 ஆம் ஆண்டில் $2.87 டிரில்லியனை எட்டியது, இது ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 3% வளர்ச்சியடைந்தது.
- சீனா $785.9 பில்லியனை செலவிட்டுள்ளது என்ற ஒரு நிலையில் இது அமெரிக்காவை ($781.8 பில்லியன்) விட அதிகமாகும்.
- 2024 இல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக $75.7 பில்லியனைச் செலவிட்ட இந்தியா 7வது இடத்தில் உள்ளது.
- ஆசியா இப்போது உலகளாவிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக சுமார் 45% செலவழிக்கிறது என்ற நிலையில் இது மேற்கத்திய ஆதிக்கத்திலிருந்து ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் காட்டுகிறது.

## மின்சார அறிக்கை 2026

- சர்வதேச எரிசக்தி நிறுவனம் (IEA) உலகளாவிய மின்சாரச் சந்தைகள் குறித்த மின்சாரம் 2026 எனும் அறிக்கையை வெளியிட்டது.
- உலகளாவிய மின்சாரத் தேவை 2030 வரை ஆண்டுதோறும் 3.6% அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த வளர்ச்சி மின்சார வாகனங்கள், தரவு மையங்கள் மற்றும் காற்றுப் பதனிகள் பயன்பாடு ஆகியவற்றால் இயக்கப்படுகிறது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் அணுசக்தி போன்ற குறைந்த உமிழ்வு மூலங்கள் பெரும்பாலான கூடுதல் தேவையை பூர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த மூலங்கள் 2030 ஆம் ஆண்டளவில் உலகளாவிய மின்சார உற்பத்தியில் கிட்டத் தட்ட பாதியைக் கொண்டிருக்கலாம்.
- உலகளாவிய மின்சாரத் துறைசார் கார்பன் டை ஆக்சைடு ($CO_2$) உமிழ்வுகள் ஒரு நிலையான மட்டத்திற்கு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நெட்வொர்க் தயார்நிலை குறியீடு 2025

- இந்தியா நெட்வொர்க் தயார்நிலை குறியீடு (NRI) 2025 இல் நான்கு இடங்கள் முன்னேறி 45வது இடத்தைப் பிடித்தது.
- இக்குறியீடு போர்ச்சுலன்ஸ் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.
- குறைந்த-நடுத்தர வருமானப் பொருளாதாரங்களில் இந்தியா 2வது இடத்தைப் பிடித்தது.

- தொலைத்தொடர்பு முதலீடு, செயற்கை நுண்ணறிவு (AI) வெளியீடுகள், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப (ICT) சேவைகள் ஏற்றுமதி மற்றும் மின் வணிகச் சட்டம் ஆகியவற்றில் இந்தியா உலகளவில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- தொழில்நுட்பம், மக்கள், நிர்வாகம் மற்றும் தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் 127 பொருளாதாரங்களை இந்தக் குறியீடு மதிப்பிடுகிறது.

## பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு குறியீடு 2025–26

- பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு குறியீடு 2025–26 ஐ Georgetown Institute for Women, Peace and Security மற்றும் Peace Research Institute Oslo ஆகியவை இணைந்து வெளியிட்டன.
- டென்மார்க் 0.939 மதிப்பெண்களுடன் முதலிடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து ஐஸ்லாந்து மற்றும் நார்வே உள்ளன.
- இந்தியா 0.607 மதிப்பெண்களுடன் 131வது இடத்தில் உள்ள அதே நேரத்தில் அமெரிக்கா இதில் 31வது இடத்தில் உள்ளது.
- 181 நாடுகளில் 0.279 மதிப்பெண்களுடன் ஆப்கானிஸ்தான் 181வது இடத்தில் உள்ளது.
- முதன்முதலில் 2017 இல் தொடங்கப்பட்ட இந்தக் குறியீடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியிடப்படுகிறது.

## ஊழல் கண்ணோட்டக் குறியீடு 2025

- இந்தக் குறியீட்டை டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் அமைப்பு வெளியிட்டது.
- குறியீட்டு மதிப்பெண் மிகவும் ஊழல் நிறைந்த நாடுகளைக் குறிக்கும் 0 முதல் ஊழலற்ற நாடுகளைக் குறிக்கும் 100 வரை இருக்கும்.
- இதில் டென்மார்க் 89 மதிப்பெண்களுடன் முதலிடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து பின்லாந்து மற்றும் சிங்கப்பூர் உள்ளன.
- தெற்கு சூடான் மற்றும் சோமாலியா 181வது இடத்தில் கடைசி இடத்தில் உள்ளன, அதே நேரத்தில் வெனிசுலா 180வது இடத்தில் உள்ளன.
- இந்தியா 39 மதிப்பெண்களுடன் 91வது இடத்திலும், அமெரிக்கா 29வது இடத்திலும் உள்ளன.
- உலகளாவிய சராசரி மதிப்பெண் 42 ஆகும் என்பதோடு மேலும் 122 நாடுகள் 50க்குக் கீழே மதிப்பெண் பெற்றுள்ளன.
- இந்தியாவின் அண்டை நாடுகளில், பூடான் 18வது இடத்திலும், சீனா 76வது இடத்திலும், நேபாளம் 110வது இடத்திலும், இலங்கை 115வது இடத்திலும், பாகிஸ்தான் 140வது இடத்திலும், வங்கதேசம் 149வது இடத்திலும், மியான்மர் 172வது இடத்திலும் உள்ளன.

## சுழிய உமிழ்வு குறித்த நிதி ஆயோக் அறிக்கை

- "விக்சித் பாரத் மற்றும் சுழிய உமிழ்வை நோக்கிய சூழல்கள்" குறித்து NITI ஆயோக் 11 அறிக்கைகளை வெளியிட்டது.
- 2047 ஆம் ஆண்டுக்குள் இந்தியா 30 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாறுவதற்கும், 2070 ஆம் ஆண்டுக்குள் நிகர சுழிய பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை அடைவதற்கும் இந்த அறிக்கைகள் வழிவகைகளை முன் வைக்கச் செய்ன்றன.

- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2025 ஆம் ஆண்டில் உள்ள 4.18 டிரில்லியன் அமெரிக்க டாலர்களிலிருந்து 2047 ஆம் ஆண்டில் 30 டிரில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இறுதிகட்ட எரிசக்தித் தேவையில் மின்சாரத்தின் பங்கு 2025 ஆம் ஆண்டில் 21%-இல் இருந்து 2070 ஆம் ஆண்டில் 60% ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் 2070 ஆம் ஆண்டில் சுமார் 6,000 ஜிகாவாட்களை (GW) தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 8 GW ஆக இருக்கும் அணுசக்தி திறன் 2070 ஆம் ஆண்டில் 300 GW க்கு மேல் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- நிகர சுழிய உமிழ்வுப் பாதைக்கு 2070 ஆம் ஆண்டுக்குள் 22.7 டிரில்லியன் அமெரிக்க டாலர் முதலீடு தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது என்பதோடு ஒவ்வொரு ஆண்டிற்கான முதலீட்டுத் தேவை சுமார் 500 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும்.

## உலகளாவிய எரிசக்தி கண்காணிப்பு அறிக்கை

- இந்த அறிக்கையின்படி, உலகளாவிய காற்றாலை மற்றும் பயன்பாட்டு அளவிலான எதிர்காலச் சூரிய ஆற்றல் திட்டங்கள் 2025 ஆம் ஆண்டில் சாதனை அளவாக 4.9 டெரா வாட் (TW) ஐ எட்டியுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் 4.4 TW ஆக இருந்த மொத்த திட்டங்கள் 2025 ஆம் ஆண்டில் 4.9 TW ஆக 11 சதவீதம் அதிகரித்துள்ளது.
- சீனாவானது 1.5 TWக்கும் அதிகமான வருங்காலத் திறனுடனும், 448 ஜிகாவாட் (GW) கட்டுமானத்திலும் முன்னணியில் உள்ள அதே நேரத்தில் இந்தியாவில் சுமார் 125 GW கட்டுமானத்திலும், 163 GWக்கும் அதிகமான செயல்பாட்டுத் திறனுடனும் உள்ளது.
- G7 நாடுகள் உலகளாவிய வருங்கால காற்று மற்றும் சூரிய மின்சக்தி திறனில் 11 சதவீதத்தை மட்டுமே கொண்டுள்ளன, மொத்த ஒருங்கிணைந்த திட்டங்கள் சுமார் 520 GW ஆகும்.
- உலகளவில், 758 GW திட்டங்கள் கட்டுமானத்தில் உள்ளன என்ற நிலையில் இதில் கிட்டத் தட்ட நான்கில் மூன்று பங்கு சீனா மற்றும் இந்தியாவில் அமைந்துள்ளது.
- COP28 உச்சி மாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட 2030 ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி இலக்கை மூன்று மடங்காக உயர்த்துவதற்கு தற்போதைய முன்னேற்றம் போதுமானதாக இல்லை என்று அறிக்கை குறிப்பிட்டது.

## காலாண்டு கால வர்த்தக கண்காணிப்பு அறிக்கை

- நிதி ஆயோக் 2025–26 நிதியாண்டின் 2வது காலாண்டிற்கான (ஜூலை–செப்டம்பர் 2025) "காலாண்டு கால வர்த்தக கண்காணிப்பு" இன் ஆறாவது பதிப்பைப் புதுதில்லியில் வெளியிட்டது.
- இந்த அறிக்கை, அந்த காலாண்டில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதிகள் சுமார் 8.5% வளர்ச்சியடைந்துள்ளதாகக் காட்டுகிறது.
- இந்தியாவின் ஏற்றுமதிப் பொருட்களில் மின்னணு பொருட்கள் இரண்டாவது பெரிய பொருளாக மாறியது என்பதோடு மேலும் இதன் ஏற்றுமதி 2024 ஆம் ஆண்டில் 42.1 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது.

- உள்நாட்டு மின்னணுப் பொருட்கள் உற்பத்தியை ஆதரிப்பதற்காக வேண்டி மின்னணு பொருட்கள் உற்பத்தித் திட்டத்தின் கீழ் மத்தியப் பட்ஜெட்டில் ₹40,000 கோடி ஒதுக்கப் பட்டது.
- 2030 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் மொத்த வர்த்தக ஏற்றுமதியில் மின் வணிக ஏற்றுமதி 20-30% பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தொழிற்பழகுதல் குறித்த நிதி ஆயோக் அறிக்கை 2026

- "Revitalising Apprenticeship Ecosystem: Insights, Challenges, Recommendations and Best Practices" என்ற தலைப்பில் நிதி ஆயோக் ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கை இந்தியாவின் தொழிற்பயிற்சி முறையின் விரிவான பகுப்பாய்வை வழங்குகிறது மற்றும் அதை செயல்படுத்துவதில் உள்ள முக்கிய சவால்களை அடையாளம் காட்டுகிறது.
- இது தெளிவான செயல் திட்டம், ஒதுக்கப்பட்ட பொறுப்புகள் மற்றும் அளவிடக்கூடிய செயல்திறன் குறிகாட்டிகளுடன் சுமார் 20 செயல்முறை சார்ந்தப் பரிந்துரைகளை வழங்குகிறது.
- இந்தப் பரிந்துரைகள் கொள்கை மற்றும் முறையான சீர்திருத்தங்கள், கட்டமைப்பு மற்றும் ஒழுங்குமுறை வலுப்படுத்தல், மாநில மற்றும் மாவட்ட அளவிலான தலையீடுகள், தொழில் ஈடுபாடு மற்றும் பயிற்சியாளர் ஆதரவு வழிமுறைகள் ஆகிய ஐந்து தூண்களின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன.
- இது ஒரு பொதுவான டிஜிட்டல் தளம், ஒரு பயிற்சி ஈடுபாட்டுக் குறியீடு, வலுவான மாவட்ட திறன் குழுக்கள் மற்றும் தொகுதி அடிப்படையிலான மாதிரிகள் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (MSMEs) அதிக பங்கேற்பை முன்மொழிகிறது.

## ஆசியா மற்றும் பசிபிக் பகுதி SDG முன்னேற்ற அறிக்கை 2026

- ஆசியா மற்றும் பசிபிக் பகுதி SDG முன்னேற்ற அறிக்கை 2026, ஐக்கிய நாடுகள் சபையின் ஆசியா மற்றும் பசிபிக் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தால் (ESCAP) வெளியிடப்பட்டது.
- 2030 ஆம் ஆண்டுக்குள் அளவிடக்கூடிய 117 நிலையான வளர்ச்சி இலக்கு (SDG) இலக்குகளில் 103 இலக்குகளை இந்தப் பகுதி தவறவிட வாய்ப்புள்ளது என்று அறிக்கை எச்சரிக்கிறது.
- தற்போது 14 இலக்குகள் மட்டுமே அதன் சரியான பாதையில் உள்ளன, தற்போதைய போக்குகள் தொடர்ந்தால் கிட்டத்தட்ட 88% இலக்குகள் தவறவிடப்படும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- காலநிலை நடவடிக்கை, கடல் பாதுகாப்பு மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவற்றில் கடுமையான பின்னடைவை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது என்பதோடு இது நீண்டகாலப் பொருளாதார மற்றும் பெரும் சமூக முன்னேற்றத்தை குறை மதிப்பிற்கு உட்படுத்துகிறது.
- அதிகரித்து வரும் உமிழ்வுகள், சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் கடல் மாசுபாடு போன்ற சுற்றுச்சூழல் சவால்கள் 2030 இலக்கை அடைவதற்கு முக்கிய தடைகளாக உள்ளன.
- இருப்பினும், இந்தப் பிராந்தியம், குறிப்பாக SDG 9 இன் கீழ், தொழில், புத்தாக்கம் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றில் ஒப்பீட்டளவில் ஒரு வலுவான செயல்திறனைக் கொண்டுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## GenAI மையம் - கர்நாடகா

- 2025-26 ஆம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையின்படி, இந்தியாவின் உருவாக்கும் செயற்கை நுண்ணறிவு புத்தொழில் சூழலமைப்பில் கர்நாடகா முன்னணியில் உள்ளது.
- கர்நாடகா இந்தியாவின் GenAI (உருவாக்க செயற்கை நுண்ணறிவு) புத்தொழில்களில் 39%-ஐக் கொண்டுள்ளது என்ற நிலையில் இது நாட்டில் மிக உயர்ந்த பங்காகும்.
- 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இந்தியாவில் 890 GenAI புத்தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன; இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் இருந்த 240 நிறுவனங்களிலிருந்து ஏற்பட்ட அதிகரிப்பாகும்.
- 2025-26 ஆம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையின்படி, இந்தியாவின் புத்தொழில் சூழலமைப்பு உலக அளவில் மூன்றாவது பெரிய சூழலமைப்பாக தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- கர்நாடகாவில் 43 மாநில அரசு பல்கலைக்கழகங்கள் உள்ளன என்ற நிலையில் அவை ஆழமான தொழில் நுட்பம் மற்றும் GenAI புத்தொழில்களுக்குத் தேவையான திறமையான மனிதவளத்தை ஆதரிக்கின்றன.

## மேகாலயாவின் உள்ளூர் வேர்ப் பாலங்கள்

- இந்தியாவானது, மேகாலயாவின் உயிர்வாழும் வேர்ப் பாலங்களை ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் (யுனெஸ்கோ) 2026-27 உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்ப்பதற்காகப் பரிந்துரைத்துள்ளது.
- உயிர்வாழும் வேர்ப் பாலங்கள் என்பவை, ரப்பர் அத்தி மரங்களின் வேர்களை ஆறுகள் மற்றும் நீரோடைகளின் குறுக்கே வளரச் செய்து உருவாக்கப்படும் இயற்கையான பாலங்கள் ஆகும்.
- இந்தப் பாலங்கள் பாரம்பரியமாக மேகாலயாவின் காசி மற்றும் ஜெயிந்தியா சமூகத்தினரால் கட்டப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.
- இவை முக்கியமாக காசி மற்றும் ஜெயிந்தியா மலைப்பகுதிகளில் அமைந்துள்ளன; இதில் புகழ்பெற்ற இரட்டை அடுக்கு வேர்ப் பாலம் அமைந்துள்ள நோங்ரியட் கிராமமும் அடங்கும்.

## இலவசக் கல்வி கொள்கை 2026 – கேரளா

- கேரள அரசு தனது 2026-27 ஆம் ஆண்டுக்கான மாநில நிதிநிலையறிக்கையில், கலை மற்றும் அறிவியல் மாணவர்களுக்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வியை அறிவித்துள்ளது.
- இனி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளங்கலைப் பட்டப் படிப்புகளுக்கு இலவசக் கல்வி வழங்கப்படும்.
- முன்னதாக, கேரளாவில் 12 ஆம் வகுப்பு வரை மட்டுமே இலவசக் கல்வி வழங்கப்பட்டு வந்தது.

- கேரள மாநிலம் உயர்நிலைப் பள்ளிப் படிப்புக்கு அப்பால் இலவசக் கல்வியை விரிவு படுத்துவது இதுவே முதல் முறையாகும்.
- உயர்கல்விக்கான அணுகலை மேம்படுத்துவதும், மாணவர்களின் நிதிச் சுமையைக் குறைப்பதும் இந்தக் கொள்கையின் நோக்கமாகும்.

## பௌத்த வைர முக்கோணம்

- ஒடிசாவின் பௌத்த வைர முக்கோணப் பகுதி, யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய மையத்தால் இந்தியாவின் யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய தற்காலிகப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
- ஒடிசாவில் அமைந்துள்ள லலித்கிரி, உதயகிரி மற்றும் ரத்னகிரி ஆகிய இடங்களை உள்ளடக்கியதே இந்த பௌத்த முக்கோணப் பகுதி ஆகும்.
- இந்தத் தளங்கள் தேரவாதம் (ஹீனயானம்), மகாயானம் மற்றும் வஜ்ரயான பௌத்தம் ஆகியவற்றை உள்ளடக்கிய 1,500 ஆண்டுகால தொடர்ச்சியான பௌத்த வரலாற்றை வெளிப்படுத்துகின்றன.
- லலித்கிரி கி.மு. 2-3 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த மிகப் பழமையான தளமாகும், மேலும் இங்கு புனித நினைவுச்சின்னப் பேழைகளைக் கொண்ட ஒரு ஸ்தூபி உள்ளது.
- உதயகிரி கி.பி. 1 முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை செழித்தோங்கியதுடன், பெரிய மடாலயங்களையும் பௌத்த சிற்பங்களையும் கொண்டுள்ளது.
- ரத்னகிரி வஜ்ரயான (தாந்திரீக) பௌத்தத்தின் ஒரு முக்கிய மையமாக இருந்ததுடன், இது பெரும்பாலும் நாளந்தாவுடன் ஒப்பிடப்படுகிறது.

## கேரள மாணவர்களுக்கான மருத்துவக் காப்பீடு

- இலவசப் பட்டப்படிப்புக் கல்வி மற்றும் பள்ளி மாணவர்களுக்கான காப்பீட்டை வழங்கும் இந்தியாவின் முதல் மாநிலமாக கேரளா திகழ்கிறது.
- கேரள பட்ஜெட் 2026-27, பள்ளி மாணவர்களுக்காக ஆயுள் மற்றும் விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தை அறிவித்துள்ளது.
- இது இந்தியாவின் இத்தகைய முதல் முயற்சியாக இருக்கும்.
- மாநிலப் பாடத்திட்டத்தைப் பின்பற்றும் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் வருவார்கள்.
- காப்பீட்டுப் பாதுகாப்பைப் பராமரிக்க மாணவர்கள் அல்லது பெற்றோர்கள் எந்தக் கட்டணமும் செலுத்தத் தேவையில்லை.

## சித்தூர் கின்னஸ் சாதனைகள்

- ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு 5,555 மின்சார சைக்கிள்களை விநியோகித்ததன் மூலம் சித்தூர் மாவட்டம் கின்னஸ் உலகச் சாதனைகளில் இடம் பிடித்துள்ளது.

- 24 மணி நேரத்திற்குள் அதிக எண்ணிக்கையிலான மின்சார சைக்கிள்களை விநியோகித்ததற்காக இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.
- இந்த சைக்கிள்கள் குப்பம் சட்டமன்றத் தொகுதியில் விநியோகிக்கப்பட்டன.

## பதிக் - ஆதார் ஒருங்கிணைப்பு

- அகமதாபாத் நகரக் குற்றப்பிரிவு, ஆதார் சரிபார்ப்பை PATHIK மென்பொருளுடன் ஒருங்கிணைத்த இந்தியாவின் முதல் காவல் படையாக மாறியுள்ளது.
- PATHIK என்பது தங்கும் விடுதிகள், விருந்தினர் தங்குமிடங்கள் மற்றும் தங்கும் வீடுகள் போன்றவை பாதுகாப்பு நோக்கங்களுக்காகப் பார்வையாளர்களின் விவரங்களைப் பதிவு செய்யப் பயன்படுத்தப்படும் ஒரு விருந்தினர் கண்காணிப்பு மென்பொருள் ஆகும்.
- ஆதார் ஒருங்கிணைப்புடன், ஆதார் செயலி வழியாக QR குறியீடுகளைப் பயன்படுத்திப் பார்வையாளர்களை உடனடியாகச் சரிபார்க்க முடியும்.
- இந்த அமைப்பு ஒப்புதலின் அடிப்படையில் செயல்படுகிறது, மேலும் ஆதார் எண்களைச் சேமிக்காமல், டிஜிட்டல் முறையில் கையொப்பமிடப்பட்ட மக்கள்தொகை விவரங்கள் மற்றும் புகைப்படங்களை மட்டுமே பயன்படுத்துகிறது.
- இந்த அமைப்பு 50-க்கும் மேற்பட்ட காணாமல் போனவர்களைக் கண்டறியவும், சட்ட விரோதக் குடியேறிகளை அடையாளம் காணவும் உதவியுள்ளது.

## Gig தொழிலாளர்கள் நல வாரியம் - கர்நாடகா

- கர்நாடகா மாநிலம், ஜனவரி 2026ல் கர்நாடக இணையதளம் வழியே திரட்டப்படும் Gig தொழிலாளர்கள் நல மேம்பாட்டு வாரியத்தை அமைத்தது.
- இது கர்நாடக இணையதளம் வழியே திரட்டப்படும் Gig தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நல மேம்பாடு) சட்டம், 2025-இன் கீழ் அமைக்கப்பட்டது.
- இந்த வாரியத்திற்கு தொழிலாளர் துறை அமைச்சர் பதவிவழித் தலைவராக உள்ளார் என்ற நிலையில், இதில் மூத்த அதிகாரிகள், நான்கு Gig தொழிலாளர்கள் பிரதிநிதிகள் மற்றும் நான்கு இணையவழி ஒருங்கிணைப்பாளர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் (ஸொமேட்டோ, ஊபர், ஓலா, அமேசான்) ஆகியோர் அடங்குவர்.
- கர்நாடகாவில் உள்ள அனைத்து இணையவழி ஒருங்கிணைப்பாளர் நிறுவனங்களும் Gig தொழிலாளர்களும் இந்த வாரியத்தில் பதிவு செய்ய வேண்டும் என்பதோடு மேலும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் இதில் சமூக நலப் பாதுகாப்புப் பலன்களுக்காக ஒரு தனித்துவமான அடையாள எண் வழங்கப்படுகிறது.
- கர்நாடகா அரசு இணையவழி ஒருங்கிணைப்புத் தளங்கள் மீது 1%–1.5% நலன்புரி கட்டணத்தை விதிக்கிறது என்பதோடு நிதி போதுமானதாக இல்லாத பட்சத்தில் இது 5% வரை விதிக்கப் படலாம்.
- தமிழ்நாடு இந்தியாவின் முதல் Gig தொழிலாளர்கள் நல வாரியத்தை உருவாக்கியது.
- தமிழ்நாடு இணையதளம் வழியே திரட்டப்படும் Gig தொழிலாளர்கள் நல வாரியம் டிசம்பர் 2023-ல் முறையாக நிறுவப்பட்டது.
- அடிப்படை சமூகப் பாதுகாப்புப் பலன்களை வழங்குவதற்காக, 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கைமுறைத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் கீழ் இது அமைக்கப்பட்டது.

## இந்தியாவின் முதல் இணையவழி சொத்து வரி மாவட்டம் – தம்தாரி

- சத்தீஸ்கரில் உள்ள தம்தாரி மாவட்டம், 'சமர்த் பஞ்சாயத்து' இணைய தளம் மூலம் சொத்து வரி வசூலித்த இந்தியாவின் முதல் மாவட்டமாக மாறியுள்ளது.
- நாகரி வட்டாரத்தில் உள்ள சங்கரா கிராமப் பஞ்சாயத்தில், UPI வசதியுடன் கூடிய இணையவழி கட்டண முறை மூலம் இது தொடங்கப்பட்டது.
- இனி குடிமக்கள் தங்கள் வீட்டிலிருந்தே சொத்து வரிகளைச் செலுத்தலாம் என்பதோடு இது மனித வேலைகளையும் தாமதங்களையும் குறைக்கிறது.
- இந்த அமைப்பு தம்தாரி மாவட்டத்தில் உள்ள சுமார் 400 கிராமப் பஞ்சாயத்துகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்த மாநிலம் முழுவதும் இது விரிவுபடுத்தப் படலாம்.
- சமர்த் இணையதளம் வெளிப்படைத் தன்மை, வருவாய் வசூல் மற்றும் பஞ்சாயத்துகளின் நிதிச் சுதந்திரத்தை மேம்படுத்துகிறது.

## இந்தியாவின் முன்னணி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மாநிலம் - குஜராத்

- குஜராத் 42.58 ஜிகாவாட் திறன் கொண்ட இந்தியாவின் முன்னணி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மாநிலமாக உருவெடுத்துள்ளது என்பதோடு இது நாட்டின் மொத்தத் திறனில் 16.5% பங்களிக்கிறது.
- இம்மாநிலம் இந்தியாவின் மொத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனில் 16.50% பங்களிக்கிறது என்பதோடு இது அதன் வலுவான கொள்கை ஆதரவையும் உள்கட்டமைப்புத் தயார்நிலையையும் பிரதிபலிக்கிறது.
- குஜராத் காற்றாலை மின்சக்தித் திறனில் முதலிடத்திலும், சூரிய மின்சக்தி நிறுவல்களில் இரண்டாம் இடத்திலும் உள்ளது.
- டிசம்பர் 2025 நிலவரப்படி, 25,529.40 மெகாவாட் நிறுவப்பட்ட சூரிய மின்சக்தித் திறனுடன் குஜராத் ஒரு முக்கிய சூரிய ஆற்றல் மையமாக உருவெடுத்துள்ளது.

## 2026 -வேளாண்மை ஆண்டு - மத்தியப் பிரதேசம்

- மத்தியப் பிரதேசம் 2026-ஆம் ஆண்டை 'வேளாண்மை ஆண்டாக' அனுசரிக்கவுள்ளது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு "வளமான விவசாயிகள் – வளமான மாநிலம்" என்பதாகும்.
- விவசாயம் மற்றும் அது சார்ந்த துறைகளுக்கான நிதி ஒதுக்கீடானது 2002-03 ஆம் ஆண்டில் ₹600 கோடியிலிருந்து 2024-25 ஆம் ஆண்டில் ₹27,000 கோடிக்கும் மேலாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- விவசாயிகளுக்கு விலை வெளிப்படைத்தன்மை மற்றும் நியாயமான வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக டிஜிட்டல் மின்னணு சந்தை அமைப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது.

## Pilloo AI கணக்கியல் செயலி

- ஆந்திரப் பிரதேசம் Pilloo AI கணக்கியல் மற்றும் பட்டியலிடல் செயலியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- Pilloo AI என்பது குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்காக (MSME) வடிவமைக்கப் பட்ட ஒரு குரல் அடிப்படையிலான கணக்கியல் செயலியாகும்.

- இது பயனர்கள் வாய்மொழி கட்டளைகளைப் பயன்படுத்தி விலைப்பட்டியல்களை உருவாக்கவும், விற்பனை, பணம் செலுத்துதல் மற்றும் செலவுகளைப் பதிவு செய்யவும் அனுமதிக்கிறது.
- இந்தச் செயலியானது, சிறு வணிகர்கள் மற்றும் தொழில்முனைவோர் எளிதாகப் பயன்படுத்தும் வகையில் ஐந்து இந்திய மொழிகளை ஆதரிக்கிறது.
- இது ரசீதுகள் மற்றும் வங்கி அறிக்கைகளிலிருந்து தரவு உள்ளீட்டைத் தானியக்கமாக்க செயற்கை நுண்ணறிவைப் (AI) பயன்படுத்துகிறது.

## மாதாபாரி சுற்றுலா வழித்தடம் – திரிபுரா

- திரிபுராவில் உள்ள மாதாபாரி சுற்றுலாச் சுற்றுவட்டத்தின் மேம்பாடு குறித்த ஆய்வுக் கூட்டத்திற்கு மத்திய தகவல் தொடர்பு மற்றும் வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத் துறை அமைச்சர் தலைமை தாங்கினார்.
- இத்திட்டம் திரிபுராவை கலாச்சார, ஆன்மீக மற்றும் சூழல் சுற்றுலாவின் மையமாக மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அகர்தலா, நீர் மஹால், செபாஹிஜாலா, உதய்பூர் (திரிபுர சுந்தரி கோவில் / மாதாபாரி), சாபிமுரா மற்றும் டம்பூர் ஏரி ஆகியவை இதில் அடங்கியுள்ள முக்கிய இடங்களாகும்.

## பண்டைய தெலுங்கு கல்வெட்டு

- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள பிட்டிகயகுல்லா என்ற இடத்தில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த ஒரு அரிய தெலுங்குக் கல்வெட்டு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கல்வெட்டு முற்காலத் தெலுங்கு எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளதுடன், தெலுங்கு மொழி பிராகிருத மொழியின் செல்வாக்கிலிருந்து ஒரு சுதந்திரமான மொழியாக மாறியதைக் காட்டுகிறது.
- இது 'நவ கட்டா' என்று அழைக்கப்படும் ஒரு புதிய கரை கட்டப்பட்டதைப் பதிவு செய்கிறது.
- இந்தக் கட்டுமானப் பணி சிற்பி அல்லது கைவினைஞராக இருந்திருக்கலாம் என்று நம்பப்படும் பிரணிமில்லி ஆச்சாரி என்பவரால் செய்யப்பட்டது.
- ஆட்சி புரிந்த மன்னரின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றாலும், இந்தக் கல்வெட்டு ரெனாடு பகுதியுடன் தொடர்புடையது.

## மணிப்பூரின் புதிய முதலமைச்சர் - யும்னம் கேம்சாந்த் சிங்

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 4 ஆம் தேதி அன்று மாநிலத்தில் அமலில் இருந்த குடியரசுத் தலைவர் ஆட்சியை (சரத்து 356) ரத்து செய்தார்.
- முதலமைச்சர் நோங்தோம்பம் பிரேன் சிங் பதவி விலகியதைத் தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 ஆம் தேதி அன்று குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப் பட்டிருந்தது.
- யும்னம் கெம்சாந்த் சிங் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 4 ஆம் தேதி மணிப்பூரின் முதலமைச்சராகப் பதவியேற்றார்.
- நெம்சா கிப்கென் மற்றும் லோசி திக்கோ ஆகியோர் துணை முதலமைச்சர்களாகப் பதவியேற்றனர்.

## மகளிர் தொழிற்பூங்கா முயற்சி

- பிரத்தியேக மகளிர் தொழிற்பூங்காவை நிறுவுவதற்காக ஆந்திரப் பிரதேசம் FICCI-FLO உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்தத் தொழிற்பூங்கா, பெண்களால் நடத்தப்படும் தொழில்கள், புத்தொழில்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்காக (MSME) 30 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப் படும்.
- FICCI-FLO அமைப்பானது வழிகாட்டுதல், பயிற்சி மற்றும் வணிக ஆதரவை வழங்கும்.
- இந்த முயற்சி, முதலமைச்சர் என். சந்திரபாபு நாயுடுவின் "ஒரு குடும்பம், ஒரு தொழில் முனைவோர்" என்ற தொலைநோக்குப் பார்வைக்கு ஆதரவளிக்கிறது.
- இது ஆந்திரப் பிரதேசத்தில் 175 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனப் பூங்காக்களை உருவாக்கும் மாநிலத் திட்டத்தின் ஒரு பகுதியாகவும் உள்ளது.

## தூய்மை ஆற்றல் செயல் திட்டம்

- 2035-ஆம் ஆண்டுக்குள் ஆந்திரப் பிரதேசத்தை ஒரு தூய்மையான எரிசக்தி மையமாக மாற்றுவதற்கான வரைவுத் திட்டத்தை நிதி ஆயோக் வெளியிட்டுள்ளது.
- இது புதுப்பிக்கத்தக்க ஆற்றல், ஆற்றல் சேமிப்பு, மின்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் மலிவு விலையில் மின்சாரம் வழங்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- இந்தச் செயல் திட்டமானது, நிதி ஆயோக்கின் முன்முயற்சியான ASSET (நீடித்த மாநில ஆற்றல் மாற்றத்தை விரைவுபடுத்துதல்) திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இந்தச் செயல் திட்டம் மார்ச் 2026-க்குள் இறுதி செய்யப்படும் என்றும், அதன் அமலாக்கம் 2026-ல் தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## முதியோருக்கான நிதிநிலையறிக்கை 2027 நிதியாண்டு

- 2027 நிதியாண்டிற்காக முதியோருக்கென பிரத்தியேக வரவு செலவுத் திட்டத்தை அறிவித்த முதல் இந்திய மாநிலமாக கேரளா மாறியுள்ளது.
- முதியோருக்கான வரவு செலவுத் திட்டத்தின் மொத்த ஒதுக்கீடு ₹46,236.52 கோடி ஆகும், இது மாநில வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 19.07% ஆகும்.
- இந்த ஒதுக்கீட்டில் சுமார் 68% ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களின் ஓய்வூதியங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
- இந்த வரவு செலவுத் திட்டமானது, ஓய்வூதியங்கள், சுகாதாரப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு மற்றும் மூத்த குடிமக்களுக்கான நலத்திட்டங்களுக்கான செலவினங்களை உள்ளடக்கியது.

## FNTA ஒப்பந்தம்

- எல்லைப்புற நாகாலாந்து பிராந்திய ஆணையத்தை (FNTA) உருவாக்குவதற்கான முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒன்றிய அரசு கையெழுத்திட்டது.
- இந்த ஒப்பந்தம் மத்திய உள்துறை அமைச்சகம், நாகாலாந்து அரசு மற்றும் ஈஸ்டர்ன் நாகாலாந்து மக்கள் அமைப்பு (ENPO) ஆகியவற்றுக்கு இடையே கையெழுத்தானது.

- இந்த FNTA அமைப்பு, நாகாலாந்தின் கிழக்கு மாவட்டங்களான துயென்சாங், மோன், கிபைர், லாங்லெங், நோக்லாக் மற்றும் ஷாமடோர் ஆகிய ஆறு மாவட்டங்களை உள்ளடக்கும்.
- இந்த ஆணையம் 46 துறைகள் மீதான அதிகாரப் பகிர்வையும், பிராந்திய வளர்ச்சிக்கான நிதி உதவியையும் பெறும்.
- ENPO-ஆனது கிழக்கு நாகாலாந்தைச் சேர்ந்த எட்டு அங்கீகரிக்கப்பட்ட நாகா பழங்குடியினரை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதோடு மேலும் இந்த ஒப்பந்தம் பிராந்தியத்தின் நிர்வாக மற்றும் மேம்பாட்டுத் தேவைகளை ஆதரிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஏற்பாடு, நாகாலாந்திற்கு என்று சிறப்பு வசதிகளை வழங்கும் இந்திய அரசியலமைப்பின் சரத்து 371(A)-ஐ பாதிக்காது.

## உள்ளாட்சித் தேர்தல்களில் வாக்குச்சீட்டு முறை

- கர்நாடக அமைச்சரவை, 2026 பிப்ரவரியில் நடைபெறவுள்ள பஞ்சாயத்துத் தேர்தல்களுக்கு வாக்குச்சீட்டுகள் மற்றும் வாக்குப்பெட்டிகளைப் பயன்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த முடிவு, உள்ளாட்சித் தேர்தல்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைப் (EVM) பயன்படுத்துவதிலிருந்து விலகிச் செல்கிறது.
- வாக்குச்சீட்டு முறையை சட்டப்பூர்வமாக அனுமதிப்பதற்காக, கர்நாடக கிராம சுயராஜ்யம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் (திருத்தச்) சட்டம், 2026-ஐ அறிமுகப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.
- பஞ்சாயத்துத் தேர்தல்கள் மாநிலத் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படுகின்றன.
- அரசியலமைப்பு ரீதியாக, உள்ளாட்சித் தேர்தல்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்த வேண்டிய கட்டாயமில்லை.

## அமராவதி குவாண்டம் பள்ளத்தாக்குத் திட்டம்

- ஆந்திரப் பிரதேசம் அமராவதி குவாண்டம் பள்ளத்தாக்கு (AQV) திட்டத்தை முறைப்படி தொடங்க உள்ளது.
- குவாண்டம் ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான உலகளாவிய மையமாக ஆந்திரப் பிரதேசத்தை மாற்றுவதே AQV-யின் நோக்கமாகும்.
- இத்திட்டம் கல்விசார் ஆராய்ச்சியை, கணினிமயமாக்கல், பாதுகாப்பான தகவல் தொடர்பு மற்றும் மேம்பட்ட பொருட்கள் உள்ளிட்ட தொழில்துறைப் பயன்பாடுகளுடன் ஒருங்கிணைக்கும்.
- முக்கிய முன்னெடுப்புகளில் IBM–TCS குவாண்டம் புத்தாக்க மையம், ஒரு குவாண்டம் திறன் மையம் மற்றும் SRM பல்கலைக்கழகத்தின் குவாண்டம் குறிப்புரை வசதி ஆகியவை அடங்கும்.

## பிளாக் ஸ்வான் உச்சி மாநாடு 2026

- பாரத்நேத்ரா முன்முயற்சியின் கீழ், பிளாக் ஸ்வான் உச்சி மாநாடு இந்தியா 2026 ஒடிசாவின் புவனேஸ்வரில் நடைபெற்றது.

- இந்த உச்சி மாநாடு குளோபல் ஃபைனான்ஸ் & டெக்னாலஜி நெட்வொர்க்குடன் (GFTN) இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது நிதிசார் தொழில்நுட்பம், காப்பீடு சார் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) ஆகிய துறைகளில் எதிர்காலத்திற்குத் தயாரான ஒரு பணியாளர் படையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் ஆசிய டிஜிட்டல் நிதி நிறுவனத்துடன் (NUS-AIDF) இணைந்து ஐந்து மாத கால கலப்பு முறை பயிற்சித் திட்டம் உருவாக்கப் பட்டு உள்ளது.

## கர்நாடகாவின் நிதிச் சீர்திருத்தம்

- கர்நாடகாவின் 2014ஆம் ஆண்டு நிதிச் சீர்திருத்தத்தை மற்ற இந்திய மாநிலங்களுக்கு ஒரு முன்மாதிரியாக உலக வங்கி எடுத்துரைத்தது.
- கர்நாடக மாநிலம், பொதுத்துறை நிறுவனங்கள் (PSU) மற்றும் சிறப்பு நோக்கச் செயல்பாட்டு அமைப்புகளின் (SPV) கடன்களை மாநிலத்தின் கடன்களில் சேர்த்தது.
- இந்த நடவடிக்கை நிதி வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தியதுடன் வரவு செலவுத் திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களைக் குறைத்தது, மேலும் வரவு செலவுத் திட்ட ஒழுங்கை வலுப்படுத்தியது.
- வரவு செலவுத் திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன் வாங்குதல் என்பது ஒரு கவலை அளிக்கும் செயல்பாடாகும் ஏனெனில் இது உண்மையான கடனை மறைத்து, பல மாநிலங்களில் நிதிக் கட்டுப்பாட்டைப் பலவீனப்படுத்துகிறது.
- வரவு செலவுத் திட்டத்திற்கு அப்பாற்பட்ட கடன்களுக்காக, ஒரு தரப்படுத்தப்பட்ட அறிக்கை கட்டமைப்பு ஒன்றை உலக வங்கி பரிந்துரைத்தது என்பதோடு மேலும் இந்த அமைப்பு இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (CAG) மூலம் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் அது பரிந்துரைத்தது.

## முதலமைச்சர் கிராமோதயத் திட்டம்

- குஜராத் முதலமைச்சர், குஜராத்தின் ஆனந்த் மாவட்டத்தில் உள்ள பத்ரன் கிராமத்தில் முதலமைச்சர் கிராமோதயத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டத்தின் கீழ் 2,666 கிராமங்களில் கிராமப் பஞ்சாயத்து கட்டிடங்கள் மற்றும் அலுவலர் குடியிருப்புகள் கட்டித் தரப்படும்.
- இந்தத் திட்டத்தில் சாலைகள், குடிநீர் வழங்கல், சுகாதாரம், சூரிய ஆற்றல் தெரு விளக்குகள், இ-கிராம் (மின்னணு கிராம சேவைகள்) மற்றும் சமுதாயக் கூடங்கள் ஆகியவை அடங்கும்.
- கிராமங்களில் கிராமப்புற நிர்வாகத்தையும் உள்கட்டமைப்பையும் வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

## இந்தியாவின் ஆளில்லா விமான சோதனை வழித்தடம்

- விங்ஸ் இந்தியா 2026 நிகழ்வின் போது, ஒடிசா மாநிலம் ரங்கெய்லுண்டாவில் தேசிய ஆளில்லா வான்வழி வாகனம் (UAV) சோதனை மற்றும் புத்தாக்க வழித்தடத்தை உருவாக்குவதாக அறிவித்தது.

- இந்த வழித்தடம் ஒடிசாவில் உள்ள ரங்கெய்லுண்டா விமான நிலையத்தில் உருவாக்கப் படும்.
- இது ஆளில்லா விமான சோதனை தளமாக நேரடியாக மாற்றப்பட உள்ள இந்தியாவின் முதல் செயல்படும் வணிகரீதியான விமான நிலையம் ஆகும்.
- இந்தத் திட்டம் B-MAAN (Building Mobility and Advanced Air Mobility Network) திட்டத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

## முக்கிய மந்திரி எதி கோலி துதி பாத் திட்டம்

- அசாமின் தின்சுகியா மாவட்டத்தில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக முக்கிய மந்திரி எதி கோலி துதி பாத் திட்டத்தை அசாம் அரசு அறிமுகப்படுத்தியது.
- இது ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ₹5,000-ஐ ஒரு முறை நிதியுதவியாக வழங்குகிறது.
- இந்தத் திட்டம் 27 மாவட்டங்களில் உள்ள 836 தேயிலைத் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களை உள்ளடக்கியது.
- இந்த முயற்சி தேயிலைப பழங்குடியினர் மற்றும் அசாமின் பழங்குடிச் சமூகங்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அசாமின் தேயிலைத் தொழில் சுமார் 200 ஆண்டு கால வணிக உற்பத்தியை நிறைவு செய்துள்ளது.

## AI அடிப்படையிலான கற்றல் தளம் - Padhai with AI

- இமாச்சலப் பிரதேச முதல்வர் பிலாஸ்பூர் மாவட்டத்தில் Padhai with AI -ஐத் தொடங்கி வைத்தார்.
- இந்த முன்முயற்சி டிஜிட்டல் கற்றல், தேர்வு சார்ந்த பாடப் பொருள் மற்றும் தனிப் பயனாக்கப்பட்ட ஆதரவை வழங்க செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்துகிறது.
- தரமான பயிற்சிக்கான அணுகல் இல்லாத அரசு மற்றும் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு இது முக்கியமாக பயனளிக்கிறது.
- இந்தத் திட்டம் கல்விக்குச் சமமான அணுகலை உறுதி செய்கிறது மற்றும் கற்றல் விளைவுகளை மேம்படுத்த தொடர்ச்சியான கல்வி ஆலோசனைகளை வழங்குகிறது.

## உத்தரப் பிரதேச பொருளாதார ஆய்வறிக்கை 2025–26

- உத்தரப் பிரதேசம் தனது முதல் பொருளாதார ஆய்வறிக்கை 2025–26 என்பதை அந்த மாநிலச் சட்டமன்றத்தில் சமர்ப்பித்தது.
- முதலீடு சார்ந்த வளர்ச்சி மூலம் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாறுவதற்கான மாநிலத்தின் திட்டத்தை அறிக்கை காட்டுகிறது.
- உத்தரப் பிரதேசத்தின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) 2025–26ல் ₹36 லட்சம் கோடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- முதலீடு மற்றும் வணிக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் மூன்று S மாதிரியை (பாதுகாப்பு, நிலைத்தன்மை, வேகம்) முன்னிலைப்படுத்தியது.

## மகாராஷ்டிராவில் கழுகு பாதுகாப்பு திட்டம்

- கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்குப் பிறகு மகாராஷ்டிராவின் மெல்காட் மற்றும் தடோபா புலிகள் காப்பகங்களில் புலம்பெயரும் இமயமலை பிணந்திண்ணி கழுகுகள் சமீபத்தில் தென்பட்டன.
- மெல்காட் புலிகள் காப்பகத்தில் ஒரு இமயமலை பிணந்திண்ணி கழுகு பதிவு செய்யப் பட்டது, மற்றும் தடோபா-அந்தாரி புலிகள் காப்பகத்தில் ஒரு யூரேசிய பிணந்திண்ணி கழுகு பதிவு செய்யப் பட்டது.
- மகாராஷ்டிரா வனத்துறையும் பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கமும் கழுகு பாதுகாப்பு இனப்பெருக்க மையத் திட்டத்தைத் தொடங்கின.
- ஜனவரி 2026 இல், காப்பினப்பெருக்கம் செய்யப்பட்ட நீண்ட-அலகுகள் கொண்ட கழுகுகள் தகவல்தொடர்புகளுக்கான உலகளாவிய அமைப்பு மற்றும் செயற்கைக் கோள் தகவல் பரிமாற்ற அமைப்புகள் பொருத்தப்பட்ட பின்னர் காட்டுக்குள் விடப் பட்டன.
- இமயமலை பிணந்திண்ணி கழுகு IUCN செந்நிறப் பட்டியலில் அச்சுறு நிலையை அண்மித்த இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- யூரேசிய பிணந்திண்ணி கழுகு IUCN செந்நிறப் பட்டியலில் தீவாய்ப்பு கவலை குறைந்த உயிரினமாக பட்டியலிடப்பட்டுள்ளது.

## லக்பதி பிடியா யோஜனா

- டெல்லி அரசு, பெண் குழந்தைகளின் கல்வியை ஆதரிப்பதற்கும், நிதி நெருக்கடி காரணமாக பள்ளிப் படிப்பை நிறுத்துபவர்களைக் குறைப்பதற்கும் லக்பதி பிடியா யோஜனாவை அறிவித்தது.
- ஏப்ரல் 1, 2026 அன்று தொடங்கும் இந்தத் திட்டம், ஒரு பெண்ணின் பள்ளிப் படிப்பு மற்றும் உயர்கல்வியின் போது மொத்தம் ₹56,000 நிதி உதவி வழங்கும் என்பதோடு இது வட்டியுடன் சேர்த்து சுமார் ₹1 லட்சமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- நேரடிப் பலன் பரிமாற்றத்தையும் சிறந்த கண்காணிப்பையும் உறுதி செய்வதற்காக, பெண்ணின் பெயரில் உள்ள ஆதார் வசதி கொண்ட வங்கிக் கணக்கில் பணம் வரவு வைக்கப்படும்.
- இறுதித் தொகையானது, சிறுமிக்கு 21 வயது ஆகும் போது அல்லது பட்டப்படிப்பு அல்லது பட்டயப்படிப்பு முடிக்கும்போது, எது முன்னதாக வருகிறதோ அப்போது வழங்கப் படும்.
- பிறப்பு, வகுப்பு 1, வகுப்பு 6, வகுப்பு 9, வகுப்பு 10 மற்றும் வகுப்பு 12 உள்ளிட்ட பள்ளிப் படிப்பு மைல்கற்களுடன் தவணைகள் இணைக்கப்பட்டுள்ளன என்பதோடு பட்டப் படிப்பு அல்லது பட்டயப் படிப்பிற்குப் பிறகு கூடுதல் நிதியும் வழங்கப்படுகிறது.
- இந்தத் திட்டம் டெல்லியில் பிறந்து குறைந்தது மூன்று வருடங்கள் நகரில் வசித்து வரும் மற்றும் ஆண்டு வருமானம் ₹1 லட்சம் அல்லது அதற்கும் குறைவாக உள்ள பெண் குழந்தைகளுக்கானது என்பதோடு இச்சலுகைகள் ஒரு குடும்பத்திற்கு இரண்டு மகள்களுக்கு மட்டுமே பொருந்தும்.

## ஓங்கில்கள் கணக்கெடுப்பு 2026 - ஒடிசா

- ஒடிசா ஐந்து ஆண்டுகளில் மிக அதிகமான கடல் ஓங்கில்கள் (டால்பின்) எண்ணிக்கையைப் பதிவு செய்துள்ளது என்ற நிலையில் 2026 கணக்கெடுப்பில் 765 டால்பின்கள் கணக்கிடப்பட்டுள்ளன.

- மாநிலத்தின் கடல் மற்றும் கழிமுகப் பகுதிகளில் மொத்தம் 765 ஓங்கில்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- சிலிகா ஏரியில் 159 ஐராவதி ஓங்கில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்ற நிலையில் இது மிக அதிகச் செறிவு கொண்ட ஒரே பகுதி ஆகும்.
- கஹிர்மாதா கடல் சரணாலயத்தில் சுமார் 474 கூனல் ஓங்கில்கள் பதிவாகியுள்ளன என்ற நிலையில் இது மாநிலத்தின் மிக அதிக அளவாகும்.

## உத்தரப் பிரதேச பட்ஜெட் 2026–27

- உத்தரப் பிரதேச அரசு 2026–27 நிதியாண்டிற்கான ₹9.12 லட்சம் கோடி பட்ஜெட்டை மாநில சட்டமன்றத்தில் தாக்கல் செய்தது.
- இது முந்தைய ஆண்டை விட சுமார் 12.9% அதிகமாகும்.
- கல்வி, விவசாயம், சுகாதாரம் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றில் முக்கியச் செலவினங்களுடன் மொத்தப் பட்ஜெட்டில் மூலதனச் செலவு 19.5% ஆக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- நிதி ஆணைய வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, நிதிப் பற்றாக்குறை மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3% ஆகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- சுகாதாரம், மருத்துவக் கல்லூரிகள், காவல்துறை உள்கட்டமைப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவுப் பயிற்சித் திட்டங்கள் போன்ற தொழில்நுட்பப் பணிகளுக்கான நிதியை அரசாங்கம் அதிகரித்தது.

## ஸ்த்ரீ சுரக்சா திட்டம்

- வேலையில்லாத பெண்கள் மற்றும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவுகளைச் சேர்ந்த திருநங்கைகளுக்கு நிதி உதவி வழங்குவதற்காக கேரள அரசு ஸ்த்ரீ சுரக்சா திட்டத்தைத் தொடங்கியது.
- இது நேரடி வங்கிப் பரிமாற்றம் மூலம் மாதாந்திர ஓய்வூதியமாக ₹1,000 வழங்குகிறது.
- 35 முதல் 60 வயதுடைய, பிற சமூக நல ஓய்வூதியங்களைப் பெறாத பெண்கள் தகுதி உடையவர்கள் ஆவர்.
- முதல் தவணையில் 10.18 லட்சத்திற்கும் அதிகமான பயனாளிகளுக்கு வரவு வைக்கப் பட்டுள்ளது.

## வடகிழக்கு இந்தியாவில் பிராந்திய இணைப்பு

- இந்தியப் பிரதமர் குமார் பாஸ்கர் வர்மா சேது மற்றும் அசாமில் வடகிழக்கின் முதல் அவசர தரையிறங்கும் வசதி (ELF) ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.
- குமார் பாஸ்கர் வர்மா சேது என்பது குவஹாத்தியில் உள்ள பிரம்மபுத்திரா நதியின் மீது சுமார் ₹3,030 கோடி செலவில் கட்டப்பட்ட 2.86 கிமீ நீளம் கொண்ட, ஆறு வழிச் சாலைகள் கொண்ட கிராடர்-கம்பி வட தாங்கு பாலமாகும்.
- குவஹாத்தியையும் வடக்கு குவஹாத்தியையும் இணைக்கும் இந்தப் பாலம் வட கிழக்கு இந்தியாவின் முதல் கிராடர்-கம்பி வட தாங்கு பாலமாகும்.

- இந்திய விமானப் படையுடன் இணைந்து திப்ருகார் மாவட்டத்தில் உள்ள மோரன் புறவழிச்சாலையில் அவசர தரையிறங்கும் வசதி (ELF) உருவாக்கப்பட்டுள்ளது.
- சுமார் 4.2 கிமீ நீளமுள்ள நெடுஞ்சாலைப் பகுதியை, போர் மற்றும் போக்குவரத்து விமானங்களை அவசரமாக தரையிறக்குவதற்கும், வட கிழக்கில் இணைப்பு மற்றும் மூலோபாய தயார்நிலையை வலுப்படுத்துவதற்கும் பயன்படுத்தலாம்.

## நகரமயமாக்கல் கொள்கை கட்டமைப்பு

- இந்தியாவில் ஒரு விரிவான நகர்ப்புறக் கொள்கையை அங்கீகரித்த முதல் மாநிலமாக கேரளா மாறியுள்ளது.
- 2023–24 மாநிலப் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட உள்ளூர் சுயாட்சித் துறை தயாரித்த வரைவுக் கொள்கைக்கு மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- டிசம்பர் 2023 இல் உருவாக்கப்பட்ட கேரள நகர்ப்புற கொள்கை ஆணையம், மார்ச் 2025 இல் தனது அறிக்கையை முதலமைச்சரிடம் சமர்ப்பித்தது.
- இந்தக் கொள்கை, காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, அடுத்த 25 ஆண்டுகளுக்கு கேரளாவின் நகர்ப்புற வளர்ச்சிக்கு வழி காட்டும்.
- இந்த ஆணையத்தின் கூற்றுப்படி, 2050 ஆம் ஆண்டுக்குள் கேரளாவின் சுமார் 80% நகர மயமாக்கப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தக் கொள்கை 10 தூண்களை அடிப்படையாகக் கொண்டது மற்றும் எதிர்கால வளர்ச்சிக்காக அரசு, தனியார் மற்றும் மக்களின் கூட்டாண்மையை ஊக்குவிக்கிறது.

## AI-செயல்படுத்தப்பட்ட தொலைதூர மின்னணு வாக்களிப்பு அமைப்பு

- புது தில்லியில் நடைபெற்ற இந்தியா AI தாக்க உச்சி மாநாட்டில் பீகார் ஒரு செயற்கை நுண்ணறிவு (AI) - செயல்படுத்தப்பட்ட தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையை அறிமுகப்படுத்தியது.
- இந்த அமைப்பை பீகார் மாநில தேர்தல் ஆணையத்துடன் இணைந்து மேம்பட்ட கணினி மேம்பாட்டு மையம் (C-DAC) உருவாக்கியது.
- “e-Voting SECBHR” என்ற திறன்பேசி செயலி, ஆண்ட்ராய்டு திறன்பேசிகள் மூலம் தொலைதூர வாக்களிப்பை செயல்படுத்துகிறது.
- வாக்காளர் சரிபார்ப்பில் ஒற்றைக் கடவுச்சொல் (OTP) அங்கீகாரம், செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான முக அங்கீகாரம் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (EPIC) தரவுத் தளத்துடன் பொருத்துதல் ஆகியவை அடங்கும்.
- பாதுகாப்பு அம்சங்களில் இரட்டை மறைகுறியாக்கம், உயிர் நிலை கண்டறிதல், தொடர் சங்கிலி அடிப்படையிலான சேமிப்பு மற்றும் வாக்காளர் சரிபார்க்கக்கூடிய காகித தணிக்கை சோதனை (VVPAT) ஆகியவை அடங்கும்.
- இந்த முறை முதன்முதலில் 2025 நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களில் பயன்படுத்தப் பட்டது என்பதோடு எதிர்கால சட்டமன்றத் தேர்தல்களுக்கும் இது பரிசீலிக்கப் படலாம்.

## கடல் ஓத வெள்ளம் – மாநிலம் சார்ந்த பேரிடர்

- கேரள அரசு கடல் ஓத வெள்ளத்தை மாநிலம் சார்ந்தப் பேரிடராக அறிவித்துள்ளது.
- கடல் ஓத வெள்ளம், வெயில் கால வெள்ளம் அல்லது ராஜ ஓத வெள்ளம் என்றும் அழைக்கப் படுகிறது என்பதோடு இது உயர்ஓதங்களின் போது தாழ்வான கடலோரப் பகுதிகளில் ஏற்படும் தற்காலிக வெள்ளப் பெருக்கு ஆகும்.
- இது பலத்த காற்று, புயல்கள் மற்றும் முழு நிலவு அல்லது அமாவாசை உயர் ஓத நிகழ்வுகளின் ஒருங்கிணைந்த விளைவு காரணமாக ஏற்படுகிறது.
- இது தினமும் இரண்டு முறை நிகழ்கிறது மற்றும் முழு நிலவு மற்றும் அமாவாசை கட்டங்களில் மிகவும் கடுமையானதாகிறது.
- கேரளக் கடற்கரையில், அரபிக் கடல் மட்டம் ஒரு நிலையான எல்லைக்கு மேல் உயர்ந்து, தாழ்வான பகுதிகளை குறுகிய காலத்திற்கு வெள்ளத்தில் மூழ்கடிக்கும்.
- மாநில பேரிடர் மீட்பு நிதியத்தின் (SDRF) கீழ் நிதி உதவி வழங்கும் கேரளா, இந்தியாவில் முதல் முறையாக கடல் அலை வெள்ளத்தை மாநிலம் சார்ந்தப் பேரிடராக வகைப் படுத்தியுள்ளது.

## இந்தியாவின் முதல் கிராபீன் கொள்கை

- கிராபீனின் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக இந்தியாவின் முதல் விரிவான கிராபீன் கொள்கையை கேரளா அங்கீகரித்துள்ளது.
- கிராபீன் என்பது ஒரு அறுகோண பின்னலில் அமைக்கப்பட்ட கார்பன் அணுக்களின் ஒற்றை அடுக்கு ஆகும் என்பதோடு மேலும் அதன் அதிக வலிமை, மின் கடத்துத்திறன் மற்றும் வெப்ப நிலைத்தன்மைக்கு பெயர் பெற்றது.
- இந்தக் கொள்கையானது பாலக்காட்டில் ஒரு பிரத்தியேக கிராஃபீன் தொழில்துறை பூங்காவையும், ₹200 கோடி முதலீட்டில் ஒரு டிஜிட்டல் புத்தாக்க மையத்தையும் முன் மொழிகிறது.
- கிராபீன் அடிப்படையிலான கண்டுபிடிப்பு மற்றும் உற்பத்தியை ஆதரிப்பதற்காக கிராபீன் பூங்காவை மத்திய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.
- அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் பூங்காக்களில் உற்பத்தி அலகுகளுக்கான குத்தகைக் பண வழங்கீடுகளில் கேரளா 50% மானியத்தை வழங்கும்.

## AI அடிப்படையிலான CM ஸ்ரீ பள்ளி மாதிரி

- டெல்லி முதல்வர் சரோஜினி நகரில் CM ஸ்ரீ பள்ளியைத் திறந்து வைத்தார் என்ற நிலையில் இது இந்தியாவின் முதல் AI மூலம் வழி நடத்தப்படும் ஒரு விரிவான கல்வி மாதிரியைக் குறிக்கிறது.
- டெல்லி முழுவதும் 75 முதல்வர் ஸ்ரீ பள்ளி திட்டங்களுக்கு அரசு அடிக்கல் நாட்டியுள்ளது.
- தேசிய கல்விக் கொள்கை 2020 என்பதைப் பின்பற்றும் இந்த முன்முயற்சி தொழில் நுட்பம் சார்ந்த, உயர்தர பொதுக் கல்வியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்தப் பள்ளிகள் நவீன உள்கட்டமைப்பு, AI-இயக்கப்பட்ட மீத்திறன் வகுப்பறைகள் மற்றும் தனிப் பயனாக்கப்பட்ட கல்விக்கான டிஜிட்டல் கற்றல் கருவிகளை வழங்கும்.

## அசாமின் சமீபத்திய முயற்சிகள்

- மாநில அரசு வேலைகளில் தேயிலைப் பழங்குடியினர் மற்றும் ஆதிவாசிச் சமூகங்களுக்கு 3% இடஒதுக்கீட்டை அசாம் அமைச்சரவை அங்கீகரித்தது.
- முன்னதாக, இந்த ஒதுக்கீடு நிலை III மற்றும் IV பதவிகளுக்கு மட்டுமே இருந்தது என்ற நிலையில் ஆனால் இப்போது அது மாநிலக் குடிமைப்பணி மற்றும் பேராசிரியர்கள் போன்ற உயர் பதவிகளையும் உள்ளடக்கியது.
- முக்கிய மந்திரி மகிளா உத்யமிதா அபியான் (MMUA) திட்டம் சுமார் 1,07,532 கூடுதல் பெண்களைச் சேர்க்க விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்ற நிலையில் இதன் மூலம் தலா ₹10,000 பெறும் 32 லட்சம் பயனாளிகளுடன் சேர்க்கப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய நடவடிக்கைகள் சமூக இயக்கத்தை அதிகரிப்பது, வேலைவாய்ப்புகளை மேம்படுத்துவது மற்றும் கிராமப்புறத் தொழில்முனைவோரை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## மகாராஷ்டிராவில் முஸ்லிம் இடஒதுக்கீடு

- முதலமைச்சர் தேவேந்திர ஃபட்னாவிஸ் தலைமையிலான மகாராஷ்டிர அரசு, முஸ்லிம் சமூகத்தின் சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கான பத்தாண்டு பழமையான 5% இட ஒதுக்கீட்டை ரத்து செய்துள்ளது.
- இந்த ஒதுக்கீடு முதலில் ஜூலை 2014 இல் காங்கிரஸ்-என்சிபி அரசாங்கத்தால் ஒரு அவசரச் சட்டம் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது ஆனால் அது ஒருபோதும் சட்டமாக மாற்றப் படாமல் டிசம்பர் 2014 இல் காலாவதியானது.
- சமயத்தின் அடிப்படையில் மட்டுமே பாகுபாட்டைத் தடை செய்யும் பிரிவுகள் 15(1) மற்றும் 16(2) இன் கீழ் அரசியலமைப்பு சிக்கல்களை அந்த அரசாங்கம் மேற்கோள் காட்டியது.
- இந்திய உச்ச நீதிமன்றம் உள்ளிட்ட நீதிமன்றங்கள், நலிந்தோர் நலநோக்கு நடவடிக்கை என்பது மத அடையாளத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்க முடியாது என்று தொடர்ந்து தீர்ப்பளித்துள்ளன.
- இந்த ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, முஸ்லிம்களுக்கான சிறப்புப் பிற்படுத்தப் பட்ட பிரிவு-A (SBC-A) சாதி மற்றும் செல்லுபடியாகும் சான்றிதழ்கள் வழங்குவது நிறுத்தப் பட்டுள்ளது.

## துல்புல் நீர்வழி தடுப்பணைத் திட்டம்

- ஜம்மு-காஷ்மீர் அரசு, ஜம்மு பகுதிக்கு ராவி நதி நீரைத் திருப்பிவிடுவதையும், சிந்து நதி நீர் ஒப்பந்தம் (1960) இடைநிறுத்தப் பட்ட பிறகு துல்புல் நீர்வழி தடுப்பணைத் திட்டத்தை மீண்டும் தொடங்குவதையும் பரிசீலித்து வருகிறது.
- ராவி நதி திசை திருப்பும் திட்டம் பஞ்சாபிலிருந்து ஜம்மு பகுதிக்கு தண்ணீரை மாற்றுவதை முன்மொழிகிறது.
- வுல்லார் தடுப்பணை என்றும் அழைக்கப்படும் துல்புல் நீர்வழி தடுப்பணை திட்டம், ஜம்மு-காஷ்மீரில் உள்ள வுல்லார் ஏரியின் நீர் வெளியேற்றப் பகுதியில் அமைந்து உள்ளது.
- 1984 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், சிந்து நீர் ஒப்பந்தத்தின் (1960) கீழ் ஆட்சேபனைகள் காரணமாக நிறுத்தப்பட்டது.

- இது குளிர்கால மாதங்களில் ஜீலம் நதியில் நீர் ஓட்டத்தை ஒழுங்குபடுத்த வடிவமைக்கப் பட்டது.
- இந்தத் திட்டம் நீர்வழிப் பயணத்தை மேம்படுத்துவதையும் கீழ்நிலை நீர்மின் உற்பத்தியை ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### சாதியற்ற நிலை - சவுண்டலா

- மகாராஷ்டிராவில் உள்ள சவுண்டலா கிராமம், பிப்ரவரி 5, 2026 அன்று கிராம சபைத் தீர்மானம் மூலம் தன்னை சாதியற்றக் கிராமமாக அறிவித்தது.
- இந்தத் தீர்மானம் சாதி அடிப்படையிலான பாகுபாட்டை நிராகரித்து, "ஆம்சி ஜாத்... மனவ்" (எனது சாதி மனிதநேயம்) என்ற குறிக்கோளின் கீழ் சமத்துவத்தை நன்கு ஊக்குவிக்கிறது.
- பள்ளிகள், கோயில்கள், நீர்நிலைகள் மற்றும் தகன மைதானங்கள் போன்ற அனைத்து பொது இடங்களிலும் அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் சமமான அணுகல் வழங்கப் படும்.
- இந்திய அரசியலமைப்பின் சரத்து 15ன் கீழ் சாதி அடிப்படையிலான பாகுபாடு தடை செய்யப் பட்டுள்ளது.

### மாண்டியா கல்வெட்டு

- கர்நாடகாவின் மாண்டியா மாவட்டத்தில் உள்ள கே. பெட்டஹள்ளி கிராமத்தில் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பன்மொழி ஹொய்சளர்கள் கல்வெட்டு கண்டுபிடிக்கப் பட்டது.
- இந்தக் கல்வெட்டு என்பது ஹொய்சளர் வம்சத்தின் முதலாம் நரசிம்மரின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்தது.
- ஒன்பது வரிகளுடன் கூடிய வெள்ளை கிரானைட் பலகையில் பொறிக்கப்பட்டுள்ள இது பாண்டவபுரா தாலுகாவில் உள்ள ஸ்ரீ மகாலட்சுமி கோவிலில் கண்டெடுக்கப் பட்டது.
- இந்தக் கல்வெட்டு கன்னடம், தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் கன்னட எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.
- இது தண்டநாயக்கா (இராணுவத் தளபதி) காரைக்குடி தில்லைக் கோட்டை ஸ்ரீ யாதவ நாராயணா கோவிலில் (இன்றைய கெரே தோன்னூர்) கோயில் சடங்குகளுக்காக என நிலம் வழங்கியதை இது பதிவு செய்கிறது.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### குடியரசு தின அணிவகுப்பு 2026

- இந்திய அரசு 2026 குடியரசு தின அணிவகுப்பின் வெற்றியாளர்களை அறிவித்தது.
- முப்படைகளில் சிறந்த அணிவகுப்புக் குழுவிற்கான விருதை இந்தியக் கடற்படை வென்றது.
- மத்திய ஆயுதக் காவல் படைகள் (CAPF) மற்றும் பிற துணைப் படைகளில் சிறந்த அணி வகுப்புக் குழுவிற்கான விருதை டெல்லி காவல்துறை வென்றது.

- மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் இருந்து சிறந்த மூன்று அலங்கார ஊர்திகள்: மகாராஷ்டிரா (கணேசோத்சவம்: தற்சார்பின் சின்னம்), ஜம்மு காஷ்மீர் (கைவினைப் பொருட்கள் மற்றும் நாட்டுப்புற நடனங்கள்), மற்றும் கேரளா (கடல்வழி மெட்ரோ மற்றும் 100% டிஜிட்டல் எழுத்தறிவு: தற்சார்பு இந்தியாவிற்கான தற்சார்பு கேரளா) ஆகும்.
- மத்திய அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் இருந்து சிறந்த அலங்கார ஊர்திக்கான விருதை கலாச்சார அமைச்சகம் வென்றது (வந்தே மாதரம் – ஒரு தேசத்தின் ஆன்மாவின் அழுகுரல்).
- இணையவழி MyGov தள வாக்கெடுப்பில் மக்கள் தேர்வு வெற்றியாளர்களாக அசாம் படைப் பிரிவு (சேவைகள்), CRPF (மத்திய ரிசர்வ் போலீஸ் படை), குஜராத் (சுதேசி மந்திரம் – தற்சார்பு – சுதந்திரம்), மற்றும் பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை (தேசிய கல்விக் கொள்கை 2020: இந்தியப் பள்ளிக் கல்வியை வளர்ந்த பாரதத்தின் பாதைக்கு அழைத்துச் செல்லுதல்) ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டன.

## சமூக நீர் சாம்பியன்கள் - WaSH வீரர்கள்

- ஜல் சக்தி அமைச்சகமானது கடைநிலை அளவிலான நீர் மேலாண்மைத் தலைமைத்துவத்திற்காக நீர், சுகாதாரம் மற்றும் தூய்மை (WaSH) வீரர்களைக் கௌரவித்தது.
- இந்த அங்கீகாரம் புது டெல்லியில் நடைபெற்ற ஒரு சம்வாத் சமாரோஹ் எனும் நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது.
- ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களைச் சேர்ந்த மொத்தம் 58 WaSH வீரர்களுக்கு கௌரவம் அளிக்கப்பட்டது.
- தூய்மை பாரத இயக்கம் (கிராமப்புறம்) திட்டத்தின் கீழ், 'ஹர் கர் ஜல்' சான்றிதழ் மற்றும் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத (ODF) பிளஸ் மாதிரி அந்தஸ்து பெற்ற ஸ்வச் சுஜல் கிராமங்களிலிருந்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- இந்நிகழ்ச்சியின் போது, “Peyjal: Jan Shakti Ki Abhivyakti – Volume II” என்ற தலைப்பிலான ஒரு கையேடும் வெளியிடப்பட்டது.

## தமிழ்நாடு மாநில திரைப்பட விருதுகள் – 2016/2022

- 2016 முதல் 2022 ஆம் ஆண்டுக்கான மாநிலத் திரைப்பட விருதுகளை தமிழக அரசு அறிவித்துள்ளது.
- சிறந்த நடிகருக்கான விருதுகளுக்கு விஜய் சேதுபதி, கீர்த்தி சுரேஷ், கார்த்தி, நயன்தாரா, தனுஷ், ஜோதிகா, சூர்யா, அபர்ணா பாலமுரளி, ஆர்யா, லிஜோமோல் ஜோஸ், விக்ரம் பிரபு, சாய் பல்லவி உள்ளிட்டோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- மாநகரம், அறம், பரியேறும் பெருமாள், அசுரன், கூழாங்கல், ஜெய் பீம், கார்கி ஆகிய தமிழ்த் திரைப்படங்கள் அந்தந்த ஆண்டுகளுக்கான சிறந்த திரைப்பட விருதுகளைப் பெற்றுள்ளன.
- சிறந்த இயக்குநர் விருதுகளுக்கு லோகேஷ் கனகராஜ், புஷ்கர்–காயத்ரி, மாரி செல்வராஜ், ஆர்.பார்த்திபன், சுதா கொங்கரா, டி.ஜே.ஞானவேல், கௌதம் ராமச் சந்திரன் போன்ற இயக்குநர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## சுனேத்ரா பவார் - துணை முதலமைச்சர்

- இவர் மகாராஷ்டிராவின் முதல் பெண் துணை முதலமைச்சர் ஆனார்.
- மறைந்த தேசியவாத காங்கிரஸ் கட்சி (அஜித் பவார் பிரிவு) தலைவர் அஜித் பவாரின் மனைவியான சுனேத்ரா பவார், மகாராஷ்டிராவின் துணை முதலமைச்சராகப் பதவியேற்றார்.
- முதலமைச்சர் தேவேந்திர ஃபட்னாவிஸ் மற்றும் துணை முதலமைச்சர் ஏக்நாத் ஷிண்டே ஆகியோர் முன்னிலையில் ஆளுநர் ஆச்சார்யா தேவ்வ்ரத் அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- துணை முதலமைச்சர் என்பது ஒரு அரசியல் பதவி; இது இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் போன்ற அரசியலமைப்புப் பதவி அல்ல.
- 1989-ல், பிரதமர் வி.பி. சிங் அமைச்சரவையில் துணைப் பிரதமராக தேவி லால் பதவியேற்றதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது.
- அந்த நபர் துணைப் பிரதமர் என்று அழைக்கப்பட்டாலும், அவர் மற்ற அமைச்சரவை உறுப்பினர்களைப் போலவே ஒரு அமைச்சர் மட்டுமே என்றும், துணைப் பிரதமர் என்ற அந்தப் பதவிப் பெயரானது அவருக்குப் பிரதமரின் எந்த அதிகாரங்களையும் வழங்குவதில்லை என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- துணைப் பிரதமர் பதவிக்கு அரசியலமைப்பு அங்கீகாரம் இல்லாததால், தேவி லால் துணைப் பிரதமர் என்று அழைக்கப்பட்டது ஒரு விளக்கப் பெயரே என்றும், அனைத்து நோக்கங்களுக்காகவும் அவர் ஒரு அமைச்சராக மட்டுமே கருதப்படுவார் என்றும் நீதிமன்றம் கூறியது.
- தமிழ்நாட்டில், ஆகஸ்ட் 2017-ல் ராஜ்பவனில் இருந்து ஒரு பத்திரிகைச் செய்தி வெளியிடப்பட்டது.
- திரு. பன்னீர்செல்வத்தை துணை முதலமைச்சராக நியமிக்க வேண்டும் என்ற முதலமைச்சரின் பரிந்துரையை ஆளுநர் ஏற்றுக் கொண்டார் என்று மட்டுமே அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.
- அவர் துணை முதலமைச்சராகப் பதவியேற்றார் என்று அதில் குறிப்பிடப்படவில்லை.
- ஒரு துணை முதலமைச்சர் என்பவர், எல்லாவற்றிற்கும் மேலாக, மாநில அரசாங்கத்தில் ஒரு அமைச்சராகவே இருக்கிறார்.
- துணை முதலமைச்சர் என்ற பதவிப் பெயரானது, அமைச்சராகப் பதவி வகிக்கும் ஒரு நபர் அமைச்சராகப் பதவி வகிக்க தகுதி பெற்று இருக்க வேண்டுமென்றால், அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சட்டமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும் என்ற அரசியலமைப்பு நிலையை மீறுவதில்லை.

## சிக்கிமிற்கு குடியரசுத் தலைவரின் காவல்துறை வண்ண விருது

- சிறப்பான சேவை, தொழில்முறைத் திறன் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றிற்காக சிக்கிம் காவல்துறைக்கு மதிப்புமிக்க குடியரசுத் தலைவரின் காவல்துறை வண்ண விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த அரிய அங்கீகாரத்தைப் பெறும் இந்தியாவின் 15வது மாநிலமாகவும், வடகிழக்கு மாநிலங்களில் 3வது மாநிலமாகவும் சிக்கிம் திகழ்கிறது.
- குடியரசுத் தலைவரின் காவல்துறை வண்ண விருது பொதுவாக 'நிஷான்' என்று அழைக்கப் படுகிறது.

## 2026 ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகள் – தமிழ்நாடு

- இந்தியக் குடியரசுத் தலைவர், தமிழ்நாட்டைச் சேர்ந்த 13 பேருக்கு 2026 ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.
- இந்த ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து இரண்டு பத்ம பூஷன் மற்றும் 11 பத்மஸ்ரீ விருதுகள் வழங்கப்படுகின்றன.
- S.K.M. மயிலானந்தன் சமூக சேவைக்காக பத்ம பூஷண் விருதையும், K.R. பழனிசாமி மருத்துவத் துறையில் ஆற்றிய உயரிய சேவைக்காகவும் இந்த விருதைப் பெறுகின்றனர்.
- மயிலானந்தன் ஈரோட்டைச் சேர்ந்த எஸ்.கே.எம் குழும நிறுவனங்களின் நிர்வாகத் தலைவர் ஆவார்.
- அதிமுக நிறுவனர் எம்.ஜி. ராமச்சந்திரனின் அமைச்சரவையில் சுகாதார அமைச்சராக இருந்த எச்.வி. ஹண்டேவுக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.
- கர்நாடக இசைக் கலைஞர்கள் மற்றும் சகோதரிகளான ரஞ்சனி-காயத்ரி இணையர் பத்மஸ்ரீ விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர் புண்ணியமூர்த்தி நடேசன், மருத்துவத் துறையில் பத்மஸ்ரீ விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- பத்மஸ்ரீ விருதுக்கு சிற்பி ராஜஸ்தபதி காளியப்ப கவுண்டர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ஐஐடி-மெட்ராஸ் இயக்குநர் வி.காமகோடி, அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் பத்மஸ்ரீ விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்காக கே.ராமசாமி, கலைக்காக ஓதுவார் திருத்தணி சுவாமிநாதன், கலைக்காக திருவாரூர் பக்தவத்சலம் மற்றும் இலக்கியம் மற்றும் கல்விக்காக எழுத்தாளர் சிவசங்கரி ஆகியார் இதர பத்மஸ்ரீ விருது பெற்றவர்கள் ஆவர்.

## சர் மார்க் டல்லி

- முன்னாள் பிபிசி பத்திரிகையாளரும், நீண்டகால பிபிசி இந்தியாவின் பணியகத் தலைவருமான சர் மார்க் டல்லி புது டெல்லியில் காலமானார்.
- அவர் 22 ஆண்டுகள் இந்தியாவில் பிபிசி-யின் பணியகத் தலைவராகப் பணியாற்றினார் மற்றும் 1971 வாங்காளதேச விடுதலைப் போர், நெருக்கடி நிலை (1975) மற்றும் ப்ளூ ஸ்டார் நடவடிக்கை (1984) போன்ற நிகழ்வுகளைப் பற்றி செய்தி சேகரித்தார்.
- அவர் The Heart of India மற்றும் India’s Unending Journey உள்ளிட்ட இந்தியா குறித்த நூல்களை எழுதியுள்ளார்.
- அவருக்கு 2002-ல் 'நைட்வுட்' பட்டம் வழங்கப்பட்டதுடன், 2005-ல் பத்ம பூஷன் விருதும் வழங்கப்பட்டது.

## கிராமி விருதுகள் 2026

- உலகளாவிய இசைத் துறையில் சிறந்த சாதனைகளை கௌரவிக்கும் வகையில் 68வது வருடாந்திர கிராமி விருதுகள் லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்றன.

- தலாய் லாமா, சிறந்த ஆடியோ புத்தகம், கதைசொல்லல் மற்றும் ஒலிப்பதிவுப் பிரிவில் தனது முதல் கிராமி விருதை வென்றார்.
- ஸ்டீவன் ஸ்பீல்பெர்க், 'மியூசிக் ஃபார் ஜான் வில்லியம்ஸ்' படத்திற்காக சிறந்த இசைத் திரைப்படத்திற்கான விருதை வென்று, தனது முதல் கிராமி விருதின் மூலம் EGOT (எம்மி, கிரேமி, ஆஸ்கர், டோனி) விருதைப் பெற்றவர் ஆனார்.
- கே-பாப் குழுவான 'டீமன் ஹண்டர்ஸ்'ஸின் "கோல்டன்" பாடல் ஆனது, விஷுவல் மீடியாவிற்காக எழுதப்பட்ட பாடல் என்ற பிரிவில் வெற்றி பெற்று, கிராமி விருதை வென்ற முதல் கே-பாப் பாடல் என்ற பெருமையைப் பெற்றது.

## வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது

- சென்னையில் நடைபெற்ற மாபெரும் கைவினைப் பொருட்கள் கண்காட்சி மற்றும் மாநாட்டில், மூத்த கைவினைஞர்களுக்குத் தமிழக முதலமைச்சரால் வாழும் கைவினைச் செல்வர் விருது வழங்கப்பட்டது.
- வாழ்நாள் கைவினைப் பொக்கிஷம் விருது, கைவினைத் துறைக்கு வாழ்நாள் முழுவதும் பங்களித்த பாரம்பரிய கைவினைஞர்களைக் கௌரவிக்கிறது.
- இந்த விருது 2013-2014 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது.
- பல ஆண்டுகளாகத் தங்கள் கைவினைத் தொழிலில் சேவை செய்த 65 வயது அல்லது அதற்கு மேற்பட்ட கைவினைஞர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு விருதும் ₹1,00,000 ரொக்கப் பரிசு, 8 கிராம் தங்கப் பதக்கம், ஒரு தாமிரப் பட்டயம் மற்றும் ஒரு சான்றிதழ் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- இந்த விருதுக்காக ஒவ்வொரு ஆண்டும் மாநில அரசால் பத்து கைவினைஞர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

## பூம்புகார் மாநில விருதுகள் 2025-26

- பூம்புகார் மாநில விருதுகள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் சென்னையில் 10 கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்டன.
- இந்த விருதுகள் தமிழ்நாட்டில் பாரம்பரிய கைவினைக் கலைகளில் சிறந்து விளங்கும் கைவினைஞர்களைக் கௌரவிக்கின்றன.
- ஒவ்வொரு விருதும் ₹50,000 ரொக்கப் பரிசு, 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப்பட்டயம் மற்றும் சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்டது.
- 2025-26 ஆம் ஆண்டிற்கான 10 விருது பெற்றவர்கள் கே. வெங்கடேஷ், சி. சங்கீதா, ஏ. பாபு, கே. ரீட்டா, எம். ஷபானா, எஸ். முருகன், ஏ. ராஜ், ஏ. கவ்வாபீவி, டி. செலின் மேரி மற்றும் எம். குமார் ஆவர்.

## கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது

- 2024-2025 ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதை தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- இந்த விருதுகள் மூத்த நடிகர் எம்.என்.ராஜம் (2024) மற்றும் மூத்த திரைப்பட தயாரிப்பாளர் எஸ்.பி.முத்துராமன் (2025) ஆகியோருக்கு வழங்கப்படும்.

- இந்த விருது தமிழ் சினிமா மற்றும் கலைத்துறைக்கு சிறந்த பங்களிப்பை வழங்குகிறது.
- ஒவ்வொரு விருது பெறுபவருக்கும் ₹10 லட்சம் ரொக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படும்.
- இந்த விருது தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதியின் நினைவாக பெயரிடப்பட்டுள்ளது.

## ஃபிரான்ஸ் எடெல்மேன் விருது 2026

- இந்தியாவின் "அன்ன சக்ரா" டிஜிட்டல் தளவாட அமைப்பு 2026 ஃபிரான்ஸ் எடெல்மேன் விருதுக்கு (Franz Edelman Award) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- அன்ன சக்ரா என்பது பொது விநியோக முறையின் (PDS) கீழ் உணவு-தானிய இட மாற்றத்தை மேம்படுத்தும் ஒரு முடிவு-ஆதரவு அமைப்பாகும்.
- இது உணவு மற்றும் பொது விநியோகத் துறையால் (DFPD) உலக உணவுத் திட்டம் (WFP) மற்றும் IIT-டெல்லியுடன் இணைந்து உருவாக்கப்பட்டது.
- இந்த அமைப்பு டிசம்பர் 2025 இல் தேசிய அளவில் தொடங்கப்பட்டது.
- இது இந்தியாவில் 81 கோடிக்கும் மேற்பட்ட பொது விநியோக முறை (PDS) பயனாளிகளை ஆதரிக்கிறது.
- இந்த விருதானது செயல்பாட்டு ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுகளுக்கான ஒரு உலகளாவிய விருது ஆகும்.

## விலே ஆராய்ச்சி ஹீரோஸ் பரிசு 2025

- இந்தியப் பொது சுகாதார நிபுணரான டாக்டர் சந்திரகாந்த் லஹாரியா, " Impact Beyond Academia " பிரிவில் விலே ஆராய்ச்சி ஹீரோஸ் பரிசு 2025 ஐ (Wiley Research Heroes Prize 2025) வென்றார்.
- இந்த உலகளாவிய ஆராய்ச்சி அங்கீகாரத்தைப் பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றார்.
- இந்தப் பரிசு, பொதுக் கொள்கை மற்றும் சமூகத்தில் செல்வாக்கு செலுத்தும் ஆராய்ச்சியாளர்களைக் கௌரவிக்கிறது.
- டாக்டர் லஹாரியாவின் ஆராய்ச்சி தடுப்பூசித் திட்டங்கள், தாய்வழி மற்றும் குழந்தை சுகாதாரம் மற்றும் ஆரம்ப சுகாதார அமைப்புகளில் கவனம் செலுத்துகிறது.
- அவர் முன்னாள் உலக சுகாதார அமைப்பின் (WHO) அதிகாரியாவார்.
- டாக்டர் நம்ரதா பதக், டாக்டர் குலூத் அல்சாயேக், டாக்டர் நந்திதா கருட் மற்றும் டாக்டர் இம்மானுவேல் பெப்ரா ஆகியோர் இதர விருது பெற்ற ஆய்வாளர்கள் ஆவர்.

## கிராஃபோர்டு பரிசு 2026

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த காலநிலை விஞ்ஞானியான வீரபத்ரன் ராமநாதன், காலநிலை அறிவியலில் தனது பணிக்காக கிராஃபோர்டு பரிசு 2026 ஐ வென்றார்.
- கிராஃபோர்டு பரிசு ராயல் ஸ்வீடிஷ் அறிவியல் அகாடமியால் வழங்கப்படுகிறது.

- புவி அறிவியல் மற்றும் வானியல் போன்ற நோபல் பரிசுக்கு உட்படாத துறைகளில் இது வழங்கப்படுகிறது.
- வீரபத்ரன் ராமநாதன் பசுமை இல்ல வாயுக்கள் (GHG) மற்றும் புவி வெப்பமடைதல் பற்றிய ஆராய்ச்சிக்காக அறியப்படுகிறார்.
- இவர் காலநிலை மாற்றத்தில் குளோரோஃப்ளூரோகார்பன்கள் (CFCகள்) மற்றும் பிற மாசுபடுத்திகளின் பங்கைக் கண்டுபிடித்தார்.
- இந்த விருது பெரும்பாலும் "புவி அறிவியலுக்கான நோபல் பரிசு" என்று அழைக்கப் படுகிறது.

## மும்பை மேயர் - ரிது தவ்டே

- சுமார் 44 ஆண்டுகளுக்குப் பிறகு ரிது தவ்டே மும்பையின் முதல் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- பிரஹன்மும்பை மாநகராட்சி (BMC) இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் பணக்கார மாநகராட்சியாகும்.
- இது 2025–26 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில் சுமார் ₹74,427 கோடிக்கு வரவு செலவு கணக்கை முன்வைத்தது.
- இந்தப பட்ஜெட் பல சிறிய இந்திய மாநிலங்களின் பட்ஜெட்டுகளை விடப் பெரியது ஆகும்.

## எர்த்ஷாட் பரிசு 2026

- மும்பை காலநிலை வார அனுசரிப்பின் போது, இளவரசர் வில்லியம் நிறுவிய எர்த் ஷாட் பரிசு 2026 நிகழ்வை மும்பை முதன்முறையாக நடத்தவுள்ளது.
- இந்தப் பரிசானது, காலநிலை நடவடிக்கை, பல்லுயிர்ப் பெருக்கம், தூய்மையான எரி சக்தி, காற்றின் தரம் மற்றும் கடல் மறுசீரமைப்பு ஆகியவற்றில் தீர்வுகளுக்காக வேண்டி ஆண்டுதோறும் ஐந்து உலகளாவியக் கண்டுபிடிப்பாளர்களுக்கு £1 மில்லியன் வழங்குகிறது.
- பருவநிலை தலைமைத்துவத்திலும் நிலையான கண்டுபிடிப்புகளிலும் இந்தியாவின் பங்கை இந்த நிகழ்வை நடத்துவதற்கான ஒரு காரணமாக இளவரசர் வில்லியம் எடுத்துரைத்தார்.
- 2070 ஆம் ஆண்டுக்குள் நிகர-சுழிய உமிழ்வை அடைவதற்கும் பசுமைத் தொழில் நுட்பத்தை ஊக்குவிப்பதற்கும் இந்தியாவின் உறுதிப்பாட்டை இந்த முயற்சியானது வலுப்படுத்துகிறது.

## ஆர். நல்லகண்ணு (1925–2026) மறைவு

- இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (சிபிஐ) மூத்த தலைவரான ஆர். நல்லகண்ணு, பிப்ரவரி 25, 2026 அன்று சென்னையில் தனது 101 வயதில் காலமானார். அவருக்கு அரசு மரியாதை வழங்கப்பட்டது.
- இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்த இவர், 1992 முதல் மூன்று முறை தமிழ்நாடு மாநிலச் செயலாளராகப் பணியாற்றினார்.

- தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டத்தில் 1925 ஆம் ஆண்டு பிறந்தார், பள்ளி மாணவராக இந்திய சுதந்திர இயக்கத்தில் சேர்ந்தார்.
- 1949 ஆம் ஆண்டு, ஜவஹர்லால் நேரு தலைமையிலான அரசாங்கத்தை கவிழ்க்க கம்யூனிஸ்ட் தலைவர்கள் திட்டமிட்டதாகக் கூறி, நெல்லை சதி வழக்கில் அவர் கைது செய்யப் பட்டார்.
- நெல்லை சதி வழக்கில் கே. பாலதண்டாயுதம், பி. மாணிக்கம், ஐ. மாயாண்டிபாரதி மற்றும் பலருடன் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.
- 1956 ஆம் ஆண்டு சிறையில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார்.
- ஆங்கிலேய அரசாங்கத்தாலும் பின்னர் ஜவஹர்லால் நேரு தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கத்தாலும் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட போது அவர் தலைமறைவாக வாழ்ந்தார்.
- 1964 ஆம் ஆண்டு, இந்திய-சீனப் போருக்குப் பிறகு இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் பிளவுபட்ட போது, அவர் சிபிஐ-யில் தொடர்வதைத் தேர்ந்தெடுத்தார்.
- 1999 ஆம் ஆண்டு, கோயம்புத்தூரில் இருந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராக மக்களவைத் தேர்தலில் போட்டியிட்டு, பாரதிய ஜனதா கட்சியின் (பாஜக) சி.பி. ராதாகிருஷ்ணனிடம் தோல்வியடைந்தார்.
- தாமிரபரணி நதிப் படுகையில் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிரான பிரச்சாரத்தை அவர் தலைமை தாங்கினார் என்பதோடு மேலும் 2010 ஆம் ஆண்டு, சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு பொது நல வழக்கை (PIL) தாக்கல் செய்தார் என்ற நிலையில் அங்கு அவர் தனிப்பட்ட முறையில் வாதிட்டு மணல் அகழ்வுக்குத் தடை உத்தரவைப் பெற்றார்.
- ஆகஸ்ட் 15, 2022 அன்று, மு. க ஸ்டாலின் வழங்கிய தமிழ்நாடு அரசின் 'தகைசால் தமிழர்' விருதைப் பெற்ற அவர் தனது சொந்தப் பணமான ₹5,000 உடன் பரிசுத்தொகை ₹10 லட்சத்தையும் தமிழக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நன்கொடையாக வழங்கினார்.

## நாடாளுமன்ற நட்புறவு குழு

- இந்தியா-இந்தோனேசியா நாடாளுமன்ற நட்புறவு குழுவின் தலைவராக பரிந்துரைக்கப்பட்ட இளம் வயது நாடாளுமன்ற உறுப்பினராக ஸ்ரீகாந்த் ஏக்நாத் ஷிண்டே மாறியுள்ளார்.
- தேசியவாத காங்கிரஸ் கட்சி (NCP) எம் நாடாளுமன்ற உறுப்பினர் பி. சுப்ரியா சுலே இந்தியா-சிங்கப்பூர் நாடாளுமன்ற நட்புறவு குழுவிற்கு தலைமை தாங்குகிறார்.
- 18வது மக்களவையில் மொத்தம் 64 நாடாளுமன்ற நட்புறவு குழுக்கள் உருவாக்கப் பட்டுள்ளன.
- மகாராஷ்டிரா துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவின் மகனான ஸ்ரீகாந்த் ஷிண்டே மூன்றாவது முறை நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார்.
- அவர் முன்னதாக மே 2025 இல் ஐக்கிய அரபு அமீரகம் (UAE), சியரா லியோன், லைபீரியா மற்றும் காங்கோ ஜனநாயக குடியரசு (DRC) ஆகிய நாடுகளுக்கு சர்வதேச நாடாளுமன்றக் குழுக்களை வழி நடத்தியுள்ளார்.
- இந்தியாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் இடையிலான கலாச்சார, பொருளாதார மற்றும் சமூக உறவுகளை வலுப்படுத்த இந்தக் குழு பணியாற்றும்.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆசிய ரைபிள்/பிஸ்டல் சாம்பியன்ஷிப் 2026

- புது தில்லியில் உள்ள டாக்டர் கர்னி சிங் ஷூட்டிங் ரேஞ்சில் நடைபெற்ற ஆசிய ரைபிள் / பிஸ்டல் சாம்பியன்ஷிப் 2026 இல் இந்தியாவானது பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.
- 51 தங்கம், 23 வெள்ளி மற்றும் 20 வெண்கலம் உட்பட 94 பதக்கங்களை இந்தியா வென்றது.
- இந்தியத் துப்பாக்கி சுடும் வீரர்கள் 25 மீட்டர் சென்டர் ஃபயர் பிஸ்டல் போட்டியில் அமன்பிரீத் சிங் (தங்கம்), குர்பிரீத் சிங் (வெள்ளி), மற்றும் அங்கூர் கோயல் (வெண்கலம்) பதக்கம் வென்றனர்.
- 50 மீட்டர் ரைபிள் புரோன் மகளிர் போட்டியில், சிஃப்ட் கவுர் சாம்ரா வெள்ளிப் பதக்கத்தையும், தேஜஸ்வானி சாவந்த் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர் என்பதோடு இந்த அணியானது தங்கப் பதக்கத்தை வென்றது.

## பிபிசி விருதுகள் 2025

- புது தில்லியில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் ஸ்மிருதி மந்தனா 2025 ஆம் ஆண்டின் பிபிசியின் சிறந்த இந்திய விளையாட்டு வீராங்கனையாக தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- FIDE மகளிர் உலகக் கோப்பையை வென்றதற்காக திவ்யா தேஷ்முக் ஆண்டின் சிறந்த வளர்ந்து வரும் வீராங்கனை விருதைப் பெற்றார்.
- 2024 பாரிஸ் பாராலிம்பிக்கில் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றதற்காக ப்ரீத்தி பால் ஆண்டின் சிறந்த பாரா-விளையாட்டு வீராங்கனை விருதைப் பெற்றார்.
- அஞ்சலி பகவத் தனது துப்பாக்கி சுடுதல் விளையாட்டு பங்கேற்பிற்காகவும், ஒலிம்பிக் இறுதிப் போட்டியை எட்டியதற்காகவும் வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்றார்.

# முக்கிய தினங்கள்

## உலக தொழுநோய் தினம் 2026 - ஜனவரி 25

- தொழுநோயை முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் முழுமையான சிகிச்சையை நன்கு ஊக்குவிப்பதையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிரான பாகுபாட்டை ஒழிப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக தொழுநோய் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமை அன்று அனுசரிக்கப்படுகிறது.
- இந்தியாவில், இது ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 30 அன்று, MK காந்தியின் நினைவு தினத்துடன் இணைந்து அனுசரிக்கப்படுகிறது.
- தொழுநோய் என்பது மைக்கோபாக்டீரியம் லெப்ரே என்ற பாக்டீரியாவால் ஏற்படும் ஒரு நோயாகும் என்ற நிலையில் இது முக்கியமாக தோல் மற்றும் நரம்புகளைப் பாதிக்கிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Leprosy is curable, the real challenge is stigma". என்பது ஆகும்.

## இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களின் சர்வதேச நினைவு தினம் 2026 – ஜனவரி 27

- 1945-ல் ஆஷ்விட்ஸ்-பிர்கெனாவ் நாஜிக்கள் வதை மற்றும் கொலை முகாம் விடுவிக்கப் பட்டதைக் குறிக்கும் வகையில் இது அனுசரிக்கப்படுகிறது.
- இரண்டாம் உலகப் போரின் போது நடந்த இனப்படுகொலையில், 6 மில்லியன் யூதர்களையும் மில்லியன் கணக்கான பிற பாதிக்கப்பட்டவர்களையும் கொன்று ஒழித்தது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Holocaust Remembrance for Dignity and Human Rights" என்பதாகும்.

## இந்தியக் கடலோரக் காவல்படை தினம் 2026 - பிப்ரவரி 01

- இந்தியக் கடலோரக் காவல்படையின் வீரம், அர்ப்பணிப்பு மற்றும் சேவையைப் போற்றும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தியாவின் கடற்கரை, கடல்சார் பாதுகாப்பு மற்றும் கடல்சார் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் இந்தியக் கடலோரக் காவல்படையின் பங்கை அங்கீகரிப்பதே இதன் நோக்கமாகும்.
- இந்தத் தினமானது, 1977 ஆம் ஆண்டு இந்தியக் கடலோரக் காவல்படை உருவாக்கப் பட்டதைக் குறிக்கிறது.
- இந்தியக் கடலோரக் காவல்படையானது இந்தியாவின் பிராந்திய கடல் பகுதி மற்றும் பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தைப் பாதுகாப்பதுடன் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

## உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் தினம் 2026 – ஜனவரி 30

- புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களைக் கட்டுப்படுத்துதல், ஒழித்தல் மற்றும் முற்றிலுமாக நீக்குவதற்கான முயற்சிகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அவற்றை விரைவுபடுத்துவதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் முதன்முதலில் 2020 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பால் அனுசரிக்கப் பட்டது.
- புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் என்பவை, ஏழை மற்றும் பாதிக்கப்படக் கூடிய மக்களைப் பாதிக்கும், தடுக்கக்கூடிய மற்றும் சிகிச்சையளிக்கக்கூடிய தொற்று நோய்களாகும்.
- 2024 ஆம் ஆண்டில் சுமார் 1.4 பில்லியன் மக்களுக்குப் புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோய்களுக்கான சிகிச்சைகள் தேவைப்பட்டன என்பதோடு இது 2010 ஆம் ஆண்டிலிருந்து 36% குறைந்துள்ளது.
- 58 நாடுகள் குறைந்தபட்சம் ஒரு புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோயை ஒழித்து உள்ளன, மேலும் உலக சுகாதார நிறுவனம் 2030-ஆம் ஆண்டிற்குள் 100 நாடுகளை இலக்காகக் கொண்டுள்ளது.
- 2026-ஆம் ஆண்டின் கருப்பொருள் "ஒன்றிணைவோம். செயல்படுவோம். ஒழிப்போம்" என்பதாகும்.

## உலக சதுப்பு நில தினம் 2026 - பிப்ரவரி 02

- மக்களுக்கும் இயற்கைக்கும் சதுப்பு நிலங்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- ஈரநிலங்களில் சதுப்பு நிலங்கள், ஏரிகள், ஆறுகள், மாங்குரோவ் காடுகள், உப்பங் கழிகள் மற்றும் நெல் வயல்கள் போன்ற மனிதனால் உருவாக்கப்பட்ட ஈரநிலங்கள் ஆகியவை அடங்கும்.
- 1971 ஆம் ஆண்டு இதே நாளில், ஈரானின் ராம்சார் நகரில் ஈரநிலங்கள் மீதான மாநாடு (ராம்சார் மாநாடு) ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு: "Wetlands and Traditional Knowledge: Celebrating Cultural Heritage" என்பதாகும்.

## முடக்கு வாத விழிப்புணர்வு தினம் 2026 - பிப்ரவரி 02

- இந்த நாள், முடக்கு வாதம், அதன் ஆரம்பகால கண்டறிதல் மற்றும் முறையான மருத்துவ சிகிச்சை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முடக்கு வாதம் என்பது சாதாரண மூட்டு வலி போன்றல்லாமல், ஒரு நாள்பட்ட தன்னுடல் தாக்க நோய் என்பது கண்டறியப்பட்டுள்ளது.
- நோயெதிர்ப்பு அமைப்பு ஆரோக்கியமான மூட்டு திசுக்களைத் தாக்கும்போது முடக்கு வாதம் ஏற்படுகிறது, இது வலி, வீக்கம் மற்றும் விறைப்பை ஏற்படுத்துகிறது.
- இந்த நோய் இதயம், நுரையீரல் மற்றும் கண்கள் போன்ற உறுப்புகளையும் பாதிக்கக்கூடும், இதனால் இது ஒரு முழு உடலையும் பாதிக்கும் நோயாகிறது.

## இந்தியா எரிசக்தி வாரம் 2026

- இந்தியா எரிசக்தி வாரம் (IEW) 2026, ஜனவரி 2026-ல் கோவாவில் நடைபெற்றது.
- இது எரிசக்திப் பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் எரிசக்தித் துறையில் உலகளாவிய ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- IEW 2026, மரபுசார் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் இரண்டிலும் கவனம் செலுத்தி, இந்தியாவின் எரிசக்தி சேர்ப்பு உத்தியை முன்னிலைப்படுத்தியது.
- இந்த நிகழ்வு பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் (MoP&NG) ஆதரவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## உலக புற்றுநோய் தினம் 2026 – பிப்ரவரி 04

- புற்றுநோய் தடுப்பு, முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் சிகிச்சை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இது 2000 ஆம் ஆண்டில் பாரிஸில் நடைபெற்ற புத்தாயிரமாண்டிற்கான புற்றுநோய்க்கு எதிரான உலக உச்சி மாநாட்டைத் தொடர்ந்து நிறுவப்பட்டது.
- இந்த நாள் சர்வதேச புற்றுநோய் கட்டுப்பாட்டு ஒன்றியத்தால் (UICC) முன்னெடுக்கப் படுகிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு " United by Unique" என்பதாகும்.

## சர்வதேச மனித சகோதரத்துவ தினம் 2026 – பிப்ரவரி 04

- வெவ்வேறு மதங்கள் மற்றும் கலாச்சாரங்களைச் சேர்ந்த மக்களிடையே அமைதி, ஒற்றுமை மற்றும் பரஸ்பர மரியாதையை மேம்படுத்துவதற்காக இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.
- இது 2019 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் (UNGA) பிரகடனப்படுத்தப் பட்டது.
- இந்த அனுசரிப்பானது, 2019 ஆம் ஆண்டில் அபுதாபியில் கையெழுத்திடப்பட்ட மனித சகோதரத்துவம் குறித்த ஆவணத்தால் ஈர்க்கப்பட்டது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு " Dialogue Over Division " என்பதாகும்.

## சர்வதேச பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்பு தினம் 2026 - பிப்ரவரி 06

- 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 20 அன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு, இந்த சர்வதேச தினத்தை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.
- "பெண் பிறப்புறுப்பு சிதைப்புக்கு எதிரான சகிப்புத்தன்மையற்ற நிலை" என்ற கருத்து முதன்முதலில் 2003 ஆம் ஆண்டில் ஆப்பிரிக்க நாடுகளுக்கு இடையேயான குழுவால் (IAC) அறிமுகப்படுத்தப்பட்டது.
- பெண் பிறப்புறுப்பு சிதைப்பை (FGM) ஒழிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், உலகளாவிய முயற்சிகளை வலுப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- நீடித்த வளர்ச்சி இலக்குகளின் (SDG) இலக்கு 2030 ஆம் ஆண்டிற்குள் பெண் பிறப்புறுப்பு சிதைப்பை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு “Towards 2030: No End To FGM Without Sustained Commitment and Investment” என்பதாகும்.

## சர்வதேச வலிப்பு தினம் 2026 - பிப்ரவரி 10

- இந்த நாள் 2015 முதல் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதத்தின் இரண்டாவது திங்கட்கிழமை அனுசரிக்கப்படுகிறது.
- வலிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், நோயாளிகளுக்குச் சிறந்த சிகிச்சை மற்றும் ஆதரவை ஊக்குவிப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- வலிப்பு என்பது உலகளவில் சுமார் 50 மில்லியன் மக்களை பாதிக்கும் ஒரு நரம்பியல் கோளாறாகும்.
- இந்தியாவில், ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வலிப்பு நோயால் வாழ்கின்றனர் என்ற நிலையில் மேலும் இது கிராமப்புறங்களில் அதிக அளவில் பரவுகிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு “#EpilepsyPledge” என்பதாகும்.

## தேசிய குடற்புழு நீக்க தினம் 2026 - பிப்ரவரி 10

- தேசிய குடற்புழு நீக்க தினம் என்பது தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) கீழ் 2015 இல் தொடங்கப்பட்ட ஒரு பொது சுகாதாரத் திட்டமாகும்.

- அல்பெண்டசோல் மாத்திரைகள் வழங்குவதன் மூலம் குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கு (1–19 வயது) குடல் புழு தொற்றுகளைத் தடுப்பதே இந்த நாளின் நோக்கமாகும்.
- இந்தத் திட்டம் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் (MoHFW) பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.
- இது மண்ணால் பரவும் ஹெல்மின்த் (STH) தொற்றுகளான வட்டப்புழு, சாட்டைப்புழு மற்றும் கொக்கிப்புழு ஆகியவற்றை குறிக்கோளாக கொண்டது.

## உலகப் பருப்பு வகைகள் தினம் 2026 - பிப்ரவரி 10

- ஊட்டச்சத்து மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கு பருப்பு வகைகளின் முக்கியத்துவத்தை இந்த நாள் எடுத்துக்காட்டுகிறது.
- சர்வதேசப் பருப்பு வகைகள் ஆண்டிற்குப் பிறகு (2016) 2019 ஆம் ஆண்டில் இந்த நாள் ஐ.நா.வால் அறிவிக்கப்பட்டது.
- இந்த நாள் பருப்பு வகைகள், கொண்டைக்கடலை, பீன்ஸ் மற்றும் பட்டாணி போன்ற பருப்பு வகைகளின் உற்பத்தி மற்றும் நுகர்வை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பருப்பு வகைகளானது புரதம், நார்ச்சத்து, இரும்புச்சத்து மற்றும் வைட்டமின்கள் நிறைந்தவை என்ற நிலையில் அவை இந்திய உணவின் ஒரு முக்கியப் பகுதியாகும்.

## சர்வதேச அரேபியச் சிறுத்தை தினம் 2026 – பிப்ரவரி 10

- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை (UNGA) இந்த நாளை ஜூன் 2023 இல் ஒரு தீர்மானத்தின் மூலம் அறிவித்தது.
- அரேபியச் சிறுத்தை (பாந்தெரா பர்டஸ் நிம்ர்) அரேபிய தீபகற்பத்தில் காணப்படும் ஒரு மிகவும் அருகிவரும் கிளையினமாகும்.
- சவுதி அரேபியா, ஓமன், ஏமன் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆகிய நாடுகளில் 200க்கும் குறைவான அரேபியச் சிறுத்தைகள் மட்டுமே காடுகளில் இருப்பதாக நம்பப் படுகிறது.

## உலக யுனானி தினம் 2026 – பிப்ரவரி 11

- இந்தியாவில் யுனானி மருத்துவத்தின் முன்னோடியான ஹக்கீம் அஜ்மல் கானின் பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- யுனானி மருத்துவம் மற்றும் சுகாதாரப் பராமரிப்பில் அதன் பங்கு பற்றிய விழிப்பு உணர்வை ஊக்குவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஆராய்ச்சி, கல்வி மற்றும் பாரம்பரிய யுனானி நடைமுறைகளை நவீன மருத்துவத்துடன் ஒருங்கிணைப்பதை ஊக்குவிக்கிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் "Innovation and Evidence in Unani Practice" என்பது ஆகும்.

## அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினம் 2026 - பிப்ரவரி 11

- இந்த நாள் ஐ.நா.வின் தலைமையில் யுனெஸ்கோவின் ஆதரவுடன் அனுசரிக்கப்பட்டது.
- இது டிசம்பர் 2015 இல் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் நிறுவப்பட்டு, 2016 இல் முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது.
- அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) துறைகளில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் முழுமையான மற்றும் சமமான அணுகலையும் பங்கேற்பையும் ஊக்குவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் " From Vision to Impact: Redefining STEM by Closing the Gender Gap" என்பதாகும்.
- உலகளவில் அறிவியல் பட்டதாரிகளில் 35% பெண்களாகவும், மூன்றில் ஒரு ஆராய்ச்சியாளர்களாகவும் இருப்பதாக யுனெஸ்கோ தரவு கூறுகிறது.

## பயங்கரவாதத்திற்கு வழிவகுக்கும் வன்முறை தீவிரவாதத்தைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் 2026 - பிப்ரவரி 12

- பயங்கரவாதத்துடன் தொடர்புடைய வன்முறை தீவிரவாதம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும் இந்த அனுசரிப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் (UNGA) நிறுவப் பட்டது.
- வன்முறைகளைத் தடுப்பதற்கான செயல் திட்டம் 2016 ஆம் ஆண்டில் ஐ.நா. பொதுச் செயலாளரால் வழங்கப்பட்டது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு: “Preventing Violent Extremism in the Age of New and Emerging Technologies” என்பதாகும்.

## தேசிய மகளிர் தினம் 2026 - பிப்ரவரி 13

- இந்த நாள் சரோஜினி நாயுடுவின் பிறந்த நாளை நினைவு கூரும் நாள் ஆகும்.
- 1879 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 ஆம் தேதி ஹைதராபாத்தில் பிறந்த சரோஜினி நாயுடு ஒரு கவிஞர், சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் அரசியல் தலைவராக இருந்தார்.
- 1925 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸின் (INC) முதல் இந்தியப் பெண் தலைவர் ஆனார்.
- பின்னர் 1947 ஆம் ஆண்டு ஐக்கிய மாகாணங்களின் (தற்போதைய உத்தரப் பிரதேசம்) முதல் பெண் ஆளுநரானார்.
- தனது தேச பக்தி மிக்க கவிதைக்காக அவர் "இந்தியாவின் நைட்டிங்கேல்" என்று அறியப் பட்டார்.
- இந்த நாள் சமூகத்தில் பெண்களின் அதிகாரமளித்தல், பாலினச் சமத்துவம், கல்வி மற்றும் தலைமைத்துவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தேசிய உற்பத்தித்திறன் தினம் 2026 – பிப்ரவரி 12

- இந்த நாள் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் 1958 இல் நிறுவப் பட்ட தேசிய உற்பத்தித்திறன் மன்றத்தால் (NPC) கொண்டாடப் படுகிறது.
- 2026 ஆம் ஆண்டு இந்த அமைப்பின் 68வது நிறுவன தினத்தைக் குறிக்கிறது என்பதோடு மேலும் தேசிய உற்பத்தித்திறன் வாரம் 2026 பிப்ரவரி 12–18 வரை இந்தியா முழுவதும் அனுசரிக்கப் படுகிறது.
- இந்தியப் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் போட்டித்தன்மை, தரம் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதை இந்தக் கொண்டாட்டங்கள் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு: Clusters as Growth Engine: Maximizing Productivity in MSMEs" என்பதாகும்.

## சர்வதேச குழந்தைப் பருவப் புற்றுநோய் தினம் 2026 – பிப்ரவரி 15

- குழந்தைப் பருவப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், ஆரம்ப காலக் கண்டறிதலையும், சிகிச்சைக்கு சமமான அணுகலையும் ஊக்குவிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் முதன்முதலில் 2002 ஆம் ஆண்டு சர்வதேச குழந்தைப் பருவ புற்றுநோய் கொண்ட குழந்தைகளின் பெற்றோர் அமைப்புகளின் கூட்டமைப்பு (ICCCPO) ஆல் அங்கீகரிக்கப் பட்டது.
- உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் 400,000க்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர் புற்றுநோயால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- 2030 ஆம் ஆண்டுக்குள் குழந்தைப் பருவப் புற்றுநோய் உயிர்வாழ்வு விகிதத்தை குறைந்தது சுமார் 60% ஆக உயர்த்துவதற்கான WHO-வின் இலக்கை இந்தத் தினம் ஆதரிக்கிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Demonstrating Impact — From Challenge to Change" என்பதாகும்.

## மிசோரம் உருவாக்க தினம் 2026

- 1986 ஆம் ஆண்டு மிசோரம் ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, பிப்ரவரி 20, 1987 அன்று மிசோரம் 23வது மாநிலமாக இணைந்தது.
- இந்திய அரசுக்கும் மிசோ தேசிய முன்னணிக்கும் (MNF) இடையே மிசோரம் ஒப்பந்தம் கையெழுத்தானது.
- மிசோரம் முன்னதாக 1972 முதல் வடகிழக்கு பகுதிகள் (மறுசீரமைப்பு) சட்டம், 1971 இன் கீழ் ஒரு ஒன்றியப் பிரதேசமாக (UT) இருந்தது.
- 53வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம், 1986 மூலம் மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது.
- மிசோரம் மியான்மர் மற்றும் வங்காளதேசத்துடன் சர்வதேச எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது.

## அருணாச்சலப் பிரதேசம் உருவாக்க தினம் 2026

- அருணாச்சலப் பிரதேசம் பிப்ரவரி 20, 1987 அன்று மாநில அந்தஸ்தைப் பெற்றது.
- இது முன்னர் வடகிழக்கு எல்லைப்புற முகமை (NEFA) என்று அழைக்கப்பட்டது.
- இது 1972 ஆம் ஆண்டு ஒன்றியப் பிரதேசமாக (UT) மாறியது மற்றும் அருணாச்சலப் பிரதேசம் என மறுபெயரிடப்பட்டது.
- 1986 ஆம் ஆண்டு 55வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் மூலம் அருணாச்சலப் பிரதேச மாநிலச் சட்டத்தின் கீழ் மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது.
- இந்த மாநிலம் பூட்டான், சீனா மற்றும் மியான்மருடன் சர்வதேச எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது.

## உலக சமூக நீதி தினம் 2026 - பிப்ரவரி 20

- வறுமை ஒழிப்பு, நாகரீகமான வேலை வாய்ப்புகள், பாலினச் சமத்துவம் மற்றும் சமூகத்தில் சமூக உள்ளடக்கம் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- இது 2007 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் (UNGA) அறிவிக்கப் பட்டது.
- இந்த நாள் நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDG) 1 (வறுமை ஒழிப்பு), 8 (கண்ணியமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி) மற்றும் 10 (ஏற்றத்தாழ்வுகள் இல்லாமை) ஆகியவற்றை ஆதரிக்கிறது.
- 2026 ஆம் ஆண்டின் கருத்துரு " Renewed Commitment to Social Development and Social Justice " என்பதாகும்.

## சர்வதேச தாய்மொழி தினம் 2026 - பிப்ரவரி 21

- உலகளவில் மொழியியல் பன்முகத்தன்மை மற்றும் பன்மொழி வழியிலான கல்வியை மேம்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முதன்முதலில் 1999 இல் யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்டது, பின்னர் 2002 இல் ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்டது.
- இது 1952 ஆம் ஆண்டு வங்காளதேசத்தில் நடந்த மொழி இயக்கத்தை நினைவு கூரச் செய்கிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு " Youth Voices on Multilingual Education" என்பதாகும்.

## உலக எறும்புத்திண்ணி தினம் 2026 - பிப்ரவரி 21

- இந்த நாள் எறும்புத் திண்ணிகளின் பாதுகாப்பு மற்றும் சட்ட விரோத வனவிலங்கு வர்த்தகம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முதன்முதலில் 2012 இல் கொண்டாடப்பட்டது மற்றும் ஆண்டுதோறும் பிப்ரவரி மூன்றாவது சனிக்கிழமை அனுசரிக்கப்படுகிறது.
- எட்டு பாங்கோலின் (எறும்புத்திண்ணி) இனங்களும் CITES இன் இணைப்பு I இன் கீழ் பட்டியலிடப் பட்டுள்ளன.

- இந்திய எறும்புண்ணி மற்றும் சீன எறும்புண்ணி ஆகியவை இந்தியாவில் காணப் படுகின்றன.

## 100வது உலக சிந்தனை தினம் – பிப்ரவரி 22

- உலகம் முழுவதும் பெண் சாரணர்கள் மற்றும் பெண் வழிகாட்டிகளால் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தத் தினமானது பெண்கள் மற்றும் இளம் பெண்களிடையே நட்பு, ஒற்றுமை மற்றும் தலைமைத்துவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முதன்முதலில் 1926 ஆம் ஆண்டு நியூயார்க்கில் நடைபெற்ற 4வது உலக மாநாட்டிற்குப் பிறகு கொண்டாடப்பட்டது.
- உலகப் பெண் வழிகாட்டிகள் மற்றும் பெண் சாரணர்கள் சங்கத்தால் அறிவிக்கப்பட்ட 2026 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் " Our Friendship " என்பதாகும்.

## மத்திய கலால் தினம் 2026 - பிப்ரவரி 24

- இது 11 கலால் சட்டங்களை ஒரே கட்டமைப்பாக ஒன்றிணைத்த 1944 பிப்ரவரி 24 அன்று இயற்றப்பட்ட மத்திய கலால் மற்றும் உப்புச் சட்டத்தை நினைவு கூரும் வகையில் கொண்டாடப்படுகிறது.
- மத்திய கலால் வரி என்பது இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு விதிக்கப் படும் மறைமுக வரியாகும்.
- 2017 ஆம் ஆண்டு சரக்கு மற்றும் சேவை வரி (GST) அறிமுகப்படுத்தப்பட்ட பிறகும், பெட்ரோலியம் மற்றும் புகையிலைப் பொருட்கள் மீதான கலால் வரி தொடர்ந்து நடைமுறையில் உள்ளது.
- மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் (CBIC) ஆனது, மத்திய கலால் வரி, சுங்க வரி மற்றும் மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (CGST) ஆகியவற்றை நிர்வகிக்கிறது.
- CBIC ஆனது, நிதி அமைச்சகத்தின் வருவாய்த் துறையின் கீழ் செயல்படுகிறது.

## தேசிய அறிவியல் தினம் 2026 - பிப்ரவரி 28

- மக்களிடையே அறிவியல் மனப்பான்மையை ஊக்குவிப்பதையும் அறிவியலில் ஆர்வத்தை ஊக்குவிப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1928 ஆம் ஆண்டு சி.வி. ராமன், ராமன் விளைவைக் கண்டுபிடித்ததைக் குறிக்கும் வகையில் இது கொண்டாடப்படுகிறது.
- இந்தக் கண்டுபிடிப்புக்காக சி.வி. ராமன் 1930 ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசைப் பெற்றார்.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு " Women in Science: Catalysing Viksit Bharat" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## QS ஐரோப்பா தரவரிசை 2026

- ஐரோப்பா முழுவதிலும் உள்ள சிறந்த பல்கலைக்கழகங்களைப் பட்டியலிடும் QS ஐரோப்பா தரவரிசை 2026 வெளியிடப்பட்டுள்ளது.
- ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் 2025 தரவரிசையில் மூன்றாவது இடத்தில் இருந்து முன்னேறி, முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- ETH Zurich இரண்டாவது இடத்தைப் பிடித்து, கண்டப்பகுதி ஐரோப்பாவில் மிக உயர்ந்த தரவரிசை பெற்ற பல்கலைக்கழகம் என்ற தனது நிலையைத் தக்கவைத்துள்ளது.
- இம்பீரியல் கல்லூரி லண்டன் மற்றும் யுனிவர்சிட்டி கல்லூரி லண்டன் (யுசிஎல்) ஆகியவை கூட்டாக மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளன.
- இந்தத் தரவரிசையானது ஆராய்ச்சித் தரம், கல்வி நற்பெயர், வேலைவாய்ப்பு மற்றும் சர்வதேச ஈடுபாடு போன்ற குறிகாட்டிகளின் அடிப்படையில் அமைந்துள்ளது.

## QS 2026 - சர்வதேச மாணவர்களுக்கு உகந்த நகரங்கள்

- QS மாணவர்களுக்கு உகந்த நகரங்கள் 2026 தரவரிசையில், டெல்லி சர்வதேச மாணவர்களுக்கான உலகின் மிகவும் மலிவான நகரமாகத் தரவரிசைப் படுத்தப் பட்டு உள்ளது.
- "India's 155 million Student Mandate" என்ற அறிக்கை நைட் ஃபிராங்க், டெலாய்ட் இந்தியா மற்றும் QS ஆகியவற்றால் தயாரிக்கப்பட்டது.
- மிகவும் உகந்தப் பட்டியலில் மும்பை 11வது இடத்திலும், பெங்களூரு 15வது இடத்திலும் உள்ளன.
- இந்தத் தரவரிசையானது, மலிவுத்தன்மை, வேலைவாய்ப்புச் செயல்பாடு, பல்கலைக் கழகத் தரவரிசைகள் மற்றும் நகரத்தின் விரும்பத்தக்க தன்மை உள்ளிட்ட ஆறு குறிகாட்டிகளின் அடிப்படையில் உலகெங்கிலும் உள்ள 150 நகரங்களை மதிப்பிட்டது.
- 18-23 வயதுக்குட்பட்ட சுமார் 155 மில்லியன் மக்கள் உள்ள இந்தியா உலகிலேயே மிகப்பெரிய உயர்கல்விச் சந்தைகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

## பணி புரிய சிறந்த இடம் சான்றிதழ் - SAIL

- இந்திய எஃகு ஆணையம் லிமிடெட் (SAIL) ஆனது, பிப்ரவரி 2026 முதல் பிப்ரவரி 2027 வரையிலான காலத்திற்கான "பணிபுரிய சிறந்த இடம்" சான்றிதழைப் பெற்றுள்ளது.
- SAIL நிறுவனம் இந்தச் சான்றிதழைப் பெறுவது இது தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாகும்.
- இந்தச் சான்றிதழ், பணியாளர்களின் கருத்துக்கள் மற்றும் நம்பிக்கைக் குறியீட்டு கணக்கெடுப்பின் அடிப்படையில் Great Place to Work Institute மூலம் வழங்கப்படுகிறது.
- SAIL ஒரு மகாரத்னா அந்தஸ்து பெற்ற பொதுத் துறை நிறுவனமாகும்.

## தேவ்னிமோரி புத்தர் நினைவுச் சின்னங்கள்

- பிப்ரவரி 4–10, 2026 வரை கொழும்பில் ஒரு பொது கண்காட்சிக்காக இந்தியா தேவ்னிமோரி புத்தர் நினைவுச்சின்னங்களை இலங்கைக்கு அனுப்பியது.

- இந்த நினைவுச் சின்னங்கள் வதோதராவில் உள்ள மகாராஜா சயாஜிராவ் பரோடா பல்கலைக்கழகத்தில் (MSU) பாதுகாக்கப்படுகின்றன.
- அவை கொழும்பில் உள்ள கங்காராமயா கோவிலில் காட்சிப்படுத்தப்படும்.
- இந்த நினைவுச் சின்னங்கள் 1957 ஆம் ஆண்டு குஜராத்தின் ஆரவல்லி மாவட்டத்தில் உள்ள தேவ்னிமோரி தொல்பொருள் தளத்தில் கண்டுபிடிக்கப்பட்டன.
- இந்த நினைவுச் சின்னக் கலசத்தில் பிராமி எழுத்துக்கள் மற்றும் சமஸ்கிருதத்தில் எழுத்துக்கள் உள்ளன.

## கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம் – 50வது ஆண்டு தினம்

- கொத்தடிமை தொழிலாளர் முறையை ஒழித்த 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டத்தின் (BLSA) 50வது ஆண்டை இந்தியா கொண்டாடுகிறது.
- இந்தச் சட்டம் கொத்தடிமை தொழிலாளர்களை சட்டவிரோதமாக அறிவித்து, கொத்தடிமை கடன்களை ரத்து செய்ததுடன், கொத்தடிமை தொழிலாளர்களை விடுவிக்கவும் உத்தரவிட்டது.
- மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் விழிப்புணர்வு குழுக்கள் ஆகியோர் கொத்தடிமை தொழிலாளர்களை அடையாளம் காணுதல், விடுவித்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகியவற்றிற்கு பொறுப்பானவர்கள் ஆவர்.
- நிதி உதவி, நிலம், வீட்டு வசதி மற்றும் வாழ்வாதாரத் திட்டங்கள் போன்ற மறுவாழ்வு ஆதரவை சட்டம் வழங்குகிறது.
- இந்திய அரசியலமைப்பின் சரத்துகள் 21, 23 மற்றும் 24 மக்களை கட்டாய உழைப்பு மற்றும் சுரண்டலில் இருந்து பாதுகாக்கின்றன.
- பாரதிய நியாய சன்ஹிதா (BNS), 2023 இன் பிரிவு 143, கடத்தல் மற்றும் கட்டாய உழைப்பை தண்டணைக்குரிய குற்றமாக்குகிறது.

## பண்டைய எகிப்து கருவி

- புதிய நுண்ணியப் பகுப்பாய்விற்குப் பிறகு எகிப்தில் தோண்டப்பட்ட ஒரு செப்பு கருவி வில் துளையிட பயன்படக்கூடியதாக மீண்டும் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- 1920களில் கண்டுபிடிக்கப்பட்ட போது இந்தக் கலைப்பொருள் முதலில் ஒரு எளிய குத்தூசி என வகைப்படுத்தப்பட்டது.
- தற்போது இந்தக் கண்டுபிடிப்பு உறுதி செய்யப்பட்டால், பண்டைய எகிப்தில் சுழல் துளையிடுதலுக்கான சான்றுகளை கிட்டத்தட்ட 2,000 ஆண்டுகளுக்குப் பின்னுக்குத் தள்ளக்கூடும்.
- பண்டைய நாகரிகங்களில் மரவேலை, மணி உற்பத்தி மற்றும் தளவாடங்கள் தயாரிப்பில் சுழல் துளையிடுதல் பயன்படுத்தப்பட்டது.

## இரும்புக் காலக் கோயில் - டென்மார்க்

- தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் டென்மார்க்கில் உள்ள ஹெடேகார்டில் 2,000 ஆண்டுகள் பழமையான இரும்புக் காலக் கோயில் வளாகத்தைக் கண்டுபிடித்தனர்.

- வடக்கு ஐரோப்பாவின் ஜட்லாண்ட் தீபகற்பத்தில் உள்ள எஜ்ஸ்ட்ருபோல்முக்கு அருகில் இந்த இடம் அமைந்துள்ளது.
- இந்தக் கோயில் இரும்புக் காலத்தைச் சேர்ந்த கி.பி 0 (AD) காலத்தைச் சேர்ந்தது.
- மியூசியம் மிட்ஜில்லாண்டின் இந்தப் பல்வேறு அகழ்வாராய்ச்சிகள் சமய, அரசியல் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புகளுடன் கூடிய ஒரு வலுவான குடியேற்றத்தை வெளிப் படுத்தின.
- வடக்கு ஐரோப்பாவில் இரும்புக் காலம் தோராயமாக கிமு 500 முதல் கிபி 800 வரை நீடித்தது.

## ஒல் சிக்கி எழுத்து - 100 ஆண்டு கொண்டாட்டம்

- இந்தியக் குடியரசுத் தலைவர் புது தில்லியில் ஒல் சிக்கி எழுத்துமுறையின் கண்டு பிடிப்பின் 100 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில் அதன் நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைத்தார்.
- ஒடிசாவின் மயூர்பஞ்சைச் சேர்ந்த பண்டிட் ரகுநாத் முர்மு என்பவரால் 1925 ஆம் ஆண்டு ஒல் சிக்கி எழுத்து வடிவம் கண்டுபிடிக்கப்பட்டது.
- சந்தாலி மொழிக்கு தனி எழுத்து வடிவத்தை வழங்குவதற்காக இது உருவாக்கப் பட்டது.
- இந்த எழுத்து 30 எழுத்துக்களைக் கொண்டுள்ளது மற்றும் முற்றிலும் ஒலி வடிவ இயல்பு உடையது ஆகும்.
- 92வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 2003 மூலம் இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் சந்தாலி மொழி சேர்க்கப்பட்டது.
- டிசம்பர் 2025 இல், இந்திய அரசியலமைப்பு ஒல் சிக்கி எழுத்துக்களைப் பயன்படுத்தி சந்தாலியில் மொழிபெயர்க்கப் பட்டது.

## ராயல் இந்தியக் கடற்படைக் கிளர்ச்சி 1946

- 1946 ராயல் இந்தியக் கடற்படை (RIN) கிளர்ச்சியின் 80வது ஆண்டு விழா பிப்ரவரி 18, 2026 அன்று அனுசரிக்கப்பட்டது.
- இந்தக் கலகம் ஆங்கிலேயக் காலனித்துவ அதிகாரத்திற்கு எதிராக இந்தியக் கடற் படைக் குழுக்களால் ஐந்து நாள் கிளர்ச்சியாக (18–23 பிப்ரவரி 1946) நடைபெற்றது.
- இது மோசமான உணவு, குறைந்த ஊதியம் மற்றும் இனப் பாகுபாடு ஆகியவற்றிற்கான போராட்டமாகத் தொடங்கி, இந்தியா முழுவதும் 78 கப்பல்கள் மற்றும் 20 கடற்கரைக் குழுக்களுக்கும் பரவியது.
- கிட்டத்தட்ட 20,000 மாலுமிகள் பங்கேற்ற இதில் தொழிலாளர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் ஒற்றுமையுடன் இணைந்து, இந்து-முஸ்லீம் ஒற்றுமையைக் காட்டினர்.

## சராக்ஸ் ஸ்பாசினோ நகரம்

- சராக்ஸ் ஸ்பாசினோ நகரமானது தெற்கு மெசபடோமியாவில், இன்றைய ஈராக்கில் உள்ள டைக்ரிஸ் நதிக்கு அருகில் உள்ள ஒரு பழங்கால நகரமாகும் என்பதோடு இது சமீபத்தில் ஒரு மேம்பட்ட தொல்பொருள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மீண்டும் கண்டுபிடிக்கப் பட்டது.

- கிமு 324 இல் மகா அலெக்சாண்டரின் இறுதி ஆண்டுகளில் நிறுவப்பட்ட இந்த நகரம் முக்கிய வர்த்தகப் பாதைகளின் மீது கட்டுப்பாட்டைப் பெறுவதற்காக முதலில் அலெக்ஸாண்ட்ரியா என்று பெயரிடப்பட்டது.
- வெள்ளம் மற்றும் நிலையற்ற அரசியல் தன்மை அசல் குடியேற்றத்தை சேதப்படுத்திய பின்னர் இது பின்னர் மீண்டும் கட்டப்பட்டு, செலூசிட் அல்லது சாரசீன் ஆட்சியின் கீழ், சாராக்ஸ் ஸ்பாசினோ என மறுபெயரிடப்பட்டது.
- நதி மற்றும் நிலப் பாதைகளை இணைக்கும் ஒரு முக்கிய வர்த்தக மையமாகச் செயல் பட்ட இந்த நகரம், அரேபியா, பெர்சியா மற்றும் மத்திய தரைக்கடல் பகுதிக்கு இடையேயான வர்த்தகத்தை எளிதாக்கியது.
- நவீன ஆராய்ச்சியாளர்கள் ட்ரோன்கள் மற்றும் காந்தமானிகள் போன்ற உள்நுழையத் தேவை இல்லாத கருவிகளைப் பயன்படுத்தி 500 சதுர கிலோமீட்டருக்கும் அதிகமான பரப்பளவை டிஜிட்டல் முறையில் வரைபடமாக்கியதன் மூலம் பெரிய அளவிலான அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளாமலேயே புதையுண்ட சுவர்கள் மற்றும் முக்கியக் கட்டமைப்புகளை வெளிப்படுத்தினர்.
- மெசபடோமியாவில் உள்ள கிரேக்க நாகரீக நகர்ப்புற மையங்களின் மிகப்பெரும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் இந்த முக்கியமான மறுகண்டுபிடிப்பு என்பது அலெக்ஸாண்ட்ரியத்திற்குப் பிந்தைய வர்த்தகம் மற்றும் நிர்வாகம் குறித்த புரிதலை மறுவடிவமைக்கிறது.

## தகுதியான வெகுமதிக் கொள்கை

- இந்தக் கொள்கையானது, மக்கள் தங்கள் செயல்களின் அடிப்படையில் வெகுமதிகள் அல்லது தண்டனைகளைப் பெற வேண்டும் என்பதை விளக்குகிறது.
- நல்ல செயல்களைச் செய்பவர் வெகுமதிகளுக்குத் தகுதியானவர் அதே நேரத்தில் குற்றம் செய்பவர் தண்டனைக்கு தகுதியானவர் ஆவர்.
- நேர்மையான மற்றும் விகிதாசாரத்தின் அடிப்படையில் தண்டனை குற்றத்தின் தீவிரத் தன்மையுடன் பொருந்த வேண்டும்.
- இந்தக் கொள்கையானது, தகுதியானவர் (யார் தகுதியானவர்), தகுதியான நடத்தும் முறைகள் (எதற்கு தகுதியானவர்), மற்றும் தண்டனையின் அடிப்படைகள் (அவர் ஏன் தகுதியானவர்) எனும் மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டுள்ளது.
- தகுதியான விளைவுகள் செயல்களைப் பொறுத்து நேர்மறையானதாகவோ (வெகுமதிகள், மரியாதை) அல்லது எதிர்மறையாகவோ (தண்டனை, அபராதம்) இருக்கலாம்.
- இந்தக் கொள்கை பழிவாங்கும் நீதியை அடிப்படையாகக் கொண்டது, இதில் மக்கள் தங்கள் தேர்வுகளுக்கு தார்மீக ரீதியாகப் பொறுப்பாவார்கள்.
- இம்மானுவேல் காந்த் மற்றும் அரிஸ்டாட்டில் போன்ற தத்துவஞானிகள் தண்டனை அல்லது சலுகைகள் நியாயமானதாகவும் அதன் தகுதிக்கு ஏற்ற விகிதாசாரமாகவும் இருக்க வேண்டும் என்ற கருத்தை ஆதரித்தனர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★